## கிழக்காசியாவின் வரலாறு


| உள்ளடக்கம் | பக்க எண் |
|---|---|
| 1. மஞ்சுக்களின் ஆட்சியில் சீனா | 3 |
| 2. பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன் ஜப்பானின் நிலை | 4 |
| 3. ஜப்பானில் அயல்நாட்டவர்களின் நுழைவு | 5 |
| 4. முதல் அபினிப் போர் 1839 - 1842 | 8 |
| 5, முதல் ஆங்கில - சீனப் போர் 1844 - 1842 | 9 |
| 6. இரண்டாம் அபினிப் போர் 1856 - 58 | 13 |
| 7. தைப்பிங் கிளர்ச்சி | 18 |
| 8. அமைதியுற்ற சீனா | 23 |
| 9. கிழக்கு ஆசிய வரலாறு 1840 - 1966 | 30 |
| 10. சீன - ஜப்பானியப் போரின் விளைவுகள் | 35 |
| 11. 1898 ம் ஆண்டு பிரான்சு - சீன உடன்படிக்கை | 39 |
| 12. திறந்தவாயில் கொள்கை | 42 |
| 13. நூறு நாட்கள் சீர்திருத்தங்கள் | 44 |
| 14. 1908 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டம் | 56 |
| 15. புரட்சிக்கானக் காரணங்கள் | 69 |
| 16. தேசிய எழுச்சிகள் | 70 |
| 17. ஜப்பானின் வல்லமை வளர்ச்சிக்கான காரணங்கள் | 92 |
| 18. சீன - ஜப்பானிய போரில் சில சம்பவங்கள் | 97 |
| 19. ஆராவின் ஆட்சி முறை 1918 - 1921 | 99 |
| 20.ஜப்பான் மஞ்சூரியாவை கைப்பற்றுதல் | 105 |
| 21. சீன - ஜப்பானிய போருக்கான காரணங்கள் | 106 |
| 22.இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானின் கணிப்பு | 109 |
| 23.இரண்டாம் உலகப்போரின் விளைவுகள் | 112 |

## Syllabus

# History of East Asia From 1840 -1966

**Introduction**

The origin and growth of Manchu dynasty - opening of China. Japan during the first half of the nineteenth - century - Decay of feudalism.Opening of Japan and its results.The first opium - war (1839 -42) second opium war -treaties & results.Taiping Rebellion.

An uneasy interlude in chne - Frontier relations between China and Russia.The fall of Tokugava Shoguns - Meiji Rrestoration - abolition of feudal domains -Meiji Constitution.Modernisation of Japan -Reorganisation of army and navy -law -industries -National Education system -agricultural development -Rise of nationalism.

Sino -Japanese war -causes course - treaty of Shimonoshaki 1895 -results -Three power intervention.Battle for concessions in China -Open door policy.Hundred days reform movement.Boxer uprising -Manchu attempts at reforms -Role of Dowager empress.Anglo Japanese Alliance -Russio-Japanese War - Cause, course Results,Treaty of Portsmouth.The fall of the Manchus-The Revolution of 1911.The life and works of Sun -Yat-Sen.The presidency of Yuan Shi -Kai 1915 -16. First World War in the East Asia -China and Japan in the peace conference - May fourth movement.Washington Conference.

Chinese Nationalism - Chiang Kai Shek.Growth of Militarism in Japan -Annexation of Korea -Party Politics-Ultra Redicalism - Manchurian affairs-Insurrection of 1936 -Anti - Comintern Pact.

Second Sino Japanese War -Second World War in the East Asia - Japanese occupation of the South East Asia -Surrender.

**அத்தியாயம் - 1**

## மஞ்சுக்களின் ஆட்சியில் சீனா

ஆசியக் கண்டத்தில் அமைந்துள்ள நாடுகளில் சீனாவும் ஒன்று. இது ஒரு மாபெரும் நாடு. நிலப்பரப்பிலும், மக்கள் தொகையிலும் மிகப் பரந்து விரிந்த நாடாக இன்று விளங்குகிறது. இச்சீனாவில் மஞ்சூரியா, மங்கோலியா, சிங்கியாங், திபெத் ஆகிய பகுதிகள் அடங்கியிருந்தன. இங்கு பல பேரரசுகள் தோன்றி, வாழ்ந்து வளர்ந்து வீழத்திருக்கின்றன.

சீனாவில் 1644 A.D. வரை மிங் (Ming) அரச குடும்பத்தினர் ஆட்சி செய்து வந்தனர். இவர்களின் ஆட்சியின் போது நாட்டில் அமைதியின்மையும், குழப்பங்களும் தோன்றின. அரச குலத்தினர் திறமையற்றும் காணப்பட்டனர். இதையறிந்த மஞ்சூரியப் பகுதிகளின்று வந்த மஞ்சு அரச குலத்தவர்கள் தங்கள் திறமை மிகுந்த தலைவரான நூர் ஹாச்சி (Nurhachi) யின் தலைமையில் மாபெரும் படைகளுடன் தெற்குப் பகுதியிலும் பரவினர். பேரரசின் தலைவரான நூர்ஹாச்சியின் பணியை அவர் தம் மகன் தொடர்ந்து சீனா முழுவதையும் வெற்றிக் கொண்டார். மஞ்சுக்கள் சீனப் பேரரசின் வழி முறைகளுக்கேற்பத் தங்கள் குலப் பெயரையும் சிங் (Ching) என மாற்றிக் கொண்டனர்.

மஞ்சு குலப் பேரரசர்களுக்குள்ளேயே மிகவும் புகழ்பெற்றவர்கள் காங்-சிரயும் (1662 -1722) சியங் -லுங் (1736 -1799) என்பவருமாவார்கள். சீனப் பண்பாடுகளை மதித்து ஏற்க்கொண்டு, அதனை மேலும் சிறப்படையச் செய்தனர். சீனர் வரலாற்றில் மங்காத புகழுடைந்த காங் -சி பேரரசர் சீன மொழிச் சொற்களைத் தொகுத்து, மாபெரும் சீன அகராதி ஒன்றினைத் உருவாக்கினார். சீன இலக்கியத் தொகுப்பையும் வெளியிட்டார். வர்த்தகத் துறையினை சீர்திருத்த எண்ணிய அவர் கோ - ஹாங் (Co- Hong) என்ற முற்றுரிமை பெற்ற பதின்மூன்று வர்த்தகக் குழு ஒன்றினையும் உருவாக்கினார். அதில் சீன அயல்நாட்டு வர்த்தக உரிமை பெற்ற பதின்மூன்று வர்க்க நிறுவனங்கள் அடங்கியிருந்தன. கோ-ஹாங் வர்த்தகக் குழுவினைச் சேர்ந்தவர்கள் தங்கள் வர்த்தக முற்றுரிமைக்காக ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையினை அரசுக்குச் செலுத்தினர். பிற்காலத்தில் கோ - ஹாங்கின் செயல்களால் சீனப் பேரரசிற்கும் ஐரோப்பிய வர்த்தகர்களுக்குமிடையே பூசல்கள் தோன்றின. (Chien Lung) சீயன் -லுங் பேரரசர் காலத்தில் வளர்ச்சியின் உன்னத நிலையினை எட்டிய சீனப் பேரரசு அவரது ஆட்சிக்குப் பின்னர் வந்த பேரரசர்களின் திறமைக் குறைவின் காரணமாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. மேல் நாட்டினருடன் ஏற்பட்ட மோதல்கள் உள்நாட்டுக் குழப்பங்கள், பொருளாதாரத்தில் ஏற்பட்ட வளர்ச்சி குன்றி வீழ்ச்சியடையத் தொடங்கியது.

### ஐரோப்பியர் வருகை

வாணிகத்தின் பொருட்டும், கிறிஸ்தவ மதத்தினைப் பரப்பவும் ஐரோப்பியர்கள் சீனாவிற்குச் சென்றனர். முதன்முதலில் சீனாவில் நுழைந்த ஐரோப்பியர்கள் இயேசு சங்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களைத் தொடர்ந்து பிரான்சிஸ்கன்கள் , டாமினிக்கன்கள், புராட்டஸ்டண்டுகள் ஆகியோரும் சீனப் பேரரசில் நுழைந்தனர். 1516 ஆம் ஆண்டு போர்ச்சுக்கீசியர் சீனாவிற்குச் சென்று வர்த்தக நிலையங்களை ஏற்படுத்தினர். அவர்களைப் பின்பற்றி டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், ரஷ்யர்கள் , அமெரிக்கர்கள் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாட்டினர் சீனாவில் நுழைந்தனர். சீனாவில் உற்பத்தியாகும் பட்டு, தேயிலை பீங்கான் பாத்திரங்களுக்கு, ஐரோப்பிய நாடுகளில் அபரிமிதமான தேவை இருந்தது. ஆகையால் இதுவரை எந்த வெளிநாட்டுத் தொடர்பும் இல்லாமல் தனித்து இருந்த சீனாவில் ஐரோப்பிய வணிகர்கள் ஊடுருவி வணிகத்தை மேற்கொண்டனர். ஐரோப்பியர்களின் வருகை சீனப் பேரரசை மிகவும் பாதித்தது. கிறிஸ்தவ மதம் வேகமாக பரவியது மேலும் அச்சத்தைக்

கொடுத்தது.ஏனெனில் மதமாறிய சீனர்கள் பேரரசை வழிபடும் பழக்கத்தை கைவிட்டனர்.அந்நிலை அதுகாறும் வழிபாடு செய்யப்பட்டு வந்த பேரரசர்களுக்கு ஆத்திரமுட்டியது.இதனால் கிறிஸ்தவ மதத்தை தடை செய்யும் ஆணை 1724ல் வெளியிடப்பட்டது.

வெளிநாட்டவர்களின் வருகை மேலும் மேலும் அதிகரிக்கவே அவர்கள் மீதுள்ள அச்சமும் பெருகியது.எனவே மஞ்சு அரச வம்சத்தினர் 1757ல் வெளியிட்ட ஆணையின்படி வெளிநாட்டவர்கள் காண்டன் நகரில் மட்டுமே தங்கள் வணிக நடவடிக்கைகளை வைத்துக் கொள்ள வேண்டும் என்று தடுக்கப்பட்டனர். வெளிநாட்டவர்களின் வருகையால் மஞ்சு அரசு மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது.தங்கள் ஆட்சி கவிழ்ந்து விடும் என்ற அச்சம் அவர்களிடம் காணப்பட்டது.அவர்கள் வெளிநாட்டவர்களை காட்டுமிராண்டிகள் என்று கருதினார்கள்.

**கோ -ஹாங்க்**

சீனாவில் கோ -ஹாங்கின் முற்றுரிமை தனியாதிக்கம் பெற்றிருந்தது.அயல்நாட்டு வணிகர்கள் உள்நாட்டு வணிகர்களுடன் நேரடி தொடர்பு கொள்வதற்குத் தடை விதித்திருந்தனர்.அவர்கள் வாயிலாகவே வாணிபத்தொடர்பு கொள்ள வேண்டும் என்று கட்டுப்பாடு இருந்தது. கோ-ஹாங்கிற்கு எல்லையற்ற அதிகாரம் இருந்ததால் தங்கள் விருப்பம் போல் மேல் நாட்டு வணிகர்களை சுரண்டினர்.இத்தகைய முறைகேடுகள் சீனாவில் இருந்ததால் அயல்நாட்டு வணிகர்கள் பெரும் லாபம் ஈட்டினர்.எனினும் தங்களுக்கிருந்த தடையைக் குறித்தும் வருந்தினர்.இவ்விழிவை போக்க வாய்ப்பினை எதிர்பார்த்திருந்தனர். சுங்க முறையிலும் ஏராளமான முறைகேடுகள் நிலவின.சுங்கக் கொள்கை மற்றும் இறக்குமதி கொள்கை மைய அரசினால் தீர்மானிக்கப் பெற்றாலும்,அதிகாரிகள் தங்கள் விருப்பம் போல மாற்றி அமைத்து வெளிநாட்டவர்களிடமிருந்து ஏராளமாக பணம் பெற்றனர்.

சீனர்களுக்குத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்னும் ஆதிக்கப் போக்கு இருந்தது.ஆகவே சீன அரசு வெளிநாட்டவர்கள் தங்கள் மொழியை கற்கவோ,சீனர்களுடன் கலந்து பழகிடவோ கூடாது எனத் தடை விதித்தது. மேலும் வெளிநாட்டவர்கள் கோடோ ’Kow Tow’ எனப்படும் குனிந்து வணங்கும் பழக்கத்தை செய்ய வேண்டியதாயிற்று.அயல்நாட்டவர்கள் தவறிழைத்தால் அவர்கள் சீனச் சட்டங்களின்படி தண்டிக்கப்பட்டனர்.

**பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன் ஜப்பானின் நிலை**

ஜப்பான் பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன் சீனாவை போல் பின் தங்கிய நாடாக காட்சியளித்தது. 1853 ல் அமெரிக்க கடற்படைத் தளபதி பெர்ரியின் (Commander Perry) வருகைக்குமுன் கூட்டுப் புழுவைப் போல் இருந்த ஜப்பான் தன் நிலையிலிருந்து மாறி வியக்கத்தகு வளர்ச்சியடைந்தது.

ஜப்பானியர் தங்கள் நாட்டை உதயசூரியன் நாடு என்று அழைக்கின்றனர்.சிறிதும் பெரிதுமான தீவுகளைக் கொண்ட இந்நாடு ஆயிரம் மைல்களுக்குப் பரவியிருக்கிறது.ஜப்பானின் முக்கிய நான்கு தீவுகள் ஹொக்கைகோ,ஹொன்ஸீ, ஷிக்கோகு,கியுஷி ஆகியவையாகும்.ஜப்பானின் மக்கள்தொகையில் பாதிப் பேர் ஹொன்ஸீயில் வாழ்கின்றனர். டோக்கியோ (Tokyo)நகரம் இங்குதான் உள்ளது. கிழக்கு ஆசியாவில் அமைந்து சீனாவின் பண்பாட்டு மையத்தினைச் சார்ந்த போதிலும் ஜப்பான் கடல்கள் வளைகுடாக்களால் பிரிக்கப்பட்டுள்ளது.இதனால் ஜப்பானியரிடையே தனித்த இயல்புகள் வளர்ந்தன.

ஜப்பான் முடியாட்சி நாடு. பேரரசர் இறைவனின் மகன் எனவும், இவர் தம் பேரரசு தெய்வீகப் பேரரசு

என்றும் குடிமக்கள் கருதுவர்.ஏழாம் நூற்றாண்டு வரை பேரரசர்களே ஜப்பானை ஆண்டனர்.அதன்பின் செல்வாக்குள்ள குடும்பங்களின் செல்வாக்கு தலை தூக்கியது.ஷோகன்கள் என்ற பெயரில் பேரரசின் ஆட்சியின் போதே அவர்களுடைய ஆட்சியும் நடைபெறலாயிற்று.

ஜப்பானிய அரசியல் வாழ்வில் மற்றொரு பகுதி நிலமானிய முறையாகும்.ஏழாம் நூற்றாண்டு வரை ஜப்பான் சிறுசிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு, பேரரசின் மேலாண்மையை ஏற்றுக் கொண்ட நில உடைமையாளர்களால் ஆட்சி செய்யப்பட்டது.இந்நிலமானிய தலைவர்கள் நாளடைவில் முடிசூடாத் தலைவர்கள் ஆயினர்.பேரரசர் மிகாதோ என்று அழைக்கப்பட்டார்.அவருக்குக் கீழ் ஷோகன் தெய்மியோக்கள் பணியாற்றினர்.இவர்களுக்கு அடுத்து வரிசை முறையில் விளங்கியவர்கள் சாமுராய்கள் என்னும் போர் பிரிவினர் ஆவர்.

19 ஆம் நூற்றாண்டில் பழமையிலிருந்து விடுபட ஜப்பான் முயன்றது.எல்லாப் பண்பாடுகளையும் குறித்து அறிந்தனர்.சீனாவிலிருந்து கன்பூசிய சமயத்தினையும், நவீன அரசியல் பொருளாதார முறைகளை மேல்நாடுகளிலிருந்து பெற்றனர்.ஜப்பானிய வாழ்க்கையின் தலையாயக் கொள்கை தனிப்பட்ட நாட்டின் தன்மானத்தை போற்றுதல் ஆகும்.நாட்டின் பெருமைக்கு குந்தகம் ஏற்பட்டுள்ளது என்று அதை மீட்கவே ஜப்பானியர் மேலை அறிவியல் தொழில் நுட்பத்தைக் கற்றனர்.மேலை நாட்டவரின் சவாலைச் சந்திக்க அவர்களின் ஆயுதமான நவீனப் பொருளாதாரத்தையும், நவீனப் படையமைப்பினையும் பின்பற்ற விரும்பினர். ஜப்பானை வலிமைபடுத்த,உயர்த்த எவையெல்லாம் துணை நிற்குமோ அவற்றை பின்பற்றினரேயன்றி ஒட்டுமொத்தமாக மேல் நாட்டவரையே சார்ந்து நிற்கவில்லை.அவர்களின் தேசிய பழக்கங்களையும் விட்டுவிடவில்லை.

### ஜப்பானில் அயல்நாட்டவர்களின் நுழைவு

கிழக்காசியாவில் தனிமைக் கொள்கையைக் கடைபிடித்து ஒதுங்கி வாழ்ந்த இருநாடுகளில் ஜப்பானும் ஒன்று. ஜப்பானைப் பற்றி ஐரோப்பியர்களுக்கு முதலில் அறிவித்தவர் மார்க்கோபோலோ.1542 ல் போர்ச்சுக்கீசியர்,1549 ல் ஏசு சபையினர்,1611 ல் டச்சுக்காரர்கள்,1863 ல் ஆங்கிலேயர் என்று நுழைந்து வாணிப,சமய உறவினைக் கொண்டிருந்தனர்.ஐரோப்பியர்களின் சமயப் பரப்பு நடவடிக்கைகள் அரசியலில் காட்டிய ஆர்வம்,அவர்களுடைய மேலாதிக்கப் போக்கு ஆகியவற்றினால் வெறுப்புற்ற ஜப்பானிய அரசு அயல்நாட்டவர்களுக்கு கடும் தண்டனை விதித்து நாட்டை விட்டு வெளியேறும்படி செய்தது.பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மூடப்பட்ட ஜப்பானின் கதவுகளைத் திறக்க ஐரோப்பியர்கள் பல வகைகளிலும் முயன்றனர்.வர்த்தகக் குழுக்களும் தூதுக் குழுக்களும் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டன.ரஷ்யர்கள் தான் இந்நூற்றாண்டுகளில் மூடப்பட்ட ஜப்பானியக் கதவுகளை தட்டியவர்கள், ஆயினும் ரஷ்ய-ஜப்பானிய உறவு சுமூகமாயில்லை.இங்கிலாந்து மேற்கொண்ட முயற்சிகளும் வெற்றி பெறவில்லை.

ஜப்பானின் தனிமைக் கொள்கை, ஜப்பானில் ஏற்பட்ட மாறுதல்கள், அல்ல உள்நாட்டுத் தூண்டுதல்கள் காரணமாகவும், அயல்நாட்டவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணமாகவும், முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

தங்கள் நாட்டின் வரலாற்றை அறியும் வாய்ப்பு 1851 லும் 1857 லும் வெளியான ஜப்பானிய வரலாறு, ஷோகன்களின் வரலாறு ஆகியவையின் மூலம் ஏற்பட்டது. ஜப்பானின் பண்டையப் பெருமைகள் வெளிவந்தன. மிக்காதோ மீது மக்களை மிகுந்த பக்திக்கொள்ளச் செய்தது.  மக்கள் ஷோகன்கள் உண்மையான அதிகாரம்

படைத்தவர்கள் அல்லர் என்று உணர்ந்தனர். ஜப்பானியர் உணர்வு தேசிய உணர்வாக உருவெடுத்தது. ஜப்பானிய நிலமானிய முறையினையும், ஷோகன்களிடம் அதிகாரம் குவிந்து கிடப்பதும் நாடெங்கும் குறை கூறப்பட்டது. வெளி உலக நடவடிக்கைகளை ஜப்பானிய இளைஞர்கள் அறிந்தனர். அயல்நாட்டு நூல்கள் இறக்குமதி, அயலவருடன் தொடர்பு ஆகியவை தடை செய்யப் பெற்ற போதிலும், மேற்கின் வாயிலாக விளங்கிய தேஷிமா வழியாக மேலைக் கருத்துக்கள் புகுந்தன. டச்சு மொழி வாயிலாகவும் ஜப்பானியர் மேலை அறிவியலைக் குறித்து அறிய நேர்ந்தது.

1844 ல் நெதர்லாந்தின் இரண்டாம் வில்லியம் ஷோகனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி தனித்து வாழ்வதின் தீமைகளைக் குறித்து அறிவுறுத்தினார். ஜப்பானிய இளைஞர்களும் தடையை மீறி அயலவர் கப்பல்களுக்குச் சென்று தங்கள் அறிவு பசிக்குத் தீனி பெற்றனர். ஜப்பானிய சமுதாயத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருந்தது. ஆட்சியாளர்கள், போர்வீரர்கள், சாமானியர்கள் என்ற நிலையில், வணிகள், சாமுராய்கள், மன நிறைவடையாத குடியானவர்கள் என்று புதிய பிரிவு உருவாகியிருந்தது. இவர்கள் ஜப்பானுக்கும் மேலை நாடுகளுக்கும் இடையிலிருந்த திரையை நீக்க முயற்சித்தனர். இந்நிலையில் மேலை நாடுகளில் ஏற்பட்ட புதிய சமுதாயம், புதிய அரச தேசியச் சொத்து ஆகியவற்றின் விளைவால் வணிக தொழில் விரிவாக்கம் ஏற்பட்டு ஜப்பான் அபிரிமிதமான நிலக்கரியை இறக்குமதி செய்ய கடல் வாணிக போட்டி, புதிய குடியேற்றங்களை தேடும்படி செய்தது. துல் சீன-ஆங்கிலப்போர் சீனாவின் கதவுகளைத் திறக்கச் செய்தது போல் ஜப்பானும் திறந்து விடும் என்று மேல்நாட்டினர் நம்பினர்.

### அமெரிக்காவின் பங்கு

இந்நூற்றாண்டின் அமெரிக்காதான் முதன் முதலில் ஜப்பானுக்குள் நுழைந்த நாடு. பசிபிக் பெருங்கடல் பகுதியில் அமெரிக்கா கொண்டிருந்த ஆர்வமே அமெரிக்காவை ஜப்பானில் நுழைந்து தன் எல்லையை விரிவுபடுத்தத் தூண்டியது. மேலும் இப்பெருங்கடலில் வாழும் திமிங்கலங்களை பிடிக்கும் தொழிலில் ஈடுபட விரும்பியது. சான்பிரான்சிஸ்கோவிலிருந்து சீனாவை அடைய அமெரிக்கா விரும்பியது. மேலும் அமெரிக்காவில் துணி உற்பத்தி தொழில் பெருகியதால் அவ்வாறு உற்பத்தியான துணிகளை விற்பதற்கு வாணிபச் சந்தைகளைத் தேடியது. அமெரிக்காவின், கலிபோர்னியாவில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது இதனால் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய பொருள் வசதி கிடைத்தது. ஜப்பானியத் துறை முகங்களில் நிலக்கரியை நிரப்பிக் கொள்ளும் வசதியைப் பெற அமெரிக்கா விரும்பியது. கப்பல்கள் உடைந்து ஜப்பானியக் கரைகளில் ஒதுங்குவோர், ஜப்பானியரால் இழிவுப்படுத்தப்பட்டனர். குற்றவாளிகளைப் போல் அவர்கள் நடத்தப்பட்டதோடு கூண்டுகளில் அடைக்கப்பட்டனர். அவர்கள் அணிந்த சிலுவையைக் காலில் போட்டு மிதிக்கும்படி வற்புறுத்தப்பட்டனர். இதனால் அமெரிக்கா ஜப்பானின் தனிமைக் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க முயன்றது. இதற்காக அமெரிக்காவிலிருந்து தூதுவர்கள் அனுப்பப்பட்டனர். 1846 ல் மேஜம்ஸ் பிட்டும் 1849 ல் ஜேம்ஸ் கில்லின் ஆகியோர் அனுப்பப்பட்டனர். அவர்கள் கைதாயினர். அதன்பின்னும் அமெரிக்கா தொடர்ந்து தனது முயற்சிகளை மேற்கொண்டது.

### பெர்ரி தூதுக் குழு 1853

அமெரிக்க குடியரத் தலைவர், பில்மோரின் கடிதத்துடன் தளபதி மேத்யூ கால் பிரெய்த் பெர்ரி எனபவர். நார்போக்கிலிருந்து நவம்பர் 24, 1852 ல் புறப்பட்டார்.

பெர்ரி தூதுக் குழுவின் தலைவரான பெர்ரி, கிழக்கு ஆசியாவில் குடியேற்றங்கள் அமைக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டார். அமெரிக்கக் கப்பல்கள் நிலக்கரியிலும், நிரும் நிரப்பிக் கொள்ளச் சில

துறைமுகங்களைப் ஜப்பானிடமிருந்து பெற வேண்டும். உடைந்த கப்பல்களிலிருந்து கரையேறும் கடற்பயணிகளுக்கு பாதுகாப்பு பெற வேண்டும். வாணிபத்திற்கெனத் துறைமுகங்களை பெற வேண்டும் என்ற கோரிக்கைகளை அமைதியான முறையில், பேச்சு வார்த்தைகள் மூலம் பெற விரும்பினர். மேலும் இத்திட்டம் பலன் தரவில்லை என்றால் படை வலிமையைக் காட்ட வேண்டும் என்று விரும்பினார்.

பெர்ரியின் வருகை பரபரப்பை ஏற்படுத்தியது. பெர்ரி குடியரசுத் தலைவரின் கடிதத்தை ஒப்படைத்து, ஓராண்டுக்குள் பதில் தரும்படி வேண்டினார். அதனால் பெர்ரி மீண்டும் பிப்ரவரியில் வந்து இறங்கிய பொழுது ஜப்பானியர் நட்புறவுடன் வரவேற்று, பேச்சுவார்த்தையின் மூலம் 1853, மார்ச் 31 ஆம் நாள் கனகவா உடன்படிக்கை கையெழுத்தாகியது. அதன் படி இரு நாடுகளும் அமைதியுடனும் வாழ ஒத்துக் கொண்டன. மேலும் நாகசாகியைத் தவிர ஷீமோதா, ஹகோதத் ஆகிய துறைமுகங்கள் அமெரிக்காவுக்குத் திறந்து விடப்பட்டு அங்கு அமெரிகக கப்பல்களுககுத் தேவையான நிலக்கரி, உணவுப் பொருட்கள் முதலியன பெறவும் செப்பனிட வசதி அளிக்கவும் ஜப்பான் முன் வந்தது. அதோடுமட்டுமல்லாது, அமெரிக்க ஐக்கியநாட்டின் முகாம்கள் ஷிமோதாவில் மட்டும் தங்க அனுமதி கிடைத்தது. மேலும் கப்பல் உடைந்து தவிப்பவர்களுக்கு உடனடி உதவி செய்ய வேண்டும் என்றும், இதற்குரிய செலவை சம்பந்தப்பட்ட நாடுகள் அளிக்க வேண்டும் என்றும், ஜப்பானிய அரசின் விதிமுறைகளுக்குப்பட்டே துறைமுகங்களில் வாணிபம் செய்ய வேண்டும் என்றும் ஷிமோதா, ஹகோதத், நாகசாகி தவிர வேறு துறைமுகங்களுக்குள் அமெரிக்க கப்பல்கள் அனுமதிக்கப்படமாட்டா என்றும் பிற நாடுகளுக்கு வழங்கப்படும் உரிமைகள் அமெரிக்காவிற்கும் உண்டு என்றும் இவ்வுடன்பாட்டில் ஏதாவது குறை இருந்தால் 18 மாதங்களில் மாற்றியமைக்கலாமெனவும் இருநாடுகளும் ஒப்புக் கொண்டன.

இவ்வுடன்படிக்கை பல குறைபாடுகளைக் கொண்டதாக இருந்தது. இதில் அமெரிக்காவிற்கு சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படவில்லை. வாணிகத்திற்குத் திறந்து விடப்பட்ட துறைமுகங்களும் சிறப்பானவையல்ல. நிலக்கரி எளிதாக கிடைக்கவில்லை. நீதித் துறை சலுகைகளும் நன்கு வரையறுக்கப்படவில்லை.

ஜப்பானுடன் அமெரிக்கா ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையைப் பின்பற்றிய பிற நாடுகளும் ஜப்பானை உடன்படிக்கைகளுக்குள்ளாக்கின. 1854 ல் இங்கிலாந்தும் 1855 ல் ரஷ்யாவும் 1856 ல் டச்சுக்காரர்களும் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

கனகாவா உடன்படிக்கையின் விதிமுறைகளை நிறைவேற்ற வந்த ஹாரிஸ் 1856 ல் ஜப்பானில் ஷிமோதா வந்து இறங்கினார். ஜப்பானியர் அவரை நல்ல முறையில் உபசரிக்கவில்லை. பின்பு சில மாதங்கள் சென்ற பின் ஜப்பானியர் இவரின் சீரிய குணத்தைக் கண்டு தங்கள் நாட்டின் ஆலோசகராக மாற்றினார்கள. ஷோகன்களை பார்த்து நேரடியாகப் பேசிய முதல் அயல் நாட்டவர் என்ற பெருமையைப் பெற்ற ஹாரிஸ் ஷோகன்களின் உதவியோடு மிக்காட்போ என்ற ஜப்பானிய மன்னருடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அதன்படி அமெரிக்காவுடன் தூதராக உறவு கொள்ள ஜப்பான் ஒப்புக் கொண்டது. கனகாவா, நிகாதா, ஹயாகோ, நாகசாகி ஆகிய நான்கு துறைமுகங்கள் வாணிபத்திற்கு திறந்துவிடப்பட்டன. தனியார் வாணிபமும் அனுமதிக்கப்பட்டது. சுங்க வரி 5 விழுக்காடு எனவும் ஜப்பானிய சட்டங்கள் அமெரிக்கரை கட்டுப்படுத்தாது எனவும், அமெரிக்கருக்கு பொதுவாக சிறப்புரிமைகள் உண்டு எனவும் முடிவு செய்யப்பட்டது. அயல் நாட்டவர் படையெடுப்பின் போது அமெரிக்கா உதவி செய்ய வேண்டும் என்றும், அபின் இறக்குமதியை குறைக்க வேண்டும் என்றும் இருநாட்டு நாணயங்களும் உபயோகத்தில் இருக்கும் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இவ்வுடன்படிக்கையின் சிறப்பு என்னவென்றால், 1894 வரை ஜப்பானின் அயல்நாட்டு உறவுக் கொள்கைகளின் அடிப்படையாகவும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு முன் மாதிரியாகவும் விளங்கியது. சமமற்ற ஒப்பந்தம் செய்து மேல் நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் தவிக்கும் நிலையிலிருந்து ஜப்பானைக் காத்தது. வாஷிங்டனில் ஜப்பானின் முதல் தூதரகம் ஏற்படுத்தப்பட்டது. ஜப்பான் மேலைநாடுகளுக்கு திறந்து விடப்பட்டதால் தனிமைக் கொள்கை முடிவுக்கு வந்தது. மேலை நாடுகளுடன் தொடர்பு ஏற்பட்டது. ஷோகனின் வலிமை குன்றியது. மேலை நாட்டவர் வருகையால் ஜப்பானில் ஷோகன் எதிர்ப்பு இயக்கம் சந்சோஹித்தோ எனும் பிரிவினரால் ஆரம்பிக்கப்பட்டது. 1866 ல் ஜப்பானிய மன்னன் மிக்காதோ அயலவார்களுடன் உடன்படிக்கையில் கையெழுத்திட்டதும், மேலும் பல நாடுகளுக்கு ஜப்பான் திறந்துவிடப்பட்டது. இது புதிய ஜப்பான் உருவாகுவதற்கு வழி வகுத்தது. இதைத் தொடர்ந்து 1868 ல் மெய்ஜி முன்னிலை மீட்சி ஏற்பட்டது.

## முதல் அபினிப் போர் (1839 - 1842)

### போருக்குமுன் சீனாவின் நிலை

சீனாவிற்கு வந்த ஐரோப்பியர்கள் முதலில் வணிக நோக்கத்தோடு இருந்தனர். பின்னர் சீனர் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட ஆரம்பித்தார்கள். அதாவது அரசியலில் ஈடுபட்டுச் சீனாவின் உள்நாட்டு பிரச்சனைகளில் தீவிரமாக கவனம் செலுத்தினார்கள். எனவே சீன மன்னர்கள் அவர்களுக்குச் சில விதிமுறைகளை வகுத்துத் தர வேண்டியதின அவசியத்தை உணர்ந்தனர். அதன் விளைவாக அனைத்து ஐரோப்பியர்களுடன் காண்டன் துறைமுகம் (Canton Porty) வழியாகத்தான் வாணிபம் செய்ய வேண்டும என ஆணையிடப்பட்டது.

### காண்டன் துறைமுகம்

ஐரோப்பிய வணிகக் கப்பல்கள் அனைத்தும் காண்டன் துறைமுகத்தின் வழியாக வர மன்னரால் அனுமதிக்கப்பட்டன. மன்னரால் அனுமதிக்கப்பட்ட வணிக ஆணையினர் (Trade Commissioners) மூலம் ஐரோப்பியர்கள் தங்கள் வாணிபத்தை கவனித்து வந்தனர். சீனர்களும் அந்த ஆணையாளர் மூலமே வியாபாரம் செய்து வந்தனர். ஐரோப்பியர்கள் தங்கள் சரக்குக் கப்பல்களை ஒரு குறிப்பிட்ட நிலையத்தில் இறக்க வேண்டும் என்றும், குறிப்பிட்ட வியாபாரிகளுக்கு அச்சரக்குகளை விற்க வேண்டும் என்றும் மன்னர் குறிப்பிட்டிருந்தார். அந்த நிலையங்களுக்கு (Hongs) ஹாங்குகள் என்று பெயர். அந்த வியாபாரிகள் பதின்மூன்று பேரும் மன்னரால் ஏற்படுத்தப்பட்டனர். வணிக உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் எல்லாம் இந்த பதின்மூன்று பேர்களின் மூலமாகவே நடைபெற்றுவந்தன. சீன அரசாங்கம் ஐரோப்பிய வணிகர்களுக்கும் அவர்களுடைய சரக்கு கப்பல்களுக்கும் பாதுகாப்பு அளித்து வந்தது.

காண்டன்ஸ் நடைபெற்று வந்த ஐரோப்பியர்களின் வியாபாரத்தைச் சிறந்த முறையில் கவனிப்பதற்கு சீன அரசாங்கம் ஒரு அலுவலரை ஏற்படுத்தியது. அவருக்கு ஹைப்போ என்று பெயர். ஐரோப்பியர்கள் அவர் மூலம் தங்கள் வணிகத்தை நடத்தி வந்தனர்.

### முதல் அபினிப் போர் (The First Opium War 1839 - 42)

சீனாவின் பல ஐரோப்பிய நாட்டினர் வணிக நோக்கத்தோடு வந்தனர். அவர்களில் ஆங்கிலேய்ரகள் முதன்மையான இடத்தை வகித்தனர். சீனாவில் கிடைக்கும் பட்டு, தேயிலை, பீங்கான் பாத்திரங்கள் ஐரோப்பியர்களிடம் அதிகம் இல்லை. எனவே ஆங்கிலேயர்கள், சீனர்களை அபின்பழக்கத்திற்கு அடிமையாக்கினார்கள். சீனர்கள் 1800 ஆம் ஆண்டு 4000 பெட்டிகள் கொண்ட அபினியைப் பயன்படுத்தினார்கள். இது 1810 ல் 16000 பெட்டிகளாகவும் அதிகரித்தது. ஒரு பெட்டியின் விலை சுமார் 1500 ரூபாயாகும். இதனால் ஒவ்வொரு ஆண்டும் சீனாவிலிருந்து அதிகமாக வெள்ளி நாணயங்கள் வெளியேறின. எனவே நாட்டின் வருவாய் குறைந்தது. கருவூலம் காலியாகிக் கொண்டிருந்தது. பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டு மன்னரை பீதியடையச் செய்தது. இதைக் கட்டுப்படுத்த மன்னர் முன் வந்தார்.

அபினி வணிகத்தை தடை செய்ய சீன அரசாங்கங்கள் 1800 ஆம் ஆண்டில் சியாங் (Chiang) மன்னர் காலத்திலிலேயே ஆணையை வெளியிட்டது. அதன்படி ஐரோப்பியர் சீனாவுடன் செய்து வந்த அபினி வணிகம் தடை செய்யப்பட்டது. சீனாவில் கஞ்சா செடியைப் பயிர் செய்யக் கூடாதென்றும் அது கூறியது. இச்சூழ்நிலையில் ஆங்கிலேயர் மட்டும் சீனர்களுடன் தொடர்புகொண்டு அவ்வணிகத்தைத் தொடர்ந்து நடத்த திட்டமிட்டனர். ஆம்

ஹெர்ஸ்ட் பிரபுவின் (**Lord Amherst** ) தலைமையில் 1816 ஆம் ஆண்டு ஒரு தூதுக்குழு சீனாவை வந்தடைந்தது. ஆனால் அது வெற்றி பெறவில்லை.

பின்னர் நேப்பியர் பிரபு (**Lord Napier**) எனபவர் ஆங்கில அரசன் சார்பாக சீனாவிற்கு வந்து சேர்ந்தார். சீன அரசின் சட்ட திட்டங்களுக்குப் புறம்பாக இவர் சீனர்களுடன் நேரடியான வணிகத் தொடர்பினை வைத்துக் கொள்ள முயன்றார். இதை அவ்வதிகாரிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. நேப்பியார் பிரபுக்குத் தக்க மரியாதையும் மதிப்பும் தராமல் திரும்பிச்செல்லும் படி சீன அதிகாரிகள் வற்புறுத்தினர். இதனால் ஆத்திரம் கொண்ட நேப்பியர் பிரபு தன் படைகளை ஏவி சீனாவை சின்னா பின்னப் படுத்தச்செய்தார். இந்நிலையில சில சீன வணிகர்கள் தலையிட்டு நிலைமையைச் சரிபடுத்தினர்.

நேப்பியர் பிரபுவுக்கு பிறகு ஜான் பிரான்சிஸ் (**John Francis**) ஜார்ஜ் ராபின்சன (**George Robinson**) ஆகிய இருவரும் ஆங்கில அரசின் சார்பில் சீனாவுக்கு வந்து சீன உறவில் எந்த மாற்றத்தையும் காண முடியாமல் திரும்பினர். பின்னர் சார்லஸ் எலியட்(**Charles Eliot**) என்பவர் ஆங்கில அரசின் பிரதிநிதியாக சீனாவுக்கு வந்தார். அப்பொழுது தாவோ குவாங் (**Tao Kuang**) மன்னராக இருந்தார். இவர் 1839 ல் லின் ட்சி சு (**Lin Tse Hsu**) என்பவரை வணிக ஆணையாளராக நியமித்தார். மன்னரின் ஆணையை சிரமேற் கெணடு அவர் செயல்படலானார். அவர் காண்டன் துறைமுகத்தை வந்தடைந்து நிலைமையைச் சீர்த் தூக்கி ஆராய்ந்து, ஆங்கிலேயரின் கள்ளத்தனமான அபினி வணிகத்தை இனி பொறுத்துக்கொள்ள முடியாதென்று ஆணையிட்டார். சிறிது காலம் கடத்தியபின் எலியட் தன் வசமுள்ள 2000 க்கு மேற்பட்ட அபினிப் பெட்டிகளை லின்ட்சே சுவிடம் ஒப்படைத்தார். அவர் அதை நாசம் செய்தார். மேலும் ஆங்கிலேயர்கள் அவருடைய விதிமுறைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. அத்துடன் ஆங்கிலேயர்கள் ஒரு சிலரைக் கொன்று விட்டனர். இச்செயல் ட்சேசுவை ஆத்திர மூட்டியது. எனவே ஆங்கிலேயர்களின் அனைத்து வாணிகத்தையும் லின் தடை செய்தார்.

அச்சமயத்தில் இங்கிலாந்தின் வெளிநாட்டு அமைச்சராக இருந்த பால்மர்ஸ்டன் யீபரபு (**Lord Palmerston**) சீனாவுக்கு ஒரு பாடம் கற்பிக்க எண்ணினார். அவருடைய ஆணையின்படி 16 போர்க் கப்பல்களும் 1400 வீரர்களும் இந்தியாவிலிருந்து சீனாவுக்கு சென்றன. இப்படையின் தாக்குதல்களால் காண்டன் துறைமுகம் ஆங்கிலேயர் வசம் வந்து சேர்ந்தது. இத்தோல்விக்கு லின்னின் திறமையின்மையே காரணம் எனக் கருதிய சீன அரசு அவரை பதவியிலிருந்து நீக்கி விட்டு சி ஷான் (**Chi Shan**) என்பவரை நியமித்தது. அவருடைய பேச்சுவார்த்தைகளின் முடிவாக ஹாங் காங்கை (**Hong Kong**) ஆங்கிலேயர் வசம் கொடுத்து விட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும் அவர்களுடைய அபினியைப் பறிமுதல் செய்ததற்காக இழப்பீட்டுத் தொகையாக 60 லட்சம் சீன நாணயங்களை ஆங்கிலேயருக்கு தருவதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இப்பேச்சு வார்த்தையில் அதிருப்தியடைந்த சீன அரசு அவரையும் பதவி நீக்கம் செய்தது. 1840 ல் எலியட் சீனா மீது படையெடுத்தார். இதுவே அபினிப் போருக்கு ஆரம்பமாகும். இது முதல் ஆங்கில-சீனப் போர் என்று அழைக்கப்படுகிறது.

### முதல் ஆங்கில - சீனப் போர் 1844 -42

**காரணங்கள்**

1. இப்போருக்கு ஆங்கிலேயரின் ஆதிக்க ஆசையே காரணமாகும். அவர்கள் தங்களுடைய வணிகத்தை சீனாவில் திறம்பட நடத்த வேண்டும் என்று விரும்பினார்கள். மேலும் ஏனைய ஐரோப்பியர்களை விட தாங்கள் மேலான இடத்தில் இருக்க வேண்டுமென எண்ணினார்கள். தங்களுடைய பிரதிநிதிகள்

அனைவரும் சீன மக்களிடம் சமமாக அமர்ந்து வணிக உடன்பாடுகளைப் பேச வேண்டும் என்று விரும்பினார். இதைச் சீனா நிராகரித்தது. அத்துடன் சீனமன்னர் உயர்ந்தவரென்றும், வணிகம் வணிகரிடத்தில் நடைபெற வேண்டிய ஒன்று எனவும் சீன அரசு கருதியது.

2. இப்போருக்கு மற்றொரு காரணம் சீனர்களிடையே காணப்பட்ட நாகரிகத்தின் தனிச்சிறப்பும் தனி பெருமையுமேயாகும். அவர்கள் ஆசியாக் கண்டத்தில் உள்ளவர்கள் தான்; ஏனைய மக்களைக் காட்டிலும் சிறந்த நாகரீக, பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டவர்கள் என்றும் தங்களை கருதினார்கள். சீனர்கள் வேற்றுப் பண்பாடு, நாகரீக முன்னேற்றம், அரசியல் நிர்வாகம், இன்ன பிற துறைகளில் மாற்றம் போன்றவையை அறவே ஏற்க மறுத்தனர். எதையும் சமத்துவம் என்ற கண் கொண்டு அவர்கள் நோக்கினர். இப்பண்பாட்டு மோதலே போரை உருவாக்கியது.

3. சீன மக்கள் அபினிப் பழக்கமுடையவர்கள் அல்ல. அப்பழக்கமானது சீனர்கள் மீது திணிக்கப்பட்டது. ஒரு சமயம் லின் என்ற ஆணையாளர் விக்டோரியா மகாராணியாருக்கு கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார். நீங்களும் உங்கள் மக்களும் அபினியைப் பயனபடுத்துவதில்லை. ஆனால் இத்தீய பழக்கம் இங்கு அதிகமாக்கப்பட வேண்டுமென விரும்புகிறீர்கள். இதிலிருந்து ஆங்கிலேயரின் நோக்கு நன்கு தெரிகிறது. இப்பழக்கம் சீனர்கள் உடலையும் உள்ளத்தையும் பாதித்தது. அதைவிட அவர்களின் ஒழுக்கங்களையும் பாதித்தது. மேலும் சீனாவின் பொருளாதாரம் சீர்குலைந்தது. அவர்கள் நாட்டைவிட்டு வெள்ளியும், பொன்னும் வெளியேறின.

4. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பம் முதலே ஆங்கிலேயர்கள் சீனாவில் ஆக்கிரமிப்புக் கொள்கையைப பின்பற்றி வந்தனர். அமைதியான வழியில் ஆக்கமும் ஊக்கமும் பெருவதை விட ஆங்கிலேயர்கள் பயமுறுத்தல்களில் சீனாவை அடி பணிய வைக்க முயன்றனர். நேப்பியர் பிரபுவின் நேர்மையற்ற செயல்களாலும் இது நன்கு தெரிய வருகிறது. எனவே இத்தகைய ஆக்கிரமிப்புக் கொள்கை ஆபத்தை விளைவிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

5. அபினி வணிகத்தில் அபரிதமான லாபத்தை அடைய வேண்டுமென கருதிய ஆங்கிலேயர்கள் அதை சீனர்களுக்கு கடனாக கொடுக்க முன் வந்தனர். இதனால் கடன் தொல்லை எல்லையைக் கடந்தது. இந்நிலையில் சீன அரசு அபினியைப் பறி முதல் செய்ய முற்பட்டது. ஆக்கிரமிப்புக் கொள்கையை ஆரம்பத்திலிருந்தே கடைபிடித்து வரும் ஆங்கிலேயர், நாசமாக்கப்பட்ட அபினிக்கு நஷ்ட ஈடு தரும்படி கேட்டனர். மேலும் தாங்கள் கொடுத்த கடன்களையும் சீன வணிகர்களிடமிருந்து திருப்பிக் கேட்டனர். இச்சூழ்நிலைகள் போருக்கு வழிவகுத்தன.

6, ஐரோப்பிய வணிகர்கள் அனைவரும் காண்டன் துறைமுகத்தின் வழியாக வாணிபம் செய்ய அனுமதிககப்பட்டனர். சீன மண்ணில் நடைபெறும் தவறுக்குச் சீன அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க அதிகாரம் பெற்றிருந்தது. சீனர்களுக்கு எதிராக சில குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை ஆங்கிலேயர் அவர்களிடம் பிடித்துக் கொடுக்கவில்லை. இது போன்ற செயல்கள் சீனர்களின் உரிமையைப் பாதித்தது. இதை சீன மன்னர்கள் தங்கள் இறையாண்மைக்கு ஏற்பட்ட இழுக்கு எனக் கருதி எதிர்க்க முற்பட்டனர். ஆனால் ஆங்கிலேயர்களோ வாணிபம் செய்யுமிடங்கள் தங்களுக்கே உரியதென்றும், அங்கு வாழும் மக்கள் அனைவரும் தங்களுடைய குடிமக்கள் என்றும் கருதி வந்தனர். இதில் ஏற்பட்ட போட்டியே அவர்களை போருக்கு அழைத்துச் சென்றது.

7. அபினிப் போருக்கு மற்றொரு காரணம் சீன அரசாங்கம் அபினி வணிகத்தை தடை செய்ய முற்பட்டதேயாகும். சீனர்கள் அபினியின் தீங்கினை உணரலாயினர். சீன அரசு அவ்வணிகத்தைத்

தடை செய்தது. ஆனால் அபினி வணிகத்தினால் இங்கிலாந்து அளவில்லாத ஆதாயத்தை அடைந்தது. எனவே அவர்கள் அவ்வணிகத்தை சட்ட விரோதமாக கள்ளத்தனமாக தொடர்ந்து நடத்தி வந்தனர்.

8. ஆங்கிலேயர்கள் சீனக் குடிமகன் ஒருவனைக் கொலை செய்தது போருக்கு உடனடிக் காரணமாக அமைந்தது. இது கௌலூன்ஸ் என்றப் பகுதியில் நடைபெற்றது. குற்றவாளியை சரண் அடையும்படி லின்கேட்டார். எலியட் மறுத்துவிட்டார். எனவே லின் கோபமடைந்து மாகோவிலிருந்து ஆங்கிலேயர்களை விரட்ட முற்பட்டார். அதனால் போர் ஆரம்பமானது.

**போரின் போக்கு**

முதல் அபினிப் போர் 1840 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் ஆரம்பமானது. ஆங்கிலேயரின் பீரங்கிகளும், படைகளும், 16 கப்பல்களில் காண்டன் துறைமுகம் அருகில் வந்து சேர்ந்தன. அதனால் ஆத்திரமடைந்த சீன அதிகாரிகள் அவர்களைக் எதிர்க்க எண்ணினர். ஆங்கிலேயரின் படைகள் முதலில் காண்டன் துறைமுகத்தின் அருகில் தாக்குதல்களைத் தொடங்கின. லின்னுடைய முன் நடவடிக்கைகள் மிகச் சீறிய முறையில் இருந்ததால் அப்படைகள் வேறு பக்கங்களில் சென்று தாக்குதல்களை நடத்தின. அவைகள் யாங் சிக்கியாங் நதியின் முகத்துவாரத்தில் இருந்த கோட்டைகள், கட்டிடங்கள், அரண்மனைகள் ஆகியவற்றை தாக்கி நாசம் செய்தனர். அப்படைகளுக்கு முன் நிற்க முடியாமல் சீனப் படைகள் பின்வாங்கின. ஆங்கிலப்படைகள் மின்னல் வேகத்தில் முன்னேறியதைக் கண்ட சீன அரசர் மிகவும் பீதி அடைந்தார். அவருடைய அமைச்சர்களும் நடுங்கிப் போனார்கள். இச்செயல்களுக்கெல்லாம் லின்னின் நடவடிக்கைகளே காரணம் என அவர்கள் கருதி அவரை பதவியிலிருந்து நீக்கினார்கள். அவருடைய இடத்தை சீ ஷான் (**Chi Shen**) என்பவர் பெற்றார்.

சீ ஷான் பிரிட்டிஷ் பேரரசுடன் அமைதி உடன்பாடு செய்து கொள்ள விரும்பினார். ஆனால் அவர்கள் ஹாங்காங் பகுதியைத் தங்களுக்கு அளிக்க வேண்டுமென்றும், காண்டன் துறைமுகத்தில் மீண்டும் தங்கள் வாணிபம் எவ்வித தட்டுத் தடங்கலின்றி நடைபெற வேண்டுமென்றும், தங்களின் அபினியைப் பறித்து படு நாசத்திற்கு உள்ளாக்கியதற்கு இழப்பீட்டுத தொகை தரவேண்டுமென்றும் கோரினார்கள். சீ ஷான் போரை முடித்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பியதால் அவர்களுடைய கோரிக்கைகளுக்கு இணங்கினார். போர் தற்காலிகமாக நின்றது. இதையறிந்து சீன அரசு சீ ஷானின் முடிவுகளை ஏற்றுக்கொள்ளவில்லை. மீண்டும் போர் தொடர்ந்து நடைபெற்றது. சீன நகரங்களான காண்டன், அமாய் (**Amoy**) ஷாங்காய் (**Shanghai**), நிங்கோ (**Ningo**) முதலியவை பிரிட்டிஷாரின் வசம் விழுந்தது. பீகிங் நகரம் பீதி அடைந்தது. சீனர்களுகது எல்லையில்லா தொல்லைகள் தொடர்ந்தன. எனவே அவர்கள் பிரிட்டிஷாருடன் அமைதிப் பேச்சுக்களைத் தொடங்கினார்கள். அதன் விளைவாக 1842 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29 ம் நாள் நான்கிங் உடன்படிக்கை (**Treaty of Nanking**) மூலம் போர் முடிவுற்றது.

**நான்கிங் உடன்படிக்கை 1842**

முதல் அபினிப் போர் நான்கிங் உடன்படிக்கையினால் முற்றுப் பெற்றது. இவ்வுடன்படிக்கையினால் பிரிட்டன் சீனாவிடமிருந்து பல சலுகைகளைப் பெற்றுக் கொண்டது. அதனுடைய விதிகளாவன.

1. இவ்வுடன்படிக்கையின் காண்டன், அமாய், பூச்சௌங், நிங்கோ, ஷாங்காய் ஆகிய ஐந்து துறைமுகங்களில் பிரிட்டிஷார் வணிகம் செய்ய சீனா அனுமதியளித்தது. அந்த வணிகர்கள் தங்களுடைய இல்லங்களை அமைத்துக் கொள்ளவும் மற்ற வணிக இல்லங்களை அல்லது நிலையங்களை அங்கு நிர்மாணித்துக் கொள்ளவும் அனுமதி பெற்றனர்.

2. ஹாங்காங் தீவு பிரிட்டிஷாருக்கு அளிக்கப்பட்டது.

3. பிரிட்டிஷ் வணிகர்கள், ஷாங்குகள் மூலமாக வணிகம் செய்து வந்தது நிறுத்தப்பட்டது. அவர்கள் சீன வணிகர்களுடன் நேரடியாக வணிகம் செய்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள்,

4. போரின் போது சீனர்களால் பறிக்கப்பட்டு படு நாசமாக்கப்பட்ட அபினிக்கு இழப்பீட்டுத் தொகையாக இரண்டு கோடி டாலர் அளிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அத்தொகையை தவணை முறையில் வெள்ளி நாணயங்களாக அளிக்க வேண்டும் என்றும் சீனாவிடம் அறிவிக்கப்பட்டது.

5. பிரிட்டிஷ் வணிகப் பிரதிநிதியை சீனர்கள் சமமாக நடத்த வேண்டும் என்று அவ்வுடன்பாடு கூறியது.

6. பொருட்களின் மீது விதிக்கப்படும் வரி முடிவு செய்யப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அனுமதியின்றி வரியை அதிகமாக்கவோ அல்லது குறைக்கவோ முடியாது.

7. மண்டியிட்டு (**Kow - Tow**) வணங்கும் முறை நீக்கப்பட்டது.

8. ஆங்கிலேயர்கள் தங்களுக்கு சாதகமான நிலைகளை அடைந்ததன் விளைவாக ஏனைய மேலைநாடுகள் குறிப்பாக பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகள் சீனாவிலிருந்து சலுகைகள் பெற்றன.

**போக் உடன்படிக்கை 1843**

ஆங்கிலேயர்கள் சீனாவுடன் 1843 ஆம் ஆண்டில் போக் உடன்படிக்கையினைச் செய்து கொண்டனர். அதன்படி.

1. ஆங்கிலேயர்கள் விஷேஷப் பிரதேச உரிமைகளைப் பெற்றனர்.

2. மற்ற நாடுகளுக்கு வழங்கும் அனைத்துச் சலுகைகளையும் பிரிட்டன் பெற்றது.

3. சுங்க வரிகள் நிர்ணயிக்கப்பட்டன.

4. ஆங்கிலேயர்களின் வணிகத்தையும் அவர்களையும் பாதுகாக்கும் பொருட்டு சீனத் துறைமுகங்களில் ஆங்கிலேயக் கப்பல்கள் தங்கியிருக்க வழி வகை செய்யப்பட்டது.

**திறனாய்வு**

நான்கிங் உடன்படிக்கைப் பற்றி சில வரலாற்றிஞர்கள் குறை கூறியுள்ளனர். இது சீனாவைப் பழி வாங்கிய உடன்பாடாகும் என அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மற்றும் இவ்வுடன்பாடு தற்கால உலகில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட தரம் கெட்ட உடன்படிக்கையாகும் என்றும், மேடுபள்ளங்கள் நிறைந்த உடன்படிக்கையென்றும் அவர்கள் குறை கூறியுள்ளனர். கிரீன் பெர்க் (**Green berg**) என்ற அறிஞர் இந்த உடன்படிக்கையின் விதிகள் பிரிட்டிஷ் வணிகர்களின் விருப்பங்களை சுருக்கமாகப் பிரதிபலிக்கின்றது என்றால் அது மிகையாகாது என்று கூறியுள்ளனர்.

**விளைவுகள்**

நான்கிங் உடன்படிக்கை அபினிப் போரை முடித்து வைத்தது என்பதை எவரும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது. ஆனால் அதனுடைய முக்கியத்துவம் போரை முடிப்பதில் அமையவில்லை. இவ்வுடன்படிக்கையினால் ஆங்கிலேயர்களின் பேரவா உள்ளங்கை நெல்லிக்கனி போல் இனிது புலனாகிறது. மேலும் சீனர்களின் காசில்லா நுழைவுச் சலுகை கோட்பாட்டை இது நன்கு புலப்படுத்துகிறது. இதன் விளைவாக

பல உடன்பாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக தோன்றின.

ஆங்கிலேயர்களைப் போலவே ஏனைய ஐரோப்பிய நாட்டவரும் நான்கிங் உடன்படிக்கைப் போலச் சில உடன்படிக்கைகள் செய்து கொள்ள முன்வந்தனர். அமெரிக்கா, சீனாவுடன் 1844 ஆம் ஆண்டு ஜுலை திங்களில் ஒரு வணிக உடன்படிக்கையைச் செய்து கொண்டது. பின்னர் 1847 ஆம் ஆண்டில் மார்ச் திங்களில் நார்வேயும் ஸ்வீடனும் சீனாவுடன் ஒரு உடன்படிக்கையைச் செய்து கொண்டன. இவ்வாறு சீனா நீட்டிய தாளில் காட்டிய இடத்தில் கையெழுத்திட்டது.

இவ்வுடன்படிக்கைகளின் விளைவாக, குறிப்பாக நான்கிங் உடன்படிக்கையின் விளைவாக, சீனாவின் பெருமை குறிப்பிடத்தக்க அளவிற்கு குறைநதுவிட்டது. சீன வீரர்களின் திறமையின்மை நன்கு வெளிப்பட்டது. நெடுங்காலமாக சீரும் சிறப்பும் பெற்றும் விளங்கிய சீனப் பேரரசு ஐரோப்பிய வல்லரசுகளின் முன்னிலையில் வளைந்து விட்டது. சீனாவின் வாணிகக் கொள்கைக்கு பலத்த அடி ஏற்பட்டது. அவர்களுக்கே உரித்தான, தனித்தன்மை வாய்ந்த வணிகக் கொள்கை மறைந்து காசில்லா நுழைவுச் சலுகை கொள்கை (**Open Door policy**) எழுந்தது. எனவே இதுகாறும் காண்டன் துறைமுகத்தில் மட்டும் வணிகம் செய்து வந்த ஐரோப்பியர்கள் இவ்வுடன்படிக்கையால் பல இடங்களில் நேரிடையாக வணிகத்தை மேற்கொள்ளும் உரிமைகளைப் பெற்றார்கள்.

இவ்வுடன்படிக்கையின் மற்றொரு முக்கிய விளைவு சிறப்புப் பகுதி உரிமை அல்லது பிரதேச உரிமை உருவாக்கப்பட்டதாகும். இதன்படி சீன மண்ணில் குற்றங்களிழைக்கும் ஐரோப்பியர்களை விசாரணை செய்ய சீன அரசுக்கு உரிமையில்லை என்று ஏற்றுக் கொண்டதின் மூலம் சீனா தன் இறையாண்மையை இழந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமா? ஆகவே குற்றம் செய்த பிரிட்டிஷார் சீன சட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்களாகக் கருதப்பட்டார்கள். சீன மண்ணில் தவறிழைக்கும் ஐரோப்பியரை ஓர் ஐரோப்பியர்த் தான் விசாரணை செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. சுருங்கக் கூறின் சீனர்கள் தங்கள் உரிமைகளை இழந்தனர். வெளிநாட்டவர் வேண்டிய சலுகைகளைப் பெற்றனர்.

நான்கிங் உடன்படிக்கையினால் ஐரோப்பியப் பேராதிக்கம் பெருகியது. அது சீனாவை ஆட்கொண்டது. பலவித உடன்படிக்கைகளில் சிக்குண்டு தவித்த சீனா வேதனையால் அந்நாடுகளுடன் பல போர்களில் ஈடுபட்டு தோற்றது. பொருளாதார அரசியல் ரீதியில் சீனாவை ஐரோப்பிய நாடுகள் சுரண்ட ஆரம்பித்தன. அவர்களுடைய ஆதிக்கம், சமய மேம்பாடு ஆகியவை சீனாவில் வளர்ந்தன. இவ்வாறு நான்கிங் உடன்பாடு சீன வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது.

## இரண்டாம் அபினிப் போர் (1856 58)
## (The Second Opium War)

முதல் அபினிப் போர் நான்கிங் உடன்படிக்கையுடன் முடிவுற்றது என்று கண்டோம். அதன் மூலம் ஐரோப்பிய வணிகர்கள் வியாபாரச் சலுகைகளைப் பெற்றதோடு மட்டுமல்லாமல் சில சிறப்பு உரிமைகளையும் பெற்றார்கள். இந்த சிறப்பு உரிமைகள் சீன அரசின் ஆணிவேரையே ஆட்டங்காணச் செய்தன. அத்துடன் தைப்பிங் கிளர்ச்சி அவர்களின் நிலையை மேலும் சிக்கலாக்கியது. இக்கிளர்ச்சியின் போது ஐரோப்பியர்கள் மேலும் பல சலுகைகளைப் பெற்றிருந்தனர். ஆனால் சீனாவுக்கு மீண்டும் ஒரு நெருக்கடி ஏற்பட்டது. அதுதான் இரண்டாம் அபினிப் போராகும். இதை இரண்டாம் ஆங்கிலேயச் சீனப்போர் என்றும் அழைக்கலாம்.

**காரணங்கள்**

நான்கிங் உடன்படிக்கைக்குப் பிறகு ஐரோப்பிய வணிகர்கள் சீனாவில் மேலும் பல வியாபாரச் சலுகைகளையும் சிறப்பு உரிமைகளையும் பெற்றிருந்தனர். மேலும் அபினி வணிகம் முன்பு இருந்ததை விட தற்போது மூன்று மடங்கு அதிகமாக நடைபெற்றது. இதைக் கண்ட சீனர்கள் ஆத்திரமடைந்தனர். ஆகவே இருசாராருக்கும் மனக் கசப்பு ஏற்பட்டது.

ஐரோப்பிய நாடுகளுக்கு வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுவதற்கும், தோட்டங்களில் பயிர் செய்வதற்கும் கூலி ஆட்கள் தேவைப்பட்டனர். பல ஆயிரக்கணக்கான சீனர்கள் கூலி ஆட்களாக கப்பல் மூலம் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் பலர் கட்டாயத்தின் பேரில் கொண்டு செல்லப்பட்டனர். 1851 ம் ஆண்டு கலிபோர்னியாவில் **(U.S.A)** மட்டும் 25000 சீனர்கள் வேலை செய்து வந்தனர். 1847 -57 ஆம் ஆண்டுகளில் கியூபா தீவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சீனர்கள் 23,928 பேர்.இச்சீனர்கள் வெளி நாடுகளில் கொடுமைப்படுத்தப்பட்டனர். தன் நாட்டு மக்கள் மேலை நாடுகளில் அடிமையாக வேலை செய்வதைக் கண்டு சீன அரசு ஆத்திரமடைந்தது. எனவே விரைவிலேயே இக்கொடுமைக்கு முற்றுப் புள்ளி வைக்க முடிவு செய்தது.

மற்றொரு காரணம் சீனர்களின் உரிமைகளைக் கால்களில் போட்டு மிதித்து தங்களுடைய அதிகாரத்தை ஐரோப்பியர்கள் பயன்படுத்த முற்பட்டதேயாகும். மேலும் அவர்கள் உரிமைகளைத் தவறான முறையில் பயன்படுத்த முயன்றனர். அதன்படி ஐரோப்பிய குற்றவாளிகள் அவர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட தனியான நீதிமன்றத்தின் மூலம்தான் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. சீனர்களுக்கெதிராக அவர்கள் பல குற்றங்களைச் செய்து தப்பித்து வாழ்ந்தனர். ஏனெனில் அவ்வகையான பிரத்தியேக நீதிமன்றங்கள் அங்கு செயல்படவில்லை. இதனால் சீன மக்களும் அரசும் மனவேதனை அடைந்தது.

சீனாவின் தெற்கு கடலோரப் பகுதிகளில் ஏராளமான கொள்ளைக்காரர்கள் இருந்தார்கள். இவர்கள் சீன வணிகக் கப்பல்களை கொள்ளையடித்து வந்தனர். அத்துடன் அவர்கள் ஆங்கிலேயரின் ஆயுத உதவி பெற்று அங்கு வாழ்ந்து வந்தனர். எனவே சீன வணிகர்களும் அந்நியரின் தயவில் வாழ வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

யே-மி-சிங் **(Yeih-Min-Ching)** என்பவர் அப்போது காண்டனின் வைஸ்ராயாக இருந்தார். அவர் மிகவும் ஆற்றல் பெற்றவர். திறமை வாய்ந்தவர். அவர் ஐரோப்பிய வணிகர்களுக்கு பல சலுகைகளைத் தர மறுத்தார். அத்துடன் அவர்களைச் சீனர்களுக்குச் சமமாக நடத்தவில்லை. 1854 ஆம் ஆண்டில் பாரிங் பிரபு **(Lord Baring)** சில உண்மைகளைக் கேட்பதற்காக இங்கிலாந்திலிருந்து சீனாவிற்கு வந்தார். அவருடைய கோரிக்கைகளை யே-மின்-சிங் செவிமடுக்கவில்லை. அப்போது ஆங்கிலேயர்கள் கிரிமியப் போரில் ஈடுபட்டிருந்ததால் அதைக் கவனிக்க நேரமில்லை. எனினும் இக்கசப்பான சூழ்நிலை ஆங்கிலேய-சீன உறவுக்கு முட்டுக்கட்டையாக அமைந்தது என்பதை மறுக்க முடியாது. சீனாவின் திறமையின்மையை நன்கு அறிந்துக் கொண்ட ஐரோப்பிய வணிகர்கள் அரசியலில் ஈடுபட்டு தங்கள் செல்வாக்கை நிலைநாட்ட எண்ணினர். அதற்காக வன்முறைகளை வலுவுள்ள ஒரு கருவியாக பயன்படுத்தினர். எனவே சீனர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் சிக்கல் ஏற்பட்டு அது போராக உருவெடுத்தது.

நான்கிங் உடன்படிக்கையின் விதிகளில் ஒன்று பத்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அவ்வுடன்படிக்கையானது புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதாகும். அந்தக் காலம் நெருங்கிய போது கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. சீனர்கள் அவ்வுடன்படிக்கையானது தங்கள் மீது திணிக்கப்பட்டது என்றும், அதைக்

கிழித்தெறிய வேண்டும் என்றும் கூக்குரலிட்டனர். ஆனால் அதை ஆங்கிலேயர்கள் ஏற்று கொள்ளவில்லை. மாறாக அவர்கள் அதிக வணிக உரிமைகளைக் கோரினர்.

இக் காரணங்களைத் தவிர 'லோர்ச்சா ஆரோ' (**Lorcha Arrow**) நிகழ்ச்சியும் 'சாப்டிலெய்ன்'(**Chapdelaine**) என்ற பிரெஞ்சுப் பாதிரியாரைக் கைது செய்து கொலை செய்த சம்பவம் இரண்டாம் அபினிப் போருக்கு உடனடி காரணங்களாக அமைந்தன.

நான்கிங் உடன்படிக்கைக்குப் பிறகு பொதுவாக அந்நியர்கள் சீன அதிகாரிகளை மதிக்காமலும், சீன சட்ட திட்டங்களை சட்டை செய்யாமலும் நடந்து வந்தார்கள். இச்சமயத்தில் அதாவது 1856 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் எட்டாம் நாள் துறைமுக அதிகாரிகள் "ஆரோ" என்ற கப்பலின் மாலுமிகளில் சிலரைக் கைது செய்தனர். "ஆரோ" கப்பல் ஒரு சீன வணிகருக்குச் சொந்தமானது. கள்ளச் சரக்குகளை ஏற்றிக் கொண்டு வருவதற்கு உதவியாக இருக்கும் பொருட்டு சில சீன வணிகர்கள் தங்கள் கப்பல்களை ஆங்கிலேயருக்குச் சொந்தமான ஹாங்காங் தீவில் பதிவு செய்துக் கொண்டும், கப்பல்களில் ஆங்கிலக் கொடியைப் பறக்கவிட்டுக் கொண்டும் துறைமுகங்களில் தங்கு தடையின்றி சென்று பொருள்களை இறக்கிவிட்டுச் செல்வது வழக்கம். இவைகளில் ஒன்றுதான் மேலே குறிப்பிட்ட "ஆரோ" கப்பலாகும். கப்பலின் தலைமை மாலுமி ஒரு ஆங்கிலேயர் அந்த கப்பலிலிருந்த 14 மாலூமிகளில் 12 பேர் கைது செய்யப்பட்டனர். ஆங்கில நாட்டுக் கொடியும் அதிலிருந்து அகற்றப்பட்டு விட்டது. அக்கப்பலில் கள்ளக் கடத்தல் பொருள்களும், கொள்ளைக்காரர்களும் இருந்ததாக குற்றம் சாட்டியவர்களை ஆங்கில அதிகாரிகள் வன்மையாகக் கண்டித்தனர். கைது செய்யப்பட்டவர்களைத தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரினர். அதே சமயத்தில் சீன அரசும் அந்தக் கப்பல் சீன குடிமகனுக்குச் சொந்தமானதென்றும், தங்களுக்கு அதில் முழு உரிமை உண்டென்றும் வாதிட்டது. இது போருக்குக் காரணமாக அமைந்தது.

மற்றொரு முக்கியமான நிகழ்ச்சி பிரெஞ்சுப் பாதிரியார் சாப்டிலெயன்ஸ் என்பவர் படுகொலை செய்யப்பட்டதேயாகும். நான்கிங் உடன்படிக்கையுடன் ஏற்பட்ட பல உடன்படிக்கைகளின் எல்லையை மீறி அப்பாதிரியார் கிறித்துவச் சமயத்தை பரப்ப அனுமதி வழங்கப்பட்டது. உடன்படிக்கைகளின் எல்லையை மீறி அப்பாதிரியார் சீனர்களுக்கு வெறுப்பு உண்டாகும் முறையில் தீவிர சமயப் பிரச்சாரம் செய்யலானார். அப்போது தைப்பிங் கிளர்ச்சி வேறு நடைப்பெற்று கொண்டிருந்தது. பாதிரியார்களுக்கும் இக்கிளர்ச்சிக்கும் தொடர்பு உண்டெனச் சீன அதிகாரிகள் எண்ணினர். ஆகவே அந்த பிரெஞ்சுப் பாதிரியார், சீன அதிகாரி ஒருவரால் கைது செய்து விசாரணை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். இச்செயல் பிரெஞ்சுக்காரர்களின் கோபத்தை தூண்டியது. தங்கள் பிரத்யேகப் பிரதேச உரிமையை சீனர்கள் மீறிவிட்டனர் என அவர்கள் ஆத்திரமடைந்தனர். இந்த நிகழ்ச்சியானது 1856 ஆம் ஆண்டில் காண்டன் நகரை எட்டியது. இவ்விரு நிகழ்ச்சிகளும் பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் முறையே ஆத்திரத்தை மூட்டியதால் அவைகள் சீனாவை கூட்டாக தாக்க வேண்டும் என்று திட்டமிட்டன.

**போரின் போக்கு**

1856 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் படையினர் நகரத்தின் மீது படையெடுத்தனர். பிரெஞ்சுப் படைகளும் அப்படையெடுப்பில் கலந்துக்கொண்டனர். ஆனால் அமெரிக்கா நடுநிலைமை வகித்தது. இதைக் கண்ட சீனர்கள் ஆத்திரமடைந்தனர். அங்குக் குழப்பம் குடிகொண்டது. இறுதியில் இருநாட்டுப் படைகளும் காண்டனைப் பிடித்தன. இது 1858 ஆம் ஆண்டில் பிப்ரவரித் திங்களில் நடைபெற்றது. காண்டனின் ஆளுநரான யே-மின்-சிங் பிடிபட்டு கைதாகி கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டார். சில காலம் கழித்து அவர் மாண்டு போனார். அதன் பின் படைகள் பீகிங்கை நோக்கி விரைந்துச் சென்றன. பெய்கோ நகரத்தின் முகத்துவாரத்தில் அமைந்திருந்த பாதுகாப்பு கோட்டை தகர்க்கப்பட்டது. அதைக் கைப்பற்றிய பின்னர் ஐரோப்பியர் மேலும் முன்னேறிச் சென்றனர். இப்போர் இவ்வாறு நிலத்திலும், நீரிலும் சீனாவிற்கு பேரிழப்பினைத் தந்தது.

ஐரோப்பியரை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது என்பதில் ஐயமில்லை. எனவே சீனாவுடன் ஐரோப்பிய நாடுகள் பல உடன்படிக்கைகளைச் செய்துக் கொண்டன.

**டியன்ஸின் உடன்படிக்கை (Treaty of Tintsin)**

1856 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ரஷ்யாவும், 18 ஆம்நாள் அமெரிக்காவும், 26ம் நாள பிரிட்டனும், 27 ம் நாள் பிரான்சும் சீனாவுடன் தனித்தனியாக உடன்படிக்கை செய்துக் கொண்டன. இதுதான் டின்ஸின் ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது.

**டின்ஸின் உடன்படிக்கை**

1. 1842 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29 ஆம் நாள் ஏற்படுத்தப்பட்ட நான்கிங் உடன்படிக்கையின்படி 5 துறைமுகங்களில் ஐரோப்பியர்கள் வாணிபம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். இப்பொழுது மேலும் பத்து துறைமுகங்கள் திறந்து விடப்பட்டன. இதனால் சீனக் கடற்கரையின் பெரும் பகுதி பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தின் கீழ் வந்து சேர்ந்தது.
2. பீகிங் நகரில் தூதுவர் நிரந்தரமாக வசிக்க அனுமதி அளிக்கப்பட்டது. இவருக்கு தக்க மதிப்பும் மரியாதையும் தருவதாக சீனா ஒப்புக்கொண்டது. மேலும் இவருடைய பாதுகாப்பிற்கும் அது உறுதி அளித்தது.
3. மற்றொரு விதியின்படி கிறிஸ்த்தவர்களுக்குச் சமயப் பொறை வழங்கப்பட்டது. அவர்களின் பாதுகாப்புக்கும் வழி செய்யப்பட்டது. அத்துடன் அவர்களுடைய மதத்தைப் பரப்ப அவர்களுக்கு எவ்வித தடையும் இருக்காது என சீன அரசு வாக்களித்தது. அவர்களுடைய செயல்களில் தலையிடுவதில்லையென்றும் சீன அரசு உறுதியளித்தது.
4. இங்கிலாந்திற்கு ஏராளமான போர் இழப்பீட்டுத் தொகையைத் தருவதாக சீன அரசு ஒப்புக் கொண்டது
5. சீனாவின் வளம் பொருந்திய யாங்சிக் நதியின் மூலம் ஐரோப்பியர்கள் தங்கள் கப்பல்களைக் கொண்டு வர அனுமதிக்கப்பட்டனர். அப்பள்ளத்தாக்கின் வளத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று பிரிட்டன் பேரவாக் கொண்டிருந்தது. அவ்வாறு அந்த உரிமையைப் பெற்றுக் கொண்டது.
6. மற்றொரு விதியின்படி, அபினி வணிகம் சட்டத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே வணிகர்கள் சீனாவில் தீவிரமாக அபினி வணிகத்தை மேற்கொண்டனர்.
7. ஐரோப்பியர்கள் சீனாவில் அனுமதிச் சீட்டுடன் எங்கும் செல்ல உரிமை அளிக்கப்பட்டது. அவர்களில் எவரேனும் குற்றம் செய்தால் அவரை சீன அரசு அந்நாட்டு தூதுவரிடம் ஒப்படைப்பதாக உறுதி அளித்தது.
8. வணிகர்களின் அனுமதியின்றி 5 சதவிகிதத்துக்கு மேல் வணிகவரி விதிப்பதில்லை என்று சீன அரசு உறுதிமொழி அளித்தது.
9. நான்கிங் உடன்படிக்கையில் அளிக்கப்பட்ட விஷேசப் பிரதேச உரிமை நன்கு விரிவாக்கப்பட்டது.
10. வெளிநாட்டுப் போர்க் கப்பல் சீனாவில் நுழைவதற்கும் கடற்கரை ஓரங்களில் நங்கூரமிட்டு வைப்பதற்கும் வணிகர்கள் வாழ அளிக்கப்பட்ட துறைமுகங்களைக் கண்காணிப்பதற்கும அனுமதி அளிக்கப்ட்டது.

**சீன - பிரெஞ்சு உடன்படிக்கை**

சீனாவுடன் பிரான்சும் அதே ஆண்டில் ஒரு உடன்படிக்கையைச் செய்து கொண்டது. அது பிரிட்டன் எவ்வாறு செய்து கொண்டதோ அதைப் போலவே செய்து கொண்டது எனலாம். அதன்படி பிரான்சு கிறிஸ்துவ

சமயத்தைப் பரப்பிக் கொள்ள அனுமதி பெற்றுக் கொண்டது. கத்தோலிக்கர்களிடமிருந்து கைப்பற்றிய சொத்துக்களை திருப்பித்தர சீனா ஒப்புக் கொண்டது. சீன மண்ணில் சமயம் பரப்புக் குழுவினர் நிலம் வாங்கிக் கொள்ளவும், அதில் கட்டிடம் கட்டிக் கொள்ளவும் உரிமை பெற்றனர்.

### சீன அமெரிக்க உடன்பாடு

அமெரிக்காவின் உடன்பாடானது பிரிட்டிஷாரின் உடன்பாட்டிலிருந்து மாறுபட்டிருந்தது. சமயத்தைப் பரப்பவும், மத மாற்றம் செய்துக் கொள்ளவும் உரிமை பெற்றனர்.

### மீண்டும் பகைமை ஏற்படுத்துதல்

நான்கிங் உடன்படிக்கையையும், மற்ற உடன்படிக்கைகளையும் திருத்தி அமைக்கவும் சிற்சில மாற்றங்கள் கொண்டு வந்து அதை ஏற்றுக் கொள்ளச் செய்யவும் சீனாவில் மேலை நாடுகளின் பிரதிநிதிகள் கூடினர். பிரிட்டிஷார் இந்தியாவில் கவர்னர் ஜெனரலாகப் பணிபுரிந்து வந்த எல்ஜின் பிரபுவின் தலைமையில் ஒரு குழுவை அங்கு அனுப்பினர். சீனா அதற்கு முட்டுக்கட்டையாகவும், முரண்பாடாகவும் அமைந்தது. அந்நிகழ்ச்சி பீகிங்கில் நடைபெற அந்நாடுகள் விழைந்தன. ஆனால் சீனா காண்டன் அல்லது ஹாங்காங் அல்லது டியன்சின் ஆகிய ஏதாவது ஒரு இடத்தில் வைத்துக் கொள்ளலாம் என்று கூறியது. இச்செயல் டியன்சின் உடன்படிக்கையை மீறிய செயலாகும் என அந்நாடுகள் அதை நிராகரித்தன. இவ்வாறு மீண்டும் பகைமை ஏற்பட்டது.

### கோடைகால அரண்மனையைத் தகர்த்தல்

ஆங்கிலேயப் பிரெஞ்சுப் படைகள் பீகிங் நகரை நோக்கிப் பீடுநடை போடலாயினர். அந்நகரை அவர்கள் வெகு எளிதில் கைப்பற்றினர். 1858 ஆம் ஆண்டில் மஞ்சு மன்னர்களின் மாட்சியை பொருந்திய "கோடைகால அரண்மனையை" **(Summer Palace)** எல்ஜின் பிரபுவின் ஆணையின்படி தகர்த்தெறிந்தனர். பேரரசரும் அவர்தம் அமைச்சர்களும் ஜெரிஹானுக்கு ஓட்டம் பிடித்தனர். இதனால் பீதி அடைந்த பீகிங் அவர்களுடன் அமைதி உடன்பாடு செய்து கொள்ள முன்வந்தது. அதன்படி இளவரசர் குங் **(Prince Kung)** ரஷ்யத் தூதுவர் உதவியுடன் அமைதிப் பேச்சுகளில் ஈடுபட்டார்.

### பீகிங் ஒப்பந்தம் (1860)

1860 ஆம் ஆண்டில் அக்டோபர் திங்கள் 24 ஆம் நாளில், பீகிங்கில் ஒப்பந்தம் **(Peking Convention)** ஏற்பட்டது. டின்ஸின் ஒப்பந்தமானது இதன் மூலம் உறுதி செய்யப்பட்டது.

1. சீனாவின் பேரரசர் தக்கூவில் சீனாவிற்கும் மேலை நாடுகளுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளுக்கு வருத்தம் தெரிவித்தார்.
2. பீகிங்கில் நிலையாக ஆங்கிலேய அமைச்சர் ஒருவர் தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.
3. ஹாங்காங்குக்கு எதிரேயுள்ள கௌலூன் **(Kowlloon)** தீபகற்பம் பிரிட்டிஷாருக்கு அளிக்கப்பட்டது.
4. டின்சின் துறைமுகம் அவர்களுக்கு வாணிகம் செய்து கொள்ள திறந்துவிடப்பட்டது.
5. போர் இழப்பீட்டுத் தொகையானது, பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் எட்டு மில்லியன் சீன நாணயங்களாக ஆக்கப்பட்டது.

சீனா,ரஷ்யாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி ரஷ்யாவிற்கு விலா வாஸ்டக் உட்பட

உஸ்ஸீரி (**Ussuri**) நதிக்குக் கிழக்கேயுள்ள பகுதிகளும் ஆமூர் (**Amur**) நதிக்கும் வடக்கிலுள்ள பிரதேசமும் கிடைத்தன.

**விளைவுகள்**

நான்கிங் உடன்படிக்கையிலிருந்து பீகிங் உடன்படிக்கை வரையிலான காலக்கட்டத்தில் சீனாவில் சில சிறிய மாற்றங்களும் விளைவுகளும் ஏற்பட்டன. குறிப்பாக டின்ஸின் உடன்பாடுகள் அதிக விளைவுகளை ஏற்படுத்தின.

**அவைகளாவன:**

1. சீனாவின் அரசியல் திறமையின்மை, இராணுவத்தின் செயல் திறமையின்மை உலகுக்கு தெளிவானது.
2. சீனாவின் திறமைக்கு ஓர் இழுக்கை இவ்வுடன்படிக்கைகள் ஏற்படுத்தின. தன்னுடைய அழிவுக்கும் சீனாதானே வழி வகுத்துக் கொண்டது.
3. சீனாவின் வருவாய் பெருமளவில் குறைந்தது. அது பாதுகாப்பு வரிகளை விதிக்க முடியாமல் இருந்தது. அதற்குப் பல தடைகள் ஏற்பட்டன.
4. வெளிநாட்டவரின் தலையீட்டால் சீனாவின் பண்டைய பழக்க வழக்கங்கள் பாதிக்கப்பட்டன.
5. பிரிட்டிஷ் வணிகர்களுக்கு சமத்துவத்தை வழங்கிய சீனா தன் உரிமைகளை இழந்து உருக்குலைந்து நின்றது. பிரிட்டிஷாரின் தூதுவரொருவர் எப்போதும் நிரந்தரமாக பீகிங்கில் தங்கும் உரிமையைப் பெற்றார்.
6. ஹாங்காங் நிரந்தரமாக பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தில் வந்தது. அங்கு சீனர்கள் அதிகமாக இருந்த போதிலும் கூட பிரிட்டிஷார் தங்கள் அரசியல் செல்வாக்கை நிலைநாட்டினர்.
7. சீனாவின் பொருளாதாரம் சீர்குலைந்தது.
8. ஐரோப்பியர்களின் கப்பல் மூலமாக சீனர்கள் தங்கள் வணிகத்தை மேற்கொள்ள வேண்டுமென்று அவர்கள் உரிமைகளைப் பெற்றுக் கொண்டனர். இதனால் சீனர்கள் தங்கள் வணிகத்தை இழந்ததோடு மட்டுமல்லாமல் சீனா மனம் புண்பட்டு வேதனை அடைந்தது. இதனால் சீனா பல பகுதிகளை இழந்தது. வணிக உரிமைகளை இழந்தது; பெருமளவிற்கு இழப்பீட்டு தொகையும் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எல்லா வகைகளிலும் அது மிகவும் பாதிக்கப்பட்டது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

## 3. தைப்பிங் கிளர்ச்சி

## (Taiping Rebellion - 1850)

சீன வரலாற்றில் தைப்பிங் கிளர்ச்சி ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். இதை தைப்பிங் கலகம் என்றும் தைப்பிங் கிளர்ச்சி என்றும் தைப்பிங் எழுச்சி என்றும பல வகைகளில் அழைக்கலாம். தைப்பிங் என்றால் அமைதி என்று பொருள். இக்கிளர்ச்சியாளர்களின் நோக்கம் நாட்டில் நிலையான அமைதியை ஏற்படுத்துவதேயாகும். இதைச் சீனக் குடியானவர்களின் கிளர்ச்சி என்றும் அழைக்கலாம். ஏனெனில் ஒரு குடியானவன் தலைமையில் எழுந்த கிளர்ச்சியே தைப்பிங் கிளர்ச்சி ஆகும். இது மஞ்சு வம்சத்திறகுச் சாவுமணி

அடிக்க ஏற்பட்ட கிளர்ச்சி என்பது சாலப் பொருந்தும். இது சமூக, பொருளாதார அரசியல் கலந்த கிளர்ச்சி எனலாம்.

**காரணங்கள்**

கிளைடும், பீர்சும் (**Clyde and Beers**) தங்களுடைய தூதரகக் கிழக்கு நாடுகள் என்ற நூலில் மஞ்சு வம்சத்தின் திறமையின்மையாலும், சீன அரசாங்கத்தில் மலிந்து கிடந்த ஊழல்களாலும், அளவுக்கு அதிகமான வரிக்கொடுமையாலும், அதிகமான கலவரத்தாலும், சிறுபான்மையோர்களின் பிரச்சினைகளாலும் மக்கள் தொகைப் பெருக்கத்தினாலும் இக்கிளர்ச்சி ஏற்பட்டது என சுருங்கக் கூறியுள்ளார்கள்.

மஞ்சு வம்சத்தின் திறமையின்மையே இந்த தைப்பிங் கிளர்ச்சிக்கு முக்கிய காரணம் எனலாம். அவ்வம்சம் அரியணையேறியதிலிருந்தே சீனர்கள் அவர்களை வெளிநாட்டவர் என்று எண்ணிக்கொண்டிருந்தனர். நாளடைவில் அவர்களுடைய ஆட்சியில் கையூட்டு வழங்குதல், ஊழல் முதலியன ஏற்பட்டன. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அத்துடன் அவர்களைத் தூக்கி எறிய வேண்டும் என்றும் அதுவே கடவுளின் ஆசை என்றும் அவர்கள் கருதினார்கள். அப்போதுதான் மக்களின் குறைகளுக்குப் பரிகாரம் காணமுடியும் என அம்மக்கள் கருதினர். மேலும் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அவர்கள் சுதந்திரம் பாதுகாக்கப்படவில்லை. இச்சூழ்நிலையில்தான் நாட்டில் பல இரகசிய சங்கங்கள் (**Secret Societies**) தோன்ற ஆரம்பித்தன. அச்சங்கங்கள் நிதியை வாரி வழங்கின. எனவே மஞ்சு வம்சத்தை முறியடித்தே தங்களின் முக்கிய முதன்மையான நோக்கமாக அச்சங்கங்கள் கருதின. இரண்டாவதாக உள்நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களே இக்கிளர்ச்சிக்குக் காரணமாகும். ஷீன்பெங் என்ற மன்னர் மாநிலங்கள், அனைத்தையும் கட்டிக் காக்க முடியாமல் திணறினார். எங்கு பார்த்தாலும், திருடர்களும், கொள்ளைக்காரர்களும், தொல்லை கொடுத்து வந்தனர். மன்னரின் ஆணைகளை அவர்கள் மதிக்கவில்லை. மேலும் மன்னர் ஆடம்பர வாழ்க்கையிலும், ஆசை நாயகியிடத்தும் தன்னைப் பறிகொடுத்துவிட்டிருந்தார். அதனால் அரசாங்கம் அழிவுப் பாதையில் மெல்ல மெல்ல அடி எடுத்து வைத்துக் கொண்டிருந்தது.

மூன்றாவதாகக், சீனக் குடியானவர்கள் சொல்லொன்னாத் துன்பங்களை அனுபவித்தனர். சீனாவில் பெரும்பாலோர் குடியானவர்கள் அவர்கள் மீது அளவுக்கு மீறி வரி திணிக்கப்பட்டிருந்தது. இதோடு அபினிப் போர் வந்து சேர்ந்தது. அதனால் சீன அரசு பிரிட்டிஷாருக்கு இழப்பீட்டுத் தொகை தர வேண்டும் என்ற நிலையில் இருந்தார்கள். ஆகவே அரசு குடியானவர்களின் மீது மேலும் வரியைத் திணித்தது. அதே சமயத்தில் உற்பத்தியும் பெருகவில்லை. புதிய முறைகளைப் புகுத்தவும், உற்பத்தியை அதிகரிக்கவும் அவர்களுக்குத் தெரியவில்லை. எனவே சிலர் கடன்காரர்களின் கோரப்பிடியிலே சிக்கித் தவித்தனர். பலர் தங்கள் நிலங்களை விற்றுக் கடன்களையும் வரிகளையும் கட்ட வேண்டியிருந்தது. இந்நிலையில் எங்கும் வெறுப்பு, அதிருப்தி மக்களிடையே குடிக்கொண்டிருந்ததில் வியப்பதுமில்லை.

நான்காவதாக, சீனவணிகர்களும் அதிருப்தி அடைந்தனர். நான்கிங் உடன்படிக்கைக்குப் பிறகு அவர்களின் வணிகம் உருக்குலைந்தது. ஐரோப்பியர்களின் வணிகம் வளமடைந்தது. ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட தொழிற்புரட்சி சீன வணிகத்திற்கு மற்றொரு பேரிடியாக அமைந்தது. ஆகவே, அவ்வணிகர்கள் தங்கள் துன்பங்களுக்கும், துயரங்களுக்கும், தொல்லைகளுக்கும் மன்னரே பொறுப்பாளியாவார் எனக் கருதினார்கள்.

ஐந்தாவதாக, நான்கிங் உடன்பாடு இக்கிளர்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது. இந்த உடன்பாடு நாட்டிற்கு ஏற்பட்ட ஓர் அவமானம் எனப் பல சீனர்கள் கருதினார்கள. இதனால் சீனர்களின் தன்மானம் தகர்க்கப்பட்டுவிட்டது. அவர்கள் உள்ளம் வேதனை அடைந்தது. மனம் நொந்தார்கள். அதற்குப் பொறுப்பாளியான மன்னரை நீக்க அவர்கள் ஏற்படுத்திய கிளர்ச்சியே இந்த தைப்பிங் கிளர்ச்சி ஆகும்.

ஆறாவதாக சீன இராணுவம் சீர்கேடான நிலையில் இருந்ததே இக்கிளர்ச்சிக்கு காரணமாகும்.

இராணுவ வீரர்களைப் பராமரிப்பதற்கு நிலமானிய பிரபுக்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தனர். அரசாங்கம் ஏராளமான நிதியை அவர்களுக்கு அளித்தது. ஆனால் அவர்கள் அதை இராணுவத்திற்கு செலவிடாமல் தங்களின் சொந்த நலனுக்குப் பயன்படுத்திக் கொண்டனர். வீரர்கள் சொந்த நலனைக் கருதி பல தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். எனவே இராணுவ சோதனை ஆய்வு நடைபெறும்போது கூலியாட்களைக் காட்டி அரசாங்கத்தை ஏமாற்றி வந்தனர். இதையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலேயர்கள் சீனாவில் பல வெற்றிகளைப் பெற்றனர். இவைகள் அனைத்தும் பேரரசின் திறமையின்மையைக் காட்டின. எனவே அங்கு கிளர்ச்சி தோன்ற காரணமாயின.

இந்த அதிருப்தியான சூழ்நிலையில் சீனாவில் ஹீங் சியு சுவான் (**Hung Hsiu Chuan**) என்ற தனி மனிதனின் தன்னிகரற்ற செல்வாக்கு கிளர்ச்சிக்கு உடனடிக்காரணமாக அமைந்தது. அவர் காண்டன் நகரத்தில் ஓர் எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். இளமையிலேயே அரச அலுவலகத்தில் ஏதேனும் ஒரு பணியில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார். ஆனால் பல முறை அரசு தேர்வுகளில் தோற்றதால் அந்த எண்ணம் ஈடேறவில்லை.

ஏமாற்றத்தினாலும், வெறுப்பினாலும் ஹீங் சியு சுவான் அமெரிக்க பாதிரியார் இராபர்ட்ஸ் என்பவரின் உதவியால் கிறிஸ்துவ சமயத்திடம் சரணடைந்தார். விவிலிய நூலை விளக்கமாகப் படித்துத் தெரிந்துக் கொண்டபிறகு அவைகளை மக்களிடம் பரப்ப முயன்றார். மக்களைக் கவர்ந்த அவர் சமய நிறுவனமொன்றை நிறுவி தானே தலைவராக விளங்கினார். சமய இயக்கமாக இருந்த இது நாளடைவில் அரசியல் இயக்கமாக மாறிவிட்டது. ஏசுநாதர் கடவுளின் மூத்த மகனென்றும், தன்னை இளைய மகனென்றும் நாட்டு மக்களின் நலனைக் கருதி கடவுளால் இவ்வுலகத்திற்கு அனுப்பட்டவரென்றும் அவர் கூறிக் கொண்டார். மேலும் **"**இறை வழிபாட்டுக் கழகம்**" (God Worshiping Society)** என்பதை ஏற்படுத்தி **"**பேரமைதி அல்லது முற்றிலும் அமைதி நிலவும் இறை அரசை**" (Heavenly Kingdom of Great Peace)** நிலை நாட்ட அவர் அருள் புரிந்தார். இவருடைய கொள்கைகளால் ஏராளமான மக்கள் ஈர்க்கப்பட்டனர். முதன் முதலில் தென் சீனாவில் குவாங்கி **(Kuwangsi)** என்ற மாநிலத்தில் ஒரு குக்கிராமத்தில் இவருடைய அரசானது தோற்றுவிக்கப்பட்டது. இதற்கு **"**தைப்பிங் தீன் குவோ**" (Taiping Tien Kuo)** என்று அவர் பெயரிட்டார்.

**கிளர்ச்சியின் நோக்கங்கள்**

1. மஞ்சு வம்சத்தை ஒழிக்க வேண்டும் என்பதுதான் இக்கிளர்ச்சியின் தலையாய நோக்கமாகும்.
2. நாட்டின் முதுகெலும்பான விவசாய மக்களின் துயரங்களைத் துடைத்து அவர்களைப் பொருளாதாரத்தில் முன்னேற்றமடையச் செய்வது இக்கிளர்ச்சியின் மற்றொரு நோக்கமாகும்.
3. நாட்டில் மக்கள் நலம் பேணும் நல்லரசை வெளிநாட்டவர்களை விரட்டியடிக்கக் கூடிய வல்லரசை ஏற்படுத்தியது. வெளிநாட்டு வணிகர்களின் சலுகைகளை பறித்துத் தங்கள் நாட்டு வணிகர்களுக்கு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென கிளர்ச்சிக்காரர்கள் விழைந்தனர்.
4. இறுதியாக சீன அரசு இழந்த தன் பெருமைகளை மீண்டும் அடைய வேண்டும் என எண்ணியது.

**கிளர்ச்சியின் போக்கு**

1849 ஆம் ஆண்டில் சீனா எல்லையில்லாத தொல்லைகளால் சூழப்பட்டிருந்தது. மக்கள் மாளாத் துன்பத்தை அடைந்தார்கள. மக்களுக்கு உதவி செய்வதறகு பதிலாக ஊழல் மிக்க அதிகாரிகள் தங்கள் பை நிறைந்தால் போதுமென்று எண்ணி கை நிறைய கையூட்டு வாங்கி வந்தனர். மஞ்சு அரசாங்கத்தின் மீது

கொண்ட வெறுப்பு அவர்களை 1850 ல் கிளர்ச்சிகளில் ஈடுபடச் செய்தது. காட்டுத்தீ போல் அது மிக வேகமாய் பரவியது. ஹீங் சியு சுவான் படை பல மாநிலங்களை பிடித்துக் கொண்டது. ஹானியாங் (**Hangang**) வூச்சான்ங் (**Wuchang**) வூஹீ (**Wuhu**) ஆகியவை அவைகளில் முக்கியமான மாநிலங்களாகும். நான்கிங் நகரை அவர்கள் தங்களின் தலைநகரமாக வைத்துக் கொண்டனர். அதன் பின்னர் அவர்கள் அநேக நகரங்களை பிடித்தனர். ஏறக்குறைய 18 மாநிலங்களுக்கு மேல் அவர்கள் வசம் வந்து சேர்ந்தன.

மக்களின் நன்மதிப்பைப் பெறுவதற்காகவும், அவர்களைத் தங்கள் பக்கம் திருப்புவதற்காகவும் தங்கள் - அரசை "இறையரசு" (**Heavenly Kingdom**) என்றும் "நான்கிங் இறை அரசின் தலைநகரம்" என்றும் அறிவித்தனர். பிறகு இக்கிளர்ச்சி சீனாவின் மற்றப் பகுதியில் பரவின. பியன்சின், பீகிங், ஷீனாய் ஆகிய நகரங்களிலும் அது மாறியது.

**தைப்பிங் கிளர்ச்சிக்காரர்களின் சாதனைகள்**

சீனாவின் பெரும் பகுதிகளைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வந்த அக்கிளர்ச்சிக்காரர்கள் ஹீங் சியு சுவான் தலைமையில் பத்தாண்டுகள் ஆட்சி புரிந்து வந்தனர். நான்கிங் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு பல ஆணைகளைப் பிறப்பித்து வந்தார். சுவான் இந்த 10 ஆண்டுகளில் அவர் சீன மக்களின் பழக்க வழக்கங்களைக் கருத்தில் கொண்டு பல நல்ல பணிகளை மேற்கொண்டார்.

உழுபவர்களுக்கே நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டது. நிலச்சுவான்தாரர்களிடம் சிக்குண்டு கிடந்த ஏழைக்குடியானவர்கள் ஏற்றம் பெற்றனர். அவர்களுடைய வாழ்வில் மாற்றங்கள் பல ஏற்பட்டது கண்டு மனமகிழ்வு எய்தனர். 1853 ஆம் ஆண்டு விவசாயச் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. அதன்படி விண்ணின் கீழ் உள்ள நிலங்கள் அனைத்தும் விண்ணின் கீழ் பூமியில் வாழும் எல்லா மக்களும் பயன்படுத்திக் கொள்ள உரிமை உண்டு என அறிவிக்கப்பட்டது.

அப்போது மக்கள், "நிலம் எங்குள்ளதோ நாங்கள் அதை ஒன்றாக சேர்ந்து உழுவோம். உணவு எங்குள்ளதோ நாங்கள் அதை ஒன்றாக சேர்ந்து உண்போம். ஆடைகள் எங்குள்ளதோ அவற்றை நாங்கள் சேர்ந்தே எடுத்துக் கொள்வோம். பணம் எங்குள்ளதோ அதை நாங்கள் சேர்ந்தே செலவு செய்வோம். சமத்துவம் இல்லாத இடமே இல்லை. நாங்கள் எவரும் பட்டினியால் வாடியது இல்லை" என்று பாடி மகிழ்ந்தார்கள்.

சமத்துவம் என்பது அங்கு அப்போது சீருமச் சிறப்பும் பெற்று விளங்கியது. பதினாறு வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் நிலப்பங்கீடு முறையில் இடம் பெற்றனர். அதாவது நிலங்களைப் பெறத் தகுதி பெற்றனர். நிலமானது அதன் வளத்திற்கும், செழிப்பிற்கும் தகுந்தாற் போல் ஒன்பது வகைகளாகப் பிரிக்கப்பட்டது. ஆண்களும், பெண்களும் சரிநிகர் சமம் என்ற கொள்கை அங்கு கொண்டு வரப்பட்டது. ஏனெனில் மஞ்சு ஆட்சியில் கொஞ்சு மொழிப் பேசும் பெண்களுக்கு அத்தகைய உரிமைகள் அளிக்கப்படவில்லை. பெண்களும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட உரிமை வழங்கப்பட்டது. அரசுத் தேர்வுகளில் வெற்றிப் பெற்ற ஆண்களும், பெண்களும் அலுவலகங்களில் அமர்த்தப்பட்டனர். அபினி உண்பது, மது உற்பத்தி செய்வது, விபச்சாரம் செய்வது ஆகிய செயல்கள் கடுமையான தண்டனைக்குரிய குற்றங்களாக கருதப்பட்டன. பெண்களின் திருமணத்திற்கு சீதனமாக சீர்வரிசை ஆகியவை வழங்குவது அனுமதிக்கப்படவில்லை. பல மனைவிகளையும் பெற்றிருப்பது பாவமாக கருதப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது. இத்தகைய சீரிய சாதனைகளால் இக்கிளர்ச்சியாளர்களின் ஆட்சியில் பொருளாதாரம் நன்கு வளர்ச்சியடைந்தது. மக்களின் சொத்துக்கள் தேசியமயமாக்கப்பட்டன. செல்வந்தன்,வறியவன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், உள்ளவன், இல்லாதவன் என்றப்பாகுபாடுகள் நீக்கப்பட்டன. நாட்டின் நிர்வாகம் பல குழுக்களால் நிர்வகிக்கப்பட்டு அங்கும் பாகுபாடுகள் நீக்கப்பட்டன. கூட்டுறவு நிலையங்கள் அல்லது சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. குடும்ப உறுப்பினர்களுக்கு ஏற்ற முறையில் உணவு தானியம் அளிக்கப்பட்டது. உபரியான தானியம் அல்லது உணவுப்

பொருள்கள் அரசாங்கக் கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டன. சுருங்கக் கூறின் ஆண்கள் வேளாண்மையில் ஈடுபட வேண்டுமென்றும், பெண்டிர் கால்நடைகளையும் வீட்டிலுள்ள கோழி, பட்டுப்பூச்சிகள் ஆகியவற்றைப் பராமரிக்க வேண்டுமென்றும் நடைமுறையில் பின்பற்றப்பட்டது. இத்தகைய செலவினங்களை மேற்கொள்ளும் போது பணக்காரனுக்கும் பரம ஏழைக்கும் பாதுகாப்பு இல்லை எனலாம். இவ்வாறு சீரிய மாற்றங்களை அவர்கள் புகுத்தினார்கள்.

**தோல்விக்குக் காரணங்கள்**

தைப்பிங் கிளர்ச்சியாளர்கள் பத்து ஆண்டுகள் ஆட்சி நடத்தினார்கள் என்று கண்டோம். அவர்களுடைய சீரிய சீர்திருத்தங்களினால் உள்நாட்டவர், வெளிநாட்டவர், குடியானவர் வணிகர் ஆகிய எல்லா தரப்பு மக்களின் நன்மதிப்பையும் பெற்றனர். எனினும் அவர்கள் நீண்ட நாட்கள் பதவியில் நீடிக்கவில்லை அதற்குப் பல காரணங்களைக் கூறலாம்.

ஆரம்பத்தில் கிளர்ச்சிக்காரர்களுக்கு வெளிநாட்டினர் முழு ஒத்துழைப்பு நல்கினார்கள், கிறித்துவக் கருத்துக்களின் அடிப்படையில் அவ்வாட்சி அமைக்கப்பட்டதே அதற்குக் காரணமாகும். மேலும் தங்கள் சமயம் இச்சமயத்தில் வளர வாய்புண்டு என எண்ணினார்கள. வணிகர்கள் தங்களுக்கு வணிக சலுகைகள் கிடைக்கும் என்று அவ்வரசை ஆதரித்தனர். நாளடைவில் அவ்வரசு வலிவும் பொலிவும் பெற்று விளங்கவே தங்களுடைய ஆசை நிராசையாகிவிடுமென எண்ணி அதனால் விலகிக் கொண்டனர். எனவே அவர்கள் மஞ்சு வம்சத்தையே ஆதரிக்க முற்பட்டனர். அரசன் அந்நியர் உதவியுடன் கிளர்ச்சிக்காரர்களை அடக்கி ஒடுக்கினான். அவர்களுடைய தலைவன் சுவான் 1864 ஆம் ஆண்டில் நஞ்சுண்டு தற்கொலை செய்துக் கொண்டான்.

சுவானுக்குப் பிறகு கிளர்ச்சியாளர்களின் முழு நம்பிக்கையைப் பெற்று சீனா முழுவதையும் தன் ஆணையின்படி நடத்திச் செல்ல ஓர் நல்ல திறமையான தலைவன் அங்கு தோன்றவில்லை. ஆதிக்க வெறிகொண்ட, அக்கிளர்ச்சிக்காரர்கள் போட்டி, பொறாமை ஆகியவற்றால் ஒற்றுமை சீர்குலைத்தனர். அதன் விளைவாக மன்னர் அவர்களை எளிதில் ஒடுக்கினார்.

“இறை அரசு” ஏற்பட்டபோது சீன மக்கள் புதிய உற்சாகமும், புத்தொளிவும் பெற்று விளங்கினார்கள். ஏனெனில் அவர்கள் அவ்வரசிடம் ஏராளமானவற்றை எதிர்பார்த்தார்கள். ஆனால் ஏமாந்தார்கள். நாளடைவில் புதிய அரசும் பழைய மஞ்சு வம்சத்தின் பாதையிலேயே செல்ல ஆரம்பித்தது. மீண்டும் அங்கே ஊழல் உயிர் பெற்றெழுந்தது. சீர்கேடுகள் காணப்பட்டன. எனவே மக்கள் அவர்களை வெறுத்தனர். இதைப் பயன்படுத்திக் கொண்டு அரசு இக்கிளர்ச்சியை அடக்கியது. சீன மக்களுடைய சமய உணர்வு அக்கிளர்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைத்தது. சீன மக்கள் கன்பூஷியஸ், லாவோட்சே, புத்தர் ஆகியவர்களின் கொள்கைளைப் பின்பற்றி வந்தனர். இடையில் நுழைந்த கிறிஸ்தவ சமயக் கொள்கைகளை சுவான் பரப்பினார். எனவே மக்களுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. இதை மஞ்சு மன்னர்கள் பயன்படுத்திக் கொண்டு மக்களை அவர்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டனர்.

கிளர்ச்சிக்காரர்களின் ஊழல் நடவடிக்கைகளும், அவர்களுக்கு அழிவைத் தேடித் தந்தன. பெரும்பான்மையான கிளர்ச்சியாளர்கள் பெண்களின் மீது ஆசை கொண்டு ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபட்டு வந்தனர். அவர்களுடைய தலைவரான சுவானுக்கு மட்டும் 200 ஆசை நாயகிகள் அந்தப்புரத்தில் இருந்தன ர் என்று ஒரு சான்று கூறுகின்றது. அவர்களில் 60 பேர் அவருடைய மனைவிகள். எங்கு நோக்கினாலும் ஊழல், வேண்டியவர்களுக்கு சலுகை அளித்தல், அரசு நிறுவனத்தைத் தங்கள் சொந்த நலனுக்குப் பயன்படுத்திக்

கொள்ளல் ஆகிய அக்கிரமச் செயல்கள் காணப்பட்டன. இச்செயல்கள் மக்களின் வெறுப்பை அதிகமாக்கியது.

கிளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் வணிகர்கள் அவர்களுக்கு ஆதரவைத் தந்தனர். வணிகம் பல வழிகளில் பாதிக்கப்பட்டாலும் பல வரிகள் அவர்கள் கட்ட வேண்டியிருந்ததாலும் வணிகர்கள் தங்களுடைய ஆதரவை விலக்கிக் கொண்டனர். இத்தகைய காரணங்களால் தைப்பிங் கலகம் அடக்கப்பட்டது.

**விளைவுகள்**

இக்கிளர்ச்சியின் விளைவாக மஞ்சு வம்சத்திற்கும் புத்துயிர் அளிக்கப்பட்டது. இதைத் தவிர வேறு பல விளைவுகளும் ஏற்பட்டன. ஐரோப்பிய வல்லரசுகளின் நட்புறவுடன் சீனா வாழ வேண்டியிருந்தது. கிளர்ச்சியை அடக்குவதற்கு ஏராளமான நிதி தேவைப்பட்டது. எனவே வரிகள் அதிகரிக்கப்பட்டன. அதன் விளைவாக மக்களின் அதிருப்தியும் பெருகியது. தொழில், வணிகம் நசுக்கப்பட்டது. நிர்வாக இயந்திரம் அளவுக்கு மீறி சீர்கெடுற்றதால் அங்கு அமைதியின்மை, கொடுமைகள், கொள்ளை, தொல்லைகள் முதலியன உண்டாயின. இந்த சூழ்நிலையில் அமைதியை நிலைநாட்ட நிதி தேவைப்பட்டதால் அரசு கடன் வாங்கியது. மேலும் ஆங்கிலேயர்களும், ரஷ்யர்களும் நிலையான இடங்களைப் பெற்றுத் தங்களின் செல்வாக்கை அதிகமாக்க முயன்றனர்.

தைப்பிங் கிளர்ச்சி பத்து ஆண்டுக் கால கட்டத்தில் சீனர்கள் சமுதாய வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. அத்துடன் அவர்களுக்கு ஏமாற்றங்களையும் தந்தது. இக்கிளர்ச்சியின் விளைவாக ஏராளமான பேர் கொல்லப்பட்டனர். பின்னால் ஏற்படப் போகும் பொதுவுடமை அரசுக்கு இது முன்னோடியாக அமைந்தது. வரம்பற்ற வல்லாட்சிக்கு இது வழி வகுத்தது. இவ்வாறு இது சீனாவின் அரசியல், பொருளாதார, சமுதாய வாழ்வில் பல சீரிய சிந்தனைக்குரிய மாற்றங்களை ஏற்படுத்திவிட்டு மாய்ந்து விட்டது.

**அத்தியாயம் - 2**

## அமைதியுற்ற சீனா

1851 ஆம் ஆண்டு டின்சின் உடன்படிக்கையும், 1860 ஆம் ஆண்டு பீகிங் ஒப்பந்தங்களும் சீனாவின் மீது திணிக்கப்பட்ட மேலை நாட்டு ஒப்பந்தங்களாகும். சமய பரப்புக் குழுவினரின் முயற்சியால் அவர்கள் பரப்பிய கருத்துக்கள் வணிகர்கள் கொண்டு வந்தவைகளை விட ஆழமாகச் சீனப் பண்பாட்டு அமைப்புகளைத் தாக்கின. இதனால் 1861 லிருந்து மஞ்சு அரசியல் ஆட்சியிலிருக்கும் தகுதியை இழந்து சிறிது காலத்திற்குள்ளே மறைய ஆரம்பித்தது. இரண்டாவது அபினிப் போரின் இறுதி கட்டத்தில் மன்னர் சியான் பெங்க் **(Htsung Feng)** தலைநகரிலிருந்து வெளியேறி ஜெகோலை **(Jehol)** அடைந்து அங்கு காலமானார். அவருடைய அந்தப்புர அழகி சூசி **(Tzuhsi)** தன்னுடைய அழகினாலும், அறிவினாலும், மன்னரின் சகோதரனின் உதவியால் ஆட்சியைக் கைப்பற்றினார். அவளுடைய மகன் துங்-சி **(Tung Chih)** ஐந்து வயது நிரம்பியவன் பேரரசரானார். 1861 லிருந்து 1874 வரை இருவரும் இணைந்து ஆட்சி நடத்தினர். 1874 ல் துங்-சி இறக்கவே மூன்று வயதுக் குழந்தையைத் தத்து எடுத்துப் பேரரசர் என்று அறிவித்துவிட்டு தானே ஆட்சி பொறுப்புகளை 1861 லிருந்து 1908 வரை தாமே ஏற்று நடத்தினார். தைப்பிங் கிளர்ச்சி, செஃபு ஒப்பந்தம், திறந்த வெளிக் கொள்கை முதல் சீன - ஜப்பான் போர் நூறு நாட்கள் சீர்திருத்தங்கள் ஆகியவைகள் சூசி காலத்தில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

**தின்சின் படுகொலை 1870**

நான்கிங், போக், தின்சின், பீகிங் முதலிய உடன்படிக்கைகள் சீனாவின் ஐரோப்பியர்கள் நுழைவதற்கு வழிவகுத்தன. ஐரோப்பியர்களின் வரவினால், அவர்களின் பண்பாடு, நாகரீகம் சீனாவில் வெகு வேகமாக

பரவியது. மேலும் சீனக் குற்றவாளிகள் ஐரோப்பியர்களிடம் தஞ்சம் புகுந்தனர். இதனால் ஐரோப்பியர்களுக்கும் சீன அரசாங்கத்திற்கும் பீகிங் உடன்படிக்கைக்குப் பின் தொடர்ந்து மோதல் ஏற்பட்டது.

தின்சின் ஒப்பந்தங்களுக்குப் பின், ஐரோப்பியர்கள் தங்கள் சமயப் பரப்பு பணியை துரிதப்படுத்தினர். பேரரசுக்கு எதிராக கிளர்ச்சிகளையும் தூண்டிவிட்டனர். அவர்கள் தங்கள் தேவாலயம், பள்ளிக் கூடங்கள், மருத்துவமனைகள் கட்ட இடம் தேடிய போது மோதல் தவிர்க்கவியலாததாயிற்று. சீனர்கள் கிறிஸ்தவ மதத்தை பெரிதும் வெறுத்தனர். அம்மதம் தங்கள் சமய சமூக வாழக்கையைப் பெரிதும் பாதிப்பதாக உணர்ந்தனர். இச்சூழ்நிலையில், தூண்டப்பட்ட சீனர்கள் 1870ல் ரோமன் கத்தோலிக்க ஆதரவற்றோர் இல்லத்தைத் தாக்கித் தூதுவரையும், இரண்டு பாதிரிகள் பத்துக் கிறித்துவ செவிலியர் மூன்று இரஷ்யர்கள் முப்பது சமய மாற்றம் பெற்ற சீனர்களையும் கொன்றனர். இதுவே தின்சின் படுகொலையாகும். இந்நிகழ்ச்சிக்கு மஞ்சு அரசு எந்த விதத்திலும் தொடர்பு உடையது அன்று. ஆயினும் மன்னிப்புக் கேட்க சீனாவின் சிறப்புத் தூதுக்குழு ஒன்று பிரான்சுக்கு அனுப்பப்பட்டது.

**மார்கரி நிகழ்ச்சி**

இங்கிலாந்து வணிகர்கள் சீனாவின் மேற்கு மாநிலங்களுள் நுழையப் பர்மாவிலிருந்து சீனாவிற்கு நிலப்பாதை காண விரும்பினர். பர்மாவின் ஆட்சியாளர்களும் மேற்குச் சீனாவின் யூனான் தலை அலுவலர்கள் இது போல நிலவழிப்பாதை காண்பதை விரும்பவில்லை. எதிர்ப்பைக் குறித்தும் பொருட்படுத்தாமல் ஆங்கிலேயர் தூதுக் குழுக்களை 1861ல் அனுப்பினர்.

சீனர்கள் சிலருடன் 1875-76 ல் ரேமாண்டு மார்கன் என்பவர் யூனான் செல்லப் பாதுகாப்பான பாதை காணச் சென்றனர். அவர்கள் முறையான கடவுச் சீட்டுப் பெற்றிருந்தனர். அரசுப் பிரசுநிதியின் கட்டுப்பாட்டில் இல்லாத சிலர் மார்கரியையும் அவருடன் வந்த ஐந்து உதவியாளர்களையும் கொலை செய்தனர்.

பீகிங்கில் இருந்த இங்கிலாந்து அமைச்சர் சர் தாமசு லேட் பீகிங்குடன் உடன்பாடு ஒன்று காண இவ்வாய்பினை பயன்படுத்திக் கொள்ள விரைந்தார்.

சீனாவிடம் கீழ்க்கண்ட கோரிக்கைகளை விடுத்தார்.

அ. சீனாவிற்கு ஆங்கிலேய அலுவலருடன் குழு ஒன்றை அனுப்புவது

ஆ. இரண்டாவது நுழைவிற்கு இசைவு

இ. 15000 டோலிகள் இழப்பீடு பெறுவது

ஈ. பேரரசர் இங்கிலாந்து அரசின் அமைச்சரைச் சந்திப்பது.

உ. இங்கிலாந்துப் பொருட்களுக்கு வரியிலிருந்து விலக்களிப்பது.

ஊ. ஆங்கிலேயரின் வேண்டுகோள்கள்யாவையும் நிறைவேற்றுவது.

இக்கோரிக்கைகளில் சிலவற்றை மட்டும் ஏற்றாலும் தாமசுவேடின் அரசந்தி முறையைச் சீன அரசு எதிர்த்தது.

**செபூ பேச்சு வார்த்தை 1876**

சர் தாமசுவேடு,லி-ஹிங்-சங் ஆகியோர் செப்டம்பர் 13, 1876 ல் செபூ என்னுமிடத்தில் சந்தித்து செய்து கொண்ட உடன்பாடு செபூ உடன்பாடு எனப்படுகிறது. இதன்படி.

1. இரண்டு இலட்சம் டோலிகள் இழப்பீடு தரவும்
2. மன்னிப்புக் கேட்டுக் குழு ஒன்றை இங்கிலாந்து அனுப்பவும்
3. சீன அதிகாரிகளின் ஒழுங்கு நடவடிக்கை விதிகளை வகுக்கவும்
4. பர்மா - யூனான் எல்லை வாணிகத்திற்குக் குழு அனுப்பவும்
5. ஐந்து ஆண்டுகளுக்கு யூனானில் ஆங்கிலேய அதிகாரிகளை நிறுத்தவும் சீனா உடன்பட்டது.

அச்சாங், ஊஹீ, வெங்சேர்வ், பஹோய் ஆகிய துறைமுகங்களில் வாணிபம் செய்யப் புதிதாக இசைவு அளித்தது. சீனாவிடம் என்ன என்ன சலுகை பெற வேண்டுமென்று விரும்பியதோ அதையெல்லாம் இங்கிலாந்து பெற்றது. இவ்வாறு சலுகைகள் பெற்றதன் வாயிலாக இங்கிலாந்து சீனாவில் தனக்கு எனச் செல்வாக்கு மண்டலம் ஒன்றை உருவாக்கியது.

இதைப் போன்று பிற நாடுகளான இரஷ்யா, ஜெர்மனி, பிரான்சு ஆகியன தங்கள் செல்வாக்கு மண்டலங்களைச் சீனாவில் உருவாக்க முயன்றன.

**சீன - ரஷ்ய உறவுகள்**

சீனாவுடன் உடன்படிக்கை மேற்கொண்ட முதல் நாடு இரஷ்யாதான். அது பல்வேறு உடன்பாடுகளை மேற்கொண்டது. வாணிக அரசு தந்திர உறவுகளைச் சிரமமில்லாமல் மேற்கொண்டிருந்த நாடு இரஷ்யா 3,50,000 சதுர மைல்கள் மஞ்சு பேரரசிடமிருந்து இரஷ்யா பெற்றது. சீனப் பங்கீட்டில் பெரும் லாபம் பெற்ற நாடு என இரஷ்யாவைத்தான் சொல்ல வேண்டும்.

1896ல் இரண்டாம் நிக்கோலசின் முடிசூட்டு விழாவிற்கு வருகை புரிந்த லீ -ஹங்-சங், லீ லெபனால் உடன்படிக்கையினை மேற்கொண்டார். இதன்படி

1. ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிராக ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும்.
2. போரின் போது சீனத் துறைமுகங்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.
3. சைபீரியக் குழுவிற்கு இரயில் பாதை அமைக்கவும்
4. இரஷ்ய சீன வங்கியை ஏற்படுத்தவும்
5. சீனாவில் ஒற்றுமையை இரஷ்யா ஏற்கவும் முடிவு செய்யப்பட்டது.

அதன் பின் 1898 ல் ஏற்பட்ட வேறு உடன்படிக்கையின்படி, ஆர்தர் துறைமுகம், தைரன் ஆகியவற்றை இருபத்தைந்து ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு இரஷ்யா பெற்றது. இரஷ்யா சீனக் கிழக்கு இரயில் பாதையை விரிவுபடுத்துவது எனவும், இரஷ்ய மற்றும் சீன போர்க் கப்பல்கள் மட்டுமே இதனைப் பயன்படுத்துவது எனவும் உடன்பாடு ஏற்பட்டது.

**திறந்த வெளிக் கொள்கை**

சீனாவில் இடம் பிடிக்கும் போட்டியில் ஆதிக்கம் ஏற்படுத்தும் முயற்சியில் கடைசியாக வந்த நாடு அமெரிக்கா ஆகும். அமெரிக்காவில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர் சீனாவில் அமெரிக்கா தீவிர ஆர்வம் செலுத்தத் தடையாக இருந்தது. சீனக் கூலியாட்கள் பிரச்சனையிலும் அமெரிக்க சீன உறவு பாதித்திருந்தது. 1867 ல் பர்லிங்காம் முயற்சியால் சீன அமெரிக்கா உடன்பாடு உருவானது. சீன பணியாட்கள் தொடர்பாக பணியாள் சட்டங்களை அவ்வப்போது நிறைவேற்றியதாலும், பணியாட்கள் அமெரிக்காவில் பணி புரியத் தடை செய்ததாலும் அமெரிக்க உறவில் பெரும் விரிசல் இருந்தது.

1897 - 98 ல் சீனாவை மற்ற ஐரோப்பிய நாடுகள் பங்கிட்டுக் கொண்டிருந்த போது, ஸ்பெயினுடன் அமெரிக்கா போரிட்டுக் கொண்டிருந்ததால் அமெரிக்காவால் போட்டியிட முடியவில்லை. 1898 ல் போர் முடிந்ததும் சீனாவில் அமெரிக்கா தன் கவனத்தை திருப்பியது. அமெரிக்கா வேளாண்மை பொருளாதாரத்திலிருந்து தொழிற் பொருளாதாரத்திற்கு மாறியதும் ஒரு காரணம். இந்த புதிய நிலையில அமெரிக்கா சீனாவின் மீது தன் கவனத்தைச் செலுத்தியது. சீனாவில் செல்வாக்கு மண்டலங்களை ஐரோப்பிய நாடுகள் உருவாக்கி தங்கள் மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டிருந்தன. தாம் சீனாவில் ஒதுக்கப்பட்ட ஒதுங்க இடம் இல்லாத நிலைக்கு ஆளாகி விடக்கூடும் என்று அமெரிக்கா அஞ்சியது. சீனாவைத் துண்டு போட்டு

விடுவார்கள் என்றும் அமெரிக்கா அரசதந்திரிகள் அஞ்சினர். இதன் விளைவுதான் அமெரிக்காவின் திறந்த வெளிக் கொள்கை.

மேல் நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்த போதிலும் சீனா அந்நாடுகளுக்காகக் கதவுகளைத் திறந்து வைக்கவில்லை. 1895 ல் ஏற்பட்ட "ஷிமோனோ செகி ஒப்பந்தம்" கை கொடுத்தது. அமெரிக்கா வாணிகத்தின் பொருட்டும் பொருளாதார நோக்கத்துடனும் சீனாவில் தன் உரிமையை ஏற்படுத்தும் எண்ணத்துடன் செயல்படுகிறது.

**திறந்த வெளிக் கொள்கை**

அமெரிக்கா வெளியுறவுச் செயலர் ஜான்ஹே சீனாவில் எல்லா நாடுகளும் சம நிலையில் வியாபார உரிமை பெற வேண்டும் என்று தன் கருத்தை விளக்கி 1899 ல் செப்டம்பரில் இலண்டன், பெர்லின், பாரிசு, ரோம், டோக்கியோ, செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் ஆகிய இடங்களிலுள்ள அமெரிக்கத் தூதர்களுக்கு அஞ்சல் எழுதினார். இதுவே ஹே கொள்கை என்றும் திறந்தவெளிக் கொள்கை என்றும் அழைக்கப்படுகிறது.

மேல்நாடுகள் அமெரிக்காவை அலட்சியப்படுத்திவிட்டுச் சீனாவை சுரண்டுவதிலிருந்து தடுக்கவும் தங்களுக்குள் சண்டையிட்டு கொள்வதை தடுக்கவுமே இக்கொள்கை உருவானது.

சீனாவிடம் குத்தகை எடுத்து வாணிபம் நடத்திவரும் எந்த நாடும் எந்த துறைமுக ஒப்பந்தத்திலும் குறுக்கிடாது. எல்லா நாடுகளுக்கும் பாரபட்சமின்றி இரயில் கட்டணத் தொகையும் வசூலிக்கப்பட வேண்டும் துறைமுகக் கட்டணமும் அவ்வாறு பாரபட்சமின்றி வசூலிக்கப்பட வேண்டும்.

எல்லா நாடுகளும் வசதியான நிலையில் உள்ளதால் சுங்கவரி, காப்புவரி ஆகிய வரிகளை ஒழுங்காகச் செலுத்திவிட வேண்டும்.

ஐரோப்பிய நாடுகளுக்கு விதிக்கப்பட்ட சுங்கவரியும், காப்புவரியும், மாறுதலின்றி செலுத்தப்பட வேண்டும் என்றும், வாணிப சலுகைகள் மீறப்படக் கூடாதென்றும் வலியுறுத்தப்பட்டன.

சீனாவின் பொருளாதார வளத்தைச் சுரண்டுவதில் தனக்கும் உரிய பங்கு அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் அமெரிக்க இக்கொள்கையை வெளியிட்டதேயொழிய சீனாவை ஐரோப்பிய நாடுகளின் சுரண்டலிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தினால் அல்ல.

**விளைவுகள்**

இக்கொள்கையால் சீனாவின் விவகாரங்களில் அமெரிக்கா அதிக அக்கறை காட்டியது. சீனா மீது காட்டிய அக்கறை அதன் ஒற்றுமையைக் காக்க விரும்பியது.

சீனாவில் ஒற்றுமை ஏற்பட்டதால் அதனை துண்டாடுவது தடுக்கப்பட்டது. சீனாவில மேல்நாட்டின் கை ஓங்காமல் தடுக்கப்பட்டது.

மேல்நாடுகள் பெற்ற சலுகைகளினால் மேல் நாடுகள் வளம் பெற்றன. இக்கொள்கையால் சீனாவின் நீண்ட நாள் தனிமைக் கொள்கை காற்றில் விடப்பட்டது.

இக்கொள்கை அமெரிக்காவின் சுயநலத்தை எடுத்துக் காண்பிக்கிறது. அமெரிக்கா இக்கொள்கையின் மூலமாக ஐரோப்பிய ஆசிய நாடுகளுடன் இருந்த பழைய உறவை புதுப்பித்தது.

இரஷ்யா இக்கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அது மற்ற நாடுகளைப் போல் அல்லாது தரைமார்க்கமாகவும் இரயில் மூலமாகவும் சீனாவுடன் தன் வாணிபத்தைத் தொடர்ந்து நடத்தியது.

**ஜப்பானில் ஏற்பட்ட மெய்ஜிச் சீர்திருத்தங்கள்**

ஜப்பானில் 1867 ல் பேரரசர் மறைவிற்குப் பின் முட்சுஹிட்டோ பேரரசரானார். இளம்வயதான அவர் 1868 ல் பதவியேற்ற பொழுது ஜப்பான் மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்தது. அவருடைய ஆட்சிக்குப் பின் மெய்ஜி அல்லது ஒளி பொருந்திய காலமாக மாறியது. அவர் ஒளி பொருந்திய காலப் பேரரசராக விளங்கினார்.

அவர் இறந்தப்பின் ''மெய்ஜி'' என்னும் பட்டமும் பெற்றார். ஜப்பான் நவீனமடைவதற்கும் மேன்மையடைவதற்கும் இவர் ஒரு எடுத்துக்காட்டாக திகழ்கிறார்.

**முட்சிஹிட்டோ ஆட்சிக்கு முன் ஜப்பானின் நிலை**

1. புதிய ஆட்சி எதிர் நோக்கிய சிக்கல்கள் ஏராளம், ஷோகன்களின் ஆட்சியை திருத்தியமைக்க வேண்டியிருந்தது.
2. புதிய அரசின் படை ஐரோப்பியரின் படைக்கு முன் வலுவற்றதாக இருந்தது.
3. சமமில்லா உடன்பாடுகள், ஐந்து சதவீத சுங்கவரி, நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் பாதித்தது.
4. எனவே பொருளாதாரம் அரசு நிறுவனங்கள் ஆகியவற்றை மீண்டும் சீரமைக்க வேண்டும்.

**1868 ஆம் ஆண்டுக் காப்புறுதிப் பட்டயம்**

ஜப்பானிய அரசியல் வாழ்க்கையை மன்னரின் ஆணை மாற்றியமைத்தது. புதிய மக்கள், அவைகள், வர்க்க வேறுபாடு இல்லாவகையில் அனைவரும் பங்கேற்பு, அவரவர் விரும்பும் தொழிலை மேற்கொள்ளும் உரிமை, கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போகச் செய்தல், அறிவு அகிலத்தின் எந்த மூலையில் இருந்தாலும் தேடிப் பெறுவது என ஐந்து கொள்கைகளை வகுத்து அரசியலில் மாற்றம் கொண்டு வந்தார். இதன் விளைவாக 1889 ஆம் ஆண்டு அரசியல் சட்டம் உருவாயிற்று. ஜப்பான் புதிய ஜப்பானாக மாற நிலமானிய ஒழிப்பு, புதிய அரசியல் சட்டம், மேலை நாட்டுடன் புதிய வணிக உறவுக் கொள்கை ஆகியன உறுதுணைப் புரிந்தன.

**சமுதாய சமயப் பொருளாதார மாறுதல்கள்**

மிகக் குறைந்த காலத்தில் ஜப்பான் நவீனமயத்தை நோக்கி நடைபோட்டது. நவீனமயத்தைக் கடைப்பிடித்து அதே வேளை உள்நாட்டுச் சீர்திருத்தப் பாதையில் நடைபோட்டது. அதன் பின்னரே அயல்நாட்டு உறவில் பெறும் மாறுதல் கண்டது. சமுதாய மாறுதலுக்கு கல்வி அடிப்படையில் கல்விச் சீர்திருத்தத்தை முதலில் மேற்கொண்டது.

**கல்வித் துறையில் மாறுதல்கள்**

ஜப்பான் புதிய கல்விக் கொள்யைக் கடைபிடித்தது. அறியாமை, கல்லாமை, மூடநம்பிக்கை ஆகியன ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடை என்பதை உணர்ந்து, இக்குறையை போக்கிட 1871 ல் கல்வித்துறையை ஏற்படுத்தினர். 1872 ல் கல்வி கட்டாயமயமாக்கப்பட்டு பிரான்சை முன் மாதிரியாகக் கொண்டனர். ஜப்பான் முழுவதும் எட்டு பல்கலைக்கழக மாவட்டங்களாகவும், பின்னர் 32 பள்ளி மாவட்டங்களாகவும், மேலும் இவற்றை 20 தொடக்கப் பள்ளி மாவட்டங்களாகவும் பிரித்தனர். கல்வித் திட்டம் அமெரிக்கா முறையிலமைந்தது. டோக்கியாவில் மாரியாள், எம்ஸ்காட் போன்ற அமெரிக்கர்களின் வழிகாட்டலில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஏற்பட்டன. 1873 ல் வந்த டேவிட் முர்ரே என்பவர் ஆறு ஆண்டுகள் ஜப்பானில் வழி காட்டினார். ஆங்கிலம் கட்டாய மொழியாக்கப்பட்டது. ஜெர்மன் ஆலோசகர் ஹெளங் நெக்ட் பேரரசரின் ஆலோசகராக விளங்கினார்.

**பெண்கல்வி**

ஜப்பானிய நிலமானிய முறை பெண்களைத் தொட்டில் முதல் சுடுகாடு வரை தனித்து இயங்கவிடாமல் செய்திருந்தது. கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கள் பெண் கல்விக்கு ஊக்கம் அளித்தனர். 1870 ல் பெண்களுக்கான முதல் பள்ளியை யோகஹாமர்வசில் செமினரி என்ற பெயரில் நிறுவினர். அயல்நாட்டுச் சமயப் பரப்பாளர்கள் 20 ஆண்டுகளில் 40 பள்ளிகளை ஏற்படுத்தினர். 1872 ல் முதல் பெண்கள் பொதுப்பள்ளியை நிறுவினர். இசை பொறியில்இதழியல் மனித உடல் அறிவியல் அனைத்தும் கற்றுக் கொடுத்தனர். 1880 ல் டோக்கியே

இசைப்பள்ளி நிறுவப்பட்டது.

**படைச் சீர்திருத்தம்**

பெர்ரியின் வருகையின் போது படை வலிமையற்ற நிலையில் இருந்ததை உணர்ந்தனர். ஜப்பானில் வல்லரசுகளுக்கிடையேயானப் போட்டி இல்லாமையால், சீனாவிற்கு ஏற்பட்ட நிலை ஏற்படாது தப்பியது. 1869 ல் படைத்துறை உருவாகியது. 1870 ல் யமகதா ஐரோப்பா பிரஷ்யாவில் படைப் பயிற்சி பெற்றுத் திரும்பியதும், படை அலுவல் துணை அமைச்சரானார். யமகதா ஜெர்மனிய மாரியில் படையை மாற்றியமைக்கப் பரிந்துரைத்தார். ஆனால் மக்கள் அவை பிரான்சு மாதிரியை விரும்பியது.

கியாத்தோவில் கட்டாய படைப்பயிற்சி அறிமுகமாயிற்று. கோஷிம் பேய் என்னும் பேரரசுக் காவல் படை உருவாகியது. 1872 ல் படைத்துறையானது, போர், கடற்துறை என இரு பிரிவாயிற்று. 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் கட்டாய இராணுவ சேவை செய்ய வேண்டும் என யமகாதா விதிர்தார். முதலில் சிலருக்கு விலக்கு அளிக்கப்பட்டு பின் விலக்கப்பட்டது. கட்டாயப் பணிக்கு ஜப்பான் ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது பல இராணுவப் பள்ளிகள் உருவாகின. 1886 ல் படைச் சீர்திருத்தங்கள் நிறைவடைந்தன.

**கடற்படை வளர்ச்சி**

கடற்படை வளர்ச்சி பெறுவதற்காக 1869 ல் கடற்படை பள்ளியை நிறுவினார். டோக்கியோவில் நிறுவப்பட்ட இப்பள்ளிக்கு தளபதி டக்ளசு பயிற்சியளித்தார். நவீன கடற்படைப் பயிற்சி பெற்றவர்களில் அட்மிரல் தோஜா அட்மிரல் உயர்யூ ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். 1875 ல் யோகுசுகா கப்பல் கட்டும் தளம் முதலில் உருவாயிற்று. “செய்கி” என்னும் கப்பல் 1878 ல் ஐரோப்பிய பயணம் மேற்கொண்டது. 1882 ல் இத்துறையில் தன்னிறைவு அடைந்தது. 1873 ல் 13000 டன் அளவுள்ள 17 கப்பல்கள் கட்டப்பட்டதிற்கு மாறாக, 1895 ல் 57000 டன் எடையுள்ள 28 கப்பல்கள், 24 டார்பிடோக்கள் உருவாகின.

**தொழில் வளர்ச்சிப் பொருளாதாரம்**

மேல்நாட்டு அறிவியல், தொழில் நுட்பம் ஆகியவற்றைக் கற்று அவற்றைத் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்தினர். ஜப்பானில் அமெரிக்க வங்கிமுறை ஏற்பட்டது, தேசிய வங்கி உருவாகிற்று. 1868 முதல் பொன்வெள்ளி நாணயங்கள் வெளியிடப்பட்டனர். காகிதப் பணம் அச்சிடப்பட்டது. 1882 ல் ஜப்பான் வங்கி நிறுவப்பட்டது. 1896 ல் சீனா வழங்கிய போர் இழப்பீட்டுத் தொகை ஜப்பானிய வளர்ச்சிக்கு பயன்பட்டது.

1871 முதல் உழுபவர்க்கே நிலம் என்னும் திட்டம் மிக்காட்டோவின் அனுமதியுடன் செயல்பட்டது. 1876 டோக்கியோவிலும்; 1877 ல் ஹோக்காவிலும் வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் தோன்றின. இதன் பயனாய் புதிய ஆராய்ச்சி முறைகள் வளர்ந்து 30 விழுக்காடு விளைச்சல் அதிகரித்தது. மீன்பிடிக்கும் தொழிலில் இயந்திரப் படகுகள் பயன்படுத்தப் பெற்றன. பருத்தி பட்டாடைத் தொழில் வளர்ச்சி பெற்றது. நிலத்தின் மதிப்பில் மூன்று விழுக்காடு வரி பெறப்பட்டது. நில வருவாயே அரசின் முதன்மை வருவாயாக இருந்தது. போக்குவரத்து வசதிகள் தொழில் வளர்ச்சிக்கு உதவின. ஜப்பானில் 1890 ல் 250 நவீன தொழிற்சாலைகளைக் கொண்டிருந்தது.

**போக்குவரத்து வசதிகள்**

1879 ல் டோக்கியோவிலிருந்து யோகாமா வரை 18 மைல் தூரமுள்ள இருப்புப்பாதை அமைத்தனர். 1885 ல் இருப்புப்பாதை வாரியம் என்று பெயர் பெற்றது. டோக்கியோ ஓமோரி இருப்புப் பாதைத் திட்டத்தை ஜப்பான் இரயில்வே கம்பெனி நிறைவேற்றியது. 1894 -95 ல் இருப்புப்பாதையின் நீளம் 2118

மைல்கள் ஆகும்.தனியார் இருப்புப்பாதை நிறுவனங்களையும் நாட்டின் வளர்ச்சிக்கு அரசு பயன்படுத்திக் கொண்டது.

**தொலைத் தொடர்பு**

1853 ல் தொலைத் தொடர்புக் கருவிகளை கம்மோடர் பெர்ரி ஜப்பானுக்கு வழங்கினார். டோக்கியோவிலிருந்து யோக்காமாவிற்கு முதல் தந்திப் பாதை 1869 ல் அமைக்கப் பெற்றபோது மூட நம்பிக்கையில் அதனை சாத்தானின் வேலை என்று பயந்தவர்களே பின்னர் அதன் பயன்களை உணர்ந்தனர். 1894 ல் 762 தந்தி நிலையங்கள் ஏற்பட்டு 8359734 செய்திகள் அனுப்பப்பட்டன.

ஆரம்பத்தில் சீரான தபால் முறையில்லாத ஜப்பான் 1877 ல் நவீன தபால் முறை ஏற்படுத்தியது ஜப்பான் பன்னாட்டு தபால் ஒன்றியத்தில உறுப்பினராயிற்று.

**நாள்காட்டி**

1873 வரை நடைமுறையிலிருந்த நாள்காட்டி முறை மாற்றம் பெற்று, ஐரோப்பிய நாள் காட்டி முறை அறிமுகம் ஆயிற்று. அறிவியல் கல்வி வளர்ச்சியில் பத்திரிக்கைகளின் பங்கும் குறிப்பிடத்தக்கது.

**சமயச் சீர்திருத்தங்கள்**

மெய்ஜிப் புரட்சி ஷிண்டோ மதத்தை ஆதரித்தது. 1868 ல் ஷிண்டோ மதம் அரசாங்க மதமாயிற்று. மிக்காட்டோ, தெய்வீக மன்னராக வழிபடப் பெற்றார். 1873 ல் கிறிஸ்தவ சமயத்திற்கு எதிரான ஆணைகள் விலக்கிக் கொள்ளப் பெற்றன. 4000 ஜப்பானிய கிறிஸ்தவர்கள் விடுதலையாயினர்.

**அயல்நாட்டு உறவுகள்**

அரசவைப் பிரபுவான இவகூராவின் தலைமையில் 48 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழு ஐரோப்பா அமெரிக்கா ஆகியவற்றிற்கு 1871 ல் அனுப்பி வைக்கப்பட்டது. அந்நாடுகள் ஜப்பானின் மீது திணித்த ஒருதலைப்பட்சமான உடன்படிக்கையைத் திருத்துவதே இக்குழுவின் முக்கிய நோக்கமாகும். எனவேதான் இக்குழு உடன்படிக்கை நாடுகளுக்கு அனுப்பப்பட்ட நல்லெண்ணத் தூதுக்குழு என்று அழைக்கப்பட்டது. ஜப்பானியப் படை கல்விமுறை முதலியவற்றைச் சீரமைக்க அவைகள் உறுதியளித்தன. இரஷ்யா, பிரிட்டன் முதலிய நாடுகளுடன் உடன்பாடு கண்டது.

மேல் நாடுகளைப் போன்று ஜப்பானும் கொரியாவில் போர் மிரட்டல் கொள்கையினை மேற்கொண்டது. 1880 ல் டிசம்பரில் கையெழுத்தான துணை உடன்பாட்டின்படி கொரியாவில் பூசான், ஜின், செள யென்சான் துறைமுகங்கள் ஜப்பானிய வாணிபத்திற்கு திறந்து விடப்பட்டன. 1882 ஆகஸ்டில் செம்வுலோ உடன்படிக்கையினை கொரியா மேற்கொண்டது. 1876 ல் சீனத் தூதர் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டார். 1881 ல் சீனாவுடன் உடன்படிக்கை மேற்கொண்டது. 1894 ல் ஏற்பட்ட சீன-ஜப்பான் போர் 1904 ல் ஏற்பட்ட இரஷ்ய ஜப்பான் போர் போன்றவை ஜப்பானின் அயல்நாட்டு உறவில குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும்.

மெய்ஜிப் புரட்சி ஜப்பானை மாற்றியமைத்து, எந்த அயல் நாட்டவர்களுக்கெதிராக ஷோகன்களை வீழ்த்தி மெய்ஜிப் புரட்சியை ஏற்படுத்தினார்களோ, எந்த மேலநாட்டுக் கொள்கையினை எதிர்த்தனரோ அதையே பின்பற்றி ஜப்பானை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றனர்.

**அத்தியாயம் - 3**

## கிழக்கு ஆசிய வரலாறு (1840 1966)

### 1. முதல் சீன ஜப்பானியர் போர் 1894 - 95

சீனாவுக்கும் ஜப்பானுக்குமிடையே உறவு பாதிக்கப்படுவதற்குக் கொரியா காரணமாய் இருந்தது. பழங்காலந்தொட்டு, கொரியா சீனாவுக்குக் கீழ்பட்ட ஒரு அரசாக இருந்து வந்தது. மெய்ஜி முன்னிலை மீட்சிக்குப் பின், ஜப்பான் தன்னுடைய பேரரசை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் கொரியாவை நோக்கி தன்னுடைய கவனத்தைத் திருப்பியது. தமது உற்பத்திப் பொருட்களுக்கான சந்தைகளுக்காகவும், பெருகிவரும் ஜப்பானிய மக்களைக் குடியேறச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனும் ஜப்பான் கொரியா மீது உரிமை கொண்டாடியது. எனவே சீனாவுக்கும், ஜப்பானுக்குமிடையே உறவுகள் பாதிக்கப்பட்டுப் பகைமை வளர்ந்தது. இரு நாடுகளும் 1894 ஆம் ஆண்டு முதலாம் சீன - ஜப்பானிய போரில மோதிக்கொண்டன. ஜப்பான் வெற்றிவாகை சூடியது. இருநாடுகளுக்கும் இடையே 'ஷிமொனோசெகி ஒப்பந்தம்' ஏற்பட்டது. ஜப்பானின் பெருமை உலக அரங்கில் உயர்ந்தது.

### 1894 - ஆம் ஆண்டுக்கு முன் சீனாவும் ஜப்பானும்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையிலும் ஜப்பானை ஒரு அடிமை நாடாகவே சீனா கருதிவந்தது. பண்பாட்டு அடிப்படையிலும் ஜப்பானை ஒரு தரம் குறைந்த நாடு என்று சீனா எண்ணியது ஆனால் மெய்ஜி முன்னிலை மீட்சிக்குப் பின் ஜப்பான் அதிவேகமாக வளர்ச்சியடைந்தது. அது மேலை நாடுகளைப் பின்பற்றி முன்னேற்றம் அடைந்தது. அதே நேரத்தில் சீனா தனித்து வாழும் கோட்பாட்டின் அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு பின்தங்கி இருந்தது. அதன் உள்நாட்டு குழப்பங்களும் சிக்கல்களும் அதை ஒரு வலிமை குன்றிய நாடாக மாற்றின. ஒரு சக்தி வாய்ந்த நாடாக எழுச்சி பெற்ற ஜப்பான் சீனா மீது ஆதிக்கம் செலுத்த விரும்பியது. இதனால் இருநாடுக்களுக்கும் இடையே உறவில விரிசல் ஏற்பட்டு போர் மூண்டது. 1871ல் இரு நாடுகளுக்குமிடையே ஒரு நல்லெண்ண உடன்பாடு ஏற்பட்டிருந்தபோது லூச்சோ தீவு பிரச்சனை கிளம்பியது.

1894 ஆம் ஆண்டு லூச்சோ என்னும் தீவுக் கூட்டத்தினைச் சேர்ந்த கப்பல் ஒன்று பார்மோசாத் தீவுக்கருகில் தரைத் தட்டியது. அச்சமயம் பார்மோசாத் தீவைச் சார்ந்தக் காட்டுமிராண்டிகளில் சிலர் அக்கப்பலில் இருந்த சிலரைக் கொலை செய்துவிட்டனர். சீனா ஜப்பானியர் ஆகிய இருசாராரும் லூச்சோ தீவு தம்முடைய ஆதிக்கத்திற்கு உட்பட்டது என உரிமை கொண்டாடினர். ஜப்பான் மேற்கூறப்பட்ட செயலுக்குச் சீனா இழப்பீடுத் தர வேண்டுமெனக் கூறியது. அதற்கு சீனா மறுத்தது. அத்தீவில் தனக்கும் ஆதிக்கமுண்டு என்று வாதாடியது. இருநாடுகளுக்கிடையில் கை கலப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டது. இச்சூழ்நிலையில பிரிட்டிஷ் பிரதமர் சர் தாமஸ் வாடே தன் செல்வாக்கைப் பயன்படுத்தி ஒரு ஒப்பந்தம் செய்துக் கொள்ள வழி சொன்னார். அதன்படி சீனா இழப்பீடுத் தரவும், இனிமேல் இதுமாதிரி நிகழச்சி ஏற்படாது என்றும் உறுதி அளித்தது. 1879 ல் ஜப்பான் லூக்சோ தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டது. இவ்வாறு சீனாவுக்கும், ஜப்பானுக்கும் இடையில எழுந்த பூசல் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது.

### கொரியா பிரச்சனை

கொரியாவில ஜப்பானிய ஆதிக்கம் ஏற்படவில்லை என்றால் அது தனக்கு ஆபத்தாய் முடியும் என்று ஜப்பான் எண்ணியது. கொரியா மீது ஜப்பான் கொண்டிருந்த அக்கறைக்கு மூன்று முக்கிக் காரணங்கள் இருந்தன. முதலாவதாக, எந்த ஒரு பகைமை நாடும் கொரியாவைப் பிடித்துக் கொண்டு, அதைத் தளமாகக் கொண்டு ஜப்பானைத் தாக்கி விடக் கூடாது. எடுத்துக்காட்டாக, கொரியாவில் ரஷ்யா போன்ற வல்லரசின் ஆதிக்கம் ஏற்படுமானால் "அது ஜப்பானின் மார்பை நோக்கி குறிவைக்கப்பட்ட துப்பாக்கியைப் போல்" ஆபத்து

அளிக்க வல்லது என்று கருதப்பட்டது.

இரண்டாவது, மெய்ஜி முன்னிலை மீட்சிக்குப் பின் ஜப்பான் ஒரு பேரரசை ஏற்படுத்தப் போவதாக சொல்லிக் கொண்டிருந்தது. அதற்கு கொரியா முதற்படியாய் இருக்க வேண்டுமென்று அது விரும்பியது. மூன்றாவதாக ஜப்பான் ஒரு தொழில் வளம் நிறைந்த நாடாக வளர்ச்சி பெற்றதால் தன்னுடைய வாணிபத்திற்கும், அபரிமிதமான மக்கள் தொகைக்கும் நல்ல இடமாக கொரியா அமையும் என்று அது எண்ணியது. எனவே ஜப்பான் கொரியா மீது ஆழ்ந்த கவனம் செலுத்த ஆரம்பித்தது.

**கிங்வா உடன்படிக்கை 1876**

ரஷ்யா, பிரான்சு, அமெரிக்கா போன்ற நாடுகளும் கொரியா மீது தங்களது கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தன. எனவே ஜப்பான் முன்னெச்சரிக்கையாக செயல்பட்டது.அது ஒரு தூதுக்குழுவை 1875 ல் கொரியாவுக்கு அனுப்பியது. ஆனால் அவ்விரு நாடுகளுக்கும் இடையே, ‘கிங்வா உடன்படிக்கை’ ஏற்பட்டது. அதன் மூலம் கொரியாவை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரித்த ஜப்பான், அது சீனாவிலிருந்து தனிப்பட்ட ஒரு பகுதி என்பதையும் சுட்டிக் காட்டியது. மேலும் கொரியாவின் முக்கியத் துறைமுகம் ஒன்றினையும் ஜப்பான் பெற்றுக் கொண்டது. இரு நாடுகளில் ஒரு நாட்டை யாராகிலும் தாக்கினால் அதற்கு உதவி புரிய மற்றொரு நாடு வரவேண்டும் என்று இருவரும் ஒப்புக் கொண்டனர். காலப்போக்கில் அமெரிக்காவும், பிற ஐரோப்பிய நாடுகளும், சீனாவும் கொரியாவுடன் உடன்பாடுகள் செய்துக் கொண்டன.

**கொரியாவில் பிற்போக்குவாதிகளும் முற்போக்குவாதிகளும்**

கொரியாவில் வெளிநாட்டவர்கள் உரிமை பெறுவதை கொரியா மக்களில் ஒரு பகுதியினர் விரும்பவில்லை. எனவே அவர்கள் வெளிநாட்டவர்களை உடனே வெளியேற்ற வேண்டுமென்று முடிவு செய்தனர். அவ்வாறு அவர்களை வெளியேற்றுவதற்குச் சீனாவின் உதவியை நாட வேண்டுமென்று அவர்கள் முடிவு செய்தனர். இவர்கள் பிற்போக்குவாதிகள் எனப்பட்டனர். மற்றொரு பிரிவினர் ஜப்பானை முன்மாதிரியாகக் கொண்டு, கொரியாவை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டுமென்று விரும்பினர். இவர்களுக்கு முற்போக்குவாதிகள் என்று பெயர். இம்முற்போக்குவாதிகளுக்கு ஜப்பான் தன்னுடைய ஆதரவைத் தந்தது.

**சீனாவுக்கும் கொரியாவுக்குமிடையே வணிக உறவு**

அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, ரஷ்யா, ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் கொரியா உடன்பாடுகளை மேற்கொண்டு தன்னை உலகிற்கு வெளிப்படுத்தியது. கொரியாவின் இத்தகையப் போக்கை ஜப்பான் விரும்பவில்லை. கொரியாவிலிருந்து முற்போக்குவாதிகளைத் தூண்டிவிட்டு கொரியாவில் குழப்பத்தை உண்டுபண்ணியது. அதே சமயம், சீனாவும் அமைதியாய் இருக்கவிலலை. அது கொரியாவுக்கு யுவான் ஷி காய் என்ற தூதுவரை அனுப்பி பேச்சுவார்த்தை நடத்தியது. அதன்படி சீனாவுக்கும் கொரியாவிற்கும் இடையே கடல் வாணிப உறவு ஏற்பட்டது.

**லீ-ஈடோ ஒப்பந்தம் 1885**

ஜப்பான் முற்போக்குவாதிகளையும், சீனா பிற்போக்குவாதிகளையும் கொரியாவில் தூண்டிவிட்டன. இதனால் சீன- ஜப்பான் நாடுகளுக்கிடையே போர் ஏற்பட்டது. இருப்பினும் தன் சுய வலிமையைக் கொண்ட ஜப்பான் போரைத் தொடர விரும்பவில்லை. ஜப்பான் தனது நாட்டின் புகழ்வாய்ந்த அரசியல் நிபுணரான ஈடோ என்பவரை சீனாவுக்கு அனுப்பி வைத்தது. ஈடோ சீனப் பிரதிநிதியான லீ ஹீ சாங் என்பவருடன் பீகிங்கில் பேச்சு வார்த்தை நடத்தினார். இறுதியில் 1885, ஏப்ரல் 18 ல ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதற்கு லீ- ஈடோ ஒப்பந்தம் என்று பெயர்.

**அவ்வொப்பந்தத்தின் முக்கிய அம்சங்களாவன.**

1. சீனாவும், ஜப்பானும் தங்கள் படைகளை கொரியாவிலிருந்து விலக்கிக் கொள்ள ஒப்புக் கொண்டன. இதனை நான்கு மாதங்களுக்குள் நிறைவேற்ற வேண்டும்.
2. கொரியாவில் உள்நாட்டு விவகாரங்களில் ஜப்பானும், சீனாவும் எக்காரணம் கொண்டும் தலையிடக் கூடாது. அவ்வாறு தலையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அவ்விரு நாடுகளும் முன்கூட்டியே கலந்தாலோசித்துப் பின் தலையிடலாம்.
3. கொரியாவின் விருப்பத்திற்கேற்ப ஜப்பான் அல்லது சீனாவின் படைத்தலைவர்களின் உதவியுடன் தங்கள் இராணுவ வீரர்களுக்குப் பயிற்சி கொடுக்கலாம்.
4. கொரியாவை இறைமைத் தன்மை வாய்ந்த நாடு என்று இருவரும் ஒப்புக் கொண்டனர். இந்த லீ-ஈடோ ஒப்பந்தமானது, சீனாவிற்கு ஏற்பட்ட அரசியல தந்திரக் தோல்வியாகும். இதனால் கொரியாவில் சீனாவின் ஆதிக்கத்திற்கு முட்டுக்கட்டையிடப்பட்டது.

**முதலாவது சீன - ஜப்பானியப் போர் 1894 - 95**

1885 ல் ஏற்பட்ட ஈடோ உடன்பாட்டிற்குப் பின் சீன-ஜப்பானிய உறவுகள் சீரடையவில்லை. அவ்விரு நாடுகளும் தம்மைப் பிற நாட்டின் எதிரியெனவே கருதின. இதனால் ஏற்பட்ட விளைவுகளாலும் கொரியச்சிக்கலின் பின் விளைவாகவும் சீன-ஜப்பானிய போர் மூண்டது. ஏற்கனவே தங்களுக்குள் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்த அவ்விரு நாடுகளும், கீழ்க்கண்ட வேறு பல காரணங்களாலும் தமக்குள் போரிட்டன.

## போரின் காரணங்கள்

**1. ரஷ்யாவின் அச்சம்**

பசிபிக்கடல் பகுதியில் தமது ஆதிக்கத்தை ரஷ்யா ஏற்கனவே உருவாக்கி இருந்தது. அது சீன ஜப்பான் நாடுகளைப் போல் கொரியா மீது கண் வைத்திருந்தது. கொரியாவிற்கு தன் இராணுவ அதிகாரிகளை அனுப்பி அவர்களுக்கு படைபயிற்சிக் கொடுத்தது. ரஷ்யாவின் பெருகி வரும் பலத்தைக் கண்ணுற்ற ஜப்பான், ரஷ்யாவை ஐயத்தோடும் அச்சத்தோடும் நோக்கியது. இந்த அச்சம் ரஷ்யா லாசரோவ் துறைமுகத்தைப் பெற்றபோதும் டிரான்ஸ் - சைபீரியின் இருப்புப் பாதையினை கட்ட ஆரம்பித்த போதும் அதிகரித்தது. ரஷ்யாவின் இந்த நடவடிக்கைகளுக்குச் சீனா எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை. எனவே ஜப்பான், கொரியாவில் ரஷ்ய செல்வாக்கு வளர்வது தன்னுடைய பாதுகாப்பிற்குப் பங்கம் ஏற்படும் என்று கருதியது. வளர்ந்து வரும் ரஷ்யா செல்வாக்கை தடுத்து நிறுத்த எதிர் நடவடிக்கைகளில் ஜப்பான் ஈடுபட்டது. இது சீன-ஜப்பானியப் போர் முழுவதற்கும் அடித்தளம் அமைக்கப்பட்டது.

**2. உணவு நெருக்கடி**

ஜப்பான் பொருளாதார ரீதியிலும் கொரியாவைக் கைப்பற்ற எண்ணியது. கொரியா வளமும் நலமும் கொண்ட நாடாக விளங்கியது. அங்கு நெல் ஏராளமாய் விளைந்தது. உணவுப் பஞ்சத்தால் வாடிய ஜப்பானுக்குக் கொரியாவைத் தன் கீழ் கொண்டு வந்தால், அந்நிலையை மாற்ற முடியும் என்ற எண்ணம் உதித்தது கொரியாவின் இறக்குமதி வாணிபத்தை அது பெரும்பகுதி பெற்றிருந்தது. இதன் இயற்கையாகவே அது பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற வேண்டும் என்று எண்ணியதில வியப்பேதுமில்லை. போர் ஏற்பட்டாலும் பரவாயில்லை பொருளாதாரத்தில் உயர்வு காணப்பட வேண்டும் என்று ஜப்பான் நினைத்தது.

### 3. கொரியாவில் அமைதியின்மை

கொரியாவில் ஏற்பட்ட கலவரங்களால் ஜப்பானிய வாணிபம் பெரிதும் பாதிப்படைந்தது. கொரியாவின் தலைநகரான சியோலில் எப்பொழுதும் குழப்பமான சூழ்நிலையே காணப்பட்டது. கொரியாவின் குழப்பமான சூழ்நிலை ஜப்பானிலும் பரவிவிடக் கூடாது என்று ஜப்பான் பயந்தது. எனவே கொரிய அரசியல் கட்சிகளுக்கு இடையில் ஏற்பட்ட சண்டைகளை நிறுத்தி அமைதி கண்டால்தான் தன்னுடைய வாணிபம் வளமடையும் என்று ஜப்பான் எண்ணியது. இதற்கு ஒரே வழி போரிடுவதுதான் என்று ஜப்பான் முடிவுசெய்தது.

### 4. ஜப்பானில் அரசியல் குழப்பங்கள்

ஜப்பானிலும் கடுமையான குழப்பநிலை நிலவியது. 1890 - 91 ல் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தின் காரணமாக மட்சுகாடா அமைச்சரவை வீழ்சசி அடைந்தது. மேலும் ஜப்பான் பிரதம மந்திரி ஈட்டோவிற்குப் பெரும் எதிர்ப்பு இருந்தது. இச்சூழ்நிலையில் மக்களின் மனதைத் திசைதிருப்ப ஒரு போர் அவசியப்பட்டது. எதிர்கட்சிகளின் கொட்டத்தை அடக்கவும், வெளிநாட்டுடன் ஒரு போர் தேவைப்பட்டது. எனவே “ உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டால் போரிட வேண்டும்” என்ற அரிஸ்டாட்டில் கொள்கையின்படி ஜப்பான் போரில் இறங்கியது.

### 5. டியன்சின் லி ஈட்டோ உடன்படிக்கை

இவ்வுடன்படிக்கையின்படி சீன- ஜப்பான் நாடுகள், கொரியா மீது தங்களுக்கு இருந்த உரிமைகளை விட்டுக் கொடுத்தன. அதன் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமல் அதனை இறையாண்மை வாய்ந்த நாடு என்று மதித்தன. ஆனால் அவ்வாறு செய்ததின் மூலம் பிறநாடுகள் கொரியாவில் செல்வாக்குப் பெற வாய்ப்பு ஏற்படும் என்றும், தங்கள் வலிமையை நிலைநாட்ட வாய்ப்பு ஏற்படாமல் போய்விடும் என்றும் இருநாடுகளும் எண்ணின. எனவே இந்த ஒப்பந்தத்தை உதறித் தள்ளிவிட்டுப் போருக்கு ஆயத்தமாயின.

### 6. ஐரோப்பிய நாடுகளின் ஆசை

டியன்சின் உடன்படிக்கைக்குப் பின் ஐரோப்பிய நாடுகள் கொரியா மீது அக்கறை செலுத்தின. குறிப்பாக ரஷ்யா அமெரிக்காவின் ஆதரவுடன் கொரியாவை ஆக்கிரமிக்க எண்ணியது. ஆனால் ஜப்பான் முந்திக் கொள்ள முயன்றது. கொரியா மீது ஜப்பான் அதிக ஆர்வம் காட்டுவதை அனைவரும் அறிந்தனர். சீனாவோ ஏற்கனவே தன் நாட்டின் பெருமையை இழந்து வெளிநாட்டவர்க்கு நாட்டின் பல இடங்களைக் கொடுத்தது. எனவே அந்த நஷ்டத்தை ஈடுகட்டும் வகையிலாவது தனக்குரிய பங்கை கொரியாவிடமிருந்து பெற சீனா விரும்பியது.

### 7. லீ - ஹங் - சங்கி கொள்கை

ஜப்பானைப் போல சீனாவிலும் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டன. சீன மக்கள் கொரியப் பிரச்சனையில் சீனா தீவிரமாக செயல்பட வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தனர். லீ -ஹங் சங்கின் விட்டுக் கொடுக்கும் தன்மையால் நாட்டின் மதிப்பு குறைகின்றது என்றுக் கண்டனம் தெரிவித்தனர். பீக்கிங்கில் லீ எதிர்ப்பு அணி அவருடைய அமைதியான கொரியக் கொள்கையை வன்மையாகக் கண்டித்தது. எனவே லீ தன் மதிப்பைக் காப்பாற்றி மக்களிடம் நன் மதிப்பைப் பெற முயன்றார். போருக்குச் சீனாவையும் ஆயத்தப்படுத்தினார்.

### 8. டோங்காக் புரட்சி - உடனடி காரணம்

கொரியாவில் ஏற்பட்ட ‘டோங்காக் புரட்சியே’ சீன ஜப்பானிய போருக்கு உடனடி காரணமாகும். டோங்காக் என்பவர்கள் சமயப்பற்றுமிக்கவர்கள். இவர்களின் சமயக் கோட்பாடுகள் புத்தம், கன்பூசியனிசம், டாயிசம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. சமுதாய சீர்திருத்ததிற்காக, சமயவாதிகளான இவர்கள் அரசியல்வாதிகளாக மாறினர். அவர்களைக் கீழைநாட்டுக் கல்வித் கழகத்தவர் என்று அழைத்தனர். அவர்கள் நாட்டிலுள்ள எளியோர்களின் வாழ்வு ஏற்றம் பெறவும், தாழ்த்தப்பட்ட மற்றும் அடக்கப்பட்ட பிரிவினர் ஆக்கமடையவும் பாடுபட்டு வந்தனர். அவர்களின் இயக்கம் வெளிநாட்டவர்களுக்கு எதிராக இருந்தது. அவர்கள்

கிறிஸ்தவர்களையும் எதிர்த்தனர். ஜப்பானியர்களையும் அவர்கள் விரும்பவில்லை. கொரியா நாட்டில் அதிகாரிகளிடையே ஊழல் மிகுந்துக் காணப்பட்டது. எனவே அலுவலகங்களுக்குள் புகுந்து ஊழல் அதிகாரிகளைக் கொன்று குவித்தனர். அவர்களால் ஏற்படுத்தப்பட்டக் கலகத்தில் ஜப்பானிய ஆதரவு பெற்ற முன்னேற்றக் கட்சியின் தலைவரான கிம் லுக் கீயூம் என்பவர் கொலை செய்யப்பட்டார். இதனால் குழப்பமும் கொந்தளிப்பும் நாடு முழுவதும் ஏற்பட்டது. இக்கிளர்ச்சியை அடக்க முடியாத கொரியா சீனாவின் உதவியை நாடியது. டின்சினில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி இதை ஜப்பானுக்கு தெரிவித்துவிட்டு சீனா தன் படைகளை கொரியாவுக்கு அனுப்பியது. ஜப்பானும் தம்பங்கிற்கு ஒரு படையை கொரியாவின் தலைநகரான சீயோலுக்கு அனுப்பியது. ஆனால் சீன- ஜப்பானியப் படைகள் கொரியாவை அடைவதற்குள் டோங்காக் கலகம் அடக்கப்பட்டு விட்டது. எனவே சீனா இருநாட்டின் படைகளும் உடனே கொரியாவிலிருந்து வெளியேறி விட வேண்டுமென்றும், கொரியா சுதந்திரமாகத் தக்க நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்றும் கூறியது. ஆனால் சீனாவின் இக்கருத்தை ஜப்பான் ஏற்றுக்கொள்ள மறுத்தது. இக்கருத்து வேறுபாட்டால் காலம் காலமாக புதைந்து வந்த வெறுப்புணர்ச்சி வெடிக்க ஆரம்பித்து போர் மூண்டது.

**போரின் போக்கு**

வேற்று நாடான கொரியாவின் மண்ணில் சுயநலமிக்க இருநாடுகளும் பொறாமை காரணமாகப் போரில் ஈடுபட்டன. ஜப்பான் நவீன படைக்கருவிகளைப் பெற்றிருந்தது. மேலும் சிறிய படைகள் தான் என்றாலும், சீரிய முறையில் அவை பயிற்சி பெற்றிருந்தன. தேசப்பற்றால் உந்தப்பட்ட அவர்கள் சீனரை வீழ்த்த வேண்டும் என்ற வெறியுடன் போரில் ஈடுபட்டனர். சீனப் படைகளோ அதிக எண்ணிக்கையுடன் இருந்தபோதிலும் படைப்பயிற்சி பெற்றிருக்கவில்லை. மேலும் நவீனக் கருவிகள் அவர்களிடம இல்லை. எனவே சிறிது நாட்களிலேயே சீனப் படைகள் ஒடுக்கப்பட்டன. யாலு என்ற நதிக்கரையில் நடைபெற்ற போரில் சீனக் கப்பற்படை ஒடுக்கப்பட்டது. அதனால் கொரியாவின் கடற்கரை முழுவதும் ஜப்பானியர் வசமாயின. மேலும் லியோடுங் தீபகற்பகத்தின் தென்பகுதியிலுள்ள போர்ட் ஆர்தர் துறைமுகத்தை ஜப்பான் கைப்பற்றிக் கொண்டு சீனாவின் உட்பகுதிகளுக்கு ஊடுருவிச் சென்றது. சீனாவின் வசமிருந்த ஷாண்டுங் மாநிலத்தின் வட பகுதியிலுள்ள வை-ஹை-என்ற இடத்தை ஜப்பான் பெற்றுக் கொண்டது.

வெற்றிமேல் வெற்றி பெற்ற ஜப்பான் சீனாவின் தலைநகரான பீகிங் நகர் நோக்கி முன்னேறியது. பெரிதும் கலக்கமடைந்து சீனா அடிபணிந்து சமாதானத்தை விரும்பியது. போரில் ஜப்பான் வியத்தகு வெற்றி பெற்றது.

**ஷிமோனோ செகி உடன்படிக்கை ஏப்ரல் 17 1895**

சீன – ஜப்பானியப் போரில் தோல்வியைத் தழுவிய சீனா பேச்சுவார்த்தைக்கு இணங்கியது. ஜப்பானும் சீனாவும் 1895 ஏப்ரல் 17 ஆம் நாள் உடன்பாடு செய்துக்கொண்டன. இந்த பேச்சு வார்த்தையின் பொழுது சீன அறிஞர் லீ ஹங் சங்கும், ஜப்பானின் சட்ட வல்லுநர் ர டோ பிரவும் கலந்துக் கொண்டனர்.

அதன்படி,

1. கொரியா சுதந்திர நாடாக்கப்பட்டது.
2. பார்மோசா தீவு, பெஸ்கடோரல் தீவுக் கூட்டங்கள், தெற்கு மஞ்சூரியாவிலுள்ள லியோடுங் தீபகற்பகம், போர்ட் ஆர்தர் ஆகியவற்றைச் சீனா ஜப்பானுக்கு வழங்கியது.
3. போர் இழப்பீட்டுத் தொகையாக 200 மில்லியன் சீன நாணயங்களைச் சீனா ஜப்பானுக்குக் கொடுத்தது.
4. சீனாவில், ஐரோப்பிய நாடுகள் அனுபவித்து வரும் சலுகைகளும், உரிமைகளும், ஜப்பானுக்கும் கொடுக்கப்பட்டன.

5. ஜப்பானுக்கு சீனாவில் விசேஷப் பிரதேச உரிமைகளை வழங்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது.

6. ஷாசி, சுங்கிங், ஹாங்சௌ, சூசௌ என்ற நான்கு சீனத் துறைமுகங்களில் ஜப்பானியர் வணிக உரிமை பெற்றனர்.

**சிறப்பு வணிக உடன்பாடு**

மேற்கூறப்பட்ட உடன்படிக்கையினைத் தொடர்ந்து 1896 ஜுலை 21 ஆம் நாள் மற்றொரு உடன்படிக்கையும் செய்துக் கொள்ளப்பட்டது. அதன்படி,

1. ஜப்பான், சீனாவில் வாணிபம் செய்ய தங்கு தடையில்லா உரிமை பெற்றது.
2. உடன்படிக்கைத் துறைமுகங்களில், தொழிற்சாலைகள் நிறுவ ஜப்பானுக்கு அனுமதி வழங்கப்பட்டது.
3. சுங்கவரியைக் கட்டியப் பிறகு தன் இயந்திரங்களை அத்துறைமுகங்களில் வைத்துக்கொள்ள ஜப்பான் உரிமை பெற்றது.
4. சீனாவிலேயே ஜப்பான் சிலப்பொருட்களை உற்பத்தி செய்ய உரிமைகள் கொடுக்கப்பட்டன. அத்தகைய பொருட்களுக்கு வரிவிலக்கும் அளிக்கப்பட்டது.

## சீன - ஜப்பானியப் போரின் விளைவுகள்

**1. சீனாவின் வலிமைக்குன்றிய நிலை**

சீனா இப்போரில் அடைந்த தோல்வி அதன் வலிமையற்ற நிலையைத் தெளிவாக எடுத்துக்காட்டியது. சீனாவைத் துண்டு போடுவதற்கான பாதை நன்கு அமைக்கப்பட்டது. சீனாவின் மஞ்சு அரசாங்கம் திறமையற்றது வலிமையற்றது, ஊழல் நிறைந்தது என்பது நிரூபிக்கப்பட்டது. எனவே தீரவாதிகள் மஞ்சுக்களை ஒழித்துவிட்டு குடியரசு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

**2. சீனாவில் சீர்திருத்த இயக்கம் வலுப்பெற்றது**

இப்போரின் தோல்வி சீனாவின் கண்களைத் திறந்தது. அவர்கள் ஜப்பானிய வழியில் தங்கள் நாட்டிலும் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்று உணரத் தலைப்பட்டனர். எனவே சீர்திருத்த இயக்கங்கள் வளர்ச்சியடைந்தன.

**3. ஜப்பானின் எழுச்சி**

இப்போரில் சீனா தோல்வி அடைந்ததைப் பற்றி யாரும் பேசவில்லை. ஜப்பான் வெற்றியடைந்ததைப் பற்றி தான் பேசினர். மிகச் சிறிய ஜப்பானின் வெற்றி அனைவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. இதனால் ஜப்பானின் பெருமை உயர்ந்தது. அதன் புகழ் உலக நாடுகளில் கொடிகட்டிப் பறந்தது. வெகு சீக்கிரத்தில் அது ஒரு வல்லரசாக எழுச்சி பெற்றது. ஜப்பானின் எழுச்சியை மேலை நாட்டவர்கள் உணரலாயினர். சீனாவிடமிருந்து பெற்ற இழப்பீட்டுத் தொகையின் மூலம் தன்னுடைய இராணுவத்தையும் கடற்படையையும் வலிமைமிக்கதாக மாற்றியது. பொருளாதாரத் துறையில் ஜப்பான் தங்க நாணய மாற்றினை விரும்பி ஏற்றுக் கொண்டது. தன்னுடைய தொழில துறையினை விரிவுபடுத்தியது. தன்னுடைய பற்றாககுறையை சீர் செய்தது.

உள்நாட்டிலும் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. ஈடோ என்பவர் நாட்டை ஒருங்கினைததார். நாட்டில் அமைதி ஏற்பட்டது. ஜப்பானிய ''டயட்'' என்ற பாராளுமன்றத்தின் மூலம் போருக்கான வரவு செலவுத் திட்டங்கள் பெருமளவில் கொண்டு வரப்பட்டது. ஜப்பான் கீழை நாடுகளில் தனி இடத்தைப் பிடித்தது. ஆசியாக் கண்டத்தில் அது மிகத் தீவிரமாகத் தன் விரிவாக்கக் கொள்கையினைப் பின்பற்றியது. மஞ்சூரியாவில் தாவிக் குதிப்பதற்கு இந்தப்பின்புலம் ஜப்பானுக்குத் தேவைப்பட்டது.

**4. மூவர் தலையீடு**

சீனாவின் படுதோல்வி அதற்குப் பல பயங்கர விளைவுகளை ஏற்படுத்தியது. சீனாவின் ஆதரவற்ற அவநிலை அதனைப் பிற நாடுகள் கூறுபோடும் நிலைமையை ஏற்படுத்தியது. ரஷ்யா, பிரான்சு, ஜெர்மனி

ஆகிய நாடுகள் ஜப்பானின் எழுச்சித் தூரக்கிழக்கு நாடுகளில் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்று எண்ணின. எனவே ஜப்பான் லியோடுங் தீபகற்பத்தை விட்டுவிடும்படி அந்நாடுகள் கட்டாயப்படுத்தின. அந்த இழப்பிற்கு சீனாவிடமிருந்து நஷ்ட ஈட்டுத் தொகை வாங்கித் தருவதாகக் கூறின. இவ்வாறு ஜப்பான் லியோடுங் தீபகற்பத்தை இழந்தது. வெற்றியின் மூலம் கிடைத்த அப்பகுதிகளை விட்டுக் கொடுப்பதை ஜப்பானால் சீரணிக்க முடியவில்லை. வெற்றிக்கனியைத் தட்டிப் பறித்துக் கொள்வதற்குக் காரணமாய் இருந்த ரஷ்யா மீது தன் பகைமையை வளர்த்துக் கொண்டது. எனவே அவ்விரு நாடுகளுக்குமிடையே மோதல் தவிர்க்க முடியாததாயிற்று.

**5. சலுகைப் போட்டி ஏற்படுதல்**

சீனாவின் வலிமைக் குன்றிய நிலையைப் பயன்படுத்திக் கொண்ட அயல்நாட்டவர்கள் முண்டியடித்துக் கொண்டு பல சலுகைகளைப் பெற முற்பட்டனர். அயல்நாட்டு முதலாளிகள் சீனாவைப் பல கூறுகளாக்கி குத்தகைக்கு எடுத்துக் கொண்டனர். அவர்கள் அங்கு பல செல்வாக்கு மண்டலங்களை ஏற்படுத்திக் கொண்டனர். அதன் விளைவாக இருப்புப் பாதைகள் போடப்பட்டன. சுரங்கங்கள் தோண்டப்பட்டன. ஆலைகள் ஏற்படுத்தப்பட்டன.

**6. சீனாவின் தொழில்கள் நசுக்கப்பட்டன.**

சீனாவின் துறைமுகங்களில் ஆலைகளையும், தொழிற்சாலைகளையும் ஏற்படுத்த ஜப்பான் உரிமை பெற்றது. சீனாவின் உள்நாட்டுத் தொழிற்சாலைகள் அயல்நாட்டுத் தொழிற்சாலைகளுடன் போட்டியிட முடியவில்லை. இதனால் உள்நாட்டுத் தொழில்கள் வீழ்ச்சியடைந்து பெருத்த நஷ்டம் அடைந்தன. அழிவுப் பாதையை நோக்கிச் சீனா வேகமாக அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தது.

**சீனாவின் தோல்விக்கான காரணங்கள்**

1. சீனாவின் படைகள் பயிற்சி பெற்றிருக்கவில்லை. அவர்கள் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை.
2. சீனா ஒன்றுப்பட்ட போர் முயற்சியினை மேற்கொள்ளவில்லை. தென் சீனப் பகுதிகள் வட சீனப்பகுதிகளுடன் ஒற்றுமையுடன் செயல்படவில்லை. உண்மையில் தென் சீனப் பகுதிகள் போதிய ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை.
3. சீனப் படையில் திறமையான தளபதிகள் இல்லை. ஜப்பானியரைச் சாதாரணமாக மதிப்பிட்டிருந்தனர்.
4. யாங்சி ஆற்றிற்கு தெற்கேயிருந்த மக்கள் இப்போரை லீஹீங் சாங்கின் தனிப்பட்ட போராகக் கருதினர். எனவே தேசிய உணர்வுடன் போரிடவில்லை.
5. ஜப்பானியர்கள் நல்ல பயிற்சிபெற்று சிறந்த படையைக் கொண்டிருந்தனர். இராணுவம், கடற்படைகள் யாவும் மேலைநாட்டுப் பாணியில் அமைக்கப்பட்டிருந்தன.
6. தன்னம்பிக்கையுடன் ஜப்பானியர்கள் போரிட்டனர். நாட்டுப்பற்றுடன் தங்கள் உயிரையும் பணயமாக வைத்துப் போரிட்டு சீனாவைத் தோற்கடித்தனர்.

## 2. மூவர் தலையீடு

ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய மூன்று நாடுகளும் சீன- ஜப்பானிய போரில் அதிக ஆர்வம் காட்டின. முதலாம் சீன-ஜப்பானியர் போரின் முடிவில் கையெழுத்தான ஷிமோனோசாகி உடன்படிக்கையின் அம்சங்களைப் பற்றி சீனாவின் லீ ஹங் சங்கும், ஜப்பானின் ஈடோ ஹீரோபும்பியும் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்த போதே இம்மூன்று நாடுகளும் தலையிட ஆரம்பித்தன. ஆசியாவில் சில இடங்களை ஜப்பான் பெற்றுக்கொண்டதால், இம்மூன்று நாடுகளும் பார்த்துக்கொண்டு வாளாவிருக்காது என்று ஜப்பானுக்கு

எச்சரிக்கை விடுத்தன. இவ்வாறு மினோசெனி உடன்படிக்கை ஏற்படுவதற்கு முன்பே ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் ஜப்பானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்க தயாராய் இருந்தன.

ஷீமோனோசெகி உடன்படிக்கையின் கையெழுத்தின் மை உலருவதற்கு முன்பே இம்மூன்று நாடுகளும் லியோடுங் தீபகற்பத்தை சீனாவிடம் கொடுத்துவிட வேண்டுமென்று ஜப்பானை நிர்பந்தப்படுத்தின. அதற்கு ரஷ்யா கீழ்கண்ட காரணங்களைக் கூறியது.

1. லியோடுங் தீபகற்பம் சீனாவின் தலைநகருக்கு அருகிலிருப்பதால் அது சீனாவின் ஆதிக்க உரிமைகளுக்கு ஆபத்து அளிக்கக் கூடியது.
2. கொரியாவின் சுதந்திரத்திற்கும் அது ஆபத்தை ஏற்படுத்தக்கூடியது.
3. மூன்றாவது காரணத்தை ரஷ்யா வெளிப்படையாகக் கூறவில்லை. ஆனால் அக்காரணம் தான் தலையாய காரணமாகும். மஞ்சூரியாவை தனது சுரண்டல் மண்டலமாக மாற்றியபின் அதற்குத் தெற்கே உள்ள லியோடுங் தீபகற்பத்தின் மீது ரஷ்யா ஆதிக்கம் செலுத்த ஆசைப்பட்டது இயல்பானதே. அத்தீபகற்பத்தின் தென்கோடியில் உள்ள போர்ட் ஆர்தர் துறைமுகம் ரஷ்யாவிற்குத் தேவைப்பட்டது தூரக் கிழக்கில் ''பனி உறையாத துறைமுகத்தை'' தேடித்திரிந்த ரஷ்யாவிற்குப் போர்ட் ஆர்தர் மேல் இயல்பாகவே ஆசை ஏற்பட்டது. இப்போது ஜப்பான் அதை எடுத்துக் கொண்டு விட்டதை ரஷ்யாவால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே தான் பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளைத் துணைக்கு அழைத்துக் கொண்டு ஜப்பானை மிரட்டியது.

ஜப்பானின் பிரதம அமைச்சர் ஈடோ முக்கியத்தலைவர்களுடன் மூவர் குறுக்கீட்டைக் குறித்து ஆலோசனை நடத்தினார். அவர் கீழ்கண்ட மூன்று வழிமுறைகளை வெளியிட்டார்.

1. மூன்று நாடுகளின் எச்சரிக்கையை உதாசினப்படுத்திவிட்டுப் போருக்கு ஆயத்தமாகுதல்.
2. சர்வதேச மாநாட்டைக் கூட்டி இச்சிக்கலுக்கு முடிவு காணுதல்.
3. பேசாமல் மூன்று நாடுகளின் விருப்படி லியோடுங் தீபகற்பத்தைச் சீனாவிடம் ஒப்படைத்துவிடுவது.

முதலாவது யோசனை ஜப்பான் செயல்படுத்த முடியாதது. ஏனெனில் இப்போதுதான் ஒரு போரை நடத்திவிட்டு களைத்துப் போய் இருந்தது. மறுபடியும் உடனே மற்றும் ஒரு போரில அதனால் ஈடுபட முடியாது. மேலும் மூன்று நாடுகளின் கூட்டுப்படைகளுடன் ஜப்பானால் மோத முடியாது. இரண்டாவது வழிமுறையும் ஜப்பானுக்கு உகந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் சர்வதேச மாநாடு கூட்டப்பட்டால் பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வராமலும், மேலும் பல பிரச்சனைகளை அது உருவாக்கும் என்று ஜப்பான் அனுபவ ரீதியில் கண்டிருந்தது. 1878 ல் கூட்டப்பட்ட பெர்லின் மாநாடு சன்ஸ்டெபரினோ உடன்படிக்கையை மறுபரிசீலனை செய்யும்போது நடந்ததை ஜப்பான் மறுக்கவில்லை. எனவே மூன்று நாடுகளின் விருப்பப்படி லியோடுங் தீபகற்பத்தைச் சீனாவுக்குக் கொடுப்பதை விட வேறு வழி ஜப்பானுக்குத் தோன்றவில்லை. எனவே லியோடுங் தீபகற்பத்தைச் சீனாவிற்கு கொடுத்துவிட்டு அதற்கு ஈடாக மூன்றுக் கோடி சீன வெள்ளி நாணயத்தை ஜப்பான் இழப்பீட்டுத் தொகையாகப் பெற்றுக்கொண்டது.

சீன ஜப்பானியப் போரில் ஜப்பானுக்குக் கிடைத்த வெற்றிக்கனியை அது சீக்கிரத்திலேயே இழக்க நேரிட்டது. இது அதற்குப் பெருத்த அவமானமாகப்பட்டது. அந்த அவமானத்தைத் துடைக்க தக்க தருணத்தைத் தேடிய ஜப்பான் ரஷ்யாமீது கடுமையானக் கசப்பு உணர்வை வளர்ந்துக் கொண்டது. எனவே ஜப்பானும் ரஷ்யாவும் மோதக்கூடிய காலம் சீக்கிரமே வரும் என்று ஜப்பான் முடிவு செய்தது. எனவே ஜப்பான் தன்னுடைய இராணுவம் மற்றும் கடற்படையை வலுப்படுத்த ஆரம்பித்தது. ரஷ்யாவுடன் போருக்கு ஆயத்தப்பட்டது. மூவர் குறுக்கீட்டால் ஜப்பான் நல்லப் பாடத்தைக் கற்றுக் கொண்டது. தன்னுடைய வெளி உறவுக் கொள்கையை அது மாற்றி அமைத்துக் கொண்டது. தனக்குப் பிற நாடுகளின் ஆதரவுத் தேவை என்பதை அது உணர்ந்துக்

கொண்டது. எனவே அது இங்கிலாந்துடன் நட்பை ஏற்படுத்திக் கொண்டது. வெளிநாடுகளின் குறுக்கீடு இன்றி பிற்காலத்தில் வெற்றிக்கனியை தக்கவைத்துக் கொள்ள இந்த நட்புறவு உதவமென்று ஜப்பான் கருதியது. இது பிற்காலத்தில் ஜப்பானை ஒரு ஏகாதிபத்திய நாடாக மாற்றியது.

**சீனாவில் சலுகைப் போட்டிகள்**

1894-95 ஆம் ஆண்டுகளில ஏற்பட்ட சீன ஜப்பானியப் போரில் சீனாவின் தோல்வி அதன் வலுக்குன்றிய நிலையைப் பறைசாற்றியது. சீனாவின் இராணுவத்திறமையையும், அரசாங்கத்தின் ஒழுங்கற்ற நிர்வாகத்திறனையும் மேலை நாட்டவர்கள் உணரந்தனர. ரஷ்யா, பிரான்சு, ஜெர்மனி, பிரிட்டன், ஜப்பான் ஆகிய வல்லரசு நாடுகள் அகப்பட்டதைச் சுருட்டிக் கொள்ளலாமென ஆக்கிரமிப்பில் ஈடுபட்டன. அவைகள் சீனாவில் தங்களுக்கென செல்வாக்கு மண்டலங்களை ஏற்படுத்திக் கொண்டன. ஏற்கனவே நான்கிங், போக், டின்ஸ்கின், பீகிங் ஆகிய உடன்படிக்கைகள் சீனாவின் கதவுகளை வெளிநாட்டவர்க்குத் திறந்து விட்டிருந்தன. வெளிநாட்டவர் சீனாவில் குடியேறவும், வியாபாரம் செய்யவும், மதம் பரப்பும் செயல்களில் ஈடுபடவும் உரிமைப் பெற்றிருந்தனர். சீன-ஜப்பானியப் போருக்குப் பின் இப்படி சலுகைகள் பெற வெளிநாட்டவரிடையே போட்டி ஏற்பட்டது. சீனாவில் வெளிநாட்டவரின் செல்வாக்கு மண்டலங்கள் உருவாயின.

**செல்வாக்கு மண்டலங்கள் உருவான விதம்**

வெளிநாடுகள் சீனாவில் கீழக்கண்ட வழிகளில் செல்வாக்கு மண்டலங்களைப் பெற்றன.

1. முதலில் நிலங்களைக் குத்தகைக்குப் பெற்றன.
2. பின் அந்தக் குத்தகைப் பகுதியில் சில பொருளாதாரச் சலுகைகளைப் பெற்றன.
3. மூன்றாவது கட்டமாக அப்பகுதியில இருப்புப் பாதைகள் அமைத்துக் கொள்ளவும், ஏற்கனவே இருக்கும் இருப்புப் பாதைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் உரிமைப் பெற்றன.
4. பின் அங்குள்ளக் கனிமச் செல்வங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி பெற்றன. மேலும் இவ்வாறு ஒரு பகுதியில் ஒரு நாடு சலுகைகள் பெற்றால் அங்கு வேறு எந்த நாடும் சலுகைகள் பெறுவதற்குச் சீனா அனுமதிக்கக் கூடாது என்ற உறுதியையும் பெற்றுக் கொண்டது.

ஆரம்பத்தில் குத்தகைத்தாரர்களாகக் குடியேறிய அயல் நாட்டவர்கள் அப்பகுதிகளைத் தங்கள் குடியேற்ற நாடாகவேக் கருதினர். அவரவர்கள் பகுதிகளில் தங்கள் செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொண்டனர். பொருளாதாரச் சுரண்டலை ஆரம்பித்தனர். இம்முறையில் சீனாவில் வெளிநாட்டவர்கள் போட்டி போட்டுக் கொண்டு சலுகைகள் பெற்று பல செல்வாக்கு மண்டலங்களை உருவாக்கிக் கொண்டனர்.

**பிரான்சும் சீனாவும்**

ஷிமோனோசெகி உடன்படிக்கைக்குப் பின் ஏற்கனவே காலியாயிருந்தக் கருவூலம் காரணமாகச் சீனாவின் பொருளாதாரச் சிக்கல் விசுவரூபம் எடுத்தது. எனவே வெளிநாட்டுக் கடன்களை எழுப்பி அதனைக் கொண்டு தன் கடன்களை வழுங்கியது. ரஷ்யா வழுங்கிய தொகையின் பற்றாக்குறைக் காரணமாகச் சீனா பிரான்சின் உதவியை நாடியது. அச்சமயம் சீனாவின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்துக் கடன்களை வழுங்க பிரான்சு சம்மதித்தது. அதன்பின் சீனாவில் முதன் முறையாகப் பிரான்சு சலுகைப் போட்டியினை ஆரம்பித்தது.

1895 ஆம் ஆண்டிலேயே பிரான்சும், சீனாவும் ஒரு ஒப்பந்தம் செய்துக் கொண்டனர். அதன்படி 'ஹெய்னான் தீவை' வேறு எந்த நாட்டிற்கும் விடக்கூடாது என்ற உறுதியை அது பெற்றுக் கொண்டது. சீனாவிற்கு வரும் தன் சார்பு நாட்டுப் பொருட்களுக்கு வரிச்சலுகைகள் வேண்டும் என்று கேட்டு வாங்கிக் கொண்டது. மேலும் யுவான், குவாங்சி குவாங்கும் மாநிலங்களிலுள்ள கனிம வளங்களைப் பயன்படுத்திக் கொள்ள உரிமையையும் பெற்றுக் கொண்டது. அன்னாம் இருப்புப் பாதையைச் சீனாவின் பகுதி வரையில் நீட்டிக்கவும் அது உரிமை பெற்றது.

**1898 ஆம் ஆண்டு பிரான்சு - சீன உடன்படிக்கை**

தூரக் கிழக்கில் தலையிடுவதற்கான வழியொன்றினை அமைத்துக் கொண்ட பிரான்சு, சீனாவுடனான சலுகைப் போட்டியில் தனது பங்கினைப் பெரும் பொருட்டு, 1898 ல் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டது. அதன்படி பிரான்சு கீழ்கண்ட சலுகைகளைப் பெற்றது.

1. பிரான்சின் பகுதியான டோங்கிங்கின் எல்லைகள், பிரான்சுக்கு ஆதரவாக மாற்றியமைக்கப்பட்டன.
2. டோங்கிங்கிலிருந்து யூனான் வரை இருப்புப் பாதை அமைக்கப் பிரான்சு அனைத்து உதவிகளையும் செய்வதாகச் சீனா வாக்களித்தது.
3. தென் சீனப்பகுதிகளான யூனான், ஹீவாங்ஷி, ஹீவாங்டுங் ஆகிய பகுதிகளிலிருந்து நிலக்கரிச் சுரங்கங்களில் பிரான்சின் ஆதிக்கம் ஒப்புக் கொள்ளப்பட்டது.
4. வேறு எந்த அயல்நாட்டிற்கும் ஹவாய் தீவை குத்தகைக்கு விடுவதில்லை என்று சீனா ஒப்புக்கொண்டது.
5. பிரான்சின் மேலாண்மைப் பகுதியில் பிறரது தலையீடுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளவும் சீனா சம்மதித்தது.
6. கியாசௌவை 99 ஆண்டுகளுக்கு குத்தகையாகப் பிரான்சு பெற்றுக் கொண்டது.
7, சீனாவில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட அஞ்சல்துறையில் பிரான்சின் ஆலோசகர்களை அமர்த்திக் கொள்ளவும், சீனா இசைந்தது.

இவ்வாறு சீனாவில சலுகைப் போட்டி சிக்கலை துவக்கி வைத்த பிரான்சு, ஏராளமான சலுகைகளுடன் சீனாவின் ஆதரவினையும் பெற்றுத் தூரக்கிழக்கில் வலிமை பெறத் தலைப்பட்டது.

**ரஷ்யாவும் சீனாவும்**

சீனாவில் பிரான்சு பெற்றச் செல்வாக்கு, சலுகைகள் ஆகியன சீனாவின் அண்டை நாடான ரஷ்யாவையும் இப்போட்டியில் ஈடுபடச் செய்தது. 1689 – ஆம் ஆண்டிலேயே முதன் முதலாக ரஷ்யா சீனாவுடன் மேற்கொண்ட 'நெர்சின்ஸ்க் உடன்படிக்கை'க்குப் பின் படிப்படியாகப் பல உடன்படிக்கைகளைச் செய்து கொண்டது. படிப்படியாகச் சீனாவின் எல்லையோரப் பகுதிகளைக் கவர ஆரம்பித்த ரஷ்யா, 1881 க்குள்ளாகத் தன்னுடைய ஆதிக்கத்தை சீனாவில் வலுப்படுத்திக் கொண்டது. அதன் பின் 1894 ல் ஏற்பட்ட ஜப்பானியப் போருக்குப் பின் சீனாவில் ஜப்பானின் ஆதிக்கம் பெருகுவதைக் கண்டபோது தனக்கும் சீனா சலுகைகளைத் தர வேண்டுமென சீனாவைக் கட்டாயப்படுத்தலாயிற்று. சுருங்கக்கூறினால் 1895 முதல் 1902 வரை சீனாவில் ரஷ்ய ஆதிக்கமே மேலோங்கியிருந்தது.

போருக்குப் பின் ரஷ்யாவும், சீனாவும் நல்லதோர் நட்பினை ஏற்படுத்திக் கொண்டன. மூவர் தலையீட்டின் மூலம் ஜப்பானின் ஆதிக்கம் மஞ்சூரியாவில் மலர முடியாமல் ரஷ்யா தடுத்து நிறுத்தியது. அவ்வாறு ரஷ்யா தலையிடாமல் இருந்திருந்தால் ஜப்பான் லியோடுங் தீபகற்பப் பகுதியைப் பெற்றிருக்கும்.பீகிங்கிற்கு அருகில் ஜப்பானின் மஞ்சூரிய அரசு ஏற்பட்டிருக்கும். இந்த ஒரு நல்ல செய்கைக்குச் சீனா, ரஷ்யாவிற்கு நன்றியுடன் தன் நல்லாதரவினைக் கொடுத்து வந்தது. ஜப்பானிய ஆக்கிரமிப்பு மேலும் சீனாவில் ஏற்படாமல் தடுக்கவும் ரஷ்யா உறுதி அளித்தது. இவ்வாறு ரஷ்யாவும், சீனாவும் மிகவும் நெருங்கி வந்தன. 1896 ல் ஓர் உடன்படிக்கை செய்துக்கொண்டன.

**லீ-லிபோனோவ் உடன்படிக்கை 1896**

ரஷ்யா தான் சீனாவின் பாதுகாவலன் என்றும், நண்பன் என்றும் சொல்லிக் கொண்டு தன்நிலையை மேலும் வலுப்படுத்தியது. ஏனெனில் மற்ற நாடுகளின் செல்வாக்கு சீனாவில் குறைந்திருந்த நேரத்தில

ரஷ்யாவின் செல்வாக்கே மிகுதியாய் இருந்தது. இரண்டாம் நிகோலாஸ் பட்டாபிஷேக விழாவிற்கு புனித பீட்டர்ஸ்பர்க் நகருக்கு வருகை தந்திருந்த சீனத் தூதுவர் ஹங் சங்குடன் ரஷ்யா ஒரு உடன்படிக்கை செய்து கொண்டது அதன்படி

1. ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிராக ரஷ்யாவும் சீனாவும் தமக்குள் உதவிக் கொள்ள வேண்டும்.
2. போர்க்களங்களில் சீனாவின் துறைமுகங்களை ரஷ்யா உபயோகித்துக் கொள்ளலாம்
3. வடக்கு மஞ்சூரியா வழியாக நேரிடையாக வினாடிவாஸ்டாவுக்கு டிரான்ஸ்-சைபீரியன் இருப்புப்பாதை கட்டுவதற்கு ரஷ்யாவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
4. ரஷ்யச்-சீன வங்கி ஏற்படுத்திக் கொள்வதற்கு ரஷ்யாவுக்குச் சீனா அனுமதி வழங்கியது.

**ரஷ்யச் சீன வங்கியை நிறுவுதல்**

லீ-லிபோனாவ் உடன்படிக்கையின் படி ரஷ்யச்- சீன வங்கி ஒன்று திறக்கப்பட்டது. டிரான்ஸ் சைபீரிய இருப்புப்பாதையின் மஞ்சூரியப் பிரிவைக் கட்டுவதற்கு அந்த வங்கி நிதி உதவி அளித்தது. அவ்வங்கிக்கு ஏராளமான அதிகாரம் கொடுக்கப்பட்டது. சீனப் பேரரசில் வரிவசூல் செய்வது, நாணயங்கள் வெளியிடுவது, இருப்புப்பாதைகளைக் கட்டுவது, தந்தி நிலையங்களை நிறுவுதல் போன்ற அதிகாரங்களைப் பெற்றிருந்தது. இது ரஷ்யா சீனாவில் ஊடுருவுவதற்கு ஏற்ற வாய்ப்பினை நல்கியது.

ரஷ்யச்-சீன வங்கி சீனாவுக்கு நிதி உதவி செய்ததோடு, மஞ்சூரியாவில் இருப்புப்பாதை கட்டுவதற்குப் பண உதவி செய்தது. இருப்புப்பாதைகளை அமைக்க ஒரு கம்பெனி நிறுவப்பட்டது. எண்பது ஆண்டு காலத்திற்கு ரஷ்யா இருப்புப்பாதைகள் கட்டுவதற்கு உரிமை பெற்றது. இவ்வாறு வினாடிவாஸ்டாக் வரையில் நேரிடையாகச் சென்ற இருப்புப் பாதை, வடக்கு மஞ்சூரியாவில் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. இருப்புப் பாதையின் வழியெங்கிலும் குடியானவர்கள் குடியேறினர். மேலும் வியாபாரம் வளர வழி ஏற்பட்டது ரஷ்யாவின் வெவ்வேறு பகுதிகளை ஒருங்கிணைக்கவும் இந்த இருப்புப்பாதை பெரிதும் உறுதுணையாய் இருந்தது.

**ஆர்தர் துறைமுகமும், டெய்ரனும் குத்தகைக்கு விடப்படுதல்**

ரஷ்யா தான் பெற்ற சலுகைகளுடன் திருப்பதி அடையவில்லை. பிற நாடுகள் சீனாவில் சிறப்பு உரிமைகள் பெற்றதால் அவைகளைப் போல, தானும் மேலும் பல உரிமைகளைப் பெறவேண்டுமென்று ரஷ்யா விரும்பியது. எனவே அது ஆர்தர் துறைமுகம், டெய்ரன் ஆகிய இடங்களைக் குத்தகைக்குப் பெற்றது. குத்தகையின் காலம் 25 ஆண்டுகளாகும். அத்துறைமுகங்கள் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் போர்க்கப்பல்களுக்கு மட்டும் திறந்து விடப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டது. கியாச்செள என்ற கடற்படைத்தளம் அமைந்த இடத்தையும் பயன்படுத்திக் கொள்ள ரஷ்யாவுக்கு உரிமை கொடுக்கப்பட்டது. மேலும், ஆர்தர் துறைமுகத்திற்கு ஒரு புதிய இருப்புப் பாதை கட்டிக்கொள்ள நிதி உதவி அளிக்க உரிமை பெற்றுக் கொண்டது. இவைகளைத் தவிர ரஷ்யா தெற்கு மஞ்சூரியாவிலுள்ள கனிமவளங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதிப்பெற்றது. இவ்வாறு படிப்படியாக ரஷ்யாவின் செல்வாக்குப் பெருகி லியோடுங் தீபகற்பம் முழுவதும் ரஷ்யாவின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

**ஜெர்மனியும், சீனாவும்**

பிரான்சு, ரஷ்யா ஆகியவற்றின் வலிமை சீனாவில் பெருகி வளர்ந்தமையால், ஜெர்மனியின் மன்னர் இரண்டாம் வில்லியம் சீனாவில் தன்னுடைய பங்கினைப் பெற பேரார்வம் காட்டினார். மேலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஜெர்மனி பொருளாதார, வாணிபத் துறையில் நல்ல முன்னேற்றம் கண்டதால் அது தனது விரிவாக்கும் கொள்கையில் ஈடுபட்டுச் சீனாவில் சலுகைகளைப் பெற விரும்பியது. மூவர் தலையீட்டில்

பங்கு பெற்ற ரஷ்யாவும், பிரான்சும், சீனாவிடம பல சலுகைகளைப் பெற்றுக் கொண்டன. ஜெர்மனி மட்டுமே தனித்து விடப்பட்டது. எனவே அது தன் பங்கிற்கு சீனாவிடமிருந்து பல சலுகைகளைப் பெற தீர்மானித்தது.

சலுகைப் போட்டியில் தாமதமாகப் பங்கேற்க வந்த ஜெர்மனி, ஷான்டுங் மாநிலத்திலிருந்த கயாச்சௌ வளைகுடாப் பகுதியின் பொருளாதார மேம்பாட்டைக் கண்டு தமக்கு அப்பகுதியில் சலுகைகள் தர வேண்டுமென்று வற்புறுத்தியது. 1895 ல் நிலக்கரி மாற்றிக் கொள்ளவும், தமது படைகளை வைத்துக்கொள்ளவும் சீனாவில் ஜெர்மனிக்கு ஒரு துறைமுகம் வழங்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினர். சீனாவில் சலுகைகளைப் பெறுவதற்கு ஜெர்மனிக்குப் பொன்னான காரணம் ஒன்று கிடைத்தது. 1897 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் இரு ஜெர்மனிய சமய பரப்பாளர்கள் ஷாண்டுங் மாநிலத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டனர். அந்நிகழ்ச்சியின் காரணமாக ஜெர்மானிய கடற்படை ஒன்று காயச்சௌ துறைமுகத்திற்கு வந்துச் சேர்ந்தது. படைகளை விலக்கிக்கொள்ள ஜெர்மனி சில நிபந்தனைகளை விதித்தது. வேறு வழியின்றி, சீனா 1898 ஆம் ஆண்டு மார்ச் 6-ஆம் நாள் ஜெர்மனியுடன் ஓர் உடன்படிக்கை செய்துக் கொண்டது அதன்படி.

1. காயச்சௌவையும் அதனைச் சுற்றி 50 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளும், அமைந்திருந்த பகுதிகளை ஜெர்மனி 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குப் பெற்றது.
2. அக்குத்தகைப் பகுதிகளைத் தமது விருப்பம்போல் பயன்படுத்திக்கொள்ள ஜெர்மனிக்கு அனுமதி வழங்கப்பட்டது.
3. அப்பகுதிகளை வேறு எந்த நாட்டவர்க்கும் மறுகுத்தகை விடக்கூடாதென ஜெர்மனியிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.
4. ஷாண்டுங் மாநிலத்தில் இருப்புப் பாதையொன்று அமைக்கப்பட்டு அது சீன - ஜெர்மனியக் கட்டுப்பாட்டின் கீழ் இயக்குமாறு செய்யப்பட்டது.
5. அவ்விருப்புப் பாதையின் இரு மருங்கிலும் 10 மைல் வரையுள்ள பகுதிகளில் நிலக்கரிச் சுரங்களை அமைத்துக் கொள்ள ஜெர்மனி அனுமதி பெற்றது.
6. ஷாண்டுங் மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு வேண்டிய உதவியை ஜெர்மனி சீனாவுக்கு அளிக்க வேண்டுமெனவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இவ்வாறு ஜெர்மனியின் ஆதிக்கம் சீனாவில் பெருகி வளர்ந்ததால் ஜெர்மனியின் நிலை கிழக்காசியாவில் உயரலாயிற்று. அதே நேரத்தில் சீனாவின் துன்பமும், துயரமும் பெருகி வளர்ந்தன.

**பிரிட்டனும் சீனாவும்**

வெளிநாட்டவர் சீனாவுக்குள் நுழைவதற்கு அதன் கதவுகளைத் திறந்து விட்டது பிரிட்டன் தான், அது ஆரம்பத்தில் சீனாவில் எந்த ஒரு நிலப்பகுதியையும் பெற முடியவில்லை. அதற்கு முன்பு இருந்தது போலவே இருக்க வேண்டும் என்பதில அக்கரைக் காட்டியது. ஆனால் அயல்நாட்டவர்கள் சீனாவில் பல சலுகைகளைப் பெற்றதால் சக்திச் சமநிலை பாதிப்படைந்ததாகப் பிரிட்டன் எண்ணியது. குறிப்பாக சீனாவில் ரஷ்யாவின் செல்வாக்கு பிரிட்டனுக்கு மனக்கலக்கத்தைக் கொடுத்தது. எனவே அது 1898 ல் சீனாவை வற்புறுத்தி ஓர் உடன்படிக்கை செய்துக் கொண்டது.

**1898 ஆம் ஆண்டு சீன - பிரிட்டிஷ் உடன்படிக்கை**

1. ஆர்தர் துறைமுகம் எவ்வளவு காலத்திற்கு ரஷ்யாவிற்கு குத்தகைக்கு விடப்பட்டதோ, அதைப்போலவே ஹெய்வை துறைமுகத்தை இங்கிலாந்திற்கு குத்தகையாக விட சீனா ஒப்புக் கொண்டது.

2. யாங்க்சி நதியின் எல்லைப்புற மாநிலங்களிலிருந்து எவரையும் விரோதித்துக் கொள்வதில்லை என்றும் அவர்களின் உரிமையை மாற்றுவது இல்லை என்றும் சீனா ஒப்புக் கொண்டது.

3. சீனாவில் பிரிட்டனின் வாணிபம் உயர்நிலையில் இருக்கும் வரை அதை நன்கு பராமரிப்பதற்கு "கடல் வாணிப சுங்கவரிப் பொது ஆய்வாளர்" என்ற பதவியை ஆங்கிலேயர் வகிக்கவும் அது ஒப்புக்கொண்டது.

4. ஹாங்காங்கிற்கு எதிரேயுள்ள பகுதியின் குத்தகை உரிமையினை பிரிட்டன் பெற்றது.

5. யாங்க்சி பள்ளத்தாக்கு, ஷான்சி மாநிலம் ஆகிய இடங்களில் இருப்புப் பாதைகளைக் கட்ட பிரிட்டன் உரிமைப்பெற்றது.

**இத்தாலியும் சீனாவும்**

1899 ஆம் ஆண்டு பிப்ரவரியில், இத்தாலியும் தன்னைச் சீனப் போட்டியில் ஈடுபடுத்திக் கொண்டு சான்மன் வளைகுடாப் பகுதியிலிருந்த ஸெக்கியாங் என்ற துறைமுகத்தைத் தன்னுடைய கடற்படைகளுக்கே விட்டுக் கொடுத்துவிட வேண்டுமென்றுக் கட்டாயப்படுத்தியது. ஆனால சீனா சிறிது தைரியத்துடன் செயல்பட்டு இத்தாலியின் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டது.

**அமெரிக்காவும் சீனாவும்**

ஆரம்பத்தில் சீனாவின் மீது கவனம் செலுத்தாத அமெரிக்கா, 1898 க்குப் பின்னரே சீனாவின் மீது ஆழ்ந்த அக்கறைக் காட்டத் தலைப்பட்டது. சீனப்பகுதிகள் பலவும் ஐரோப்பிய நாட்டவரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தபடியால் தனது நிலையைத் தக்க வைத்துக்கொள்ள அமெரிக்கா வேறு பல முறைகளைக் கையாள வேண்டியதாயிற்று. அதன் விளைவாகத் தோன்றியதுதான் அமெரிக்காவின் "திறந்தவெளிக் கோட்பாடு" அல்லது "காசில்லா நுழைவுச் சலுகைக் கோட்பாடு" ஆகும். பிரான்சு, ஜெர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகள் சீனாவில் வரிநிலைக் கொள்கையைப் பின்பற்றிய போது தம்முடைய பொருளாதார மேலாண்மையை நிலைநாட்டிக் கொள்ள பிரிட்டனும், அமெரிக்காவும் இக்கோட்பாட்டிற்கு வழிவகுத்தன.

## 4. திறந்தவாயில் கொள்கை

வெளிநாட்டவர்களோடு தொடர்பு இல்லாமல் சீனா தனித்து இருக்க விரும்பியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில சீனா தன்னுடைய கதவுகளை இறுக்கி மூடிக்கொண்டு அயல்நாட்டவர்களின் தொடர்பிலிருந்து விடுபட்டிருந்தது. ஆனால் அதே நூற்றாண்டின் முடிவில் சீனாவின் விருப்பத்திற்கு மாறாக வெளிநாட்டவர்கள் அங்கு புகலாயினர். அவர்கள் அங்கு தங்களுக்குப் பல செல்வாக்கு மண்டலங்களை உருவாக்கினர். அவர்கள் சீனாவின் கதவுகளை மற்றவர்களுக்கு மூடினர். இச்சூழ்நிலையில் அமெரிக்கா– சீன விவகாரங்களில் தலையிட ஆரம்பித்தது. அது அவரவர்களின் செல்வாக்கு மண்டலங்களிலும், குத்தகைக்குப் பகுதிகளிலும் கதவுகளை பிறருக்கு திறக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

**பங்கீட்டிலிருந்து சீனா காப்பற்றப்பட்ட காரணங்கள்**

ஹிமோனோசெகி உடன்படிக்கை 1895 ல் ஏற்பட்டது. அதன் பிறகு ஐரோப்பிய வல்லரசுகள் போட்டிப் போட்டுக்கொண்டு சீனாவில் சலுகைகளைப் பெற முற்பட்டன. சீனா பல சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு துண்டும் ஒரு வல்லரசின் கீழ் இருந்தது. ஆயினும் ஐரோப்பிய வல்லரசுகள் சீனாவை முழுமையாகப் பங்கு போட முடியவில்லை. அதற்கு கீழ்க்கண்ட சூழ்நிலைகள் காரணமாய் அமைந்தன.

1. ஐரோப்பிய வல்லரசுகளிடையே ஏற்பட்ட போட்டி சீனாவைக் காப்பாற்றியது. அவைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து செயல்பட்டு சீனாவை பங்கு போட்டுக் கொள்ள முடியவில்லை.

2. அயல்நாட்டவர்கள் சீனாவில் பெற்ற ஏராளமான சலுகைகளைக் கண்டு வெறுப்படைந்த சீனர்கள் அவர்களுக்கு எதிரான உணர்வுப் பெற்று எழுந்து பாக்சர் கலகத்தை உருவாக்கினர். மேலும் திறந்த வாயில் கொள்கை உருவாக்குவதற்குரிய சூழ்நிலைகளை ஆராய்வது இங்கு அவசியப்படுகிறது.

**அமெரிக்காவும் சீனாவும்**

மற்ற ஐரோப்பிய நாடுகள் சீனாவில் தங்கள் செல்வாக்கு மண்டலங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்த போது அமெரிக்கா வேறு காரியங்களில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தது. ஸ்பெயின் நாட்டுடன் அது போரில் ஈடுபட்டிருந்தது. தன் உள்நாட்டுப் பிரச்சனைகளிலும் அது அதிக கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை இருந்தது. 1898 ஆம் ஆண்டு ஸ்பெயினுடனான போர் முடிவுற்றதும், அது சைனாவில் தன் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தது. மேலும் 1865 முதல் 1898 வரையிலான ஆண்டுகளில அமெரிக்காவில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு அது தொழில் வளமான நாடாக மாறியது. தங்கள் நாட்டின் பொருள் உற்பத்திக்கு அயல்நாட்டில் சந்தையைப் பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்தப் பொருளாதார நோக்குடன் அது தூரக் கிழக்கு நாடுகளில் கவனம் செலுத்த முற்பட்டது. முதலில பிலிப்பைன்ஸ் நாட்டில் தனது செல்வாக்கை ஏற்படுத்திக் கொண்டது. அது சீனாவுக்கு அருகில் இருந்தபடியால் அங்கிருந்து கொண்டு சீனாவில் தலையிட நல்ல வாய்ப்பும் வசதியும் ஏற்பட்டது. சீனாவின் பகுதிகளைப் பெறுவதில் அமெரிக்கா ஆர்வம் காட்டவில்லை. ஆனால் அதே நேரத்தில் தன்னுடைய வளர்ந்து வரும் வாணிபத்தை பாதுகாப்பதில் அது கண்ணும் கருத்துமாய் இருந்தது.

**ஜான் ஹேயின் திறந்த வாயில் கொள்கை**

மன்றோ கோட்பாட்டின் போது திறந்தவாயில் கொள்கையும் அமெரிக்காவில் அயல்நாட்டு விவகார அலுவலகத்தில் உருவாக்கப்பட்டது. சீனாவில் ரஷ்ய செல்வாக்கு வளர்வதை இங்கிலாந்து வெறுப்புடன் நோக்கியது. அங்கு ஜெர்மனி, பிரான்சு, ரஷ்யா ஒன்று சேர்ந்து செல்வாக்கு பெறுவதை இங்கிலாந்து வெறுப்புடன் நோக்கியது. எனவே இங்கிலாந்து, சீனாவில் அந்நாடுகளின் வளர்ச்சியைத் தடுக்க அமெரிக்காவின் உதவியை நாடியது. அமெரிக்காவும், இங்கிலாந்தும் சேர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று அது விரும்பியது. எனவே அமெரிக்க வெளி விவகாரத் துறையின் செயலர் ஜான் ஹே என்பவர் ‘திறந்த வாயில் கொள்கைளை’ வகுத்தார். அவர் ஜரோப்பிய நாட்டினரின் செல்வாக்கு மண்டலங்கள் அந்நாடுகளின் காலணிகளாக உருவாகக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்.

ஜான் ஹே, 1899 ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் நாள் இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகளின் தூதர்களுக்கு திறந்த வாயில் கொள்கையின் முக்கிய கோட்பாடுகள் அடங்கிய அறிக்கையை அனுப்பி வைத்தார்.

**திறந்த வாயில் கொள்கையின் முக்கிய அம்சங்கள்**

1. சீனாவில் தன் செல்வாக்குப் பகுதியினைப் பெற்ற ஒரு வல்லரசு, உடன்படிக்கை துறைமுகங்களில் தலையிடவில்லை என உறுதி அளிக்க வேண்டும். அது தனிப்பட்ட ஆர்வம், எதையும் காட்டக்கூடாது.
2. செல்வாக்கு மண்டலங்களைப் பெற்ற நாடுகளுக்கிடையே துறைமுகக் கட்டணங்களிலும், இருப்புப் பாதைகளின் கட்டணங்களிலும் எவ்வித வேறுபாடும் இருத்தல் கூடாது.
3. பொருட்களின் மீது விதிக்கப்பட்ட வரிகளை வசூல் செய்யும் உரிமையை சீன அரசாங்கமே செய்தல் வேண்டும்.
4. ஐரோப்பிய நாடுகள் சீனாவில் ஏற்கனவே பெற்றிருந்த சலுகைகளை மதித்தல் வேண்டும். உண்மையில் திறந்த வாயில் கொள்கை சீனாவின் திறந்த வெளிச் சந்தைக்கு உத்தரவாதம் அளித்தது. எல்லா நாடுகளும் ஒரே சீரான வரிக்கொள்கையைப் பின்பற்ற வழி ஏற்படுத்தியது. சீனாவின்

பகுதிகளைப் பாதுகாக்கும் காவலனாக அக்கோட்பாடு அமைந்திருந்தது என்று அமெரிக்கா கருத்து தெரிவித்தது.

**திறந்த வாயில் கொள்கையின் பிரதிபலிப்பு**

வல்லரசு நாடுகள் ஹேயின் திறந்த வாயில் கொள்கையில் அதிக ஆர்வம் காட்டவில்லை. குறிப்பாக ரஷ்யா இக்கோட்பாட்டிற்கு குழு ஆதரவை நல்கவில்லை. ஆனால் இங்கிலாந்தும் அமெரிக்காவும், இக்கோட்பாட்டை செயல்படுத்துவதில் மிகுந்த ஆர்வமாய் இருந்தன. தங்களுடைய மூலதனத்தை முதலீடு செய்வதற்கும், தங்களுடைய பொருள்களுக்கு சீனா விற்பனை செய்ய நல்ல சந்தையாகவும் இருந்ததால் அதனைப் பாதுகாக்க ஆர்வமுடன் செயல்பட்டன. அவ்விரு நாடுகளும் சீனாவின் பகுதிகளைப் பெறுவதில் ஆர்வம் காட்டவில்லை. அவைகள் சீனப்பேரரசுடன் வாணிபம் செய்வதில் மட்டுமே கண்ணும் கருத்துமாய் இருந்தனர். பிறநாடுகள் ஒன்று சேர்ந்து கூட்டுக்கொள்கையின் மூலம் சீனாவை சுரண்ட இக்கோட்பாடு பயன்பட்டதால் அதை அந்நாடுகள் ஒத்துக்கொண்டன. மேலும் இக்கோட்பாடு எல்லா நாடுகளுக்கும் வியாபாரச் சலுகைகளில் சம வாய்ப்புக் கொடுத்ததால் அவைகள் இக்கொள்கையை ஏற்றுக் கொள்ள முன்வந்தன. சுருங்கக் கூறின் எல்லைக்குட்பட்ட செல்வாக்கிற்குப் பதிலாக கூட்டுக் கொள்கையின் மூலம் சீனாவைச் சுரண்டுவதை இது உறுதிபடுத்தியது.

**திறந்த வாயில் கொள்கையின் விளைவுகள்**

1. இக்கோட்பாட்டை வல்லரசுகள் ஏற்றுக் கொண்டதால் சீனாவைப் பங்கீடு செய்வது தற்காலிகமாக தடுக்கப்பட்டது.
2. சீனாவின் ஐக்கியம் பாதுகாக்கப்பட்டது.
3. ஐரோப்பிய நாடுகளின் ஆக்கிரமிப்புத் திட்டங்கள் தடுக்கப்பட்டன.
4. அமெரிக்கா சீனாவின் மேல் அதிக ஆர்வம் காட்ட வழி வகுத்தது.
5. சீனர்களிடையே அயல்நாட்டு தாக்குதல்களை சமாளிக்க தன்னம்பிக்கையை ஏற்படுத்தியது.

## 5 நூறு நாட்கள் சீர்திருத்தங்கள்

1840 ஆம் ஆண்டு முதல் சீனாவில் தொடங்கிய அயல் நாட்டவரின் ஆதிக்கம், பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி வருடங்களில் மிக அதிகமாயிற்று. சீனாவில் ஐரோப்பிய வல்லரசுகள் செல்வாக்கு மண்டலங்களை உருவாக்கிக் கொண்டு சீனாவைச் சுரண்ட ஆரம்பித்தனர். அண்டிப் பிழைக்க வந்த வெளிநாட்டவர் ஆனந்த வாழ்வு வாழத் தலைபட்டனர். மண்ணின் மைந்தர்களாகிய சீனர்கள் அவர்களின் முன்னே கைகட்டி வாய்பொத்தி வாழ வேண்டியதாயிற்று. சீனர்கள் சோம்பேறியினர். இச்சூழ்நிலையில் சீனாவைச் சீர்திருத்தி அதை முன்னேற்றப்பாதையில் நடத்துவதே சிறந்தது என்று சீர்திருத்தவாதிகள் எண்ணினர். அவர்கள் சீனாவில சீர்திருத்த இயக்கத்தைத தோற்றுவித்தனர்.

சீர்திருத்த இயக்கங்களில் நூறுநாள் சீர்திருத்த இயக்கம் மேலைநாட்டினர் தாக்கத்திற்கு ஏற்ப தன்னை சரிசெய்து கொள்ள ஏற்பட்டதாகும். இது மஞ்சுக்களுக்கு எதிரான நடவடிக்கை என்றும் கூறலாம். மேலும் மாறும் வாழ்க்கைக்கு ஏற்ப அயல்நாடுகளின் ஆக்கிரமிப்பைக் கண்டிக்கும் வகையில் ஏற்பட்ட எதிர் நடவடிக்கையாகவும் இது இருந்தது. இதற்கான முதல் முயற்சியினை **காங் யு வை** என்பவர் மேற்கொண்டார். அவர் பேரரசர் குவாங் சு என்பவரைத் தன் செல்வாக்கின் கீழ் கொண்டு வந்து அவரைப் பல சீர்திருத்த ஆணைகளைப் பிறப்பிக்கும்படி செய்தார். அவர் ஆட்சியிலிருந்து 1898 ஆம் ஆண்டு ஜூன் 11 ஆம் நாள் முதல் செப்டம்பர் மாதம் 20 ஆம் நாள் வரை நூறு நாட்களில் சீர்திருத்த ஆணைகளை அடுக்கடுக்காய் பிறப்பித்தார். இச்சீர்திருத்தங்களே நூறு நாட்கள் சீர்திருத்தங்கள் எனப் பெயர் பெற்றன.

**நூறு நாட்கள் சீர்திருத்த இயக்கம் தோன்றக் காரணங்கள்**

**1. ஜப்பானிடம் பெற்ற அவமானகாரமான தோல்வி**

1894-95 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற போரில் பெரிய நாடான சீனா படு தோல்வி அடைந்தது. சிறிய நாடான ஜப்பான் அமோக வெற்றி பெற்றது. ஜப்பானின் இவ்வெற்றிக்கு காரணம் அது பின்பற்றும் மேலை நாட்டவரின் பண்பாட்டு முறைகளே என்பதை சீனர்கள் அறிந்துக் கொண்டனர். எனவே தங்களை நவீனப்படுத்திக் கொள்ள சீர்திருத்தங்கள் அவசியம் என்பதை அவர்கள் உணர்ந்தனர். எனவே தான் சீனாவில் இவ்வியக்கம் நல்லாதரவினைப் பெற முடிந்தது.

**2. கிறிஸ்தவ சமயப் பரப்புக்குழுவினரின் பணிகள்**

சீனாவின் சீர்திருத்த இயக்கம் தோன்றுவதற்கு சமயப்பரப்புக் குழுவினரும் காரணமாய் இருந்தனர். அவர்கள் அங்கு பல பள்ளிகளைத் திறந்தனர். நூல் நிலையங்களை ஆங்காங்கே திறந்தனர். பொதுப் போதனைகள் பலவற்றை அமைத்தனர். செய்தித்தாள்கள், வார, மாதஇதழ்கள் பலவற்றை வெளியிட்டனர். அவர்கள் சமயத்தைப் பரப்பியதோடல்லாமல் மேலைநாட்டுக் கருததுக்களையும் சீனாவில் கொண்டு வந்தனர். அவர்கள் கிறிஸ்தவ சமயம் மற்றும் பொது அறிவு ஆகியவற்றை சீன மக்களுக்குத் தரவேண்டும் என்பதற்காக ஒரு சங்கத்தை ஏற்படுத்தினர். அச்சங்கம் சமுதாய அரசியல் சீர்திருத்தங்களில் அதிக ஈடுபாடு காட்டியது. மேலை நாட்டு நாகரீகமானது சீனாவில் புகுவதற்கு அது பாடுபட்டது. அக்குழுவினரின் செயல்கள் சீனாவில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தின. சீனர்களின் அறிவு கண்களைத திறந்துவிட்டன. அதன் விளைவாக சீனாவை நவீன நாகரீக உலகிற்கு அழைத்துச் செல்ல சீர்திருத்த இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

**3. சீனர்களின் மேலைநாட்டுத் தொடர்பு**

வெளிநாடுகளுடன் தொடர்பு இல்லாமல் பழமையில் ஊறிக்கிடந்த சீனா படிப்படியாக மேலை நாடுகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டது. அது ஐராப்பிய நாடுகளுக்குத் தூதுவர்களை அனுப்பி வைத்தது. அதபோல் சீனாவில் பிறநாட்டுத் தூதுவர்களைப் பெற்றுக் கொண்டது. சீனர்கள் மேலைநாட்டின் அறிவியல் தொழில் நுணுக்க முன்னேற்றங்களை பார்க்கலாயினர். தங்கள் நாட்டிலும் அப்படிப்பட்ட முன்னேற்றங்களைக் கொண்டு வர ஆர்வம் காட்டினர். குறிப்பாக அயல்நாடுகளுக்குச் சென்று மேற்படிப்பினைத் தொடர்ந்து மாணவர்கள் அந்த நாடுகளைப் போன்று சீனாவையும் நவீனமயமாக்க ஆர்வம் கொண்டனர். இதனால் சீர்திருத்த இயக்கம் உத்வேகம் கொண்டது.

**4. மேலைநாட்டு இராணுவத்தின் மேன்மை**

மேலை நாட்டினரின் இராணுவம் நவீன முறையில் அமைக்கப்பட்டிருந்தது. நவீனக் கருவிகளைப் பெற்றிருந்தது. புதிய யுக்திகளை கையாண்டது. ஜப்பானின் வெற்றிக்கு காரணம் அது படைகளை மேற்கத்திய பண்பாட்டு முறையில் முன்னேற்றி இருந்ததுதான் காரணம் என்பதை சீனர்கள் உணர்ந்துக்கொண்டனர். அது சீனர்களைச் சிந்திக்கத் தூண்டியது. எனவே மேலைநாட்டவரின் தொழில் நுணுக்கங்களை அறிந்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் சீனர்களிடம் ஏற்பட்டது. மேலைநாட்டுக் கருத்துக்கள் சீனாவில் புகுந்தன. இதனால் நாட்டைச் சீர்திருத்த வேண்டும் என்ற பேராசைச் சீனர்களிடையே தோன்றியது.

**5. சீனா சிதறுவதால் ஏற்படும் உடனடி ஆர்வம்**

வெளிநாட்டவர்கள் சீனாவை பங்குப்போட்டுக் கொண்டனர். சீனாவின் செல்வ வளங்களைச் சுரண்ட ஆரம்பித்தனர். சீனாவின் வலிமையற்றநிலை, நிர்வாகத் திறமையின்மை, இராணுவத்தின் வலிமை குன்றியநிலை, அயல் நாட்டவர்கள் ஆதிக்கம் ஆகியவை சீனாவை சிதறடிக்கும் சக்திகளால் வளர்ந்திருந்தன. எனவே சீனா சிதறாமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் மேலைநாட்டு சீர்திருத்தங்களைப் புகுத்துவதுதான்,

ஒரே வழி என்பதை சீனர்கள் உணர்ந்தார்கள்.

**ஆரம்பகால சீர்திருத்தவாதிகள்:**

1860 ஆம் ஆண்டு முதலே பல சீர்திருத்தவாதிகள் தோன்றிக் கருத்துக்களைப் பரப்பினர். மஞ்சுவம்சத்தின் ஊழலையும், பழமைத்தனத்தையும், திறமையின்மையையும் கண்டுக்கொண்ட மக்கள் புதிய சீர்திருத்தங்களைத் வரவேற்றுப் புரட்சிபாதையை நோக்கிச் சென்றனர்.

**1. பெங் குவை பெண்**

இவர் சீனாவில் ஆரம்பகாலத்தில் தோன்றிய சீர்திருத்தவாதி ஆவார். இவர் மேலைநாட்டுக் கணிதம், இயற்பியல், புவியியல், வேதியியல் ஆகியவற்றைப் போற்றினார். தொழில் உற்பத்தியைப் பெருக்க ஆர்வமும் ஊக்கமும் தந்து சீனா நவீன காலத்திற்குள் நுழைய விரும்பினார்.

**2. வாங்-தவோ - Wang - Tao**

இவர் ஒரு அறிஞராகவும், பத்திரிக்கை எழுத்தாளராகவும் திகழ்ந்தார். ஷாங்கே, ஷாங்காய் ஆகிய இடங்களிலுள்ள வெளிநாட்டவரோடு நெருங்கிய தொடர்புக் கொண்டார். மேலை நாட்டு நிறுவன முறைகளை ஆதரித்தார். சீனாவிலும் படிப்படியாக மேலைநாட்டுக் கூறுகள் புகுத்தப்படவேண்டுமென்று விரும்பினார்.

**3. வெங்-துங்-ஹோ (Weng-Jung Ho)**

சீனாவின் அடிப்படை ஒழுக்க நெறிக்கோட்பாடுகள், தத்துவங்கள் ஆகியவை மாற்றப்படக் கூடாது என்று வாதிட்டார். ஆனால் அவற்றை அரசின் அடிப்படையாக்க மேலை நாட்டுக் கல்வி தேவை என்றார்.

**4. சாங்-சி-துங் (Chang-chi-jung)**

இவர் ஒரு சிறந்த எழுத்தாளர். கல்வியின் அடிப்படையில் சீர்திருத்தங்கள் வேண்டும் என்றார். தொழிற் கல்வியும், மேல்நிலைக் கல்வியும் மேலை நாடுகளைப் போல் அமைந்ததால்தான் நாடு மேன்மை அடையும என்று எண்ணினார். இவருடைய கருத்துக்களில் உண்மை இருந்தது. அரசு அதனை ஏற்றுக்கொண்டு சீனாவில் முதல் நாணயத் தொழிற்சாலையை ஏற்படுத்தியது. பின்னர் இரயில் பாதைகளை அமைத்தது. இரும்புத் தொழிற்சாலையையும் உருவாக்கியது.

**5. காங் யூ வை (Kang - Yu - Wei)**

சீனாவிலுள்ள குவாண்டுங் மாநிலத்தில் இவர் 1858 ல் பிறந்தார். இவர் தன் வாழ்க்கையைக் கன்பூசியக் கோட்பாடுகளின் புதிய வடிவம் காண்பதில் ஈடுபாடு கொண்ட அறிஞராக ஆரம்பித்தார். அவர் மேலைநாட்டு பாணியிலமைந்த அரசியல் சீர்திருத்தத்தை விரும்பிக் கொண்டிருந்தார். 1891 ல் ஒரு கல்வி நிறுவனத்தை ஏற்படுத்தினார். 1893 ல் சீர்திருத்தச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தினார். சீனாவில் ஏற்பட்ட சீர்திருத்தங்களில் எல்லாம் இவருடைய தாக்கம் காணப்பட்டது.

**6. லியாங் - சி (Liang - Chi)**

இவர் காங்யூ வையின் சீடர் அவருடைய கொள்கையால் கவரப்பட்டவர். புதிய உலகுடன் தொடர்பு கொள்ள புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டுமென்று வலியுறுத்தினார். புதிய அரசியலமைப்பு கன்பூசிய தத்துவத்திலிருந்து வேறுபட்டிருக்க வேண்டுமென்று இவர் கூறினார்.

**பேரரசர் குவாங் கவும் காங்யூவையும்**

1898 ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தில் பல மனுக்களைச் சீர்திருத்த மக்கள் பீகிங் அரண்மனை அதிகாரிகளிடம் அளித்தனர். அம்மனுக்களிலுள்ள சீர்திருத்தங்கள் பேரரசர் குவாங்குவுக்கும் அதிகாரிகளுக்கும் பிடித்திருந்தன. நாட்டை எதிர்நோக்கியுள்ள பேராபத்தையுணர்ந்த பேரரசர் சீர்திருத்தங்களின் அவசியத்தை உணர்ந்து, 1898 ஜுன் மாதம் 11 – ஆம் நாள் ஒரு ஆணையைப் பிறப்பித்தார். காங்யூவின் ஆலோசனைகளின் அடிப்படையில் 1898, செப்டம்பர் மாதம் 21 ஆம் நாள் வரை நாற்பத்தெட்டு அரசு ஆணைகளைப் பிறப்பித்தார்.

நூறு நாட்களே நிலைத்திருந்த இச்சீர்திருத்தங்கள் 'நூறு நாட்கள் சீர்திருத்தங்கள்' எனப் பெயர் பெற்றன. இச்சீர்திருத்தங்கள் கல்வி, வேளாண்மை, தொழில், இராணுவம், நிர்வாகம் ஆகிய துறைகளில் புகுத்தப்பட்டன.

**கல்வித் துறை சீர்திருத்தங்கள்**

1. நெடுங்காலமாக கல்வி நிறுவனங்களில் இருந்து வந்த மாணவர்கள் தேர்வு எழுதும் முறை மாற்றியமைக்கப்பட்டது. கட்டுரை வடிவில் சிவில் சர்வீஸ் தேர்வுகளில் எழுதுவது ஒழிக்கப்பட்டது.
2. பிறமொழி நூல்கள் சீனமொழியில் மொழிபெயர்க்க ஊக்கம் கொடுக்கப்பட்டது. அவ்வாறு மொழிபெயர்க்க முன்வருவோருக்கு அனைத்து வசதிகளும் செய்துக் கொடுக்கப்பட்டது.
3. ஏராளமான பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவை நாடெங்கிலும் உருவாக்கப்பட வழி செய்யப்பட்டது.
4. மத்தியப் பல்கலைக்கழகம் ஒன்று பீகிங் நகரில் அமைக்கப்பட்டது.
5. மேலைநாட்டுப் பாடங்களுக்கு சிறப்புப் பள்ளிகள் திறக்கப்பட்டன.
6. பழங்கால மற்றும் தற்கால வரலாறுகள், தற்காலத்தில் அரசியல் கோட்பாடுகளைப் புரிந்துக்கொள்ள பல நாடுகளின் அரசியல் அமைப்புக்களையும் கற்றுக்கொடுக்க முக்கியத்துவமளிக்கப்பட்டது.

## 2. அரசியல் துறை

1. பழமையில் ஊறிய அரசு அலுவலர்கள், மற்றும் அவசியமற்ற அரசு அலுவலர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். எடுத்துக்காட்டாக பேரரசு கல்வி முறையின் மேற்பார்வையாளர், அரசுச் சடங்குகளை கவனிக்கும் அதிகாரி, ஹோப்போர், குவாண்டுங் ஆகிய பகுதிகளின் ஆளுநர் ஆகிய பதவிகள் நீக்கப்பட்டன.
2. முன்னேற்ற வாதிகளான லின்-ச, லியாங்-சி-சாவா ஆகியோர் பெரும் பதவிகளில் அமர்த்தப்பட்டனர்.
3. ஆட்சித் துறையைச் சீராக்குவதற்காக முறைகேடுகள் நிரம்பப் பெற்றிருந்த டா-லீ-சூ, குவாங்-லூ-சூ போன்ற அமைப்புகள் நீக்கப்பட்டன.
4. சீனாவின் நடுவண் அரசு, மாநில அரசுகளுடன் தொடர்பு கொண்டு செயல்படுவதற்கு வழிகள் வகுக்கப்பட்டன.
5. எளிய நிர்வாக முறை அமல் செய்யப்பட்டது. நிர்வாகத் திறமை வளர வழிகள் மேற்கொள்ளப்பட்டன.
6. அரசாங்கத்தின் திறமையை வளர்க்க தனிப்பட்ட குடிமக்களின் ஆலோசனைகள் வரவேற்கப்பட்டன.
7. வாணிபம், விவசாயம் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கெனப் புதிய அமைப்புகள் உருவாக்கப்பட்டன.
8. மக்கள் தமது குறைகளை அரசுக்குத் தெரிவிக்கக்கூடிய வகையில் தமது தேவைகளைப் பற்றிய மனுக்களை அரசுக்கு அனுப்ப உரிமை பெற்றார்கள்.

## 3. தொழில் துறை

1. இருப்புப் பாதை அமைத்தல், வேளாண்மைத் தொழில்கள் தொடங்குதல், வணிக நடவடிக்கைகள் ஆகியவை அரசாங்கத்தின் அக்கறையை அடைந்தன.
2. புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் வெளிவர உற்சாகம் அளிக்கப்பட்டது.
3. மரங்கள் அடர்ந்த நல்ல சாலைகள், பூங்காக்கள், தூய்மையான சுற்றுப்புறம் ஆகியவற்றைக் கொண்டு விளங்கும்படி தலைநகரம் அழகுப்படுத்தப்பட்டது.
4. வங்கிகள் திறக்கப்பட்டன. பொருளாதார வளர்ச்சித் துறை ஒன்று தனியாகத் திறக்கப்பட்டது.

## 4. பிற துறைகள்

1. படைத் துறையில் மேல் நாட்டு அமைப்பு முறைகளோடு போர்க்கருவிகளை பயன்படுத்தப்பட வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

2. படை வீரர்களைத் தேர்ந்தெடுத்து தேசியப்படையமைப்பு ஒன்றினை உருவாக்க வழிசெய்யப்பட்டது.
3. நீதி மன்றங்கள் சீராகச் செயல்பட வழி காணப்பட்டது. சீன சட்டமுறை எளிமை ஆக்கப்பட்டது.
4. மாதிரி மற்றும் நகலெடுக்கப்பட்ட சட்டங்கள் வெளியிடப்பட்டன.
5. தொழில், நிர்வாகம் ஆகிய துறைகளில் நுணுக்கங்களைக் கண்டறிய உயர் அதிகாரிகள் மேலை நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.
6. புதுமையைக் கண்டறிவோருக்கும், எழுத்தாளர்களுக்கும் ஆதரவூட்டக் கூடிய வகையில் ஊக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.
7. சீனத் தலைநகரை பிற நகரங்களுடன் இணைப்பதற்கான வழிகளை மேற்கொள்ள போக்குவரத்து நிறுவனம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது.
8. பத்திரிக்கை உரிமை கொடுக்கப்பட்டது. அத்துடன் எழுத்துச் சுதந்திரமும் அளிக்கப்பட்டது.

**சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்புத்தோன்றுதல்**

வெகு குறுகிய காலமான நூறு தினங்களுக்குள் மக்களுடைய வாழ்க்கையின் பல பகுதிகளையும் தொட்டுச் செல்லக்கூடிய சீர்திருத்த ஆணைகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டன. ஆனால் 1898 ஆம் ஆண்டு ஆகஸ்டு 30 ஆம் நாள் வெளியான ஆணை ஒன்றின் மூலம் ஆறு படைப்பிரிவுகளின் அதிகாரிகள் ஒழிக்கப்பட்ட படியால் மக்கள் ஆத்திரமடைந்தனர். ஆரம்பம் முதலே சீர்திருத்த இயக்கத்திற்குப் பெரும் எதிர்ப்பு இருந்து வந்தது. மஞ்சு அரசாங்கத்தின் அதிகாரிகளின் பதவி பறிபோகின்ற நிலை ஏற்பட்டதால் மக்கள் அதைக் கடுமையாக எதிர்க்கலாயினர். சீனாவைப் புரட்சிப் பாதையில் அழைத்துச் சென்ற சீர்திருத்த இயக்கத்திற்கு மஞ்சுகுடும்பத்தவரிடமிருந்து பலத்த எதிர்ப்பு கிளம்பியது. பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களும், மஞ்சு அரசு ஆதரவாளர்களும், சீர்திருத்தங்களை எதிர்நோக்கும் பேரரசி சூஸியிடம் சென்று முறையிட்டனர். அவர்கள் பேரரசியைத் தலையிடும்படி தூண்டினர். ஏனெனில் அரசி பழமையில் பற்றுக் கொண்டவர், எனவே அவர் தங்கள் உதவிக்கு வருவார் என்று அவர்கள் திடமாக நம்பினார்.

**சீர்திருத்தங்களின் முடிவு**

சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்பு வலுவடைவதைக் கண்ட பேரரசி அதிகாரத்தைக் கைப்பற்றத் தக்கத் தருணத்தை எதிர்ப்பார்த்திருந்தார். சீர்திருத்தவாதிகள் அவருடைய தலையீட்டுக்குப் பயந்து 'பழைய புத்தர்' என்று அழைக்கப்பட்ட அப்பேரரசியை கைது செய்ய முயற்சி செய்தனர். ஆனால் அந்த முயற்சி தோல்வி அடைந்தது. இராணுவ அதிகாரிகளின் துணைகொண்டு அவர் மீண்டும் தன்னை வலிமையாக்கிக் கொண்டார். பேரரசருக்கு உடல் நலமில்லை என்ற காரணத்தைக் காட்டி அரசைக் கைப்பற்றினார். பேரரசர் கைது செய்யப்பட்டு இறக்கும் வரையில் சிறையில் அடைக்கப்பட்டார். சீர்திருத்த இயக்கத்தின் தலைவரான காங்-யூ-வை ஜப்பானுக்கு ஓட்டம் பிடித்தார். பல சீர்திருத்தவாதிகள் தூக்கிலிடப்பட்டனர். பேரரசி தோவேஜர் சீர்திருத்த ஆணைகள் எல்லாவற்றையும் செல்லாது என அறிவித்தார். இவ்வாறு நூறு நாள் சீர்திருத்தங்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

**சீர்திருத்த இயக்கம் தோல்வி அடையக் காரணங்கள்**

1. மக்களைப் பக்குவப்படுத்தி, சிறந்த முறையில் அவர்களுக்கு சீர்திருத்தங்கள் பற்றி எடுத்துக் கூறி வழி நடத்தத் திறமையானத் ராஜதந்திரிகளோ, அதிகாரிகளோ இல்லை. எனவே கடைசி வரை சீர்திருத்தங்களைப் பற்றி மக்கள் புரிந்து கொள்ளாமலே இருந்தனர்.
2. பேரரசர் குவாங்-க அனுபவம் இல்லாதவராகக் காணப்பட்டார். அவரிடம் அரசியல் தந்திரம் இல்லை. எனவே மஞ்சுக்களின் முழுமையான ஒத்துழைப்பைப் பெறத் தவறிவிட்டார்.

3. சீர்திருத்தங்கள் காலத்திற்கு முந்தியவையாகவும், மிகுந்த கற்பனையில் காணக்கூடிய கருத்துக்களாகவும் தோன்றிய, ஒரே நாள் இரவில் எல்லாவற்றையும் மாற்ற வேண்டும் என்று பேரரசர் செயல்பட்டதால் அவர் தோல்வி அடைய நேரிட்டது.

4. சீர்திருத்தங்களை மேல் மட்டத்திலிருந்த உயர்தலைவர்கள் கொண்டு வந்தனர். அவர்கள் மக்கள் மீது அவற்றைத் திணிக்கும் போது அவர்களால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்தனர். ஏனெனில் சீர்திருத்த இயக்கத்திற்கு தேவையான சூழ்நிலை உருவாக்கப்படவில்லை, மக்களும் தயார் செய்யப்படவில்லை.

5. சீர்திருத்த இயக்கங்கள் பெரும்பாலும் தென்மாநிலங்களில் தோன்றின. குறிப்பாக அவைகள் மேலை நாட்டின் தொடர்பினால் ஏற்பட்டவை. எனவே அந்த இயக்கம் நாடு தழுவிய அளவில் அமையவில்லை.

6. வணிகர்கள், குடியானவர்கள், நடுத்தர மக்கள், அறிஞர்கள், மாணவர்கள் ஆகியோர் சீர்திருத்த இயக்கங்களிலிருந்து விலகியே இருந்தனர். அவர்கள் அப்போதைய சமுதாயத்திறகு அவைகள் தீங்கு ஏற்படுத்துபவை என்று எண்ணினர். நாட்டில் அதன் மூலம் குழப்பம் உருவாகலாம் என்று எண்ணி அவர்கள் சீர்திருத்தங்களை ஆதரிக்கவில்லை.

7. மஞ்சு அதிகார வர்க்கத்தின் மிகத் தீவிர எதிர்ப்பு, சீர்திருத்தம் தோல்வி அடைய முக்கிய காரணமாகும். சீர்திருத்தங்கள் தங்கள் அதிகாரத்தையும், உரிமைகளையும் பாதிக்கும் என்று நம்பினர். எனவே அவர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி சீர்திருத்த இயக்கத்தை வெற்றி பெறாமல் செய்துவிட்டனர்.

8. பேரரசரும் அவருடைய சீர்திருத்தவாதிகளும் தங்களுக்கென தனியாக இராணுவத்தைப் பெற்றிருக்கவில்லை. எனவே சீர்திருத்தங்களுக்கு எதிரானவர்களை அவர்களால் ஒடுக்க முடியவில்லை.

9. அரசைக் கைப்பற்ற தக்க தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த பேரரசி சூஸி முனைப்புடன் செயல்பட்டு சீர்திருத்த இயக்கத்தை சீர்குலைத்தார்.

**சீர்திருத்த இயக்கத்தின் முக்கியத்துவம்**

சீர்திருத்த இயக்கங்களைப் பேரரசி சூஸி இரும்புக் கரம் கொண்டு அடக்கிவிட்ட போதிலும், சீனாவின் பிற்கால வரலாற்றில் அது பல முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியது. இவ்வியக்கங்கள் அயல்நாட்டவரின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளம்பிய முதல் நிகழ்ச்சியாகும். சீனர்களின் உணர்வை உலகுக்கு உணர்த்திய முகவுரை என்றும் அது சொல்லப்படுகிறது. எனவே இது பாக்சர் கலகம் ஏற்பட அடித்தளம் அமைத்தது எனலாம். மேலும் அமைதியான முறையில் எதையும் சாதிக்க முடியாது என்று மக்கள் நம்பினர். மஞ்சு வம்சத்தின் வீழ்ச்சிக்குப் பின்தான் முழுமையான சீர்திருத்தங்கள் கொண்டுவர முடியுமென்று எண்ணினார். ஆகவே டாக்டர் சன்யாட் சென்னின் தலைமையில் சீனர்கள் ஒன்று திரண்டு புரட்சிக் கொடியினை ஏற்ற முற்பட்டனர்.

## 6. பாக்சர் கலகம்

சீனாவில் பாக்சர் கலகம் 1899 -1900 ஆம் ஆண்டுகளில் வெடித்தது. அயல்நாட்டவர் ஆதிக்கத்தை எதிர்த்துத் தோன்றிய பாக்சர் கலகம் 1911 ம் ஆண்டின் சீனப்புரட்சிக்கு ஒரு ஒத்திகை என்று சொல்லப்படுகிறது. மஞ்சுக்களின் புகழை மங்கச் செய்த இக்கலகம், சீனவரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. நூறு நாள் சீர்திருத்தம் தோல்வி அடைந்த பிறகு வெளி நாட்டவர்களை விரட்டுவதற்காகவே இக்கலகம் ஏற்பட்டது.

**பாக்சர் கலகத்தின் தோற்றம்**

ஐ-ஹே-சுவான் **(I-Ho Chuan)** எனும் இரகசியக் கழகத்திலிருந்து பாக்சர் கலகம் உருவானதாகக் கருதப்படுகிறது. இக்கலகத்தினர் தங்கள் கைகளின் முஷ்டியை **(Fists)** முஷ்டி வைத்திருந்ததால் அவர்கள் குத்துச்சண்டை வீரர்கள் அல்லது ஆங்கிலத்தில் **(Boxer)** என்று அழைக்கப்பட்டனர். அசாத்தியமான வீரம், தீவிர நாட்டுப்பற்று, மிகுந்த மனோதிடம் பெற்றிருந்த பாக்சர்கள் அயல் நாட்டவர்களைச் சீனாவிலிருந்து விரட்டுவதே தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் குறிக்கோளை வெற்றி பெறச் செய்வதற்குத் தங்கள் உயிரையும் கொடுக்கத் தயங்காதவர்களாய் இருந்தனர். ‘‘நாட்டைப் பாதுகாத்து, அயல்நாட்டவரை ஒழிக்க வேண்டும்’’ என்பதே அவர்களது முழக்கமாய் இருந்தது.

## கலகத்திற்கான காரணங்கள்

**1. சீன - ஜப்பானிய போரில் சீனர் தோல்வி**

1894 - 95 ல் நடந்த சீன - ஜப்பானிய போரில் சீனா படுதோல்வி அடைந்தது. போரின் முடிவில் ஏற்பட்ட ‘ஹீமோனோ செகி’ உடன்படிக்கையின்படி சீனா தன்னுடைய லியோடுங் தீபகற்பம், பணி உறையா ஆர்தர் துறைமுகம் ஆகியவற்றை இழந்தது. மேலும் போர் இழப்பீடாகப் பெரும் தொகையைக் கொடுக்க வேண்டியிருந்தது. இந்த அவமானங்கள் சீனர்களின் உள்ளத்தில் அந்நியர்களைப் பற்றிய கசப்புணர்வைத் தோற்றுவித்தது. இது கலகத்திற்கு வழி ஏற்படுத்தியது.

**2. ஐரோப்பியரின் சலுகைப் போட்டிகள்**

ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர்கள், ஜெர்மானியர்கள், போன்ற ஐரோப்பிய நாட்டினர் சீனாவின் வலிமை குன்றிய நிலையைப் பயன்படுத்தி அங்கு தங்கள் செல்வாக்கு மண்டலங்களை உருவாக்கினர். சீனாவைக் கூறுபோட்டு அதன் வளங்களைச் சுரண்டிச் சென்றனர். அதோடு அவர்களின் சமுதாய, சமய, பொருளாதார வாழ்க்கையில் பல மாற்றங்கள் கொண்டுவர முனைந்தனர். பழமையில் ஊறிப்போன சீனர்கள் மேலைநாட்டவரையும், மேலை நாட்டு நாகரீகத்தையும் எதிர்த்தனர். இறுதியாக இந்த எதிர்ப்பு கலகமாக வெடித்தது.

**3. சீனர்களின் பரிதாப நிலை**

தைப்பிங் கலவரத்திற்குப் பின்பும் சீனாவில் நிலைமை சீரடையவில்லை. பொருளாதாரம் மேம்பாடு பெறவில்லை. போர் இழப்பீடு கொடுப்பதற்காக மக்களிடம் அதிகமான வரி வசூலிக்கப்பட்டது. மேலும் 1898 ல் கடுமையான பஞ்சம் சீனாவில் ஏற்பட்டது. வறட்சியினால் விளைச்சல் குறைந்தது. மக்கள் சொல்லொண்ணாத் துயருக்கு ஆளாயினர். சீனமக்களின் இந்த பரிதாப நிலை அவர்களைக் கலகத்திற்கு வழி நடத்தியது.

**4. சமயப் பரப்புக் குழுவினரின் செயல்கள்**

கிறிஸ்தவ சமயப்பரப்புக் குழுவினர் சமூகக் கல்வித் துறைகளில் பயனுள்ள பணிகளைச் செய்து வந்தபோதிலும், சீனர்கள் அவர்களை நம்ப மறுத்தனர். மேலைநாட்டின் ஆதிக்கம் வளர அவர்களின் செயல்கள் உதவியது என்று குற்றம் சாட்டினர். மேலும் மதம் மாறியவர்கள் தங்களை உயர்ந்தவர்கள் என்றும், உரிமை பெற்ற வகுப்பினர் என்றும் கருதி வந்தனர். அவர்கள் பணிகளிலும் நீதிமன்றங்களிலும் தனி உ;ரிமையும் மரியாதையும் கோரினர். சீனர் கிறிஸ்தவர்களின் இந்த நடவடிக்கைகள் பொதுமக்களின் கோபத்தை கிளறி விட்டது.

### 5. மஞ்சு வம்சத்தினர் அயலவர் என்ற எண்ணம்

சீனர்கள் மஞ்சுக்களையும் வெறுத்தனர். மஞ்சு வம்சத்தின் திறமையின்மைதான் சீனர்களின் அவலநிலைக்குக் காரணம் என்று நம்பினர். மேலும் மஞ்சுக்களும் வெளிநாட்டினர் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் தோன்றியது. எனவே ஆரம்பக்காலத்தில் பாக்சர் கலகத்தினர் மஞ்சுக்களுக்கு எதிராகப் போர் கொடி தூக்கி கலகத்தில் ஈடுபட்டனர்.

### 6. அயல்நாட்டவரின் பொருளாதார ஆதிக்கம்

அபினிப் போர்களுக்குப் பின் வெளிநாட்டிலிருந்து ஏராளமான பொருட்கள் சீனாவில் இறக்குமதி செய்யப்பட்டதால் அதன் பொருளாதார நிலை சீர்குலைந்தது. சீனாவின் பாதுகாப்புவரிக் கொள்கை, சுங்கவரி நிர்ணயிக்கப்பட்டதின் விளைவாக அழிக்கப்பட்டது. சீனாவின் துணி விலையில் மூன்றில் ஒரு பங்கு விலையில் அயல்நாட்டுப் பருத்தித் துணி விற்கப்பட்டது. எனவே உள்நாட்டு நெசவாளிகளும், ஜவுளி உற்பத்தியாளர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். அயல்நாட்டுப் போட்டிக்கு ஈடுகொடுக்க முடியாமல் கைத்தொழில்கள் நலிவுற்றன. மக்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமானது. எனவே அன்னியநாட்டின் மீது ஏற்பட்ட வெறுப்பு அதிகமாகி புரட்சி வெடித்தது.

### 7. இரகசிய சங்கங்களின் செயல்கள்

வெளிநாட்டினருக்கு எதிராக சீனாவில் பல இரகசிய சங்கங்கள் தோன்றின. அவைகளில் ஒன்று 'எட்டு வரி வடிவ சங்கம்' ஆகும். மற்றொன்று 'வெண் தாமரைச் சங்கம்' ஆகும். இச்சங்கங்கள் தீவிர நாட்டுப்பற்றும் அன்னிய துவேஷமும் கொண்டு விளங்கின. அன்னியருக்கு எதிரான கோஷங்களை அவைகள் எழுப்பின. அவர்கள் இரகசியமாக மல்யுத்தம், குத்துச்சண்டை, வாட் போர், பிற உடற்பயிற்சிகள் ஆகியவற்றைச் செய்து வந்தனர். அவர்களும் மக்களைப் புரட்சிக்குத் தயார்படுத்தினர்.

### கலவரத்தின் போக்கு

ஆரம்பத்தில் கலகக்காரர்கள் மஞ்சுக்களுக்கு எதிராக செயல்பட்டனர். மஞ்சுக்கள் தான் சீனாவில் வெளிநாட்டவரின் ஆதிக்கத்திற்குக் காரணம், எனவே அவர்கள் நீக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்தனர். ஆனால் சிறிதுகாலத்தில் அவர்கள் அந்நியருக்கு விரோதமாகச் செயல்பட ஆரம்பித்தனர். அரசியார் முதலில் இரகசியமாக பாக்சர்களை ஆதரித்து வந்தார். பின்னர் வெளிப்படையாகவே ஆதரிக்கலாயினார். அரசின் ஆதரவுடன் பாக்சர்கள் மிகவும் தீவர வன்முறையில் இறங்கினர். 1900 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சீனாவின் ஆதரவுடன் பாக்சர்கள் கலகத்தில் ஈடுபட்டனர். ஷான்டங்,கிலி, மஞ்சூரியா ஆகிய இடங்களில நாச வேலைகளில் ஈடுபட்டனர். அவர்கள் கிறிஸ்தவ கோவில்களைக் கொளுத்தினர். கிறிஸ்தவ சமயப் பரப்புக் குழுவினர்களைக் கொன்று குவித்தனர். இருப்புப் பாதைகளையும், தந்தி நிலையங்களையும் அழித்தனர். கொலை, கொள்ளை, தீவைப்பு ஆகிய நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணமாக நடைபெற்றன. கட்டுங்கடங்காத பாக்சர்களின் வெறிச் செயல்கள் திட்டமிடப்படும் திட்டமிடப்படாமலும் தொடர்ந்தன. ஜூன் 4 ஆம் நாள் 1500 வெளிநாட்டவர் கொல்லப்பட்டனர்.

கிளைடு என்ற வரலாற்றறிஞர் குறிப்பிட்டது போல் "இப்பைத்தியக்காரத்தனமான செயல் 1900 ஜீன் 20 ஆம் நாள் மஞ்சு அமைச்சரவையை எட்டியபோது அரசாங்கம் வெளிநாட்டவர் மீது போர் அறிவிப்புச் செய்தவுடன் பாக்சர்களுக்கு பீகிங்கிலுள்ள வெளிநாட்டு – தூதரகங்களை முற்றுகையிட அனுமதி வழங்கியது" வெறித்தனமும் பழமைக் கோட்பாட்டில் நம்பிக்கையும் கொண்ட ஆட்சிப் பிரிவினரும் பாக்சர்களுக்கு அளித்த ஊக்கம் காரணமாக அடுக்கடுக்கான அட்டூழியங்கள் தொடர்ந்தன. ஆங்கிலத் தூதரகமும் தாக்குதலுக்கு இலக்கானது. சீன– ரஷ்ய வங்கி எரியூட்டப்பட்டது. ஜெர்மானிய மற்றும் ஜப்பானியத் தூதர்கள் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு கொல்லப்படும் தம் நாட்டவரை மீட்க அயல்நாடுகள் கப்பல்களை அனுப்பின. இச்செயலை அயல்நாடுகளின் போர் அறிவிப்பாகக் கருதி பாக்சர்கள், போர் பிரகடனம் செய்தனர். பாக்சர் கலகத்திற்கு வட

சீனாவில் மட்டுமே பெரும் ஆதரவு இருந்தது. எனவே அயல்நாட்டவர் தங்கள் முழு கவனத்தையும் வட சீனாவில் செலுத்த ஆரம்பித்தனர். ஜூலை மாதம் ஜப்பான், ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா, பிரான்சு ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 1800 படைவீரர்கள் கொண்ட படை ஒன்று உருவாக்கப்பட்டது. ஜெர்மனிக்கு தளபதி கவுண்ட் - வான் - வால்டர்சி என்பவரின் தலைமையில் பன்னாட்டுப் படைகள் பீகிங்கைக் கைப்பற்றி அரண்மனையை சூறையாடின.

**கலகம் முடிவுறுதல்**

பன்னாட்டுப் படைகள் பீகிங்கில் தமது கொடியை பறக்கவிட்டது. பீகிங் பல பகுதிகள்ாக பிரிக்கப்பட்டுப் பங்கிடப்பட்டது. கலகம் ஒடுக்கப்படுவதைக் கண்ட பேரரசியும், பேரரசரும் மாறுவேடம் பூண்டு தப்பியோடினர். வெளிநாட்டவரின் கை ஓங்கியது. அவர்கள் தங்களுக்கு இழைக்கப்ட்ட தீங்கிற்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ளலாயினர். பாக்சர்கள் வேட்டையாடப்பட்டடு ஒடுக்கப்பட்டனர். அதன்பின்பு சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

**பாக்சர் ஒப்பந்தம்**

சீன அரசு சார்பில் லீ ஹங் சாங் (**Li - Hung - Chang**) ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா போன்ற பதினொரு வெளிநாட்டவர்களுடன் அமைதிப் பேச்சு நடத்தலாயினார். 1901, செப்டம்பர் 7 ஆம் நாள் சீனாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் இடையே பாக்சர் ஒப்பந்தம் (**Boxer Protocal**) கையெழுத்தாயிற்று. அதன்படி.

1. பாக்சர் கலகத்தின் போது நடந்த வன்முறைச் சம்பவங்களுக்காக சீன அரசு மன்னிப்புக் கோரியது.
2. பாக்சர் இயக்கத்தின் தலைவர்களையும், இடர்பாடுகளுக்குக் காரணமாயிருந்தவர்களையும் தண்டிக்கச் சீன அரசு ஒப்புக் கொண்டது.
3. போர் இழப்பீட்டுத் தொகையாக 450 மில்லியன் சீன நாணயங்களை 39 தவணைகளில் கொடுக்க சீனா ஒப்புக்கொண்டது.
4. பாக்சர் கலவரம் நடைபெற்ற வெளிநாட்டவர் கடுமையான இன்னல்களுக்கு உட்பட்ட நகரங்களில் நிர்வாகப் பொறுப்புகளுக்கான பதவிகளுக்கு நடைபெறும் போட்டி தேர்வுகளை ஐந்து ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்க சீனா ஒப்புக் கொண்டது.
5. வெடிமருந்து மற்றும் ஆயுதங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதையும், இறக்குமதி செய்வதையும் இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்க ஒப்புக் கொண்டது.
6. அயல்நாட்டவர்களுடன் ஒப்புக்கொண்டிருந்த வாணிப ஒப்பந்தங்களை மாற்றியமைத்து மறுபரிசீலனை செய்யச் சீனா ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.
7. பீக்கிங்கிலிருந்தப் பிறநாட்டுத் தூதரகங்களுக்குத் தகுந்த பாதுகாப்பளிக்கச் சீன அரசு ஒப்புக்கொண்டது. அத்துடன் டாகு நதி முகத்துவாரத்தில் அமைக்கப்பட்டிருந்த கோட்டையை இடித்துவிட ஒப்புக்கொண்டது.
8. அயல்நாட்டு விவகாரங்களைக் கவனிக்கத் தனித்துறை அமைக்கப்பட்டது.
9. பீக்கிங்கிலிருந்து சீனாவின் கடற்கரைப் பகுதிகளுக்கு இடைப்பட்ட இடங்களில் இருந்த படைகளை வெளிநாட்டவரின் கட்டுப்பாட்டில் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.
10. சீன சுங்கவரி அலுவலகம் இனி அயல்நாட்டவரின் மேற்பார்வையில் இயங்கும்.
11. அயல்நாட்டவரின் பாதுகாப்புக்கென, அயல்நாட்டுப் படைகள் சீனாவில் தங்க அனுமதிக்கப்பட்டன.
12. தொழில்களில் வெளிநாட்டவர் முதலீடு செய்வதற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த தடைகள் அனைத்தும் நீக்கப்பட்டன. அதனால் அந்நிய முதலீடுகள் சீனாவில் அதிகரித்தன.
13. அயல் நாட்டவர்களின் இடுகாட்டில் கலவரத்தில் இறந்தவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் நிறுவ வகை செய்யப்பட்டது.

14. ஜப்பானுக்குத் தனியாக இழப்பீட்டுத் தொகை வழங்க சீனா ஒப்புக்கொண்டது.

**கலக தோல்விக்குக் காரணங்கள்**

சீனாவை மேலும் கடன்களுக்கும், சிக்கல்களுக்கும் உள்ளாக்கியதோடல்லாமல், வெளிநாட்டவரைச் சீனாவிலிருந்து விரட்டிவிடும் நோக்கத்துடன் செயல்பட்ட பாக்சர் கலகம் அதன் நோக்கங்களை நிறைவேற்றாமல் தோல்வியுற்றது. அதற்குப் பல காரணங்கள் உண்டு.

1. இந்த கலகம் வட மாநிலங்களில் மட்டுமே நடைபெற்றது. தென் மாநிலங்களில் அதற்கு ஆதரவு கிடைக்கவில்லை. எனவே இது நாடு தளுவியதாக அமையவில்லை.
2. பாக்சர்கள் தங்களுடையக் கருத்துக்களைச் சீராக செயல்படுத்தவில்லை.அவர்களிடம் ஆக்கப்பூர்வமான திட்டங்கள் இல்லை.
3. சீனத் துருப்புக்கள் ஒருங்கிணைந்து செயல்படவில்லை. இராணுவத் தளபதிகள் தங்களிடத்திலேயே நம்பிக்கை பெற்றிருக்கவில்லை. அத்துடன் இராணுவத்திடமும் நம்பிக்கையைப் பெற்றிருக்கவில்லை.
4. பாக்சர்களை நன்முறையில் வழிநடத்தும் அளவிற்குத் தலைவர்கள் சீனாவில் இல்லை. மக்களைக் கவரும் மாபெரும் தலைவர்கள் அங்கு அப்போது தோன்றவில்லை.
5. பாக்சர்களுக்குப் பேரரசியார் சூசியின் ஆதரவு இருந்த போதிலும், அரசின் அதிகாரிகளாக விளங்கிய ஜீங்லூ, யுவான் ஷி காய் போன்றோர் ஒற்றுமையுடன் செயல்படவில்லை. உண்மையில் அவர்கள் பாக்சர்களுக்கு எதிரான செயல்களிலேயே ஈடுபட்டு வந்தனர்.
6. மேலைநாட்டு உயர்தரமான கூட்டுப்படைகள் திறமையாக செயல்பட்டன. அவர்களின் மிக முன்னேற்றமான போர் நுணுக்கம், தந்திரம், நவீன துப்பாக்கிகள் ஆகியவை அவர்களின் வெற்றிக்கு பெரிதும் உதவின. எனவே பன்னாட்டுப் படைகள் எளிதில் கலவரத்தை அடக்கலானார்கள்.

**விளைவுகள்**

1. சீனா பெரும் இழப்பீட்டுத் தொகையை அளிக்க வேண்டியதிருந்தது. மேலும் பல சலுகைகளை அயல்நாட்டுக்கு அளிக்க வேண்டியநிலை ஏற்பட்டது. இதனால் சீனா அவமானப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.
2. இக்கலவரம் காரணமாகச் சீர்கெட்டுக் கிடந்த சீனப்பொருளாதாரம் மேலும் சின்னாபின்னமானது.
3. மஞ்சுவம்சத்தின் ஆட்சிக்கு இக்கலவரம் சாவுமணியடித்தது. மக்களின் வெறுப்பு நாடெங்கிலும் தோன்றி அவ்வம்சத்தை 1911 – ல் பதவியிலிருந்து இறக்கியது.
4. இக்கலவரம் சீன அரசியல் எதிர்காலத்தில் பல அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தத் தக்கதோர் அடித்தளத்தை அமைத்தது.
5. சீனாவின் உள்நாட்டு அமைப்புகளில் கட்டாயமாகச் சீனா அரசு பல சீர்திருத்தங்களைத் தொடர்ச்சியாக ஏற்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

பாக்சர் கலகத்தின் இறுதியில் சீனாவிற்கு மீண்டும் ஒரு பலத்த அடி விழுந்தது. முதல் அபினிப்போர், இரண்டாம் அபினிப்போர், முதல் சீன – ஜப்பானியப் போர் போன்றவற்றில் நசுக்கப்பட்ட சீனா, மீண்டும் ஒரு முறை பாக்சர் கலகத்தின் இறுதியில் கசக்கிப் பிழியப்பட்டது. எல்லா ஒப்பந்தங்களையும் விட இவ்வொப்பந்தம் சீனாவை மிகவும் பாதித்தது.

## 7. மஞ்சு ஆட்சியின் சீர்திருத்தங்கள்

பல நூற்றாண்டு காலங்ள் சீனா தனித்திருந்தது. கன்பூசியஸ் கோட்பாட்டின் அடிப்படையில சீன நாகரீகம் அமைந்திருந்தது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிநாட்டவர் சீனாவின் பலவீனத்தை அறிந்து அங்கு ஊடுருவினர். சீனர்கள் போர்களில் தோற்கடிக்கப்பட்டனர். அவமானப்படுத்தப்பட்டனர். தாங்கள்

தலை நிமிர்ந்து நிற்க பழமைக் கோட்பாடுகளைத் தூக்கி எறிந்துவிட்டு புதிய ஐரோப்பியக் கோட்பாடுகளைப் புகுத்தத் தயாராயினர். எனவே சீனாவில் பல சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. 1902 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பீகிங் திரும்பிய பேரரசி சூஸி பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். சீர்திருத்த இயக்கத்தின் மூலம் சீனாவை தலை நிமிர்ந்தது. நிற்கச் செய்ய முடியும் என்று பேரரசி நம்பினார். எனவே 1900 - 1911 இடைப்பட்ட காலத்தில் மஞ்சுக்களின் சீர்திருத்த இயக்கம் சீனாவில் ஆரம்பிக்கப்பட்டு பல துறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

**மஞ்சுக்களின் சீர்திருத்த இயக்கத்தைச் செயல்படுத்தக் காரணங்கள்**

1. நூறுநாட்கள் சீர்திருத்தங்களும், பாக்சர் கலகமும் சீர்குலைத்த சீனாவின் பெருமையை மீண்டும் நிலைநாட்ட ஏதெனும் செய்ய வேண்டும் என மஞ்சூக்கள் விரும்பினர்.
2. மக்களிடம் நற்பெயர் எடுக்க விரும்பி மஞ்சுக்கள் சீர்திருத்தங்களைப் புகுத்த எண்ணினார்கள்.
3. ஏதேனும் சீர்திருத்தங்கள் செய்தால்தான் மஞ்சு வம்சம் அரசில நீடிக்க முடியும் எனக் கருதி பேரரசரும் சீர்திருத்தங்களைப் புகுத்த எண்ணினார்.
4. புரட்சிகரமானத் திட்டங்களைக் கொண்டுவந்து சீன சமுதாயத்தில் அதிசயிக்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென சீர்திருத்தவாதிகள் நினைத்தனர்.
5. தங்களின் தனித்திறமையைக் காட்டி, சீனா இன்னமும் பலம் பொருந்திய நாடே என மக்களுக்குக் காட்ட மஞ்சுக்கள் விரும்பினர்.
6. அரசப் பிரதிநிதி சாங்-சீங்-துங் (**Chang-Chick-Jung**) தன்னுடைய கற்றுக்கொள் (**Learn**) என்ற நூலின் மூலமாக மேல்நாட்டுக் கருத்துக்களின் அடிப்படையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்று கூறி அதற்கான ஆதரவினை மக்களிடம் திரட்டியிருந்தார். எனவே சீர்திருத்தங்களின் அவசியத்தை உணர்ந்த மஞ்சுக்களும் சீர்திருத்தங்களைத் தொடர்ச்சியாகக் கொண்டுவர முற்பட்டனர்.

**கல்வித்துறை சீர்திருத்தங்கள்**

கல்வித் துறையில் வியக்கத்தக்க மாற்றங்களை, ஏற்படுத்தக் கூடிய வகையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. சீனக் கல்வி முறையின் பின் தங்கிய நிலை, குறைபாடு ஆகியவை உணரப்பட்டன. அத்துடன் மேல்நாட்டுக் கல்வியின் மேம்பட்ட நிலையும் உணரப்பட்டது. எனவே முதல் கட்டமாகச் சீன மாணவர்கள் அரசின் செலவில் மேல் நாடுகளுக்குச் சென்று கல்வி கற்றுவர அனுப்பப்பட்டனர். அரசாங்கப் பணிகளில் ஈடுபடவேண்டும் என்று விரும்பியவர்களுக்கென்று தனியே பள்ளிகள் திறக்கப்பட்டன. இலக்கியச் சார்புடைய பள்ளிகளும், தொழில் சம்பந்தப்பட்ட பள்ளிகளும் நிறுவப்பட்டன. அவை மேற்கத்திய பள்ளிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டன. பழைய பாணியில் அமைந்திருந்த அரசு பொதுப்பணித் தேர்வுகள் முற்றிலும் ஒழிக்கப்பட்டன. 1902 ஆம் ஆண்டில் ஒரு ஆணை வெளியிடப்பட்டது. அதன் மூலம் சீனப் பொதுக் கல்வி முறை சீராக்கப்பட்டது. புதிய பள்ளிகள் திறக்கப்பட்டன.

1903 ஆம் ஆண்டு கல்வியின் மேம்பாட்டிற்காகவும், கண்காணிப்பிற்காகவும் கல்வி அமைச்சகம் தனிப் பிரிவாக உருவாக்கப்பட்டது. 1905 ஆம் ஆண்டு மற்றொரு ஆணை வெளியிடப்பட்டு அதன் மூலம் சீன இலக்கியங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட சீன அரசுப் பணித் தேர்வுகள் நீக்கப்பட்டன. புதிய கல்வி முறையில் பயின்றவர்களைப் பணியாளர்களாகத் தேர்ந்தெடுப்பதின் வாயிலாகச் சீனாவைப் புதியதோர் நாடாகப் புணர்நிர்மாணம் செய்ய இயலுமென அரசு நம்பியதன் விளைவாக இம்மாற்றம் செய்யப்பட்டது. கிளைடு அவர்கள் தந்துள்ள புள்ளி விவரங்களின் மூலமாக, 1909 - 1910 ஆம் ஆண்டுகளில் சீனாவில் 57,267 பள்ளிகளும், 89,362 ஆசிரியர்களும், 10,16,529 மாணவர்களும் இருந்தனர் என்று தெரியவருகிறது. கல்வியின் முன்னேற்றம், வளர்ச்சிக்கெனப் பெருந்தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சீன மாணவர்களுடன், கல்வியாளர்களும், அறிஞர்களும் பெருமளவில் ஜப்பான், அமெரிக்கா மற்றும் வேறு மேலைநாடுகளுக்குச் சென்று வந்தனர். அதனால் கல்வித்துறை மேன்மேலும் பெருகுவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டன. புதிய கல்விக் கோட்பாடுகளுக்கேற்ப சீன நூல்கள் வெளியிடப்பட்டன. அரசு அளித்த ஆதரவு காரணமாக புத்தக வெளியீட்டாளர்கள் பெருகலாயினர். அதன் விளைவாக இலக்கியங்கள், மொழிபெயர்ப்புகள் நூல்கள் அதிக அளவில் வெளிவந்தன. இவற்றால் சீனர்களின் பொது அறிவு பெருகியதுடன் தங்களுடைய நாட்டின் நிலையினைத் தெளிவாக உணர்ந்துக் கொள்ளவும் வாய்ப்புகள் பெருகலாயின. இத்தகைய குறுகியகால முன்னேற்றம் பழமைவாதிகளின் மூட நம்பிக்கைகளை மூட்டை கட்டப்பயன்பட்டன. வெளிநாடுகளுக்குச் சென்று படித்து திரும்பியோர் புரட்சிப்பாதைக்கு நேராக மக்களை வழி நடத்தினர்.

**படைச் சீர்திருத்தங்கள்**

சீனா-ஜப்பானிய போரில் சீனா அடைந்த தோல்விக்குப் படையமைப்பில் காணப்பட்ட குறைபாடுகளே காரணம் என்று பலரும் உணரலாயினர். எனவே படையைச் சீரமைக்க வேண்டும் என்ற எண்ணம் வலுப்பட்டது. ஆயினும் படையமைப்பை மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. எனவே 1909 ஆம் ஆண்டில் அரசு ஆணை ஒன்று வெளியிட்டது. படையமைப்பினை நவீனமாக்க வேண்டும் என்ற நோக்குடன் அது வெளியிடப்பட்டது. படைப்புணரமைப்பு வேலைகளுக்காக இளவரசர் தலைமையில ஒரு குழு உருவாக்கப்பட்டது. அப்போது சிஹலியில் கவர்னர் ஜெனரலாக இருந்த யுவான் ஷி கே படைச் சீர்திருத்தங்களுக்கு உயிரூட்டினார். படைத்துறையினை விரிவு அடையச் செய்ததுடன் மேலைநாட்டு அமைப்பு முறையில் அவற்றை மாற்றியமைத்தார். வீரர்களின் ஊதியம் அதிகரிக்கப்பட்டது. படை அதிகாரிகள் தகுதிக்கேற்ப அவர்களைப் பாராட்டி மரியாதை செய்யும் வழக்கம் ஏற்படுத்தப்பட்டது. 1906 ஆம் ஆண்டில், ஏற்கனவே வழங்கியிருந்த மாநிலப்படைகளின் அமைப்புடன் தேசியப்படையமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதற்கு வழி ஏற்படுத்தப்பட்டது. 1908 ஆம் ஆண்டில் பேரரசி சூஸி மரணமடைந்த பின்னரும் படைத்துறையினை நவீனமயமாக்குவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

## சமூகத்துறை

சீனர்களுக்கும், மஞ்சுகளுக்குமிடையே உயர்வு தாழ்வு என்ற பாகுபாடு மிகுதியாகக் காணப்பட்டதால் ஏராளமானத் திருமணத் தடைகள் இருந்தன. உயர்ந்த நிலையைச் சார்ந்தவர்கள் தாழ்ந்த நிலையிலுள்ள குடும்பத்தில திருமண உறவுகள் வைத்துக் கொள்ளுவதில்லை. எனவே சமுதாயத்தின் முன்னேற்றத்தை மனதிற்கொண்டு கலப்புத் திருமணம் ஆதரிக்கப்பட்டது. 1902 ஆம் ஆண்டு கலப்புத் திருமணச் சட்டங்கள் வெளியிடப்பட்டன. தம்முடைய இனத்தைச் சேர்ந்த பெண்களை மணந்துக் கொண்டு ஒதுங்கி வாழும் நிலை மாறியது. அதற்கு மாறாக கல்வியறிவு, அறிவாற்றல் நிரம்பப் பெற்றவர்களுக்கிடையே திருமண உறவுகள் ஏற்பட்டன. மேலும் சீனாவின் பழங்கால சமூக அமைப்பில் சில மாறுதல்கள் கொண்டுவரப்பட்டன. சிந்தனையாளர்களும், கல்வியாளர்களும் அயல்நாடுகளுக்குச் சென்று வந்தமையால் மேல்நாட்டுப் பண்பாடுகள் சீனாவில் புகுத்தப்பட்டன. மேலநாட்டு பழக்கவழக்கங்களைச் சீனாவில் கொண்டு வந்து செயல்படுத்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டன. காலத்தின் தேவைகளுக்கேற்ப மாறுதல்கள் ஒப்புக் கொள்ளப்பட்டுச் சமுதாய அமைப்பில் சீர்திருத்தக் கருத்துக்கள் வேரூன்றுமாறு செய்யப்பட்டன.

அபின் உண்ணுவதால் சமுதாயத்தில் ஏற்படக்கூடிய தீங்குகளும், கேடுகளும் உணரப்பட்டன. அபினைப் பயன்படுத்தி அல்லல் மிகுந்த அவலமான வாழ்வினை ஏற்படுத்திக் கொண்டுள்ள சீனமக்களைச் சீராக்க வேண்டுமென சீன அரசு கருதியது. அதற்கு 1906 ஆம் ஆண்டில் ஆதிக்க ஆணையொன்று வெளியிடப்பட்டது. அதன் மூலம் சீனாவிற்குள் அபின் கொண்டு வரப்பயன்படுத்தப்படும் பாதைகளை அடைக்க

வழிகள் கண்டறியப்பட்டன. அபின் கொண்டுவருபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். 1907 ல் ஆங்கில அரசு சீனாவில் அபினின் ஆதிக்கத்தைக் குறைப்பதற்கான வழிகளை மேற்கொள்ளுவதாக உறுதியளித்தது. உள்நாட்டில் அபின் உற்பத்தி தடுக்கப்பட்டது.

**ஆட்சித்துறை**

அரசாங்க அமைப்பிலும் ஆட்சித்துறையைச் சீர்படுத்தும் நோக்குடன் பல சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. தேவையில்லாத பதவிகள் ஒழிக்கப்பட்டன. பதவிகளை ஏலமிடும் முறை நிறுத்தப்பட்டது. வெளிநாட்டு மற்றும் வாணிப அமைச்சக அலுவலகங்கள் மாற்றியமைக்கப்பட்டன. அம்மாறுதல்களால் புதிய கோட்பாடுகளும், வெளிநாட்டு உறவுமுறைகளும் உருவாக்கப்பட்டன.

**சட்டத்துறை**

1902 ஆம் ஆண்டில் நீதித் துறையைச் சீர்படுத்த ஒரு குழு அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகளின் பேரில் 1905 ஆம் ஆண்டில் சட்டங்களை மாற்றியமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சட்டத்துறை முற்றிலுமாய்த் திருத்தி அமைக்கப்பட்டது. சட்டங்கள் எளிமை உடையதாய் மாற்றப்பட்டன. சிரச்சேதம் செய்தல் போன்ற கடுந்தண்டனைகள் நீக்கப்பட்டன.

**பொருளாதாரம்**

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் ஆராயப்பட்டன. உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. பொருளாதார முன்னேற்றம் கருதி பாலங்கள், இரயில் தண்டவாளங்கள் அமைத்தல், புதிய சாலைகள் போடுதல், வங்கிகளை நிறுவுதல் போன்ற பல பொதுப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. சுரங்க வேலைகளும் தொடங்கப்பட்டன. 1910 ஆம் ஆண்டில் அடிமைமுறை சீனாவில் முழுமையாக ஒழிக்கப்பட்டது.

**அரசியலமைப்பில் மாற்றங்கள்**

சீர்திருத்தவாதிகள், அரசியலமைப்பின் அடிப்படையில் முடியாட்சி இருக்க வேண்டும் என்று செயல்பட்டனர். அரசியலமைப்பு முறை வேண்டுமா? வேண்டாமா? என்ற வாதம் எழுந்தது. அரசியலமைப்பு முறை கொண்ட ஜப்பான் வலிமைமிக்க ரஷ்யாவைத் தோற்கடித்ததிற்கு முக்கியக் காரணம் ரஷ்யாவில் அரசியலமைப்பு முறை இல்லாததே என்று கூறினர். எனவே 1905 ஆம் ஆண்டு முதலே புதிய அரசியலமைப்பு முறைக்கு பெரும் ஆதரவு இருந்தது.

அரசியலமைப்பில் புதிய மாற்றம் தேவை என்று கூறியவர்களில் லியாங்-சி-சௌ **(Liang-chi-Chao)** என்பவர் சிறந்த எழுத்தாளர். சீன மக்களுக்கு நாட்டுப்பற்றை ஏற்படுத்தினார். இவர் தன்னுடைய 'அரசியல் செய்தி சங்கம்' **(Political Information Club)** மூலம் அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்கினார். ஜப்பானிய அரசியலைமைப்பின் அடிப்படையில் அமைந்த அரசியலைமைப்பை சீனாவில் உருவாக்க முடிவு செய்யப்பட்டது.

## 1908 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டம்

மக்களுக்கு வாய்ப்பளிக்கக் கூடிய அரசியலமைப்பு இல்லாததால்தான் சீனா பின்தங்கி உள்ளது என்பதை பேரரசி சூஸி உணர்ந்து கொண்டார். எனவே பிரதிநிதித்துவ மன்னர்களிடையே அரசியலமைப்பினை உருவாக்க எண்ணங்கொண்டார். மேல்நாட்டின் அரசியலமைப்பினைப் பற்றித் தெரிந்துவர சீனத் தூதுக் குழு ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அக்குழு 1906 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதி ஜப்பானைப் போன்ற அரசியலமைப்பை ஏற்படுத்த முடிவு செய்தது. 1908 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அவ்வரசியலமைப்பு ஜப்பானிய அரசியலமைப்பின் அடிப்படையில் அமைந்திருந்தது.

அதன்படி,

1. மஞ்சு வம்சத்தவரின் அதிகாரங்களும், உரிமைகளும் பாதுகாக்கப்பட்டது.
2. சீனாவில் புகுத்தப்படும் அனைத்துச் சீர்திருத்தங்களும் பேரரசின் ஒப்புதல் பெற்றே கொண்டுவரப்படும் என உறுதியளிக்கப்பட்டது.
3. மஞ்சு அரசு தொடர்ந்து ஆட்சியில் எப்பொழுதும் நீடிக்க வேண்டும். அதன் உரிமைகளைக் குறைப்பதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளக் கூடாது.
4. மாநிலங்களுக்குப் பயன்படும் வகையில் பல உரிமைகள் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டு படிப்படியாக சீர்திருத்தங்களையும், மாற்றங்களையும் புகுத்த வேண்டும்.
5. காவற்படைகளுக்கு அனைத்து அதிகாரங்களும் கொடுக்கப்படும்; நல்ல பயிற்சியும் தரப்படும்; தற்போது இருக்கும் அமைப்புகள் அனைத்துத் துறையிலும் மாற்றி அமைக்கப்படும்.
6. தற்பொழுது உள்ள தேவைக்கேற்ப சட்ட அமைப்புகள் மாற்றி அமைக்கப்படும்
7. மக்கள் கணக்கெடுப்பு முறை புதியமுறையில் துரிதமாக செயல்படுத்தப்படும்.
8. எல்லா குடிமக்களுக்கும் பேச்சு சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், சங்கம் அமைக்கச் சுதந்திரம் ஆகியவை அளிக்கப்படும்.
9. அனைவருக்கும் கல்வி அளிக்கப்படும்
10. நாட்டின் வரவு செலவுகள் ஆண்டுதோறும் சமர்ப்பிக்கப்படும்.
11. நாட்டின் வரவு செலவுகள் தணிக்கை செய்யப்படும்
12. பாராளுமன்ற முறை ஏற்படுத்த வகை செய்யப்பட்ட போதிலும், பாராளுமன்றத்தைக் கூட்டும் அதிகாரமும், கலைக்கும் அதிகாரமும், ஒத்திப்போடும் அதிகாரமும் மன்னருக்கே உண்டு
13. நெருக்கடி நிலை ஏற்பட்டால் மக்களை ஒருமுகப்படுத்தி செயல்படுத்த எத்தகையக் கட்டுபாடுகளையும் விதிக்க மன்னருக்கு உரிமை உண்டு.
14. வெளிநாட்டுத்தொடர்புகள், சட்டமியற்றுதல், போர்தொடுத்தல், போன்ற பல பிற செயல்களில் மன்னரின் முடிவே இறுதியானது. மன்னரின் ஆலோசனைப்படியே அனைத்துச் செயல்களும் நடத்தப்படும்.
15. அமைச்சர் குழு ஒன்று ஏற்படுத்தப்படும். அக்குழுவின் மூலம் மக்களின் குறைகள் கேட்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.
16. மக்களின் நல்வாழ்விற்கும், உடமைகளுக்கும பாதுகாப்பு அளிக்கப்படும்.
17. பேரரசின் பேராணையின்படி, படிப்படியாக ஒன்பது ஆண்டுகளில் (1971 க்குள்) புதிய அரசியலைமைப்பு செயல்படுத்தப்படும். இதற்கு ஒன்பது ஆண்டு திட்டம் என்று பெயர்.

இதன்படி முதன் முறையாக 1908 ஆம் ஆண்டில் மாநில சட்டசபைகளுக்குத் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. பிரதிநிதிகளுக்குக் குறைந்த அதிகாரம் கொடுக்கப்பட்டது. அவர்கள் எந்த பிரச்சினையானாலும் அவற்றைத் தாங்களே விவாதித்து பின்னர் முடிவை மட்டும் சட்டசபையில் தெரிவிக்க வேண்டும். இதன் மூலம் மக்களின் குறைகளையும், எண்ணங்களையும் மட்டும் தான் அரசர் தெரிந்துக்கொள்ள விரும்பினர். இத்தகையப் போக்கினை கண்டு மக்களும், பிரதிநிதிகளும் வெறுப்படைந்தனர். மன்னர் எப்பொழுதும் மன்னராகவே அதே அதிகாரங்களுடன் எவ்வித மாற்றமுமின்றி காணப்பட்டதால், மக்கள் எவ்வித உடனடி மாற்றங்களையும் காணமுடியவில்லை. பாராளுமன்றமும் மக்களின் குறைகளை எழுத்தளவில் பெற்றுக் கொள்வதற்காகவே இருந்தது. பாராளுமன்றம் மக்களின் குறைகள் நீங்க எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. எனவே புதிய அரசியலமைப்பு புதிதாக எதையும் சாதித்துவிடவில்லை என்று சீனர்கள் கருதினர்.

**மஞ்சு சீர்திருத்த இயக்கம் முடிவுறுதல்**

மஞ்சு சீர்திருத்த இயக்கப் பேராணைகள் வெளிவந்துக் கொண்டிருக்கும் போதே 1908 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் நாள் பேரரசர் குவாங்-க இறந்தார். அடுத்த நாளே பேரரசி சூஸியும் காலமானார். இதனால் சீர்திருத்தக் கருத்துக்களைத் தொடர்ந்து செயல்படுத்த முடியாத நிலை உருவாகியது. வலிமை, திறமை, ஆற்றல், தன்னம்பிக்கை ஆகியவற்றையே தமது ஆயுதங்களாகக் கொண்டிருந்த பேரரசின் மரணம் சீன அரசியலில் ஒரு பெரும் வெற்றிடத்தை உருவாக்கியது. அவரின் மறைவிற்கு பின் பூயீ என்னும் இளவயது பாலகர் ஒருவர் சீன அரியணையில் அமர்த்தப்பட்டார். அவரிடம் ஆட்சியைச் சிறப்பாகக் கொண்டு செல்வதற்கு திறமை இல்லாதிருந்தது. மேலும் சீர்திருத்தவாதிகளும், புரட்சிவாதிகளும் எதிரெதிராய் நின்றனர். புதுவிதமான அரசை அமைப்பதன் மூலம் மஞ்சுக்களை வீழ்த்த வேண்டும் என்ற எண்ணம் மக்களிடையே மேலோங்கி நின்றது. இந்நிலையில் 1911 ஆம் ஆண்டில் சீனப்புரட்சி மூலம் மஞ்சுக்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டனர். அத்துடன் மஞ்சு சீர்திருத்த இயக்கம் முடிவுற்றது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கவருடங்களில், சீனாவில் நாட்டைச் சீர்திருத்த மஞ்சு சீர்திருத்த இயக்கம் கொண்டு வரப்பட்டது. மிகத் தாமதமாக வந்த அச்சீர்திருத்தங்கள், எதையும் புதிதாக சாதிக்கப் போவதில்லை என மக்கள் கருதினர். இளஞ்சீனர்கள் இயக்கம் போன்ற அமைப்புகள் இரகசியமாகச் செயல்பட்டு புரட்சிக்கு வழிவகுத்தன. எனவே மஞ்சு சீர்திருத்த இயக்கம் காலம் கடந்த முயற்சியாகக் கருதப்பட்டது.

## 8. தோவேஜர் பேரரசி

சீன வரலாற்றில் புகழ்மிக்க இடத்தைப் பெற்றிருப்பவர்களுள் சீனப் பேரரசி சூஸி என்பவரும் ஒருவராவர். பேரரசர் சியன் பெங் (**Hsin-Feng**) 1860 ல் மரணமடைந்தபோது, பதவிமோகம் கொண்ட சூஸிக்கு அதிகாரத்தைக் கைப்பற்ற நல்ல வாய்ப்புக் கிட்டியது. சியன் பெங் மரணமடைந்த பின் அவரது இளைய மகனான சாய் - சுவான் (**Tasi - Chuan**) பட்டத்திற்கு வந்தார். பேரரசி தோவேஜர் அவரது பாதுகாவலராக இருந்து ஆட்சியை ஆரம்பித்தார். தான் கைப்பற்றிய ஆட்சியை 1908 ல் தான் இறக்கும் வரை தக்கவைத்துக் கொண்டார். அவருடைய ஆட்சிக்கால்தில் துங்-சி, குவாங்-சு என்ற இரு சீனர்கள் பேரரசர்களாக இருந்து வந்தனர். அவர்களுக்கும் அம்மையார் பாதுகாப்பாளராக இருந்து வந்தார். இவ்வாறு ஏறக்குறைய 48 ஆண்டு காலம் சீனாவை அவர் ஆண்டார்.

**அவருடைய கொள்கைகளும் கோட்பாடுகளும்**

பேரரசி கன்பூஷியத் தத்துவத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர். சமூக, அரசியல் செயல்களில் அந்தத் தத்துவத்தைப் பயன்படுத்தி தன் நிலையினை உயர்த்திக் கொண்டார். பழமைவாதியான அவரிடத்தில் அறிவு நுட்பமும், திடமான முடிவு எடுக்கும் திறமையும் குடி கொண்டிருந்தன. ஆனால் அவர் சுயநலமும், குறுகிய மனப்பாங்கும் உடையவராகக் காணப்பட்டார். தன் நாடு, தன் வம்சம் ஆகியவற்றைவிட தன்னுடைய நலமே பெரிதெனக் கொண்டார். தன்னுடைய நம்பிக்கைக்கு உரியவர்களின் துணையுடன் திரை மறைவில் இருந்துக் கொண்டு தன் காரியங்களை செய்து முடிக்கும் ஆற்றல் அவரிடம் இருந்தது.

**அரசி சூஸி ஆட்சிக்காலத்திய முக்கிய நிகழ்ச்சிகள்**

இவருடைய ஆட்சிக் காலத்தில்தான் பேரரசின் கதவுகள் மேலைநாடுகளின் வாணிபத்திற்கென திறந்து விடப்பட்டது. தைப்பிங் கிளர்ச்சி, இரண்டாம் அபினிப்போர், முதல் சீன ஜப்பானியப் போர், நூறு நாட்கள் சீர்திருத்தங்கள், பாக்சர் கலவரம், மஞ்சு சீர்திருத்தம் இயக்கம் ஆகியவை இவர் ஆட்சி காலத்தில் நடந்த முக்கிய

நிகழ்ச்சிகளாகும்.

**வெளிநாட்டு அலுவலகம் திறக்கப்படுதல்**

1866 - ஆம் ஆண்டு பேரரசியார் வெளிநாட்டு அலுவலகம் ஒன்றை திறப்பதற்கு நிர்பந்திக்கப்பட்டார். இதனால் வெளிநாடுகள், குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் சீனாவில் தங்கள் செல்வாக்கு மண்டலங்களை உருவாக்க வழி ஏற்பட்டது. அவர்களுக்கிடையே சலுகைப்போட்டி ஆரம்பமானது. சீனா என்ற முலாம்பழம் கூறுபோடப்பட்டது.

**கிறிஸ்தவ சமயம் பரவுதல்**

கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கள் சீனாவில் சமயத்தைப் பரப்புவதற்கு அனுமதி பெற்றார்கள். அவர்கள் சீனாவில் வேரூன்றியிருந்த பழமைவாதங்களையும், பழக்க வழக்கங்களையும் எள்ளி நகையாடினர். அவர்களின் சமயக் சடங்குகளைக் கண்டித்தனர். எனவே சீனர்கள் கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்களை வெறுத்தனர். இது 1870 ஆம் ஆண்டு டின்சென் படுகொலைக்குக் காரணமாய் இருந்தது.

**சே பூ ஒப்பந்தம்**

ஆங்கில சீனப் போர்களின் பொழுது பிரிட்டன் சீனாவிடமிருந்து சில சலுகைகளைப் பெற்றது. மேலும் சலுகைகள் பெற அவர்கள் முயன்றனர். மேற்கு பர்மா வழியாக சீனாவிற்கு தலைவழியைக் கண்டுபிடிக்க ஐந்து பேர்களடங்கிய குழு ரேமாண்ட் மார்கேரி என்பவரின் தலைமையில் கிளம்பியது. ஆனால் 1876 ஆம் ஆண்டு மார்கேரியும் அவருடன் சென்ற ஐவரும் கொல்லப்பட்டனர். இதன் காரணமாக சேபூ ஒப்பந்தம் கையெழுத்தானது. சீனா 2,00,000 சீன நாணயங்களை இழப்பீடாக ஆங்கிலேயருக்குக் கொடுத்தது. செய்தத் தவறுக்கு மன்னிப்பு கேட்டது. பிரிட்டன் மேலும் பல சலுகைகளைப் பெற்றுக் கொண்டது.

**லிபோரியர் உடன்பாடு**

1884 ஆம் ஆண்டு சீனா பிரான்ஸ் நாட்டின் லிபோரியர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. அதன்படி, சீனாவின் தென்மேற்கு எல்லைப் பகுதியில் சீனாவின் மேலாதிக்கத்தை பிரான்ஸ் ஏற்றுக் கொண்டது. அதுபோல், அன்னாம் பகுதியில் பிரான்சின் மேலாதிக்கத்தை சீனா ஏற்றுக்கொண்டது. இவ்வாறு சீனப்பகுதிகள் பிரான்சின் வசம் வந்தன.

**பீட்டர்ஸ்பர்க் உடன்படிக்கை**

ஐரோப்பிய நாடுகள் சீனாவை ஆக்கிரமிக்கும்பொழுது ரஷ்யா சும்மா இருக்க விரும்பவில்லை. அதுவும் சீனாவுடன் பீட்டர்ஸ்பர்க் உடன்படிக்கை செய்துக்கொண்டது. அதன்படி துருக்கிஸ்தானத்திலும், மங்கோலியாவிலும் தூதரகங்களை வைத்துக்கொள்ள ரஷ்யா உரிமை பெற்றது.

**சீனாவில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்**

பேரரசியின் காலத்தில் சீனாவில் விழிப்புணர்வு ஏற்பட்டு சீர்திருத்த இயக்கங்கள் தோன்ற வழி ஏற்பட்டது. லி-ஹங்-சங், சன்-குவோ-பான் போன்றோர் சீனா மேலைநாட்டு வழிமுறைகளைப் பின்பற்றி முன்னேற்றம் காண வேண்டுமென்று வலியுறுத்தினர். மக்களும் நாட்டைச் சீர்திருத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்தனர். சீனாவில் மேற்கத்திய பாணியில் கல்வி கற்பிக்க பள்ளிகள் திறக்கப்பட்டன.

**சீனா தொழில் மயமாக்குதல்**

பேரரசியின் காலத்தில சீனா தொழில் மயமானது - செங் திட்டத்தின் அடிப்படையில் தொழிற் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டு சீனர்களுக்கு தொழில் நுட்பங்கள் கற்பிக்கப்பட்டு தொழிற்சாலைகளும் பெருகின. ஆயினும் பழமைவாதிகளின் ஆதரவின்மையால் சீனாவில் விரைவாக தொழில்வளம் பெருகவில்லை.

**நூறு நாள் சீர்திருத்தம்**

காங்-யூ-வையினால் பெரிதும் கவரப்பட்ட பேரரசர் குவாங்-சு நூறு நாள் சீர்திருத்தத்தினை

வெளியிட்டார். கன்பூசியக் கோட்பாட்டின் அடிப்படையிலான அரசை நவீனகால அரசாக மாற்றும் நோக்குடன் ஏராளமான ஆணைகள் வெளியிடப்பட்டன. புதிய நிர்வாக முறையினை ஏற்று அவசியமற்ற பதவிகள் நீக்கப்பட்டன. அதன் விளைவாக மஞ்சுப் பிரபுக்கள் தங்கள் பதவிகளையும், செல்வாக்கையும் இழந்தனர். இதனால் கன்பூசிய செல்வாக்கு முழுமையாக நிர்வாகத்திலிருந்து அகற்றப்பட்டது. பாதிக்கப்பட்ட அதிகாரிகள் பேரரசியை நாடி இதில் தலையிடச் செய்தனர். அவர் ஒரு பழமைவாதியானதால் எல்லாச் சீர்திருத்தங்களையும் எதிர்த்தனர். அவரது தலையீட்டால் பீதி அடைந்த சீர்திருத்தக்காரர்கள் அவரைக் கைது செய்ய முயற்சி செய்தனர். ஆனால் அம்முயற்சி தோல்வி அடைந்தது. அதிகாரத்தைக் கைப்பற்ற விரைவாகச் செயல்பட்ட பேரரசி, பேரரசர் உடல் நலமில்லாததால்தானே ஆளுநராக இருப்பதாகக் கூறி அரசைக் கைப்பற்றினார். பேரரசின் தோட்டத்தில் அமைந்திருந்த ஒரு சிறிய தீவில் பேரரசர் கைதியாக வைக்கப்பட்டார். சீர்திருத்த இயக்கம் திடீரென்று முடிவு பெற்றது.

**பாக்சர் கலவரத்தின் போது தோவேஜர் பேரரசி**

பாக்சர் கலகம் ஆரம்பத்தில் மஞ்சுக்களுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டது. அக்கலகத்தின் மஞ்சுக்களைப் பதவியிலிருந்து அகற்ற வேண்டும் என்று விரும்பினார். ஆனால் பேரரசின் தலையீட்டினால் கலகக்காரர்கள் அயல்நாட்டவரின் எதிர்ப்பாளர்களாக மாறினர். பேரரசின் ஆதரவு பெற்ற பாக்சர்கள் மிகத் தீவிர நடவடிக்கைகளில் இறங்கினர். குறுகியகாலத்தில் வடசீனா முழுவதிலும் வன்முறை தலைவிரித்தாடியது. 1900 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அரசாங்கமே அயல்நாடுகளை எதிர்த்து அயல்நாட்டுத் தூதரகங்களை முற்றுகையிட பாக்சர்களுக்கு அனுமதி வழங்கியது. எனவே அயல்நாடுகளின் கூட்டுப்படைகள் சீனாவை அடைந்தன. அவைகள் டியன்சிங் நகரைக் கைப்பற்றி பீக்கிங்கில் தங்கள் கொடியை நாட்டினர். எனவே பேரரசி மாறுவேடம் பூண்டு அங்கிருந்து தப்பினார்.

**சீனாவை சீர்திருத்த முயற்சித்தல்:**

பாக்சர் கலகத்தின் போது தப்பி ஓடிய பேரரசி 1902 ஆம் ஆண்டு பீக்கிங்கிற்குத் திரும்பினார். பாக்சர் கலகம் அவருக்கு ஏற்பட்ட ஒரு கசப்பான அனுபவமாகும். வரலாறு காணாத அளவுக்கு அழிவைத் தேடித்தந்ததிற்கு அவர் வெட்கமும் வேதனையும் அடைந்தார். அயல்நாட்டினரால் ஏற்பட்ட அவமானத்தை நீக்க முற்பட்டவருக்கு மேலும் அவமானமும் தலைகுனிவும் ஏற்பட்டன. இறுதியில் சீனாவை சீர்திருத்தங்கள் மூலம் முன்னேற்றமடையச் செய்ய விரும்பினார். தன் பதவியையும் செல்வாக்கையும் காப்பாற்றிக்கொள்ள அதுதான் ஒரே வழி என எண்ணினார். எனவே அவர் பல சீர்திருத்தங்களை வெளியிடலாயினார். அவருடைய சீர்திருத்தங்களில் கல்வி, இராணுவம், கப்பற்படை, அரசாங்க அமைப்பு முறை, அபினியை ஒழித்தல் போன்ற பலவித துறைகள் இடம்பெற்றன. எனினும் அவருடைய சீர்திருத்த முயற்சிகளில் மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. மக்களிடையே ஏமாற்றமும் ஏக்கமும் மிகுந்தன. இதுவே மஞ்சுக்களுக்கு எதிரான புரட்சியை உருவாக்கியது.

**சூஸியின் மரணம்**

பேரரசி தன்னுடைய 73-வது வயதில் நோய்வாய்ப்பட்டார். "பழைய புத்தர்" **(Old Buddha)** என்று அழைக்கப்பட்ட அவர் 1908 ஆம் ஆண்டு மரணமடைந்தார். அவருடைய மரணத்திற்கு முன் தினம் 1908 ல் நவம்பர் 14 ஆம் நாள் பேரரசர் குவாங்-சு என்பவரும் மாண்டுபோனார்.

**பேரரசியின் வெற்றிக்குக் காரணங்கள்**

ஒரு பெண் சகல அதிகாரங்களையும், செல்வாக்கையும் பெற்று சுமார் 48 ஆண்டு காலம் சீன அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வந்ததற்கு கீழ்கண்ட காரணங்கள் முக்கியமானவை.

1. இவர் இளம் சிறரசர்களைப் பதவியில் அமர்த்திவிட்டு தான் காப்பாளராக அல்லது ஆளுநராக

இருந்ததால் அரசாங்கத்தைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வது எளிதானது.

2. ஆட்சியாளரும், ஆட்சி செய்யப்படுவோரும் கன்பூசியக் கோட்பாடுகளைப் பின்பற்றச் செய்தார். பழமைவாதிகளின் ஒத்துழைப்பு பேரரசிக்கு இருந்தது. இதனால் சுமார் அரை நூற்றாண்டு காலம் ஆட்சியால் நிலைபெற்று இருக்க வழி ஏற்பட்டது.

4. காலத்தின் தேவைக்கு ஏற்ப அவர் மக்களால் ஊக்குவிக்கப்ட்டார்.

5. குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டதால், குற்றங்கள் குறைந்தன. நாட்டில் அமைதி ஏற்பட்டது.

மஞ்சு வம்ச அரசர்கள் வரிசையில் தோவேஜர் முக்கிய இடம் வகித்தார். தன்னுடைய வம்சத்திற்கு பெருமை தேடித் தந்தார். ஆனால் அவருடைய சர்வாதிகார ஆட்சியில் சீனா மறுமலர்ச்சி பெறத் தவறிவிட்டது. அவர் இறந்த மூன்றாண்டுகளுக்குள்ளாக மஞ்சு வம்சம் தூக்கி எறியப்பட்டது.

## ஆங்கில-ஜப்பானிய உடன்படிக்கை

1902 ஆம் ஆண்டின் ஆங்கில-ஜப்பானிய உடன்படிக்கை ஜப்பானின் வெளிநாட்டு விவகார வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. ஒரு ஆசிய நாடு முதல் முதலில் ஒரு ஐரோப்பிய நாட்டுடன் உடன்படிக்கை செய்துக்கொண்டது. இதனால் ஜப்பானின் பெருமை உலக அரங்கில் உயர்ந்தது. இங்கிலாந்தின் தனித்திருக்கும் கொள்கையை இது முடிவுக்குக் கொண்டு வந்தது.

முதல் சீன – ஜப்பானிய போரின் முடிவில், மூவர் தலையீட்டினால் "லியோடுங் தீபகற்பத்தை" ஜப்பான் சீனாவுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. வெற்றிக் கனியைத் தட்டிப் பறித்த இந்த மூவர் குறுக்கீடு ஜப்பானை சிந்திக்க வைத்தது. அது கீழ்க்கண்ட உண்மைகளை உணர்ந்துக்கொண்டு அதற்கு ஏற்ப தன்னுடைய அணுகுமுறையை மாற்றி அமைத்தது.

1. ஐரோப்பிய அரசியலில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வது.

2. ரஷ்யாவுடன் மோதல் தவிர்க்க முடியாதது.

மேற்கண்ட காரணங்களால் ரஷ்யா, ஜெர்மனி, பிரான்சு ஆகிய நாடுகளை எதிர்க்க பலமான கூட்டு அவசியம் என்பதை ஜப்பான் உணர்ந்தது. அதன் விளைவே 1902 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆங்கில ஜப்பானிய உடன்படிக்கை ஆகும்.

ஆங்கில ஜப்பானிய உடன்படிக்கை பற்றி விவாதம் 1898 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்திலும், செய்தித் தாள்களிலும் பரவத் துவங்கியது. ஜப்பானின் உதவிக்கரம் பிடிக்க ரஷ்யா 1901 ஆம் ஆண்டில் முயன்றது. எனவே ஜப்பானின் நேசக்கரம் பற்ற பிரிட்டன் அவசரப்பட்டது.

**ஆங்கில - ஜப்பானிய உடன்படிக்கை**

பிரிட்டனும், ஜப்பானும் 1902 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் நாள் நட்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. சாம்பர்லின், கிடோ ஆகிய பிரதிநிதிகள் கலந்துக்கொண்டு பேசி உடன்பாடு கண்டனர்.

**உடன்படிக்கையின் கூறுகள்**

1. சீனா, கொரியா ஆகிய நாடுகளுக்கிடையே உள்ள பாதுகாப்பு பராமரிக்கப்பட வேண்டும். அப்பொழுது காணப்படும் எல்லையமைப்பு எதிர்க்காலத்தில் மாற்றப்படாமல் பாதுகாக்கப்படும்.

2. சீனாவிலும் கொரியாவிலும் அனைத்து வலலரசுகளுக்கும் வாணிபம் மற்றும் பொருளியல் நடவடிக்கைகளுக்கு சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

3. இரு அரசுகளும் அப்பகுதியில் தங்கள் வாணிப நலன்களைப் பாதுகாக்க உறுதிபூண்டன.

4. இந்தப் பாதுகாப்பு முயற்சியில் இரு அரசுகளில் (இங்கிலாந்து, ஜப்பான்) ஒன்று போரில் ஈடுபட்டால் மற்றொரு அரசு நடுநிலை வகித்துப் பிறநாடுகள் அதில் தலையிடாதவாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும். வேறு ஏதாவது ஒரு நாடு பகை நாட்டிற்கு உதவினால், உடனே நடுநிலை வகிக்கும் நாடு உதவிபுரிய வேண்டும்.

5. இந்த உடன்படிக்கை ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டும்.

**ஒப்பந்தத்தின் விளைவுகள்:**

1. ரஷ்யாவின் சீன ஊடுருவலைத் தடுக்கவும், சீனாவில் அதற்குள்ள செல்வாக்கைக் குறைக்கவும் ஏற்பட்டதே இவ்வொப்பந்தம் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவும், தம் செல்வாக்கை நிலை நாட்டவும் ரஷ்யாவும், பிரான்சும் உடன்பாடு செய்துக் கொள்ள முடிவு செய்தன.

2. சீனாவுடன் ஒப்பந்தம் செய்துக் கொண்டு ரஷ்யா தரைப்படைகளை அங்கிருந்து 18 மாதங்களுக்குள் விலக்கிக் கொள்வதாக உறுதியளித்தது.

3. ரஷ்யா, பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகள் உறவை ஏற்படுத்திக் கொண்டன. பிரான்ஸ், ரஷ்யாவிற்கு உதவி செய்ய வேண்டும் என்று உளமாற நினைக்கவில்லை. எனவே ரஷ்யாவின் நிலைமை பலவீனமானது.

4. கொரியாவின் மீது ஜப்பான் கொண்ட ஆர்வத்தை இங்கிலாந்து அங்கீகரித்தால் 1910 ஆம் ஆண்டு ஜப்பான் கொரியா மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றிக் கொண்டது.

5. ஆங்கிலோ-ஜப்பானிய உடன்பாட்டின் மூலம் ஜப்பான் உலக வல்லரசு நாடுகளுடன் இணைத்துப் பேசப்பட்டது. ஆசியாவில் முக்கிய நாடாக அது கருதப்பட்டது. மேற்கத்திய நாடுகளின் நெருங்கியத் தொடர்பு அதற்குக் கிடைத்தது.

6. இந்த உடன்பாட்டின் தைரியத்தால்தான் ரஷ்யா மீது ஜப்பான் போர் தொடுத்தது.

7. 1917 ஆம் ஆண்டு முதல் உலகப்போர் ஆரம்பமானதும், 21 கோரிக்கைகளை சீனாவிடம் ஜப்பான் கேட்டது. சீனா அவற்றை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஜப்பான் வற்புறுத்தியது. இதற்கும் இந்த உடன்படிக்கை கொடுத்த தைரியம்தான் காரணம் என்று கூறப்படுகிறது.

**ஆங்கிலோ - ஜப்பானிய உடன்படிக்கையின் முக்கியத்துவம்.**

பன்னாட்டு ஒப்பந்தங்களில் 1902ல் செய்துக்கொண்ட இந்த ஆங்கிலோ-ஜப்பானிய உடன்படிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. உலக வரலாற்றில் புதிய திருப்புமுனையை ஏற்பட வைத்தது. ஜப்பானைப் பற்றி உலக நாடுகள் தெரிந்துக்கொண்டன. ஒரு சின்னஞ் சிறிய ஆசிய நாடு வல்லரசான பிரிட்டனுடன் முற்றிலும் சமமான நிலையில் இருந்து ஒப்பந்தம் செய்துக் கொண்டதால் ஜப்பானின் அந்தஸ்து வெகுவாக உலக அரங்கில் உயர்ந்தது. ஐரோப்பிய அரசியல் மற்றும் இராணுவக் கூட்டுகளில் ஜப்பானும் சேர்ந்துக் கொண்டது. பிரிட்டனுடனான நட்பு ஜப்பானுக்கு தைரியத்தையும், துணிச்சலையும் அளித்ததால் ரஷ்யாவை எதிர்க்க முற்பட்டு 1904 ல் ரஷ்ய-ஜப்பான் போர் மூண்டது.

**10. ரஷ்ய - ஜப்பானியப் போர் 1904 - 1905**

உலக வரலாற்றிலேயே முக்கியப் போராக ரஷ்ய - ஜப்பானியப் போர் கருதப்படுகிறது. இது உலக வரலாற்றில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் கிழக்கு ஆசியாவில்

ஐரோப்பிய வல்லரசுகள் தங்கள் ஏகாதிபத்திய ஆதிக்க விஸ்தரிப்பைத் தடையின்றி நடத்தி கொண்டிருக்கும் போது அப்பகுதியில் சக்திச் சமநிலையை அடியோடு மாற்றி அமைக்கும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாக இப்போர் கருதப்படுகிறது. மெய்ஜிப் புரட்சிக்குப் பின் ஜப்பான் முன்னேற்றப் பாதையில் சென்று ஏகாதிபத்திய எண்ணம் கொண்டு செயல்பட்டதால் இப்போர் ஏற்பட்டது. இப்போர் 20 ஆம் நூற்றாண்டின் பன்னாட்டு ஒப்பந்தங்களை முற்றிலும் மாற்றியமைத்தது.

## போருக்கு முன்னர் ஜப்பான்-ரஷ்யா நிலைமை

### ஜப்பானில் தேசிய எழுச்சி

ஜப்பானில் மிகாடோவின் முன்னிலை மீட்சிக்குப் பிறகு தேசிய எழுச்சி ஏற்பட்டது. சீனாவிடமிருந்து கற்றுக்கொண்ட பாடத்தை ஜப்பான் மறக்கவில்லை. அத்தகைய நிலைமை தனக்கு வரவேண்டாம என்று ஜப்பான் தன்னை தயார் செய்துக் கொண்டது. ஜப்பான் நவீன ஆயுதங்களை அறிந்துக்கொண்டது. தன் குடிமக்களுக்கும் கட்டாய இராணுவ பயிற்சியைக் கொடுத்தது. வெளிநாட்டு போர் நுணுக்கங்களை அறிந்து வர திறமையான படைத்தலைவர்களை அந்நாடுகளுக்கு அனுப்பியது. இவ்வாறு ஜப்பான் நவீன மயமாக்கப்பட்டதால் அது தன்காலிலேயே நிற்கும் திறமையும், தன்னம்பிக்கையும் பெற்று வலிமையுடன் எழுச்சி பெற்றது.

பாக்சர் கலகம் ஏற்பட்டபொழுது மஞ்சூரியாவிலிருந்த ரஷ்ய உடைமைகளுக்கும், இருப்புப் பாதைகளுக்கும் சேதம் ஏற்பட்டதால் ரஷ்யா தன் படைகளை அனுப்பியது. ரஷ்யாவைப் போலவே ஜப்பானுக்கும் மஞ்சூரியாவை இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. மேலும் ஜப்பானின் எழுச்சியையும் அதன் வேகத்தையும் துரித முன்னேற்றத்தையும் கண்ட இங்கிலாந்து, ரஷ்யாவிற்கு எதிராக ஜப்பானுடன் 1902 ல் உடன்பாடு செய்து கொண்டது. ஜப்பான் தன் திறமையை வெளிப்படுத்த ரஷ்யாவுடன் போருக்குத் தயாரானது.

### ரஷ்யாவின் நிலை

ரஷ்யாவில் பொருளாதாரம் சீர் குலைந்திருந்தது. அது சீனாவை நம்பியிருந்தது. மஞ்சூரியாவை பலப்படுத்தி தன் வலிமையைப் பெருக்கலாம் என்று வீணாக பெரும் பொருள் நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டது. ரஷ்யாவுக்கென்று தனியே துறைமுகங்களில்லை. அதனிடம் கடற்படை வசதியுமில்லை. அது தன் படைகளை நவீனப்படுத்தவுமில்லை. ஆனால் அது ஆதிக்கப் பேராசை கொண்டு மஞ்சூரியா, கொரியா ஆகிய பகுதிகளிலும் மத்திய ஆசியாவிலும் தன் மேலாண்மையை ஏற்படுத்த முற்பட்டது. ஏற்கனவே ஆதிக்க விரிவாக்கத் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்த ஜப்பானுடன் மோத வேண்டிய சூழ்நிலை உருவானது.

### போருக்கான காரணங்கள்

ரஷ்ய- ஜப்பானியப் போருக்கு ஓரிரு காரணங்களைக் குறிப்பிட்டுக் கூற முடியாது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆரம்பகாலம் முதற்கொண்டே இருநாடுகளும் போட்டியையும், பகைமையையும் வளர்த்துக் கொண்டன. ஆனால் ஜப்பான் இதனை மறந்துவிடாது காலம் கனியட்டும் என்று காததிருந்தது.

### 1. சாகாலின் தீவு கைப்பற்றல்

ஜப்பானுக்குச் சொந்தமான சாகாலின் தீவை, 1875 ஆம் ஆண்டு ரஷ்யா கைப்பற்றிக் கொண்டது. அப்போது ஜப்பான் மிகாடோவின் முன்னிலை மீட்சியில் தன்னை உருவாக்க முயற்சித்துக் கொண்டிருந்தது. அது போருக்கு தயார் நிலையில் இல்லை.

### 2. மூவர் குறுக்கீடு

முதல் சீன - ஜப்பானியப் போரில் தோற்றச் சீனாவிடமிருந்து ஜப்பான் பார்மோசா, யெஸ்கடோராங்,

லியோடுங் தீபகற்பம் மற்றும் பனி உறையாத போர்ட் ஆர்தர் துறைமுகம் ஆகியவற்றைப் பெற்றது. இது ரஷ்யாவிற்கு கடுமையானக் கசப்பை ஏற்படுத்தியது. ரஷ்யாவின் ஆதிக்கத் திட்டத்தை முறிப்பதாக அது இருந்தது. எனவே எப்படியாவது லியோடுங் தீபகற்கத்தைப் பெற்றே தீர்வது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்த ரஷ்யா ஜெர்மனி பிரான்ஸ் ஆகிய வல்லரசுகள் துணையுடன் ஜப்பானை அச்சுறுத்தியது. மூன்று பெரிய வல்லரசுகளின் நிர்ப்பந்தத்திற்கு ஜப்பான் பணியவேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்குக் காரணமாயிருந்தவர்களை பழிதீர்க்க தக்கத் தருணத்தை ஜப்பான் எதிர்நோக்கி இருந்தது.

### 3. ரஷ்யா போர்ட்ஆர்தரைப் பெறுதல்

லியோடுங் தீபகற்பம் சீனாவின் கட்டுப்பாட்டிற்குள் சென்றதும் ரஷ்யா சீனாவிடம் இருந்து போர்ட் ஆர்தரை இருபத்தைந்து ஆண்டு குத்தகைக்குப் பெற்றுக் கொண்டது. இது ஜப்பானுக்குக் கடுமையான அவமானமாய் இருந்தது. வெற்றிகனியின் சுவையை அனுபவிக்க முடியாதவாறு ரஷ்யா ஏமாற்றிக் பறித்துச் சென்றது ஜப்பானுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

### 4. ஆங்கில - ஜப்பானிய உடன்படிக்கை

கிழக்காசியாவில் ரஷ்யாவின் ஆதிக்க விஸ்தரிப்பு கண்டு இங்கிலாந்தும் அச்சம் கொண்டது. எனவே ஜப்பானும், பிரிட்டனும் 1902 ல் ஒரு உடன்பாடு செய்துக் கொண்டன. இது ரஷ்யாவிற்கு எதிரான உடன்படிக்கையாகும். இதன் மூலம் கிழக்காசியாவில் ஜப்பான் ஒரு முக்கிய சக்கியாக உயர்வு பெற்றது. ஜப்பானை எதிரி நாடொன்று தாக்கினால் இங்கிலாந்து உதவிக்கு வருவதாக உறுதி கூறப்பட்டது. இது ஜப்பானுக்கு மிகப்பெரிய நாடான ரஷ்யாவைத் தாக்குவதற்கு தன்னப்பிக்கையும், துணிச்சலையும் கொடுத்தது.

### 5. டிரான்ஸ் சைபீரியன் இருப்புப் பாதை

1899 ல் ரஷ்யா டிரான்ஸ் சைபீரியன் இருப்புப்பாதையை தான் குத்தகைக்கு எடுத்துள்ள போர்ட் ஆர்தர் துறைமுகம் வரையில் நீட்ட விரும்பியது. அவ்வாறு போர்ட் ஆர்தர் துறைகத்திற்கு இருப்புப்பாதை செல்ல வேண்டுமானால் மஞ்சூரியா வழியாக வினாடி வாஸ்டாக் சென்று போர்ட் ஆர்தரை இணைப்பதாக அமையும். மஞ்சூரியாவிலிருந்து, வினாடிவாஸ்டாக் சென்று மீண்டும் போர்ட் ஆர்தருக்குத் திரும்பும் வழி நீளமாக இருப்பதால், மஞ்சூரியாவிலுள்ள ஹார்பின் என்ற இடத்திலிருந்து மஞ்சூரியாவின் தலைநகரான முக்டன் வழியாக லியோயாங் சென்று போர்ட் ஆர்தரை அடைவதை சுருக்கமான நேர்வழியாகக் கணக்கிடப்பட்டு அந்த இருப்புப்பாதை நீட்டப்படும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. அதே சமயத்தில் போர்ட் ஆர்தரில் வலிமையான பாதுகாப்புக் கோட்டைகளை அமைக்கவும், தாலின் வளைகுடாவில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவும் ரஷ்யா முனைந்தது. மஞ்சூரியாவில் ரஷ்யாவின் இந்த செல்வாக்கு ஜப்பானுக்கு ஆத்திரத்தை மூட்டியது.

### 6. மஞ்சூரியாவில் ஆதிக்கப்போட்டி

மஞ்சூரியா சீனாவின் வடகிழக்கே அமைந்த பகுதி. லியோடுங் தீபகற்பம் இதனுடன் இணைந்து காணப்பட்டது. அங்கு கணிமவளம், நிலவளம் மிகுந்திருந்தது. உணவுப் பொருட்கள் பஞ்சமின்றி விளையும் மஞ்சூரியா, சீனாவின் ஒரு பாகமாக இருந்தது. 1895 க்குப் பின் மஞ்சூரியாவைக் கைப்பற்றுவதறகு ரஷ்யா பலவகைகளிலும் முயன்று லியோடுங் தீபகற்பத்தை 25 ஆண்டகளுக்குக் குத்தகையாக எடுத்தது. இருப்புப் பாதையை அமைத்துக் கொண்டு அதைப் பாதுகாப்பது என்ற போர்வையில் ரஷ்யா தன் படையை அங்கு வைத்திருந்தது. தொழில் வளம் பெற்ற ஜப்பான் மஞ்சூரியாவை அடைய விரும்பியது. இந்தப் போட்டி போருக்கு வழி வகுத்தது.

### 7. கொரியாவிற்கான போட்டி

ஷிமோனோ செகி உடன்படிக்கையின் மூலம் கொரியா மீது தாராள உரிமையை ஜப்பான் பெற்றது.

அது கொரியாவை நவீனப்படுத்த முயன்றது. அதை எதிர்த்து பல வன்முறைச் செயல்கள் நடந்தன. கொரியா ராணியாரும் அவருடைய பாதுகாவலர்களும் கொல்லப்பட்டனர். தப்பிய கொரிய அரசர் ரஷ்ய தூதரகத்தில் தஞ்சம் புகுந்தார். ரஷ்யாவின் ஆதிக்கம் கொரியாவில் படர ஆரம்பித்தது. இதனை ஜப்பான் எதிர்த்தது. மேலும் மஞ்சூரியாவில், ரஷ்யாவிற்கு தனிப்பட்ட அந்தஸ்தைத் தர ஜப்பான் ஒப்புக் கொண்டது. அதே போன்று தனக்கு கொரியாவில் அந்தஸ்து தர வேண்டுமென்று ஜப்பான் ரஷ்யாவிடம் கொரியது. இதை ரஷ்யா மறுத்ததால் போர் ஏற்படுவது தடுக்க முடியாதாயிற்று.

**உடனடி காரணம்**

கொரியாவில் மரம் வெட்டும் உரிமையை ரஷ்யா பெற்றிருந்தது. அதுபோல மஞ்சூரியாவில் இருப்புப் பாதை அமைக்கும் உரிமையைப் பெற்று போர்ட் ஆர்தர் வரை இருப்புப் பாதையை அமைந்திருந்தது. 1904 ல் ரஷ்யா மரம் வெட்டுதலைக் காரணமாகக் கொண்டு தன் படைகளை கொரியாவிற்கு அனுப்பியது. அப்படை யாலு நதியைக் கடந்து கொரியாவில் நுழைந்து ஒரு துறைமுகத்தை - தன் வசப்படுத்தியது. இதனைக் கண்ட ஜப்பான் ரஷ்யாவுடன் பேச்சு வார்த்தைக்கு இணங்கியது. ஆனால் ரஷ்யா பேச்சுவார்த்தைக்குத் தயாராக இல்லை. எனவே கொரியாவுடன் தனக்குள்ள உறவுகளைத் துண்டித்துக் கொண்டு 1904 ஆம் ஆண்டு பிப்ரவரி 8 ஆம் நாள் ஜப்பான் போரில் இறங்கியது.

## போரின் போக்கு

**போர்ட் ஆர்தரில் போர்**

ஜப்பான் தன் படைகளைத் தயார் நிலையில் வைத்திருந்ததால் உடனடியாகப் போரில் இறங்கியது. தளபதி டோகோ என்பவரின் தலைமையில் ஜப்பானியப் படைப் போர்ட் ஆர்தருக்குச் சென்றது. இருதரப்புப் படைகளும் மோதிக்கொண்டன. ஜப்பானிலிருந்து போர்க்கருவிகள் வருவதை ரஷ்யாவால் தடுக்க முடியவில்லை. ஜப்பானியப் படை ரஷ்யப் படைகளை நாசப்படுத்தின.

**யாலு நதிப்போர்**

யாலு நதிக்கரையில் நடந்த போரிலும் ரஷ்யப் படைகளை ஜப்பானியப் படைகள் திக்குமுக்காடச் செய்தன. ரஷ்ய படையில் ஏராளமான வீரர்கள் கொல்லப்பட்டனர்.

**முக்டன் நகர்நோக்கி முன்னேற்றம்**

யாலுவில் வெற்றிபெற்ற ஜப்பானியப் படையின் தளபதி குதோபி என்பவரின் தலைமையில் ஜப்பானியப் படைவீரர்கள் மேலும் முன்னேறி மஞ்சூரியாவின் தலைநகரான கடன் நகரை நோக்கிச் சென்றனர். அங்கு 1905 பிப்ரவரி 23 ஆம் நாள் முதல் மார்ச் 10 ஆம் நாள் வரை போர் நடைபெற்றது. ஜப்பானியப் படைகள் நாட்டுப்பற்றுடனும் தன்னம்பிக்கையுடனும் போரிட்டு ரஷ்யப்படைகளைத் தோற்கடித்தன.

**சுமா போர்**

1905, ஜனவரி 1 - ஆம் நாள் போர்ட் ஆரதர் துறைமுகம் ஜப்பானியர் வசமானது. பெரும் அவமானம் கொண்ட ரஷ்யா, பால்டிக் கடலிலிருந்த தன் வலிமைமிக்க கப்பற்படையை ஜப்பானை நோக்கி அனுப்பியது. அப்படையை ஜப்பான் கடற்படை தளபதி டோகோ சுமா, என்ற தீவுக்கருகில் மிக எளிதாகத் தோற்கடித்தார். ரஷ்யா தோல்விக்கு மேல் தோல்வி கண்டது. இறுதியில் அமெரிக்க நாட்டு குடியரசு தலைவர் முயற்சியால் போர் நிறுத்தம் ஏற்பட்டு சமாதானம் நிலைநாட்டப்பட்டது. இரு நாடுகளுக்குமிடையே போர்ட்ஸ்மவுத் உடன்படிக்கை ஏற்பட்டது.

**போர்ட்ஸ்மவுத் உடன்படிக்கை 1905**

1. கொரியா மீது ஜப்பானுக்குள்ள அரசியல், இராணுவ, பொருளாதார உயர்வை ரஷ்யா ஏற்றுக் கொண்டது.

2. லியோடுங் தீபகற்பத்தில் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த உரிமைகளை ஜப்பானுக்கு விட்டுக்கொடுக்க ரஷ்யா முன்வந்தது. மற்றும் போர்ட் ஆர்தரை இணைக்கும் இரயில் பாதையையும், முக்டன் வரையிலும் உள்ள உரிமைகளையும் ரஷ்யா ஜப்பானுக்கு விட்டுக் கொடுத்தது.
3. சாகாலின் தீவின் தென்பாதியையும் கொடுத்து, அப்பகுதிகளில் மீன் பிடிக்கும் உரிமையையும் ரஷ்யா ஜப்பானுக்கு விட்டுக் கொடுத்தது.
4. இவ்வொப்பந்தம் செய்துக்கொண்ட 18 மாதங்களில் இரு தரப்பினரும் தங்கள் படைகளை மஞ்சூரியாவிலிருந்து விலக்கிக்கொள்வதாக உறுதி கூறினர். ஆனால் தங்கள் இருப்புப் பாதை தொடர்களைப் பாதுகாக்க வீரர்கள் இருப்பர் என்றுக் கூறப்பட்டது.
5. இவ்விருப்புப் பாதைகள் வணிகத்திற்கு மட்டுமே பயன்படும். அரசியல் காரணமாக வேறு எதற்கும் பயன்படுத்தக்கூடாது என்றுத் தீர்மானிக்கப்பட்டது.
6. ரஷ்யப் போர்க் கைதிகளுக்காக 40 லட்சம் தங்க நாணயங்களை ஜப்பான் ரஷ்யாவிடமிருந்து பெற்றுக் கொண்டது.
7. எந்தக் காரணம் கொண்டும் பிற ஐரோப்பிய நாடுகள் சீனாவுடன் வணிக உறவு கொள்வதை ரஷ்யாவும், ஜப்பானும், தடை செய்யவோ குறுக்கே நிற்கவோ கூடாது என்று கூறப்பட்டது.
8. தங்கள் படைகள் வெளியேறிய பின் மஞ்சூரியாவில் காசிலலா நுழைவுச் சீட்டுக் கொள்கையை அமுலாக்க இருநாட்டினரும் ஒப்புக்கொண்டனர்.

**விளைவுகள்**

**1. ரஷ்யப்புரட்சி வெடித்தல்**

சிறிய நாடான ஜப்பானிடம் ரஷ்யா பெற்ற தோல்வி, ரஷ்ய மக்கள் மனதில் சார் அரசுக்கெதிரான வெறுப்பையும், சீற்றத்தையும் ஏற்படுத்தியது. இது ரஷ்ய புரட்சி ஏற்பட வழி ஏற்படுத்தியது.

**2. ஜப்பான் வல்லரசாதல்**

இப்போரில் ஜப்பான் அடைந்த வெற்றி அதை ஆசியாவில் ஒரு வல்லரசாக உயர்த்தியது. எனவே பேரரசை விரிவாக்குவதில் இனி சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் அது செயல்பட ஆரம்பித்தது. உலக அரங்கிலும் ஜப்பான் ஒரு பலம் பொருந்திய நாடென ஒப்புக் கொள்ளப்பட்டது.

**3. ரஷ்யாவின் பெருமை குன்றுதல்**

ரஷ்யாவின் முன்னேற்றம் அதன் தோல்வியால் தடைப்பட்டது. மேலும் உலக நாடுகளிடம் ரஷ்யாவின் பெருமை குன்ற ஆரம்பித்தது.

**4. ஆசிய தேசியத்துக்கு தூண்டுதல்**

ஜப்பானின் வெற்றி ஆசிய தேசிய வளர்ச்சியை ஊக்குவித்து, ஜப்பானின் வெற்றிக்கு அதன் சுதேசியமே முக்கிய காரணம் என்று மேற்கத்திய ஏகாதிபத்தியத்திற்கு கட்டுப்பட்டுக் கிடந்த இந்தோனிசியா போன்ற நாடுகள் உயர்ந்தன. ‘‘ஜப்பானின் வெற்றி, ஆசியாவின் உணர்விற்கும் சுதந்திரத்திற்குமான உதயம்’’ என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள்.

**5. மஞ்சூக்களின் வீழ்ச்சி**

சீனாவை ஆண்ட வம்சங்களில் நீண்டப் பட்டியலில் மஞ்சுக்களே நெடுங்காலமும், கடைசியாகவும்

சீனாவை ஆண்டனர். மஞ்சுக்களின் வரவோடு சீனா நவீன காலத்தில் அடியெடுத்து வைத்தது. மஞ்சுக்கள் காலத்தில்தான் சீனா தன் நெடுங்காலத் தனிமையைக் கைவிட்டு மேலை நாடுகளுடன் தொடர்பு கொள்ள ஆரம்பித்தது. மஞ்சு வம்சத்தின் முடிவே சீன மக்களாட்சியின் தொடக்கம் என்பதாலும், மஞ்சுக்கள் வரலாறு சீன வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க அத்தியாயமாயிற்று.

**மஞ்சுக்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்**

மஞ்சு வம்ச அரசர்களின் தாயகம் மஞ்சூரியா என்பதாலேயே அவர்கள் மஞ்சுக்கள் என்றழைக்கப்பட்டனர். மஞ்சூரியா முழுவதையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வந்த மஞ்சுக்கள் 1620 முதல் 1640 வரை பலமுறை மிங்குகளைத் தோற்கடித்துச் சீனாவின் பெரும்பகுதியைக் கைப்பற்றினர். 1644 ல் பீகிங்கையும் கைப்பற்றிய மஞ்சுக்கள் சீன அரசையும் கைப்பற்றினர்.

1644 ஆம் ஆண்டு முதல் 1912 வரை, சுமார் 300 ஆண்டுகள் சீனாவை ஆண்ட மஞ்சு வம்சம் பல சிறந்த அரசர்களை உருவாக்கியது.

மஞ்சுக்களை 1911 ஆம் ஆண்டின் சீனப்புரட்சி நிலைக்குலையச் செய்தது. அடுத்த சில மாதங்களுள், கடைசி மஞ்சு பேரரசர் பதவி துறக்க வைக்கப்பட்டு மஞ்சு வம்ச ஆட்சி முடிவுற்றது. மஞ்சு வம்சம் வீழ்ச்சியுற்றதற்கான காரணங்கள் பல. அவையாவன;

**1. மஞ்சுக்களின் பூர்விகம்**

மஞ்சுக்களின் பூர்விகம் மஞ்சூரியா என்பதாலேயே அவர்கள் மஞ்சுக்கள் என்றழைக்கப்பட்டனர். ஆகவே மஞ்சுக்கள் அயல் நாட்டவராவர். அயல் நாட்டவரையே வெறுத்தச் சீனர்கள், மஞ்சுக்களையும் வெறுத்து ஒதுக்கினர்.

**2. மஞ்சுக்களின் கர்வம்**

மஞ்சுக்கள் மிகவும் கர்வமும், தற்பெருமையும் கொண்டிருந்தனர். சீனர்கள் அடிமைகள், கோழைகள், தன்னம்பிக்கையற்றவர்கள் என்று மஞ்சுக்கள் கருதினர். இதனால் சீன இனமே மஞ்சுக்களை வெறுத்தது. மேற்கத்திய நாட்டவரையும் அநாகரீகமானவர்கள் என்று கூறிய மஞ்சுக்கள், அவர்களையும் தரக்குறைவாக நடத்தினர். எனவே மேற்கத்திய படையெடுப்புகள் அதிகரித்து மஞ்சுக்கள் அழிய வழிகோலின.

**3. நிர்வாகச் சீர்கேடுகள்**

மஞ்சுக்கள் கால்த்தில் நிர்வாக சீர்கேடுகள் பெருகின. மத்திய மாநில உறவில பெரும் விரிசல் ஏற்பட்டது. இதனால் ஊழல்களைக் களையவும், திறமையற்றவர்களை ஒழிக்கவும் மஞ்சுக்களால் முடியவில்லை. எனவே அரசிலும் அவர்களால் கவனம் செலுத்த முடியவில்லை.

**4. பலவீனமுற்ற மத்திய அரசு**

உலகில் உள்ள பெரிய நாடுகளுள் ஒன்றான சீனாவில் பல மாநிலங்கள் இருந்தன. அவற்றை மத்திய அரசே நிர்வகித்தது. அனைத்து அதிகாரங்களும் மன்னரிடமே குவிந்திருந்தன. எனவே நாட்டு நடப்புகள் அனைத்தையும் கவனிக்க வேண்டியிருந்த அவரால் அவற்றை கவனிக்க முடியவில்லை. இதனால் மாநில ஆளுநர்கள் செல்வாக்குப் பெற்று தன்னிச்சையாகச் செயல்பட ஆரம்பித்தனர். மத்திய அரசின் பலவீனத்தை தங்களுக்குச் சாதகமாக அவர்கள் பயன்படுத்தினர்.

**5. மக்கள் தொகைப் பெருக்கம்**

மக்கள் தொகைப் பெருக்கம் சீனாவுக்கு ஒரு பெரிய சாபமாக இருந்தது. சீனாவில் நடந்த எல்லா நிகழச்சிகளுக்கும் இது ஒரு முக்கிய காரணமாகும். மக்கள் தொகை பெருகியதால் வேலையிலலாத் திண்டாட்டம் பெருகி, உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. விலைவாசிகள் உயர்ந்து மக்கள் பெரும் துயருற்றனர். இதனால் விரக்கியடைந்த மக்கள், சீனப்புரட்சியில் மனமுவந்து கலந்துக் கொண்டனர்.

**6. பலவீனமான படைகள்**

மஞ்சுக்கள் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற முதல் அபினிப்போர், இரண்டாம் அபினிப்போர், முதல் சீன - ஜப்பானிய போர் ஆகிய எல்லாவற்றிலும் சீனப்படைகள் பெரும் தோல்வியைத் தழுவினர். மேலும், தாய்பிங் கிளர்ச்சி பாக்சர் கலகம் ஆகியவற்றை அடக்குவதிலும் மஞ்சுப் படைகளுக்கு, வெளிநாட்டுப் படைகளின் உதவி அவசியமாயிற்று. இவையாவும் சீனப்படைகள் பலவீனமானவை என சீனர்களுக்கும் உலகுக்கும் உணர்த்தின.

**7. பேரரசி சூ - சியின் மறைவு**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடையிலேயே நலிந்து மறைந்து போக வேண்டியிருந்த மஞ்சு வம்சத்தை தன் திறமையால் பேரரசி சூ - சி கட்டி காத்தார். ஆனால் பேரரசர் துவாங் - சு இறந்த மறுநாளே 1908 - நவம்பர் 15ல் பேரரசியும் காலமானார். பேரரசியின் இறப்பு மஞ்சு வம்சத்திற்கு பேரிழப்பாகும். அவருக்குப் பின் அரியனையேறி யூயி - இ திறமையற்றவராயிருந்தார், தீவிரவாதிகளும் குடியரசு வாதிகளும் மஞ்சுக்களை அழிக்க முனைந்து செயல்பட்டனர்.

**8. புதிய சீர்திருத்தங்களின்மை**

சுமார் 330 ஆண்டுகள் சீனாவை ஆண்ட மஞ்சுக்கள் நாட்டையும் மக்களையும் ஆட்சி முறையையும் சீர்திருத்தத் தவறிவிட்டனர். சீர்திருத்தங்கள் வேண்டி தைப்பிங் கிளர்ச்சியும், 100 நாட்கள் சீர்திருத்தங்களும தோன்றியபோது மஞ்சுக்களே அவற்றை அடக்கினர்.

புதிய சீர்திருத்தங்கள் கட்டாயமாக புகுத்தப்படவில்லையேல் நாம் பதவி இழந்து விடுவோம் என்ற பயத்தில் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ‘‘சீர்திருத்த இயக்கங்களை’’ மஞ்சுக்கள் அறிமுகப்படுத்தினர். ஆனால் அது காலம் கடந்தச் செயலாயிற்று. அரசியலில் மாற்றத்தை விரும்பிய மக்கள் புரட்சியை ஆதரித்தனர்.

**9. போர்களின் தோல்வி**

முதல் மற்றும் இரண்டாம் அபினிப்போரிலும், முதல் சீன ஜப்பானியப் போரிலும் சீனா மோசமாக தோற்கடிக்கப்பட்டது. இத்தோல்வி சீனர்களுக்குப் பெருத்த அவமானமாக இருந்தது. தோல்வியை மாற்ற விரும்பிய மக்கள், மஞ்சுக்களையே மாற்றவேண்டுமென நினைத்தனர்.

**10. பொருளாதார வீழ்ச்சி**

மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப வேலை வாய்ப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை. உள்நாட்டு வாணிகத்தையும், தொழில் வளர்ச்சியையும் பெருக்க மஞ்சுக்கள் தவறிவிட்டனர். மேலும் மேலை நாடுகளின் சுரண்டல்களும், பல போர்களும், படையெடுப்புகளும், கலகங்களும், கிளர்ச்சிகளும் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்தன. இதை ஈடு செய்ய மக்கள் மீது வரிகள் போடப்பட்டன. இதனால் வெறுப்புற்ற மக்கள் புரட்சியை ஆதரித்தனர்.

**முடிவுரை**

1644 ஆம் ஆண்டு சீன அரியணையில் அமர்ந்த மஞ்சுக்கள் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீழ்ச்சியை நோக்கினர். துரதிஷ்டவசமாக பேரரசி சூசிக்குப் பின் பட்டத்துக்கு வந்த யூயி திறமையற்றவராயிருந்தார். அதேசமயம் டாக்டர் சன்யாட்-சென் போன்ற அறிஞர்கள் தோன்றி நாட்டு நடப்புகளை மக்களுக்கு தெளிவுப்படுத்தி மஞ்சுக்களின் வீழ்ச்சிக்கு வித்திட்டனர்.

முடிவாக 1912 பிப்ரவரி 12 ஆம் நாள், ஒரு அரசியல் பேராணையின் மூலம் மஞ்சுப் பேரரசின் பதவி துறப்பு பிரகடனப்படுத்தப்பட்டு, சீனக் குடியரசு தோற்றுவிக்கப்பட்டு, மஞ்சுக்களின் ஆட்சி முடிவுற்றது.

## 12, 1911 ஆம் ஆண்டின் சீனப் புரட்சி

1911 ஆம் ஆண்டு புரட்சி சீன வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட நிகழ்ச்சியாகும். அப்புரட்சி சீனாவில் பன்னெடுங்காலமாக நிலவி வந்த மன்னராட்சியை அகற்றி மக்களாட்சியை ஏற்படுத்தியது. 1908 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் நாள் சீன மன்னர் குவாங் சி பீக்கிங்கில் காலமானார். அதற்கு அடுத்த நாளே அரசியும் காலமானார். அவர்களின் மறைவினால் சீன அரசியல் வானில் இருள் மேகங்கள் சூழ்ந்தன. ஆனால் வெகு விரைவில் இருள் மேகங்கள் விலகி, சீனாவில் புது ஒளி பரவியது. அப்புத்தொளி, 1911 ஆம் ஆண்டின் சீனப்புரட்சியை உருவாக்கிற்று.

1911 ஆம் ஆண்டு சீனா மிகவும் கேவலமான நிலையிலிருந்து, அதன் பண்பாடு நாகரீகச் சிறப்பு சமுதாய நிலை, இராணுவ அமைப்பு, மக்களின் வாழ்க்கைத் தரம் ஆகிய அனைத்தும் பின்னடைவு பெற்றிருந்தது. மக்களுக்கு எங்கும் வேதனை சூழ்ந்திருந்தது. வெளி நாட்டவரின் ஆதிக்கம் கட்டுக்கடங்காமல் உயர்ந்திருந்தது இவ்வளவு சீரழிவிற்கும் மஞ்சு அரசே காரணம் என்று மக்கள் கருதினர். எனவே புரட்சியின் மூலம் மஞ்சு அரசை வீழ்த்துவதுதான் ஒரே வழி என்று கருதி கோடான கோடி காரணங்க்ள சீன மக்கள் ஒற்றுமையுடன் கூடினர். புரட்சி வெடித்தது.

### புரட்சிக்கானக் காரணங்கள்

### 1. பொருளாதாரப் பிரச்சனை

**1. உணவுப் பிரச்சனை**

உணவுப் பிரச்சனை உயர்ந்தோர் தாழ்ந்தோர் ஆகிய அனைவரையும் வாட்டியது. அதிலும் உணவு பற்றாக்குறை ஏழைகளையும் நலிந்த சமுதாயத்தினரையும் மிகவும் வாட்டியது. சீனாவைப் பொறுத்தவரை அதன் மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே சென்றது. 1885 வரை சீனாவில் மக்கட்தொகை 37 கோடியிலிருந்து 43 கோடி வரை உயர்ந்தது. மக்கட்தொகை அதிகரித்த அளவிற்கு உணவு உற்பத்தியை மேற்கொள்ள எவ்வித நடவடிக்கையும் எடுக்காத திறமையற்ற அரசை மக்கள் வெறுத்தனர்.

**2. இயற்கையின் எதிர்ப்புகள்**

அதிக விளைச்சலுக்கு முயற்சிக்கும் வேளையில், வெள்ளத்தின் பெருக்கெடுப்பும் அதனால் பயிர் நாசமும் அதிகரித்தன. பஞ்சமும் வாட்டியது. 1910 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 30 லட்சம் மக்கள் இறந்தனர். அரசு அதனைத் தடுக்க எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. அதனால் மக்கள் வெறுப்புற்றுப் புரட்சி செய்தனர்.

**3. வரிச்சுமை**

அபினிப் போர்களாலும், தைப்பிங் கலகத்தாலும் நிலை தடுமாறிய அரசு. சீன ஜப்பான் போரில் குப்புற விழுந்தது. பெரும் கடன்பட்டது. போர் நஷ்ட ஈடாகத் தரவேண்டிய பணத்தை மக்களின் தலையில் வரியாக விதித்தது. பாக்சர் கலகம் வேறு உள்நாட்டு பொருளாதாரத்தை சீர்குலைத்ததோடு, மீண்டும் வெளிநாட்டவருக்கு நஷ்டஈடாகப் பெரும் தொகையைத் தரவேண்டி நிர்பந்தித்தது. மக்கள் வரிசெலுத்தியே வறுமையின் உச்ச கட்டத்திற்கு சென்றனர்.

### II. அரசியல் காரணங்கள்

**1. இனப்பிரச்சினைகள்**

மஞ்சு வம்சத்தவர்கள் அந்நியர்களாகவே கருதப்பட்டனர். அதுபோல மஞ்சு இனத்தவர்களும் சீனர்களைத் தாழ்ந்த இனத்தவர்களாகக் கருதி நடந்தனர். சீனர்களின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்கவில்லை. சீர்திருத்தச் செயல்களுக்கு முக்கியத்துவம் தரவில்லை. அதனால் சீனாவில் புதிய ஆட்சி

மலர மக்கள் புரட்சி வழியை மேற்கொண்டனர்.

**2. மாநில ஆளுநர்கள்**

மாநில கவர்னர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரத்தை அவர்கள் தவறாகப் பயன்படுத்த ஆரம்பித்தனர். அவர்களிருந்து ஆட்சி செய்தப் பகுதியில் அவர்களின் அதிகாரம் கொடிகட்டிப் பறந்தது. அவர்கள் மன்னரின் ஆணைகளையே மதிக்கத் தவறினர். மன்னரின் ஆலோசனைகளையும் புறக்கணித்தனர். இருப்புப் பாதைகளை அமைக்க மத்திய அரசு வெளிநாட்டவருக்கு விருப்பம் தெரிவித்தபோது ஆளுநர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

**3. இராணுவ பலவீனம்**

வெளிநாட்டவருடன் நடத்திய அனைத்து படையெடுப்புகளும் சீனாவிற்குப் பெரும் தோல்வியைத் தந்தன. இது இராணுவ பலவீனத்தைக் காட்டியது. வம்சத்தவர் இராணுவத்தைச் சிறப்புறச் செய்ய எம்முயற்சியும் எடுக்கவில்லை என்று மக்கள் குறைபட்டனர். மஞ்சு ஆட்சியின் வலிமையில் நம்பிக்கை இழந்தனர்.

**4. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது**

அடிக்கடி குழப்பங்களும், போர்களும் நடந்து வந்ததால் நாட்டின் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்தது. எங்கும் அமைதியின்மை ஏற்பட்டது. மன்னரின் ஆணையை மக்கள் குறை கூறினர். அவற்றிற்கு மதிப்புத் தரவில்லை. கொலை, கொள்ளை போன்றவை சாதாரண நிகழ்ச்சிகளாயின. வெளி நாட்டவர்களின் குறுக்கீடுகள் உள்நாட்டுச் சட்டமுறைகளை சீர்குலைத்தன.

**5. வெளிநாட்டவர்களின் ஆதிக்கம்**

ஐரோப்பிய சீனாவின் வாணிகம் முழுவதையும் கட்டுப்படுத்தினர். சுங்கவரிகளை தங்கள் விருப்பத்திற்கேற்றவாறு குறைத்துக் கொண்டனர். தாங்கள் தங்கியிருந்த பகுதிகளில் தங்கள் சட்டங்களுக்கேற்ப நடந்துக்கொண்டனர். அவர்களே நீதிவழங்கிக் கொண்டனர். சீனாவின் சட்டத்திற்குக் கட்டுப்படவில்லை. சுருங்கக்கூறின் அந்நிய மண்ணில் ஆனந்த வாழ்வு வாழ்ந்தனர். சீனர் செல்வத்தை சுரண்டிச் சென்றனர்.

## III. தேசிய எழுச்சிகள்

**1. வெளிநாடுகள் சென்று திரும்பியோர்**

கூலி வேலை செய்வதற்கென பல இலட்ச சீனர்கள் தென் ஆப்பிரிக்கா, அமெரிக்கா, சிலி, பெரு, பிலிப்பைன்ஸ், மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்றனர். அங்கு அவர்கள் நன்முறையில் நடத்தப்படவில்லை. மேலும் 3 லட்சத்திற்கும் அதிகமான சீனர்கள் அமெரிக்காவிலிருந்தும், 13 லட்சத்திற்கும் அதிகமானோர் மலேசியாவிலிருந்தும் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் தாயகம் திரும்பினர். பிறநாட்டில் தாங்கள் எவ்வளவு கேவலமாக நடத்தப்பட்டோம் என்பதைக் கூறினர். ஆனால் தம் நாட்டில் பிற நாட்டவர் எவ்வளவு சுகத்துடன் இருக்கின்றனர் என்பதைக் கண்டனர்.

அதுபோல வெளிநாடுகளுக்கு அரசியல் அனுபவம் பெறவும், மேற்படிப்புப் பெறவும் சென்று திரும்பிய சீனர்கள், தாயகத்தின் கீழ்த்தரமான அரசியல் நிலையையும் தரங்கெட்ட ஆட்சியாளர்களையும் கண்டு வெட்கப்பட்டு புதிய சீர்திருத்த இயக்கங்களை ஏற்படுத்த விரும்பினர். புதிய ஆட்சி அமைக்க முயன்றனர். மக்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று மனநிறைவுடன் வாழ முயன்றனர்.

**2. தேசிய வளர்ச்சி**

தேசிய உணர்ச்சியைக் தூண்டும் வகையில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சீன ஜப்பானியப் போரில்

சிறிய நாடான ஜப்பான் வெற்றி கண்டது. ஜப்பான் வெற்றி பெற்ற நாடான சீனாவை அவமானத்திற்குள்ளாக்கியது. மக்களின் மனதில் நாட்டுப்பற்று அதிகரித்தது. அவை மஞ்சு வம்ச ஆட்சிக்கு முடிவு கட்டியது.

**3. இரகசியக் கழகங்கள்**

1851 முதல் 1864 வரை ஏற்பட்ட தைப்பிங் கிளர்ச்சியும், பின்னர் ஏற்பட்ட பாக்சர் இயக்கங்களும் மக்கள் மனதில் ஒருவித புதிய தெம்பையும் வீரத்தையும், வலிமையையும் ஏற்படுத்தின. சீன ஜப்பானியப் போருக்குக் பின் இரகசியக் கழகங்கள் தோன்றின. அவற்றில் துங் – மெங் – ஹீய் (**Trung Meng - Hui**) என்ற இயக்கம் டாக்டர். சன்யாட்சன் தலைமையில் வலிமைபெற்று விளங்கியது. அவர்களின் தத்துவத்தை மக்கள் மனமுவந்து ஏற்றுப் புரட்சிக்குத் தயாராயினர்.

**4. போக்குவரத்துத் தொடர்புகள்**

செய்தித்தாள்கள் வெளிவந்தன. அவை புரட்சியாளர்களின் செய்திகளை உடனுக்குடன் தெரிவித்தன. போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கப்பட்டன. அவற்றால் சீனா முழுவதற்கும் தொடர்புக் கொள்ள வழி ஏற்பட்டது. இருப்புப்பாதை தொடர்புகள் முக்கிப்பங்கு வகித்தன. மற்றும் தபால், தந்தி வசதிகள் புரட்சிக் கருத்துக்களின் புதிய வழிகளை உடனுக்குடன் புரட்சியில் ஈடுபட்டோர்க்கும் மக்களுக்கும் தெரிவிக்க உதவின. இதன் மூலம் சிந்தனையாளர்களின் சீரியக் கருத்துக்கள் பரவலாக வெளியிடப்பட்டன.

**5. மேல்நாட்டுக் கல்வி முறைகள்**

கல்வி முறையில் புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மேனாட்டு முறையில் கல்வி நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான ஆரம்பப்பள்ளிகளும், உயர்க்கல்விக் கூடங்களும் மக்களின் அறியாமையை அறிந்தன. புதிய சமுதாயத்தின் எழுச்சி, வருங்காலத்தை வளமுடன் வைக்கவேண்டும் என்பதற்கு தயார் செய்து கொள்ள முயன்றன.

## IV. உடனடிக் காரணங்கள்

சமுதாயத்தில் ஒவ்வொரு பிரிவினரும் மஞ்சு அரசை வெறுத்தனர். ஏழைகளும் இல்லாதவர்களும் மனநிம்மதியின்றி இருந்தனர். அவர்களுக்குத் தேவையான உணவில்லை, உடையில்லை. உழைத்து வாழ வேலையில்லை.

மாநிலங்கள் திருப்தி அடையவில்லை, காரணம் மத்திய அரசு மாநிலங்களைக் கட்டுப்படுத்தின. படித்த இளைஞர்கள் அமைதியிழந்தனர். உரிய வேலைகள் திறமையின் அடிப்படையில் தரப்படவில்லை. பழைமை விரும்பிகள் வேதனையுற்றனர். புதிய மேற்கத்திய கல்வி முறை பண்டையச் சீனாவின் பாரம்பரியத்தை அழிப்பதாகஅவர்கள் நினைத்தார்கள். அதிக வரிவிதித்து வாணிபத்தை நசுக்கியதால் வணிகர்கள் அதிருப்தியடைந்தனர். இராணுவ வீரர்கள் கூட சலிப்படைந்தனர். புதிதாக நுழைக்கப்பட்ட சீர்திருத்தங்கள் அவர்களின் விருப்பத்திற்கு மாறாக இருந்தது. இவ்வாறு சீனாவில் மூலைமுடுக்குகளிலெல்லாம் மஞ்சு அரசின் திறமையின்மையும், ஊழலின்மலிவும் வெளிநாட்டவரின் ஆதிக்கமும் பற்றிப் பேசப்பட்டன.

**இருப்புப் பாதைகள் அமைப்பில் மனக்கசப்பு**

இச்சமயத்தில் புரட்சிக்கு ஊக்கம் கொடுத்தாற் போல் அமைந்தது இருப்புப்பாதைகள் தேசியமயமாக்குவதில் ஏற்பட்ட பிரச்சனையாகும். சீனாவில் இருப்புப்பாதைகள் அமைக்கும் திட்டம்

தொடங்கப்பட்டிருந்தது. வசதிமிகுந்த சீனர்களும் பெரும் முதலீட்டாளர்களும் தங்கள் மாநிலங்களில் இருப்புப் பாதைகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இச்சமயத்தில், இருப்புப்பாதைகளை அமைக்கும் உரிமையை பீகிங் அரசு வெளிநாட்டவர்களுக்குக் கொடுத்தது. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ஜெர்மனி, ஆகியவை அவ்வுரிமையைப் பெற்றன. இதனை சில மாநிலங்களின் செல்வந்தர்களும், முதலீட்டாளர்களும் எதிர்த்தனர். ஆளுநர்களும் இவர்களுடன் சேர்ந்துக்கொண்டு மத்திய அரசை எதிர்த்தனர். அதனால் தங்கள் உரிமைகள் பறிப்போவதாகக் கூறினர். இதுவரையில் அந்நியர்கள் அனுபவித்து வந்த சலுகைகள் போதாதா? என்று ஆத்திரமுற்று புரட்சிக்கொடி ஏந்தினர்.

**செக்குவான் கலகம்**

செக்குவான் (**Sezhuan**) மாநிலத்தில் முதன் முறையாக பீகிங் அரசின் ஆணையை எதிர்த்து புரட்சி செய்ய முயன்றனர். சிங்டு - சுங்கிங் (**Chengtu Chunking**) இரயில் பாதை போடுவதை தடை செய்ய செக்குவான் மாநில மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துக் கலகம் விளைவித்தனர். இப்பிரச்சினையை தீர்க்க முயலும் போது எதிர்பாராத சில நிகழ்ச்சிகள் நடந்தன. புரட்சியாளர்களை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. பலர் கைது செய்யப்பட்டனர்.

**காண்டனில் புரட்சி**

1911 ஏப்ரலில் 100 புரட்சியாளர்கள் ஒன்று சேர்ந்து காண்டனிலிருந்த உதவி கமிஷ்னர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். அச்சிறியக் கூட்டத்தை விலக்க 100 பேர்கள் கொண்ட படை ஒன்று அனுப்பப்பட்டது. இருவருக்கும் நடந்த கைகலப்பில் சுமார் 72 பேர்கள் கொல்லப்பட்டனர்.

**இராணுவப் புரட்சி**

காண்டனைத் தொடர்ந்து 1911 - அக்டோபர் 9 ல் ஹாங்கோவ் (**Hankov**) பகுதியில் வெடிகுண்டு ஒன்று வெடித்தது. அதனைத் தொடர்ந்து அடுத்தநாளே இராணுவப் புரட்சி ஏற்பட்டது. அது பின்னர் ஹன்யாங், வூசங் (**Lanyang Wuesang**) மாநிலங்களுக்குப் பரவியது. இப்புரட்சியாளர்களுக்கு லி யுவான் ஹங் (**Lee Yuan Hung**) தலைமை தாங்கினார். குறுகிய காலத்தில் சுமார் 14 மாநிலங்களுக்கும் பரவியது. இருப்பினும் தென் மாநிலப்பகுதிகள் உடனடியாகக் கலந்து கொள்ளவில்லை.

**யுவான் ஷி - கே தலைமை அமைச்சரானார்.**

புதிதாக அமைக்கப்பட்டிருந்த தேசிய சபையும் இச்சமயத்தைப் பயன்படுத்தி மேலும் அதிகாரங்கள் பெற முயன்றது. மஞ்சு வம்சம் அழியும் நிலை உருவானது. உடனடியாக இதுவரை பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்த ஷி கே மீண்டும் வரவழைக்கப்பட்டார். அவர் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றார். அனைத்து அதிகாரங்களும் அவரிடம் கொடுக்கப்பட்டன.

யுவான் ஷி கே மிகச் சிறந்த தரைப்படை தளபதி, சீன மக்களின் இதயத்திற்கு இரும்புப் பிடிப்போட்டு இதயத்தைக் கூராக்கி எதிரிகளை குத்திக் கிழிக்க உணர்ச்சி ஊட்டியவர். இவர் இங்கிலாந்து அரசியலமைப்பைப் போல் முடியாட்சியை ஏற்படுத்த விரும்பினார். புரட்சியாளர்களின் குடியரசுத்திட்டம் ஓட்டைப்பானையில் நீர் ஊற்றுவது போன்றது என்றார். இருப்பினும் தென்பகுதியில் புரட்சி ஏற்படுவதைத் தடுக்க முயன்றனர்.

தென் சீனர்கள் லீயுவான் ஹங் தலைமையில் புரட்சி செய்தனர். நாங்குங் நகரைக் கைப்பற்றி அங்கு ஒன்றுக் கூடினர். தேசிய சபை ஒன்றை குடியரசு முறையில் ஒரு இடைக்கால அரசை ஏற்படுத்தினார். அதற்கு சன்யாட்சென் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தனித்து ஆளத் தொடங்கினார்.

**1911 ஆண்டு புரட்சியின் விளைவுகள்**

இவ்வாறு பீகிங்கில் யுவான் ஷிகேயும், நாகிங்கில் சன்யாட்செனும் ஆட்சி புரியத் தொடங்கினர். சீனாவில் குழப்பம் நிலவிய இச்சூழ்நிலையில் ரஷ்யாவும், ஜப்பானும், சீனாவின் சில பகுதிகளைக் கைப்பற்றிக்

கொள்ள முனைந்தன. வெளி நாட்டினரின் அச்சுறுத்தலை ஒற்றுமையுடன் முறியடிக்க பீகிங்கும் நாகிங்கும் ஒன்று சேர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

யுவான் ஷி கேயும், சன்யாட் சென்னும் ஒன்று கூடிப் பேசினர். யுவான் ஷி கேயும் குடியரசுக்கு ஆதரவு தருவதாக இருந்தால் தன் பதவியை அவருக்கு விட்டுக் கொடுக்கத் தயார் என்று சன்யாட் சென் கூறினார். யுவான் ஷி கேயும், மஞ்சு வம்ச ஆட்சியை ஒழித்து குடியரசை ஏற்படுத்துவதாக என்று உறுதி கூறினார். இச்செய்தி அப்பொழுது மஞ்சு வம்ச மன்னராயிரந்த 6 வயது சிறுவன் பூயிசுவான் மக்களின் விருப்பத்தை மதித்து 1913 பிப்ரவரி 12 ல் பதவி துறந்தார். கி.பி. 1644 முதல் ஆட்சி புரிந்த மஞ்சு வம்சம் முடிவடைந்தது. சீன வரலாற்றில் புதிய அத்தியாயம் பிறந்தது.

மன்னரின் பதவி போனாலும் கூட அவருக்குரிய மரியாதை அளிக்கப்பட்டது. அவருடைய செலவிற்காக ஒவ்வொரு ஆண்டும் 40 லட்சம் டாலர் கொடுக்கப்பட்டது. அரசு பரிவாரங்கள், அரசு விருதுகள் போன்றவற்றை அவர் வைத்துக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டார். அரசு சின்னங்களையும், உடமைகளையும் பாதுகாத்துக் கொள்ள உரிமை அளிக்கப்ட்டது.

தொன்றுத்தொட்டு போற்றப்பட்டு வந்த கன்பூசியஸ் கோட்பாடுகள் புறக்கணிக்கப்ட்டன. நவீன கோட்பாடுகளும், தத்துவங்களும் முக்கியத்துவம் பெற்றன.

ஊழல் மிகுந்த ஆட்சி ஒழிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. வெளி நாட்டவரின் ஆதிக்கம் மறையும் என்று நினைத்தனர். பொருளாதாரம் புது பாதையில நடைபோடும் என்றனர். நடுத்தரவாதிகளும், சிந்தனையாளர்களும் சீனாவில் மறுமலர்ச்சிக்கு முழு ஆதரவு தந்தனர். இருப்பினும் தென் மாநில சீனர்களுக்கு யுவான் ஷி கேயின் தலைமையில் நம்பிக்கையில்லை. இருப்பினும் புதிய பாதையில் சீனா நடைபோடுகிறது என்று புன்னகைப் பூத்தனர். புரட்சியின் மீது நம்பிக்கையற்றவர்களும், அதனைப்பற்றித் தெரியாதவர்களும், அதில் கலந்து கொள்ள வற்புறுத்தப்பட்டனர். புரட்சியாளர்களுக்கே போதிய பணவசதியில்லை. தென் சீன மக்கள் வறுமையில் வாடியவர்கள். அவர்கள் திறமைமிக்க ஆட்சியாளரைப் பெறமுடியாத சூழ்நிலையில் இருந்தனர்.

### கேள்விகள்

1. முதல் சீன – ஜப்பானியப் போரின் காரணங்களையும், விளைவுகளையும் விவரி?
2. சீனாவில் ‘மூவர் தலையீடு’ என்றால் என்ன? அதன் விளைவுகள் யாவை?
3. சீனாவில் வெளிநாடுகளின் சலுகைப் போட்டிகளையும் அதன் விளைவாக ஏற்பட்ட செல்வாக்கு மண்டலங்களையும் விளக்குக
4. நூறு நாட்கள் சீர்திருத்தங்கள் தோன்றக் காரணங்கள் யாவை? அவ்வியக்கம் தோல்வியுற்றது ஏன்?
5. பாக்சர் கலகம் ஏற்படக் காரணமாயிருந்த சூழ்நிலைகளை விளக்குக. அதனால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?
6. சீர்திருத்த இயக்கங்களை மஞ்சுக்கள் ஏன் அவ்வாறு செயல்படுத்தினர் என்று விளக்குக.
7. தோவேஜர் பேரரசின் வெற்றி, தோல்விகளை விவரி.
8. ஆங்கில – ஜப்பானிய கூட்டு உடன்படிக்கை ஏன் ஏற்பட்டது? அதன் முக்கியத்துவம் யாது?
9. ரஷ்ய – ஜப்பானியப் போருக்கானக் காரணங்கள் யாவை? அதன் விளைவுகளையும் எழுதுக
10. மஞ்சுக்களின் எழுச்சி, வீழ்ச்சி பற்றி ஒரு கட்டுரை வரைக.
11. அமெரிக்கா திறந்த வாயிற் கொள்கையை வெளியிடக் காரணமான சூழ்நிலைகளை விவரி. அதன் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.
12. 1911 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சீனப் புரட்சிக்கான காரணங்கள் யாவை?அதன் விளைவுகளை எழுதுக.

**அத்தியாயம் 4**

## சீனா டாக்டர் சன்யாட் சென் செய்துள்ள சேவைகள்

டாக்டர் சன் யாட் சென் பெரும்புகழ் பெற்ற சீனத்தலைவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவராவார். இவர் சீனப்புரட்சியின் தந்தை என அழைக்கப்படுகின்றார். இவர் தனது முழு வாழ்க்கையையும் புரட்சியிலும் போராட்டத்திலும் கழித்தார். மஞ்சு வம்ச ஆட்சியை அழித்து சீன மக்களை விடுதலை செய்யும் ஒன்றுபட்ட சீனாவை உருவாக்கவே இவர் விரும்பினார். மக்கள் அதிகாரம் படைத்த புதிய சீனாவுக்காக அரும்பாடுபட்டார். சீனாவில் வாழும் மக்கள் அனைவரும் தங்களுக்கு உரிய அதிகாரத்தினை பயன்படுத்தி தனி தலைவரால் சீனாவை ஆட்சி செய்ய வேண்டும் என்ற கருத்தில் மிக தெளிவாய் இருந்தார். இவருடைய முழு முயற்சியின் மூலம் தான் மஞ்சுக்களை அகற்றி சீனாவில் குடியரசை நிறுவினார்.

**டாக்டர் சன் யாட் சென் இளைய வாழ்க்கை**

டாக்டர் சன் யாட் சென் கி.பி. 1866 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் நாள் குவாண்டங் மாநிலத்திலுள்ள சோய்ஹங் என்னும் சிறிய கிராமத்தில் பிறந்தார். ஏழை விவசாயின் மகனான இவரின் இளமைப் பெயர் தாய்சியாங், பன்னிரெண்டாவது வயதில் கல்வி கற்பதற்கென ஹவாய் சென்றார். பிஷப் கல்லூரிப் பள்ளியில் சேர்ந்தார். பின்னர் அவர் ஹாங்காங்கில் உள்ள ராணி கல்லூரியில் சேர்ந்தார். லூ – ஷீ என்ற பெண்ணை மணந்தார். தன்னுடைய இருபத்தாறாவது வயதில் மருத்துவத்தில் பட்டம் பெற்றார். அச்சமயத்தில் தான் தன் பெயரை 'சன் யாட் சென்' என மாற்றிக் கொண்டார். அவரது பள்ளி பருவத்தில் அவர் மேலைநாட்டு கல்வி முறையினையும், அரசியல் தத்துவங்களையும், தொழில் நுட்பங்களையும் கற்றுக் கொண்டார். உலக நாடுகள் பலவற்றில் நடைபெற்ற அரசியல் விழிப்புணர்வுகளை அறிந்துக் கொண்டு மாணவப் பருவத்திலேயேதான் பிறந்த சீனாவை உன்னத நாடாக மாற்ற வேண்டும் என் விரும்பினார்.

**டாக்டர் சன் யாட் சென்னும் அவரது சீர்திருத்த எண்ணங்களும்**

மருத்துவப்பட்டம் பெற்ற சென் தனியாக தனது மருத்துவத் தொழிலை ஆரம்பித்து கிராம, ஏழை வறியவர்களுக்கு மருத்துவ ரீதியாக பல பணிகளை செய்தார். இவ்வெளிய மற்றும் பாமர மக்கள் இவரை உயிர் காக்கும் தெய்வமாக எண்ணி மதித்தனர். என்றாலும் இவர் தனது பணி கிராம மற்றும் ஒரு சில பகுதிகளுக்கு மட்டும் பணியாற்றுவதில் திருப்தி கிடைக்காததால் இவர் முழு சீனாவுக்கே பணியாற்ற தன்னைஅர்ப்பணித்துக் கொண்டார். சீனாவில் நிலவிய சமுதாயச் சீர்கேடுகளைக் களைய மருத்துவர், தொழிலைக் கைவிட்டு நாட்டை சீர்திருத்தும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். அவரைப் பற்றிய பெர்னாட் மார்டின் என்பவர் மனித உடலில் நோய் தாக்கிய பகுதிகளை அறுத்து எடுக்கும் மருத்துவரது கத்தி சீன அரசியலில் உள்ள நோய்ப்பட்ட பகுதிகளை நீக்க முனைந்தது என்று குறிப்பிட்டடிருந்தார்.

மஞ்சுக்களைப் பதவியில் இருந்து விரட்ட மக்கள் சக்தியுடன் பணமும் அவசியம் எனச் சென் தெரிவித்தார். அப்பணத்தைத் திரட்டுவதற்கென இரகசிய சங்கங்களின் முறையைப் பின்பற்ற வேண்டும் என அவர் நினைத்தார். கி.பி. 1894 ல் சிங்-சுங்-ஹீங் என்னும் பெயர் கொண்ட சங்கத்தை நிறுவினார். தன் முதல் முயற்சியில் படுதோலிவியுற்ற சென் ஹோன்லூவுக்குத் தப்பிச் சென்றார். ஆனால் இவரது ஆதரவாளர் பலர் கொடும் துன்பத்திற்குள்ளானார்கள். இவருக்காக பண உதவி செய்த செல்வந்தர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சிலர் கொலை செய்யவும் பட்டனர். இதனால் சென் பிற வெளிநாட்டவரின் ஆதரவு தேடி டிரான்சிஸ் கோஷற்கும் பின்னர் லண்டனுக்கும் சென்றார். மீண்டும் சீனா திரும்பிய சென், தென்சீனாவில் 1905

ஆம் ஆண்டு துங்-மி-ஹீய் என்னும் பெயர் கொண்ட புதிய சங்கத்தை தோற்றுவித்தார். மஞ்சுக்களை வீழ்த்துவதால், சீனாவில் குடியரசை நிறுவுதல், நாட்டு நிலங்களை மக்களுக்குச் சமமாகப் பிரித்தளித்து சீனாவை முன்னேற்றுதல் ஆகியவை அச்சங்கத்தின் நோக்கமாகும். விரைவில் சங்கத்தின் சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டு டாக்டர் சென் அதன் இயக்குநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். சங்கத்தின் புரட்சிகரமான கருத்துக்களையும், எண்ணங்களையும் பரப்ப 'சீன தினசரி' மக்கள் நாளேடு என்ற இரு செய்தித் தாள்களை அவரே வெளியிட்டார்.

**டாக்டர் சன்-யாட்-சென்னின் வெளிநாட்டு சுற்றுப் பயணம்**

டாக்டர் சன்யாட் சென் சீனாவில் நேரம் கிடைக்கும் வேளைகளில் எல்லாம் புரட்சிகளை செய்து மஞ்சு அரசின் கோபத்தை சம்பாதித்துக் கொண்டார். இவர் மேலும் பல புரட்சிக் கருத்துக்களைப் பெற மேலைநாடுகளுக்கு பயணமானார். இவர் சீனாவுக்கும்-ஜப்பானுக்கும் போர் நடைபெற்ற வேளையில் ஜப்பானில் இருந்து மஞ்சு அரசுக்கு எதிராக செயல்பட்டார். இப்போரில் சீனா கி.பி. 1895 ஆம் ஆண்டு தோல்வியைக் கண்டது. சென்னுக்கு ஆனந்தமாக இருந்தது. எவ்விதத்திலாவது இந்த அரக்க குணம் கொண்ட மஞ்சு குடும்பத்தை ஆட்சி பீடத்தில் இருந்து விரட்டவேண்டும் என்ற எண்ணம் வளர்ந்து வந்தது. இவர் மேலைநாடுகளுக்குச் சென்றார் குறிப்பாக சீனாவில் சமுதாயத்திலே பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். சீனா பல பகுதிகளாக பிரிந்து இருக்க கூடாது. அதனை ஒன்றுபடுத்த வேண்டும் எனவும் எண்ணினார். மேலும் இவர் உருவாக்கிய தங்-மிஷ்-ஹீய் என்ற புரட்சி கட்சியை பலப்படுத்த அமெரிக்காவில் உள்ள செல்வந்தவர்களிடம் பணத்தை திரட்டினார். ஏறத்தாழ ஆறாயிரம் டாலரினை நன்கொடையாகப் பெற்றார். பின்னர் சான் பிரான்ஸிசிஸ்கோ என்ற இடத்தில் உள்ள சீனர்கள் சந்திக்கும் அவர்களின் உற்சாகமான வரவேற்பும், அன்பளிப்பையும் பெற்றார். பின்னர் லண்டன் மாநகருக்குச் சென்றார். அங்கு அவரை அரசு கைது செய்தது. காரணம் இவரிடம் இங்கிலாந்தில் தங்க எந்த உத்தரவும் பெறவில்லை என்பதாகும் உடனே டாக்டர் சென் சீனாவிலே இருந்து தனது நண்பர்களுக்கும் தனக்கு கற்றுக்கொடுத்த ஆங்கிலேய ஆசிரியர்களுக்கும் செய்தி அனுப்பினார். இதனால் இவருடைய ஆசிரியர் டாக்டர் சர் ஜேம்ஸ் என்பவர் இங்கிலாந்து வந்து இங்கிலாந்து பிரதமரை சந்தித்து இவரை விடுவிக்க செய்தார். இவ்வாறு இவர் ஆரம்ப காலம் முதல் இறுதி காலம் வரை இவரது பழக்கத்தால் ஏராளமான ஆதரவாளர்களும், செல்வாக்குள்ள உள்ள நண்பர்களையும் கொண்டிருந்தார். பின்னர் பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று பெற்ற பணத்தால் சிங்கப்பூருக்கு வந்து தங்கினார். அங்கிருந்து சீனாவில் புரட்சி செய்ய தூண்டினார். சில நாட்களுக்கு பின் சீனாவுக்கு வந்தார். அங்கிருந்து கட்சி பணிகளையும், புரட்சி கருத்துக்களையும் பரவச் செய்தார். இதனால் இவருக்கு ஏராளமான புரட்சியாளர்கள் கிடைத்தனர். சீன மக்கள் பெரும் திரளாக இவர் அணியில் சேர்ந்தனர். இதனால் ஆத்திர முற்ற மஞ்சு அரசு தனக்கு எவ்விதத்திலும் கொடுமைகளை கொடுக்கலாம் என்று எண்ணிய டாக்டர் சென் மீண்டும் அமெரிக்கா சென்றார். அங்கு சென்னிற்கு ஆலோசனை கொடுக்கப்பட்டது. குறிப்பாக ஹோம் யா என்ற அமெரிக்க இராணுவ ஆலோசகர் தொடர்பு இவருக்கு அதிக மன தைரியத்தையும் நம்பிக்கையையும் கொடுத்தது.

**வெற்றியில்லா புரட்சிகள்**

கி.பி. 1899 ல் சென் ஹங்காங் என்ற நகரில் தங்கக் காண்டன் என்ற பகுதிக்குச் சென்று புரட்சியை ஆரம்பித்தார். ஆனால் இப்புரட்சி ஒடுக்கப்பட்டது. மஞ்சு அரசாங்கம் மேலும் பல கடுமையான சட்டதிட்டங்களை புரட்சியாளருக்கு எதிராக உருவாக்கினர் என்றாலும் டாக்டர் சென் சீனாவில் மையப்பகுதிக்குச் சென்று கிளர்ச்சியை ஏற்படுத்தினார். ஆனால் அவைகள் எல்லாம் தோல்வியிலே முடிந்தது. பின்னர் 1904 ஆம் ஆண்டு ஹாங்காங் சென்றார். அவ்வெளியில் மஞ்சு அரசு டாக்டர் சென் தலைக்குப் பரிசு கொடுக்கத் திட்டமிட்டது.

இதனால் சென் சிங்கப்பூர் சென்றார். அங்கு அவருக்கு ஏராளமான மாணவர்களின் ஆதரவும், பகுத்தறிவு வாதிகளின் வரவேற்வும் அதிகமாக ஆர்வத்தை கொடுத்தது. தனக்கு இருக்கின்ற ஆதரவை முங்சு அரசுக்கு தெளிவுப்படுத்த இயக்கம் ஒன்றினை உருவாக்க எண்ணினார். இதன் விளைவாகவே தூங்-மிங்-ஹீய் என்ற அமைப்பு உருவானது.

**தூங்-மிங்-ஹீய்**

கி.பி. 1905 ஆம் ஆண்டு தூங்-மிங்-ஹீய் என்ற புரட்சி கட்சியினை டாக்டர் சென் துவங்கினார். இந்த கட்சி உருவாக்கியதும் சீனர்களின் ஆதரவு மேலும் பெருகியது. ஏறத்தாழ 10,000 உறுப்பினர்கள் இக்கட்சியில் சேர்ந்தனர். ஜப்பானில் உள்ள 'மக்கள் நாளேடு' இக்கட்சியின் செயல்பாடுகளுக்கும், நோக்கங்களுக்கும் சிறந்த விளம்பரத்தினை கொடுத்தது. இக்கட்சியில் முக்கிய நோக்கங்களை நாம் அறிய வேண்டியது மிகவும் அவசியம்.

1. மஞ்சு வம்சத்தை வெகு விரைவாக சீன ஆட்சிபீடத்தில் இருந்து விரட்ட வேண்டும்.
2. சீன நாட்டினை குடியரசு நாடாகமாற்ற வேண்டும். மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியைக் கொண்டு ஆளப்பட வேண்டும். இவர் தனக்கு ஆலோசனை பெற மக்களின் பிரதிநிதி அவையினை வைத்து இருக்க வேண்டும்.
3. பிளவுப்பட்ட சீனாவை ஒன்றுப்படுத்த வேண்டும்.
4. சீனாவில் உள்ள நிலங்கள் அனைத்தும் எல்லா மக்களும் பயன்பெறும் வகையில் பிரிக்கப்பட வேண்டும்.

இந்நோக்கங்களைக் கொண்ட இக்கட்சியில் உறுப்பினராக சேர விரும்பிகின்றவர்களின் தங்களின் முழு மனதோடு உறுதி மொழிகளையும், உறுதி எழுத்து சான்றுகளையும் கொடுக்க வேண்டும். இதன்படி இச்சங்கத்தில் சேர்பவர்கள் கட்சியின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட வேண்டும். அதோடு சில வேளைகளில் உறுப்பினர் தவறு செய்தார் என்றால் அதற்கான தண்டனையைப் பொறுப்பாளர்களிடம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும் என்பது இக்கட்சியின் கொள்கையாக இருந்தது. லீ சங் என்பவர் சென் உருவாக்கிய கட்சி ஆரம்ப காலத்தில் பல பேரும் புகழோடும் செல்வாக்கினை பெற்றிருந்தாலும் பின்னர் வந்த காலத்தில் இச்செல்வாக்கு குறைந்தே இருந்தது எனக் கூறுகின்றார். இக் கட்சியின் நோக்கம் மஞ்சு அரசை விழ்த்துவது என்றாலும், அதை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்ற செயல்பாட்டினை விளக்காமல் இருந்தால் அது ஒரு குறைபாடு ஆகும் எனவும் கூறுகின்றார். டாக்டர் சென் தனது முதல் நடவடிக்கையாக உறுதியான இராணுவத்தினை உருவாக்க வேண்டும். அதன் மூலமாக சீனாவின் அரசு நடவடிக்கைகளையும் வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளையும் தடுக்க முடியும் என உறுதியாக நம்பி இருந்தார். அடுத்து இக்கட்சியின் செல்வாக்கினை வளர்த்து மாகாணங்களை கைப்பற்ற வேண்டும். இறுதியாக சாதாரண முறையிலான குடியாட்சியினை உருவாக்க வேண்டும் என தனது கட்சியின் நோக்கங்களை வகைப்படுத்தினார். இதனால் சீனா முழுவதும் உள்ள ஆதரவு மேலும் பெருகியது.

**மீண்டும் புரட்சியை ஏற்படுத்தல்**

சென் கட்சியான தூங்-மிங்-ஹீங் கட்சியின் வளர்ச்சியால் டாக்டர் சென்னிற்கு புரட்சியின் மீது அதிக நம்பிக்கை வளர்ந்தது. இதனால் கி.பி. 1907 ல் மஞ்சு அரசுக்கு எதிராக திடீர் புரட்சியினை ஏற்படுத்தினார். ஆனால் அப்புரட்சியும் தோல்விகண்டது. இவரது ஆதரவாளர்கள் பலர் கடும் இன்னல்களுக்கு ஆளானார்கள் என்றாலும் டாக்டர். சென் மனம் தளராது இந்த மஞ்சு வம்சத்தினை ஒழிக்கும் வரை ஓய்வதில்லை என்று முழங்கினார். அதை நிறைவேற்ற கலங்கிய மக்களிடம் நம்பிக்கை வளர பல்வேறு வரலாற்று வெற்றிகளை எடுத்துக் கூறியும் மக்களோடு தங்கி வாழ்ந்து அவர்களோடு ஒருவராக தன்னை மாற்றி கொண்டதன் மூலமாக இக்கட்சிக்கு ஆதரவு குறையாமல் பார்த்துக் கொண்டார்.

**சீனக் குடியரசு உருவாக்குதல்**

டாக்டர் சென் ஏறத்தாழ பத்து புரட்சியினை சீனாவில் மஞ்சு அரசுக்கு எதிராக மேற்கொண்டும் அவை அனைத்தும் வெற்றி கொடுக்கவில்லை. இதனால் சென் மேலும் கடுமையாக உழைக்க வேண்டியதாயிற்று. கி.பி. 1911 ல் மஞ்சு அரசாங்கத்தின் அரசியல் மற்றும் பொருளாதார முறைகள் மக்களுக்கு திருப்தியை கொடுக்கவில்லை. இதனால் சீனர்கள் அனைவருமே ஆட்சியில் மாற்ற வேண்டும் என நினைத்தனர். டாக்டர் சென் ஆதரவாளர்கள் புரட்சி செய்வதற்கான சூழ்நிலையினை உருவாக்கினார்கள். கி.பி. 1911 ஆம் ஆண்டு அக்டோபர் பத்தாம் நாள் ஷேன்கோவிலுள்ள புரட்சியாளர் தலைமையகத்தில் திடீரென ஒரு வெடிகுண்டு வெடித்தது. அதை தொடர்ந்து புரட்சியாளர்கள் 'நேன்கிங்'கை கைப்பற்றி அதை தம் தலைநகராக்கினர். இவ்வாறு சீனாவில் புரட்சி நடந்துக் கொண்டிருக்கும் போது புரட்சிக்காக பணம் வசூல் செய்து கொண்டு சென் அமெரிக்காவில் இருந்தார். பின்னர் இலண்டன் சென்ற சென்னிற்கு , சீனக் குடியரசின் தலைமை பொறுப்பேற்க சீனாவிற்கு வரும்படி தந்தி மூலம் செய்தி அனுப்பப்பட்டது. கி.பி. 1911 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் நாள் சீனாவிற்கு வந்த சென்னிற்கு கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது. டிசம்பர் 20 ல் சீனக் குடியரசின் தற்காலிகத் தலைவரானார். சென் 1912 ஆம் ஆண்டில் புத்தாண்டு தினத்தில் குடியரசு தலைவராக நேன்கிங்கில் பதவி ஏற்றார்.

**புதிய சீன குடியரசு**

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட குழந்தை குடியரசுக்குப் பல இடையூறுகளும் சவால்களும் வந்தன. டாக்டர் சென் பல திட்டங்களை செயல்படுத்தினால் தான் இக்குடியரசினைக் கட்டிக்காக்க இயலும் என உறுதியாக நம்பினார். இதனால் வட சீனாவில் மஞ்சுகளின் பிரதிநிதியாக இருந்த யான்-ஷி-காய் என்ற நபரோடு பேச்சுவார்த்தை நடத்தினார். அதன்படி மஞ்சுக்களை பதவி துறக்கச்செய்தால் ஐக்கிய சீனக் குடியரசு தலைவர் பதவியை யானுக்கு அளிக்க முன்வருவேன் என வாக்களித்தார். அவ்வாக்கின் படியே மஞ்சுக்களை யான் பதவி துறக்க செய்தார். சன்யாட் சென் பிப்ரவரி 1912 ல் தன் பதவியை ராஜினாமா செய்தார். சென்னின் ஆலோசனைப்படி யான்-ஷீ-காய் சீனக் குடியரசின் தலைவரானார். அதே ஆண்டில் தூங்-மிங்-ஹீய் கட்சியையும் அதே போன்ற புரட்சி கருத்துக்களைக் கொண்ட கட்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து 'கோமின்டாங்' எனும் பெரிய கட்சியை சென் தோற்றுவித்தார். குடியாட்சியை நிறுவ உறுதியளித்துவிட்டு யான் பல முரண்பாடான திட்டங்களை செயல்படுத்தினார். இதனால் வெகுண்டு எழுந்த டாக்டர் சென்னால் ஒன்று செய்ய இயலவில்லை. யான் தனக்கு எதிரானவர்களை கொலை செய்தார். தான் அனைத்து அதிகாரம் பெற்ற தலைவன் என்பதை மக்கள் அறிய வேண்டும் என கருதி பல கடுமையான தண்டனைகளை எதிராளிகளுக்கு கொடுத்தார். இதனால் டாக்டர் சென் உயிர் காக்க ஜப்பானுக்குத் தப்பி ஓடினார். யான்-ஷி-காயின் மரணத்திற்கு பின்னர் தான் அவரால் சீனாவுக்கு வர முடிந்தது. அதுவரையில் யான் கடுமையான முறைகளில் நடந்து 'கோமின்டாங்' கட்சியினை சட்ட விரோதமான கட்சி என தடை செய்தார். மக்கள் மஞ்சு அரசு ஆட்சியை காட்டிலும் அதிகமான துன்பங்களை அடைய நேரிட்டது. மக்களை ஒன்றுபடுத்திக் கேண்டனைத் தலைநகராகக் கொண்ட புதிய குடியரசினை ஏற்படுத்தினார் என்றாலும் கி.பி. 1922 ல் கோமின்டாங் தளபதிச் சென்னுடன், சென்னுக்குக் கருத்து பேதம் ஏற்பட்டது. டாக்டர் சென், சென்னைப் போரில் தோற்கடித்தார். அதுமுதல் இறக்கும் வரையில் டாக்டர் சென் குடியரசு தலைவராக இருந்தார். கோமின்டாங் கட்சியின் தேசிய அளவிலான மாநாடு ஒன்றை நடத்தி அதில் தனது மூன்று தத்துவக் கருத்துக்களை வெளியிட்டார். மேலும் கோமின்டாங் கட்சியில் சாதாரண

பாமர மக்களும் இடம் பெறாமல் இருப்பது டாக்டர் சென்னிற்கு வருத்தம் அளித்தது. இதனால் இவர்கள் தமது கட்சியில் சேராதிருப்பது மற்றும் டாக்டர் சென்னிற்கு வருத்தம் அளித்தது. இவர்களை எவ்வாறு அனைத்து முழு சீனாவையும் வழி நடத்துவது என்ற சிந்தனையில் இருந்தபோது, அவர்களின் தனிக் கட்சியாக பொது உடைமை கொள்கையைக் கொண்ட பொது உடைமை கட்சியின் நோக்கத்தையும் மக்கள் இதன் மீது வைத்திருக்கும் பற்றினையும் ஆராய்ந்து தமது கட்சி பொதுவுடைமை கட்சியோடு தோழமை கொண்டுள்ளது என தன்னோடு இணைத்து ஒன்றுப்பட்ட சீனர்களாக்கினார். இக்காரியத்திற்காக ரஷ்யாவில் இருந்தும் பல அறிஞர்கள் வரவழைக்கப்பட்டனர். இச்சூழ்நிலையில் டாக்டர் தனது அரசியல் தத்துவங்களாக தேசியம், ஜனநாயகம், மக்கள் நலன் என்ற கொள்கைகளைச் சீன மக்களுக்கு தெளிவுபடுத்தினார்.

**இராணுவப்பள்ளி ஆரம்பித்ததல்**

டாக்டர் சென் தேசிய ஒற்றுமைக்காக உறுதியான இராணுவத்தினை நிலையாக வைத்திருக்க எண்ணினார். இதற்காக நல்ல அடிப்படை முறைகளையும் ஒழுங்குகளையும் கொண்ட இராணுவ பள்ளியினை ஆரம்பிக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதன்படி கி.பி. 1924 ஆம் ஆண்டு ‘வாம்போவா’ என்ற இராணுவப் பள்ளியினை ஆரம்பித்தார். இதனை நடத்திச் செல்ல இராணுவப் பயிற்சி பெற்ற சீனா சியாங்-கேங்-ஷேக் என்பவருக்கு முழு அதிகாரமும் கொடுக்கப்பட்டது. இந்த இராணுவப்பள்ளி ஏராளமான அரசியல்வாதிகளையும், படைத் தளபதிகளையும் பின்னர் உருவாக்கி கொடுத்தது. இந்தப் புகழ் டாக்டர் சென்னையேச் சேரும். இங்கு தரைப்படை, கப்பற்படை போன்ற படைகளைப் பற்றி ஒழுக்க நெறிமுறையோடு கற்று கொடுக்கப்பட்டது.

**டாக்டர் சன்-யாட் சென்னின் இறப்பு**

டாக்டர் சன்-யாட்-சன் உடல்நிலை நாளுக்கு நாள் அதிகமான பலவீனம் கண்டது என்றாலும் ஓய்வின்றி சீன நாட்டிற்காக சாகும் வரை பாடுபடுவேன் என கூறி வந்தார். இவரது கனவு ஒன்றுப்பட்ட சீனாவை உருவாக்க வேண்டும் என்பதுதான் இதற்காக பீகிங் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்திவந்தார். கி.பி. 1925 ல் இவர் உடல்நிலை மிகவும் மோசமானது. பேச்சுவார்த்தையை நடத்திக்கொண்டு இருந்த வேளையில் பீகிங் நகரில் தனது நண்பரது இல்லத்தில் காலமானார். டாக்டர் சன்-யாட்-சென் சீனாவின் கதாநாயகன் ஆனதுடன் அவரது மூன்று தத்துவங்களான தேசியம், ஜனநாயகம், மக்கள் நல்வாழ்வு ஆகியவைச் சீனரின் விவிலியம் ஆயின. தேசிய சீனாவின் தந்தை தேசிய ஒற்றுமையின் முழு வடிவம் தோழமையின் பிறப்பிடம், சுதந்திரத்திற்கும், குடியுரிமைக்கும் பாடுபட்ட ஒப்புயர்வற்ற மனிதர் என அவர் புகழப்பட்டார். ‘‘துருக்கிக்குக் கமால், ரஷ்யாவிற்கு லெனின், ஸ்டாலின் ஆற்றியுள்ள தொண்டுகளைப் போல் டாக்டர் சன்-யாட்-சென் நாற்பது கோடி சீனர்களுக்கு தொண்டாற்றியுள்ளார்’’ என டாக்டர் சென்னுக்கு கீட்டன் புகழாரம் சூட்டுகின்றார்.

**யுவான் - ஷி - காய்**

சீன குடியரசு வரலாற்றில் மிக முக்கியமான மனிதராக யுவான்-ஷி-காய் அழைக்கப்படுகின்றார். இவரை பற்றி அறிஞர்கள் மிக திறமையான அரசியல் ஞானி என வர்ணிக்கின்றனர். இவர் சீனக் குடியரசுத் தலைவராவதற்கு முன்பே பிற முக்கியமான பதவியில் இருந்தவர். கொரியாவில் இருந்த கடைசி ஆளுநர் இவர். சீன-ஜப்பானியப் போருக்குப் பின் சீனாவின் நம்பிக்கை நட்சத்திரம் இவர்தான். இவர் தனியாக இராணுவத்தை பராமரித்து வந்தார். அதன் பெயர் பியர்ங் இராணுவம் என்பதேயாகும். இவரது கொள்கைகள் அமைதியான முறையில் புதிய திட்டங்களையும், ஆட்சி நெறிகளையும், செயல்படுத்த வேண்டும் என்பதேயாகும். இவர் குடியாட்சியை விரும்புகிறவர் அல்ல. ஆனால் சீன நோயை போக்க குடியாட்சிதான் அவசியம் என நம்பினார். இவர் சிறந்த போர்வீரர், இராஜதந்திரி, அரசியல் சந்தர்ப்பவாதியாவார்.

உண்மையில் யுவான் தனிப்பட்ட முறையில் யாரும் அறிந்துக்கொள்ள இயலாத அரசியல்வாதி என்பதே சாலப் பொருத்தமாகும். இவரது பார்வையில் சீனநாடு வலிமையடைந்த நாடாக வரவேண்டும்

உயர்வான நாடாக வரவேண்டும் என்பது தான் இதற்காக இவரது அரசியல் செயல்பாடுகள் கட்டமைக்கப்பட்டன. இவர் புதிதாக உருவாக்கிய குடியரசு ஆட்சியைத் தொடர்ந்து குடியாட்சியாக எடுத்துச் செல்லாமல் மஞ்சு வம்சம் ஆட்சி நீக்கப்பட்டு முடியாட்சியாக மாற்றியது. இவரது செயல்பாட்டில் வினோதத்தினை அறிய முடிந்தது. இவரது ஆட்சிக் காலத்தில் சீனா வளர்ச்சியை அடையுமா என்ற வினா எல்லோரிடமும் தோன்ற காரணமாயிருந்தாலும் இவரது திட்ட செயல்பாடுகள் நம்பிக்கைக் கொடுத்தன. இரண்டு கொள்கைகள் இவருக்கு பலம் கொடுத்தன, அவைகள்.

1. ஐந்து நாடுகளின் கடன் தொடர்பு மற்றும் அதனால் இங்கிலாந்து, ஜெர்மனி, ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளிடம் இருந்து பணத்தினை பெற்று சீன நாட்டை பொருளாதார மேம்பாடு காண சித்தமானார்.
2. உயர்பதவியில் தனக்கு வேண்டியவர்களை பதவியில் அமர்த்தல் இவருக்கு எதிரானவர்கள் அனைவரையும் பதவியில் இருந்து நீக்கிவிட்டார்.

**அரசியல் சாசன முடியாட்சி**

யுவான் முழு அதிகாரத்தைப் பெற்றிருந்தாலும் ஆட்சி சிறப்பாக அமைய அரசியல் அவையை உருவாக்கினார். இதற்கு முன் இருந்த தேசிய அவையை நீக்கினார். சீன நாட்டிற்குப் பொதுவான புதிய அரசியல் அமைப்புமுறையை உருவாக்கினார். இம்முறையில் யுவான் தனக்கு அதிக செல்வாக்கு அமையுமாறு செய்துக் கொண்டார். என்றாலும் யுவான் பல போராட்டங்களை சந்திக்க நேரிட்டது. உள்நாட்டிலும், வெளிநாட்டில் இருந்தும் பல அதிர்ச்சியான சம்பவங்கள் நிகழ்ந்தன. மங்கோலியாவில் குழப்பம், தீபெத்தில் குழப்பம், ரஷ்யாவின் தலையீடு என்றப் போதிலும், இவர் நிதானமாக பல செயல்களைச் செய்தார். அதன்படி மங்கோலியாவிற்கு சுய ஆட்சியை அங்கீகரித்தார். தீபெத்திற்கு உடன்படிக்கை வாயிலாக மேலாண்மையை நிலைப்படுத்திக் கொண்டார். மேலும் ஜப்பானிய அரசு சீனாவை வசப்படுத்தும் நோக்கோடு இருபத்தி ஒன்று தேவைகள் என்ற பட்டியலை கொடுத்து யுவானை திணறச் செய்தது. ஆனால் யுவான் சிலவற்றை ஏற்றும் பலவற்றை மறுத்தும் வந்தார் என்றாலும் ஜப்பானின் ஆதிக்க நெருக்கடி ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே சென்றது. மேலும் சீனாவை தனது அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும் நாடாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் ஜப்பானிடம் காணப்பட்டது. இதனால் இந்த இருபத்தி ஒன்று தேவைகளை திணிக்க ஆரம்பித்தது.

**யுவானின் மறைவு**

சீனாவை ஒன்றுபட்ட குடியரசு ஆட்சியில் ஆளவேண்டும் என்ற உயர் நோக்கத்தோடு டாக்டர் சென் பேச்சுவார்த்தையின் மூலம் உறுதிசெய்து, டாக்டர் சென் தன் பதவியை துறந்து யுவானை குடியரசு தலைவராக்கினார். ஆனால் யுவான் முழு அதிகாரத்தையும் தனது கையில் எடுத்துக்கொண்டு ஆதரவு கொடுத்த டாக்டர் சன்யாச் சென்னின் கட்சியையும, அவரது நண்பர்களையும் பகைவர்களாக கருதி பழிவாங்கினார். மஞ்சு வம்ச ஆட்சியில்லை என்றாலும் மஞ்சு முறையிலே முடியாட்சியை இவரும் கடைபிடித்து வந்தார். இது சீனர்களுக்கு பெரிய ஏமாற்றம் கொடுத்தது. இவரது உடல்நிலை திடீரென பாதிக்கப்பட்டு ஜூன் மாதம் 6 ம் தேதி 1916 ஆம் ஆண்டு மரணமடைந்தார்.

**முதலாம் உலகப்போரில் சீனா**

உலகப்போர் நடைபெறும் நேரத்தில் சீனாவின் நிலவரம் மிகவும் மோசமாயிருந்தது. உள்நாட்டில் பிரச்சனைகள் குவிந்தன. இவற்றில் சீனர்களே சீனாவை சுரண்ட நினைக்கும் நிலை மட்டுமல்ல, சீனாவை முதல் உலகப்போரில் கலந்துக்கொண்ட நாடுகள் அனைத்தும் பங்குபோட்டுக் கொண்டு இருந்தன. ஏராளமான ஆயுதங்களை சீனாவில் குவித்து சீனாவை தங்களது போர்களமாக மாற்ற எண்ணினர். இப்போரில் சீனா நேரடியாக கலந்துக் கொள்ளவில்லை என்றாலும் உலக நாடுகள் சீனாவில் தங்கள் செல்வாக்கைப் பெற்று தங்களுக்கு தேவையான இயற்கை வளங்களை பெற வேண்டி சீனாவை நடு நிலைமை வகிக்கும் நாடாக மதிக்க எண்ணினர் என்றாலும் ஆசியாவில் தன்னிகரற்ற தலைவனாக வளர்ந்து வரும் சக்தி வாய்ந்த ஜப்பான் இப்போரின் மூலம் சீனாவில் தனது செல்வாக்கினை அதிகமாக்க நினைத்தது. ஜப்பான் சீனர்களின் தேசிய எண்ணம் பாதிக்கும் வண்ணம் பல முறைகளில் தவறாக நடந்துக் கொண்டது. சீனாவின் நடு நிலைமையை மீறியது. ஜெர்மானியப் பகுதியாகிய ஷாண்டுங் என்ற வளம்மிக்கப் பகுதியை விடுவித்து தனது ஆதிக்கத்தில் கொண்டு வரவேண்டும் என்ற திட்டத்தில் ஜப்பான் செயலாற்றியது. அதே வேளையில் ஐரோப்பிய ஜெர்மனியின் வளர்ச்சிக்கு காரணம் சீனாவின் ஷாண்டுங் பகுதியின் வளம்தான் என்று ஜப்பான் உணர்ந்தது. ஆகவே

இவ்வளப்பகுதியினை நாம் பெற்றுக்கொண்டால் ஜெர்மனியை வெல்லுவது எளியது என எண்ணியது. இது வெறும் கண் துடைப்பான வார்த்தை. ஆனால் உண்மையில் ஜப்பான் சீனாவில் தனது வலிமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் செயல்பட்டது என பல வரலாற்று ஆசிரியர்கள் கருத்து வெளியிடுகின்றனர். மேலும் ஜப்பான் இப்பகுதியில் செயல்பட்டு கொண்டிருந்த நூற்றி நாற்பது மைல் நீள இரும்புப்பாதையான சிங்டோ சிஹான் பாதையை எடுத்துக் கொண்டது.

இந்நடவடிக்கையைப் பொறுமையோடு சகித்துக்கொண்ட சீன அரசின் ஆட்சியாளரான யுவான்-ஷிகாய் ஜப்பானுக்கு எதிராக செயல்பட திட்டம் தீட்டினார். ஜப்பானியரின் ஆக்கிரமிப்புகளை எதிர்த்தும், சீனாவின் நடுநிலைமையை ஏற்றுக்கொள்ளும் படியும், ஜப்பான் சீன நாட்டிற்கு இடையே இருக்கின்ற கசப்பான சம்பவங்களை நீக்கவும், அதிக செயல்பாட்டினை பேச்சு வார்த்தைகள் மூலமாகவும், தூதுக்குழுக்கள் வாயிலாகவும், சீனா வலியுறுத்தியது என்றாலும் ஜப்பான் ஆதிக்க வெறியில் இருந்தபடியால் சீனர்களின் எண்ணத்தை மதிக்காது சீனாவை முற்றிலும் கைப்பற்ற வேண்டிய வழிமுறைகளை செய்து வந்தது. இச்சமயத்தில் தான் ஜப்பான் சீனாவிடமிருந்து இருபத்தி ஒன்று தேவைகளை கேட்டது அல்லது வலுக்கட்டாயமாக திணித்தது எனலாம். இந்த இருபத்தி ஒன்று தேவைகளின் அடிப்படை நோக்கம், எப்படியாயினும் சீனாவை ஜப்பான் தனது கைக்குள் கொண்டு வந்து பிற ஐரோப்பியர்களையும் அமெரிக்காவையும் விரட்டவேண்டும் என்பதே ஆகும். ஆகவே எவ்விதத்திலும் இத்தேவைகளை பெற ஜப்பான் துடித்தது என்றே கூறலாம்.

**இருபத்தி ஒன்று தேவைகள்**

இந்த தேவைகள் அனைத்தும் ஐந்து முக்கிய பிரிவுகளை அடிப்படையாக கொண்டு இருந்தன. அவைகள் கீழ்கண்டவாறு

1. ஷாண்டுங் பகுதியை அடிப்படையாகக் கொண்டக் கருத்துக்கள் அல்லது தேவைகள்
2. தென் மஞ்சூரிய பகுதியினை மையமாகக் கொண்டத் தேவைகள்
3. ஷனோயா - பிங் கம்பெனியை பற்றியவைகள்
4. சீனத் துறைமுகங்களை மையமாகக் கொண்டவைகள்
5. பலதரப்பட்ட ஜப்பானிய தேவைகள்.

ஜப்பானியர்களின் இந்த தேவைகளைக் காணும் போது ‘வெற்றி பெற்ற நாடுகள் தோல்வி அடைந்த நாட்டின் மீது திணிக்கின்ற போர் இழப்பீடு போன்று இருந்தது’ என வரலாற்று ஆசிரியர்கள் வர்ணிக்கின்றனர். இந்த இருபத்தி ஒன்று தேவைகள் அல்லது கோரிக்கைகள் கீழ்கண்டவாறு அமைகின்றன.

1. சீனா ஷாண்டுங் பகுதியில் ஜெர்மனிக்கு அனுமதித்திருந்த உரிமைகளை ஜப்பானுக்கு கொடுக்க வேண்டும்.
2. சீனாவில் உள்ள முக்கிய துறைமுகங்கள் அனைத்தும் ஜப்பானிய வியாபாரத்திற்காக திறந்து விடவேண்டும்.
3. மங்கோலியாவின் உள்பகுதியிலும் லியனிங், ஹஷிலின் போன்ற இடங்களில் ஜப்பான் பெற்றிருந்த சலுகைகளை சீனா மீண்டும் அங்கீகரிக்க வேண்டும்.
4. ஈரான் நாட்டில் ஜப்பானின் இரும்பு எஃகு தொழில் நடைபெற தேவையான வளங்களை சீனாவில் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.
5. சீனா பிற ஐரோப்பிய நாடுகளுக்கு துறைமுகம், வளைகுடா மற்றும்தீவுகளில் உரிமை வழங்கலாம்.
6. ஜப்பானியரின் ஆலோசகரின் பெயரால்தான் நிதி, அரசியல் மற்றும் இராணுவ துறைகள் செயல்படவேண்டும்.
7. சீனாவின் காவல்துறை ஜப்பானிய மேற்பார்வையில் செயல்பட வேண்டும்.
8. சீனாவின் படை கருவிகள் இருநாடுகளின் மேற்பார்வையில் தான் உற்பத்திச் செய்யப்பட்டு சேமிக்கப்பட வேண்டும்.
9, சீனாவின் பல பகுதிகளில் இருப்புப் பாதை அமைக்க ஜப்பானிய பணங்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்படும்.
10. ஜப்பானியர்கள் ஷாண்டுங் பகுதியில் தங்கி இருக்கவும், தங்கள் வியாபாரங்களைத் தடையின்றி

நடத்தவும் அனுமதி

11. சீனாவின் ஆர்தர் துறைமுகம், டேனி மற்றும் மஞ்சூரிய இருப்பு பாதைகளின் உரிமையை மேலும் 99 ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டும்.
12. தென்மஞ்சூரியா மற்றும் மங்கோலியாவில் தங்கி குத்தகை எடுக்க, வாணிகம் மற்றும் பிரயாணம் செய்ய, ஜப்பானியருக்கு முழு அனுமதி அளிக்க வேண்டும்.
13. சீனா தனக்கு தேவையான இராணுவத் தளவாடங்களை 50% ஜப்பானிடம் இருந்து தான் வாங்க வேண்டும்.
14. சீனாவின் முக்கிய தொழிற்சாலைகளையும், சுரங்கங்களையும் பயன்படுத்த ஜப்பானுக்கு சீனா முழு உரிமை அளிக்க வேண்டும்.
15. ஜப்பானியர்களின் மருத்துவமனைகள், கோவில்கள் மற்றும் பள்ளிகளைச் சீனாவின் எப்பகுதியிலும் தொடங்க அனுமதி கொடுக்க வேண்டும்.
16. ஜப்பானியர்களால் சீனாவில் புத்தமத கோட்பாட்டினை பரவச் செய்ய அனுமதி வழங்க வேண்டும்.
17. தென்மஞ்சூரியா மற்றும் மங்கோலியப் பகுதியில் உள்ள சுரங்கங்களில் உரிமை வழங்க வேண்டும்.
18. இராணுவ கண்காணிப்பாளர்களின் நியமனம் ஜப்பானின் அனுமதியின் பெயரில் நிகழவேண்டும்.
19. சீனாவில் எப்பகுதியும், ஜப்பானை தவிர வேறு எந்த நாட்டிற்கும் சீனா குத்தகைக்கு விடக் கூடாது.
20. சீனாவில் ஜப்பான் பெற்றிருந்த பீங் கம்பெனியின் உரிமையை எவ்விதத்திலும் தடை செய்யக்கூடாது.
21. சீனா ஜப்பானிற்கு, இருப்புப் பாதையின் உரிமையை பிற நாடுகளுக்கு கொடுப்பதில்லை என உறுதி தர வேண்டும்.

இவ்வேளையில் முதல் உலகப் போரில் ஜப்பான் இங்கிலாந்திற்கு ஆதரவாக செயல்பட்டது. அதன் விளைவாக சீனாவில் தனது செல்வாக்கினை அதிகரித்துக் கொண்டது. அமெரிக்கா வாயிலாக சீனாவும் ஜப்பானும் ஒரே அணியில் சேர்ந்திருந்ததால் சீனா போரில் பல இன்னல்களை எதிர்நோக்கியது. ஜெர்மனிய படைகள் ஷாண்டுங்களின் வளமிக்க பகுதிகளை நாசம் பண்ணியன. மேலும் சீனாவில் உள்நாட்டுப் போர் மற்றும் குழப்பங்கள் ஏற்பட்டு யுவானுக்கு மிகுந்த துன்பத்தை கொடுத்தன. கோமின்டேங் கட்சியின் ஆதரவாளர்கள் மிகக் கடுமையாக யுவானை எதிர்த்து பிரச்சாரம் செய்தார்கள் என்றாலும் யுவான் அவைகளை தனது இரும்புக்கரம் கொண்டு அடக்கிவிட்டார். சீனா நேசநாடுகளுக்கு ஆதரவாக செயல்பட்டதால் முதல் உலகப்போரில் நேச நாடுகளின் அன்பையும் ஆதரவையும் பெற்றது. போர் முடிவுற்ற போது நடைபெற்ற பாரிஸ் அமைதி மாநாட்டிலும் சீனா பங்குக் கொண்டது.

**பாரீஸ் அமைதி மாநாட்டில் சீனாவின் பங்கு**

பாரீஸ் அமைதி மாநாடு 1919 ல் பாரிஸில் நடைபெற்றது. இம்மாநாட்டின் நோக்கம் உலகப் போர் நடைபெற்றதால் விளைந்த இழப்பீடு மற்றும் சேதங்களை அறியவும், இப்போரில் நேச நாடுகளின் வெற்றியையும், அச்சு நாடுகளின் தோல்வியையும் விவாதித்து நேச நாடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களில் அச்சுநாடுகள் பங்கு எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவும், வெற்றி பெற்ற நேசநாடுகள் அச்சு நாடுகளிடம் இருந்து கைப்பற்றிய இடங்களை தங்களுக்குள் பங்கீடு செய்வதற்காகவும் கூட்டப்பட்டது. இவ்வேளையில் சீனாவில் எந்த வலிமை உள்ள நிலையான அரசும் இல்லை, சீனா பிளவுப்பட்டு காணப்பட்டது என்றாலும சீனா தனது பிரதிநிதிகளை இம்மாநாட்டுக்கு அனுப்பி வைத்தது. இம்மாநாட்டில், சீனா ஜெர்மனியிடம் இருந்து வந்த ஷாண்டுங் என்ற சீனப் பகுதியை மீட்டுத்தர வேண்டும் என கேட்டது. மேலும் வெளிநாட்டவர்களின் படைகள் சீனாவின் எல்லைகளை விட்டு அப்புறப்படுத்த வேண்டும், சீனாவில் பிற நாடுகள் அனுபவித்து வரும் பங்கிட்டு உரிமைகளை நீக்க வேண்டும் எனவும், சீனாவில் ஏற்றுமதி இறக்குமதியாகும் பொருள்கள் மீது சீனாவே வரிவிதிக்க அதிகாரம் வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டது. ஆனால் சீனாவின் கோரிக்கைகளை நேச நாடுகள் கண்டுக்கொள்ளவில்லை. மாறாக ஜப்பான் மேலும் அதிக அதிகாரத்தோடு இம்மாநாட்டில் செயல்பட்டது. ஆகவே இம்மாநாடு சீனாவுக்கு எந்த சாதகமான சூழ்நிலையையும் கொடுக்கவில்லை. இதனால்

சீனர்கள் ஜப்பான் நாட்டின் மீதும், மக்கள் மீதும், பொருட்கள் மீதும், எதிர்ப்பை தெரிவித்தனர். ஜப்பானுக்கு எதிரி இயக்கங்கள் பல தோன்றியது. ஜெர்மனியோடு நேசநாடுகள் வெர்சேய்ஸ் உடன்படிக்கை செய்துக்கொண்டனர். இதில் சீனா கையொப்பம் அளிக்கவில்லை. சீன மாணவர்களும் இளைஞர்களும் நேசநாடுகளுக்கு எதிராக தங்களின் எண்ணத்தை வெளிகாட்டினர். அதோடு மே நான்கு இயக்கத்தினை துவங்கினர்.

**மே நான்கு இயக்கம்**

சீனாவில் மாணவர்களாலும், இளைஞர்களாலும், நடத்தப்பட்ட இயக்கம் தான் மே நான்கு இயக்கம் ஆகும். இவர்கள் சீனாவின் உள்நாட்டு பொருளாதார நிலை சீர்கேட்டினை எதிர்த்தும், சமுதாய ஏற்றதாழ்வுகளை எதிர்த்தும் பல இடங்களில் அரசுக்கு எதிராக கலகம் செய்தனர். நாட்டின் செல்வங்கள் ஒரு சிலரிடமே இருக்கின்றது என்றும் அவைகளை சரிநிலைப்படுத்தவேண்டும் என்றும், நிலையான தேசிய அரசை உருவாக்க வேண்டும் என்றும், சீனாவின் இயற்கை வளங்களை சீன நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கே பயன்படுத்த வேண்டும் எனவும் சீனாவில் அமைதியான செழிப்பை கொண்டு வர வேண்டும் என்பது இவர்களது நோக்கங்களாகும். இந்த விழிப்புணர்வு பெண்கள் சமுதாயத்திலும் தோன்றியது என்றால் மிகையாகாது இவ்வியக்கம் தோன்ற காரணங்களை ஆய்வு செய்வோம்.

1. மஞ்சு வம்சம் ஆட்சியைத் துறந்தப் பின், சீனாவில் எந்த வித கிளர்ச்சியும் பொரளாதார மாற்றங்களும் செயல்படவில்லை. போர் பிரபுக்களின் செல்வாக்கு மேலோங்கியே இருந்தது. பிரபுக்கள் அதிக அதிகாரத்தோடும், படை உதவியோடும் பல கிராமங்களைத் தங்களின் நலனுக்காக பயன்படுத்தி வந்தனர்.

2. இந்த ஆட்சியில் செல்வந்தர்கள் மேலும் செல்வந்தர்களாகவும், ஏழைகள் மேலும் எழியராகவும் செல்லக்கூடிய நிலைமை இருந்தது. பாமரமக்கள் பல துன்பங்களை சகிக்க வேண்டியிருந்தது. அரசாங்கத்தின் எல்லா இடங்களிலும் லஞ்சமும், ஊழலும் பெருகி இருந்தது. அதிகாரிகள் தங்கள் அதிகாரங்களை தவறாக பயன்படுத்தினார்கள். அதிக வரி விதிப்பினால் மக்கள் அவதியுற்றனர். சீனாவின் வளங்களும் செல்வங்களும் சிலரிடமே இருந்தது. பாமர மக்கள் வேலைக்காக நகரங்களை தேடிச் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டது.

3. மே நான்கு இயக்கம் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு நடந்த கலகம் என கூறுகின்றனர். காரணம் இவ்வியக்கத்தினர் சீனாவின் பரிதாபமான பொருளாதார நிலையினையே எங்கும் பேசி மக்களின் ஆதரவைப் பெற்றனர். இதற்காக ஆட்சி மாற்றம் தேவை எனவும் எண்ணினர்.

4. இவ்வியக்கம் போன்றே அவர்களுக்கு ஊன்றுகோலாக இருந்தது மேலைநாட்டினரின் கல்வி, கல்வியால் பிறநாட்டவரின் இழிநிலைகளையும், அவர்களது வளர்ச்சியினையும், மக்களின் உரிமைகளையும், கடமைகளையும், பொறுப்புகளையும் உணர முடிந்தது. இவர்கள் சிந்தனையில் தாங்கள் கற்ற அந்த மேலைநாட்டவரின் சமுதாயத்தையும் தங்கள் சமுதாயத்தையும் எடை போட்டு பார்க்க நேர்ந்தது. வெளிநாட்டினரால் உருவாக்கப்பட்ட தத்துவப் படைப்புகளும் வரலாற்று உண்மைகளும் சீன மொழியில் மொழி பெயர்த்து சீன மக்களை கற்கச் செய்தனர். குறிப்பாக டார்வீன் மனிதனின் தோற்றம் பற்றியும், ஸ்பென்சர், மான்டெஸ்சியு, ஜே.எஸ்.மில் மற்றும் ஆடம்ஸ்மித் போன்றோரின் இலக்கிய படைப்புகளின் மொழியாக்கமும் சீன சமுதாயத்தில் வியக்கத்தகு மாறுதல்களை கொடுத்தன. மான்டெஸ்கியுவின் தனித்தனி பிரிவு ஆட்சி முறை, சட்டம் இயற்றும துறை, செயல்படுத்தும் துறை, நீதித் துறை என்ற முப்பெரும் உன்னத கருத்தினை கொடுத்தது. இதனை சிந்தித்த மக்கள் இம்முறை சீனாவிற்கு அவசியம் என பல மேடைகளில் குமுறினர். மக்களின்

அடிப்படை உரிமைகளை மதித்து எந்த அரசும் ஆட்சி செய்ய வேண்டும் மக்களால் அரசை உருவாக்கவும், அழிக்கவும் முடியும் என்ற தன்னம்பிக்கையும், சீனர்களிடம் உருவாக ஆரம்பித்தது. ஆகவே இம் மே நான்கு இயக்கம் சீனாவின் விழிப்புணர்வு இயக்கம் அல்லது மறுமலர்ச்சி இயக்கம் என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

ஜனநாயகம் மற்றும் அறிவியல் என்ற இருகோட்பாடுகளுக்காக சீன இளைஞர்கள் கன்பூசியனிசம், சடங்காச்சார முறைகள் போன்றவற்றை எதிர்த்தனர். பயனுள்ள புதுமையை அடையப் பயனற்ற பழமையை ஒதுக்க எண்ணினர். சீன மொழியில் வெளி வந்துள்ள நாவல்கள், கவிதைகள், கட்டுரைகள் போன்றவற்றை வாங்கி கற்க புத்தகசாலைகளில் இளைஞர்களின் கூட்டம் அதிகமாய் இருந்ததாக சீன வரலாற்றாசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்நிலையின் கூட்டாகத்தான் மே நான்கு இயக்கம் உருவானது.

உடனடி காரணமாக பாரிஸ் அமைதி மாநாட்டினை கூறலாம். காரணம் சீனா முதல் உலகப்போரில் நேசநாடுகளுக்கு ஆதரவாக பாரீஸ் ஈடுபட்டதன் நோக்கமே போரில் வென்றால் பல சலுகைகளை பெற இயலும் என்பதுதான். போரில் வெற்றி அடைந்ததும் கூட்டப்படும் முதல் அமைதி மாநாட்டின் பல நன்மைகளை நாம் பெற இயலும் என்ற நம்பிக்கையில் சீன பிரதிகள் சென்றனர். ஆனால் ஒரு சில உரிமைகள் அல்லது நன்மைகள் கூடக் கிடைக்கவில்லை. மாறாக சீனா சிலகாரியங்களை கோரிக்கையாக வைத்தபோதும் உறுப்பினர்கள் யாரும் செவிசாய்க்கவில்லை. இது சீனாவுக்கு பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்தது. இதனால் பீகிங் நகரில் மாணவர்கள் போராட்டங்களை நடத்தினர். அவர்களுடைய கோஷம் ‘‘அதிகாரத்தை விட்டு விடாதே’’ ‘‘துரோகிகளை தண்டி’’ என சீனாவிற்கு 21 கோரிக்கைகளை விட்டுபோன என ஜப்பானுக்கும் மற்ற நேச நாடுகளுக்கும் எதிராக எழுந்தது.

**முக்கியத்துவம்**

மே நான்கு இயக்கமானது தாராளமான மறுமலர்ச்சி இயக்கமாகும். தேசப்பற்றுள்ள தேசியவாதிகள் உருவாக்கிய தேசிய நல் இயக்கமாகும். விரைவாக இவ் வியக்கம் பீகிங் நகரில் இருந்து பிற நகரங்களுக்கு சென்றடைந்தது. அதிகமான மக்களின் ஆதரவு இவ்வியக்கத்திற்கு கிடைத்தது. நாடு முழுவதும் ஜப்பான் பொருட்களை புறக்கணித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். இவ் வியக்கம் சீனாவின் நவீன மயமான ஆட்சி ஏற்பட தூண்டுதலாக இருந்தது. இந்த இயக்கம் மேலை நாட்டவரின் கல்வின் தூண்டுதலால் சீனாவில் ஏற்பட்டது. ஏராளமான பேராசிரியர்களும் கல்லூரி மாணவர்களுமே இவ்வியக்கத்தின் தூண்டுகோளாக இருந்தனர். இதனால் சீனாவில் வட்டார இலக்கியம் வளர்ந்தது. கல்வி கற்க வேண்டும் என்ற விருப்பம் அதிகம் காணப்பட்டது. மேலும் இவ்வியக்கத்தின் விளைவால் சீனா மேலை நாட்டவரின் நாடுகளைப் போல் உருவெடுக்க ஆரம்பித்தது. மேலும் இச்சூழ்நிலையினை அறிந்த நேசநாடுகள் சீனாவை திருப்திபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு வாஷிங்டன் மாநாட்டினை கூட்டினர்.

**வாஷிங்டன் மாநாடு**

முதல் உலகப்போர் முடிவடைந்ததும், தூரக்கிழக்கு நாடுகளில் வல்லமை சமநிலை பாதித்திருந்தது. இதனால் இப்பகுதியின் நிலைமை ஜப்பானுக்கு ஆதரவாகவும், இதனைக் கட்டுப்படுத்த இயலாத வண்ணம் வளர்ந்தும் காணப்பட்டது. ஜெர்மனி, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தங்களின் வல்லமையை இழந்து பலவீனமடைந்து காணப்பட்டன. இதனால் ஜப்பானின் செல்வாக்கினை கட்டுப்படுத்துவும், கம்யூனிச நாடான ரஷ்யாவை கட்டுப்படுத்தவும் வாஷிங்டன் மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாட்டில் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், சீனா போன்ற நாடுகள் கலந்துக்கொண்டன. இம்மாநாடு சீன வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றது. அமெரிக்காவின் தூண்டுதலின் பெயரில் தான் இம்மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாட்டில் சீனா தனது எண்ணங்களை உலகுக்கு எடுத்துரைக்கலாம் என நம்பியது. இம்மாநாட்டினை அமெரிக்கா கூட்ட காரணம் பல உண்டு அவைகளை இங்கே காண்போம்.

1. அமெரிக்கா தனக்கு தேவையான வெளிநாட்டு சந்தையினை சீனாவில் அதிகமாகப் பெற நினைத்தது.
2. இங்கிலாந்திற்கும் ஜப்பானிற்கும் இடையே நெருக்கமான உறவு ஏற்பட காரணமாயிருந்தது ஆங்கில ஜப்பானிய உடன்படிக்கையாகும். இதை முடிவுக்கு கொண்டு வரவேண்டும்.

3. பாரிஸ் அமைதி மாநாட்டில் கலந்துகொண்டு ஆத்திரத்தை அடைந்த சீனாவை அமைதிப்படுத்த வேண்டும்.

4. ஜப்பானுக்கு ஒரு முழுமையான கூட்டு எண்ணத்தினை கொடுக்க வேண்டும்.

5. முதல் உலகப்போர் முடிவடைந்து சீனர்கள் ஜப்பானுக்கு எதிராக நடத்திய ஜப்பான் எதிர்ப்பு இயக்கங்கள் மற்றும் ஜப்பான் பொருள்களை புறக்கணித்தல் போன்றவைகள் ஜப்பானுக்கு மட்டும் அல்லாது மேலை நாடுகளுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. ஜப்பானின் 21 கோரிக்கைகள்தான் சீன கிளர்ச்சிக்கு காரணம் என்று தெரிந்தும் மேலைநாடுகள் ஜப்பான் பக்கமே பேச ஆவல்கொண்டன. இப்படிப்பட்ட குழப்பமான சூழ்நிலையில் தூர கிழக்குப்பகுதியில் அமைதியை ஏற்படுத்த இம்மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாட்டில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி,ஜப்பான், சீனா, ஹாலாந்து, பெல்ஜியம் மற்றும் போர்ச்சுக்கல் போன்ற நாடுகள் பங்கு பெற்றன. இம்மாநாடு பிப்ரவரி 6 ஆம் தேதி 1922 ஆம் ஆண்டு நடைபெற்றது. இதன் அடிப்படை நோக்கம் தூரக்கிழக்கு நாடுகளில் காணப்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணச்செய்வதாகும். அதன்படி ஆறு முக்கிய உடன்படிக்கைகள் ஏற்பட்டது. ஏறத்தாழ முப்பது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**1. நான்கு நாடுகளில் உடன்படிக்கை**

நான்கு நாடுகளில் உடன்படிக்கையில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் மட்டுமே கலந்துக் கொண்டன. இந்நாடுகள் தூரகிழக்கு நாடுகளில் ஏற்படுகின்ற பிரச்சனைகளில் இணைந்து செயல்பட்டுத் தீர்க்க வேண்டும் எனவும், இப்பொழுது உள்ள போராட்டங்களை நிறுத்துவது பற்றியும், இங்கு இனிமேல் பிரச்சனை ஏற்பட்டால் இந்நாடுகள் இணைந்து கலந்தாலோசனை மூலம் பொது பிரச்சினையாக்கி தீர்வு காண வேண்டும் எனவும், ஆங்கிலோ-ஜப்பானிய உடன்படிக்கை முடிவடைகிறது எனவும் கையெழுத்திட்டன.

**2. ஐந்து நாடுகளில் கடற்படை உடன்படிக்கை**

முதல் உலகப்போர் முடிவடைந்ததும் அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய இருநாடுகளுக்கும் கடற்படை ஆதிக்கத்தில் கடுமையான போட்டி நிலவியது. ஜப்பான் தனது படையை மேலும் மேலும் பெருக்கிக் கொண்டு இருந்தது. இதனால் ஜப்பானின் கடல் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு இவ்வுடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி ஐந்து நாடுகளும் குறிப்பிட்ட அளவு கடற்படையைதான் வைக்க வேண்டும் என முடிவு செய்தனர். ஜப்பான் மிகுதியாக படைகளை வைத்து இருந்ததால் அவற்றை குறைக்கும் நிலையும், பசிபிக் கடலில் கடற்படைத்தளம் அமைக்க இயலாத நிலையும் ஏற்பட்டது.

**3. ஒன்பது நாடுகளின் உடன்படிக்கை**

இவ்வுடன்படிக்கையில் எல்லா உறுப்பு நாடுகளும் கையொப்பமிட்டன. அதன்படி இவர்கள் சீனாவின் நிலவரத்தினை மையமாகக் கொண்டு வாதிட்டு முடிவுக்கு வந்தனர். அதன்படி, சீனாவின் ஒருமைப்பாட்டிற்கு மரியாதை கொடுத்தல், சீனாவில் திறந்த வெளிக் கொள்கையை கடைபிடிப்பது, சீனாவிற்கு வரிவிதிக்கும் உரிமைகள் உண்டு எனவும், சீனாவில் அமைதியை ஏற்படுத்த அந்நாடுக்கே அதிகாரம் உண்டு எனவும், அதன் உள்விபகாரங்களில் தலையிடக்கூடாது எனவும் உடன்படிக்கை கையெழுத்தானது. நீண்ட காலத்திற்கு பின் மேலை நாட்டினர் அதன் தேசியம் மற்றும் ஒருமைப்பாட்டினை மதிக்கும் எண்ணம் தோன்றியதை சுட்டுகிறது.

**4. ஷாண்டுங் மாநாடு**

சீனாவின் ஷாண்டுங் பகுதியினை மையமாக வைத்து சீனாவிற்கு ஜப்பானிற்கும் ஏற்பட்ட பிரச்சனையை வாஷிங்டனில் அல்லது பிற இடத்தில் பேசி முடிவுக்கு வரலாம் என்ற ஆலோசனையின் பேரில் சீனாவும், ஜப்பானும், ஷாண்டுங் பகுதியிலே மாநாட்டினை நடத்தி பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து நடத்தி உடன்பாடு கண்டன. அதன்படி ஜப்பான் ஷாண்டுங் பகுதியினைச் சீனாவிற்கு விட்டு கொடுக்க முன்வந்தது. அதற்கான இழப்பீடு தொகையினை சீனா ஜப்பானுக்கு வழங்க வேண்டும். அதே வேளையில் சீனா ஜப்பானிடம்

21 கோரிக்கைகளை கைவிடக் கேட்டு கொண்ட போது ஜப்பான் மறுத்துவிட்டது. மேலும் சீனாவின் ஒருமைப்பாடு இதனால் பாதிக்கப்பட மாட்டாது என உறுதியும் வழங்கியது.

பிற உடன்படிக்கைகள்

மேலும் வாஷிங்டன் மாநாடு பல உடன்படிக்கைகளை தூர கிழக்கு நாடுகளின் நலனிற்காக வழங்கியது. வெளிநாட்டு சக்திகள் தலையிடுவது சீனாவில் மீது அதிகமாக காணப்பட்டது. பொருட்கள் வெளிநாட்டவர்களால் மிகக் குறைந்த விலையில் விற்கப்பட சீன சுதேசி பொருட்களை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இவற்றை நீக்க சீனாவிற்கு சுங்கவரி விதிக்கும் உரிமை வழங்கும் உடன்படிக்கை கையெழுத்தானது மேலும் சீனர்களின் உள்ளக் குமறல்களை களைய பல தீர்மானங்கள் உருவாக்கப்பட்டன.

1. ஒன்பது உறுப்பு நாடுகளும் சீனாவின் ஒருமைப்பாட்டினை மதிப்பதாகவும், நிர்வாக மற்றும் பிரதேசங்களில் பிறநாடுகள் தலையிடா வண்ணம் இருப்பதாகவும் உறுதி அளித்தன. சீனாவில் எல்லா நாடுகளுக்கும் சம அளவில் உரிமைகள் உண்டு எனவும் தீர்மானம் நிறைவேறியது.
2. சீனாவின் சுதேசி பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்களை காக்க சீனா 5% காப்பு வரியினை விதிக்கலாம் எனவும், இவ்வரியை மாற்ற பிற்காலத்தில் மாநாடுகள் கூட்டலாம் என தீர்மானம் நிறைவேறியது.
3. சீனாவில் திறந்த வெளி கொள்கை பின்பற்றப்படுவதால் எல்லா நாடுகளும் இருப்புப்பாதைகளை தடையின்றி நிர்வகிக்கலாம் என்றும் வரையறுக்கப்பட்டது.
4. வெளிநாட்டவர்கள் சீனாவில் இருந்து பிரதிநிதியாக செயல்படும் முறைகளை ஜனவரி 1.1923 ல் நீக்கியது.
5. சீனாவின் நிதி முறையில் மாற்றம் ஏற்படுத்த குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.
6. சீனா மற்றும் ஜப்பான் தங்களுக்குள் ஷாண்டுங் நிலப்பகுதி பிரச்சனைகளை தீர்வு செய்துக் கொள்ள வேண்டும்.
7. மேலைநாடுகள் சீனாவில் இருக்கும் தங்களது படைகளைப் படிப்படியாக விலக்கி கொள்வது எனவும் வாக்களித்தன.

**மதிப்பீடு**

வாஷிங்டன் மாநாடு உலக வரலாற்றில் சிறப்பிடம் பெற்றது. படைகலன் பெருக்கத்தினால் ஏற்பட்ட போரில் மூன்று பெரிய வல்லரசுகள் அழிவுற்றன. அதுபோன்று கடற்படை பெருக்கத்தினைக் கட்டுப்படுத்துவது அவசியம் என்றெண்ணி அதையும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் குறைக்கவும் இம்மாநாடு முடிவு செய்தது. பசிபிக் மகாசமுத்திரத்தில் ஜப்பானிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே பிரச்சனை ஏற்படலாம் அதைத் தவிர்க்க இம்மாநாட்டில் முடிவுக் காணப்பட்டது. ஆங்கிலேயர் ஜப்பானின் வளர்ச்சியை கண்டு மகிழ்ந்து ரஷ்யாவை கட்டுப்படுத்த கி.பி. 1902 ஆம் ஆண்டு செய்துக் கொண்ட உடன்படிக்கையால் அதன் செல்வாக்கு உலக அளவில் பரவியது. இதன் விளைவாக ஜப்பானின் வெளிநாட்டு கொள்கை ஆக்கிரமிப்பபை மையமாகக் கொண்டு வளர்ந்தது. இதன் விளைவு அமெரிக்க ஜப்பானிய வர்த்தக போட்டியாக உருவெடுத்தது. இதனால் ஜப்பானின் இந்த உறவை துண்டிக்க எண்ணிய இங்கிலாந்திற்கு ஒரு நல்ல வாய்ப்பு கிட்டியது.

சீனாவை பொருத்த வரை வாஷிங்டன் மாநாடு மிகவும் பிரயோசனமான ஒன்றாகும். காரணம் இதுவரை தனது பெருமையை அயல்நாட்டவரிடம் இழந்து மதிப்பு இன்றி காணப்பட்டது. இப்பொழுது உலகின் அனைத்து நாட்டு தலைவர்களும் இம்மாநாட்டில் சீனாவின் ஒருமைப்பாட்டினை மதிப்பதாக உறுதி கொண்டனர். மேலும் ஜெர்மனி உலகப் போரில் தோல்வியுற்றபடியால் அதன் ஆக்கிரமிப்பு சீன பகுதியான ஷாண்டுங் மீண்டும் சீனாவை சேருமாறு நல்ல சந்தர்ப்பம் உருவானது. சீனா இம்மாநாடுகளின் மத்தியில் சமமான மதிப்பினை பெற்று அனைத்து நாட்டுப் பிரதிநிதிகளும் சீன ஒருமைப்பாட்டிற்காக உதவிக்கரம் நீட்ட முன் வந்தனர். அமெரிக்காவை குறித்தமட்டில் அதன் செல்வாக்கு மீண்டும் தூரக் கிழக்கு நாடுகளில் வளர இம்மாநாடு உதவியாக இருந்தது. அமெரிக்கா சீனாவின் ஒருமைப்பாட்டிற்கும், சீனாவை பிறநாடுகள் பங்கு போட்டு கொள்ளா வண்ணம் திறந்த வெளிக் கொள்கையை அறிமுகம் செய்தது. பொதுவாக இம்மாநாட்டினால் இதுவரை தூரக் கிழக்கு ஆசியாவில் காணப்பட்ட பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

**சீனாவின் தேசியமயம் - சீயாங் - கே - ஷேக்**

சீனாவின் ஐக்கியத்திற்குப் பாடுபட்ட குறிப்பிடத்தக்க நால்வருள் சீயாங்-கே-ஷேக்கும் ஒருவர். ஐக்கிய சீனா உருவாக அவர் கனவு கண்டார். அவரும் அவரது கட்சியும் பல இன்னல்களால் அவதியுற்றும் அவரது கனவு நினைவாகி - ஐக்கிய சீனா உருவாயிற்று.

**சீயாங்-கே-ஷேக் இளமை பருவம்**

சீனாவில் செக்கியாங் மாநிலத்தில் உள்ள சிக்கவ் என்ற கிராமத்தில் 1887 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் நாள் சியாங் பிறந்தார். சிறு வயதிலேயே தந்தையை இழந்து, தாயின் அரவணைப்பில் அவர் வளர்ந்தார். ஆரம்ப கல்வி கற்றப்பின் இராணுவப் பள்ளியில் சேர்ந்தார். இவர் இளமைகாலத்தில் சீனா வெளிநாட்டவரின் செல்வாக்கினால் பங்கு போட பட்டதையும், தட்டிக்கேட்ட சீனர்களை அடிமைப்படுத்தியும், கொலை செய்தும் தங்களின் மேலாண்மையை இருப்பு வலையில் பின்னி சீனாவை சிறுமைப்படுத்திய விதத்தினையும் இவர் மறக்கவில்லை. அவர்களின் செல்வாக்கு மற்றும் படையெடுப்புக்கள் வெற்றியாய் அமையக் காரணம் அவர்களுக்குத் தேவையான படைபலமும், அப்படையை வழி வடத்தும் திறமையான இராணுவ அதிகாரிகளுமே காரணம் என்பதை அறிந்த சியாங், இராணுவத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார். இதற்காகவே இவர் இராணுவப்பள்ளியில் சேர்தார். இராணுவ மேற்படிப்பிற்காக ரஷ்யா சென்றார். இவரது இராணுவப் பயிற்சி இவருக்கு சிறந்த ஒழுக்கத்தையும், படையை வழி நடத்தும் ஆற்றலையும் கொடுத்தது. இவர் டாக்டர் சன்-யாட்-சென்னை தனது குருவாக ஏற்று சீன அரசியல் ஈடுபட்டார்.

**சீனா ஐக்கியப் படுதல்**

வெளிநாட்டில் இருந்து தாயகம் திரும்பிய ஷேக் கி.பி. 1911 ல் புரட்சி படையில் சேர்ந்தார், தன் திறமையாலும், வீரத்தாலும் முன்னுக்கு வந்தார். 1924ம் வாம்போவா இராணுவ முகாமின் தளபதியான அவர், பின்னர் கோமின்டாங் கட்சியின் நடப்பு குழுவின் தலைவரானார். 1925 ஆம் ஆண்டு ஹேன்கோவ் மற்றும் யாங்ட்சி பள்ளதாக்குப் போன்ற பகுதிகளில் உள்ள படைத்தலைவர்களை அடக்கினார். இப்பகுதிகளில் கோமின்டேங் கட்சியின் ஆட்சியை செயல்படுத்தினார். சுமார் 60,000 வீரர்களை கொண்ட தேசியப் படையை உருவாக்கி, நேன்கிங் பீகீங் ஆகிய பகுதிகளையும் தன் ஆதிக்கத்தில் கொண்டு வந்தார். இவ்வாறு 1928 ல் ஐக்கிய சீனா உருவாயிற்று.

**வளரும் பொதுடைமை கட்சியின் செல்வாக்கு**

சியாங் இராணுவம் வெற்றிப்பெற்றிருந்த வேளையில், உள்நாட்டில் பல குழப்பங்கள் காணப்பட்டன. கோமின்டேங் கட்சியிலும் இருவகையான பொதுவுடைமையைப் பின்பற்ற தயாராயினர். வலது பிரிவைச் சேர்ந்தவர்கள் பொதுவுடைமையை எதிர்க்கும் எண்ணத்துடன் செயல்பட்டனர். இக்குழுவிற்கு சியாங் தலைவராயிருந்தார். கண்மூடித்தனமாக ரஷ்ய பொது உடைமையை ஆதரிப்பதை அவர் எதிர்த்தார். இக்கருத்தினை கொண்டிருப்பவர்களைத் தண்டிக்கவும் திட்டம் தீட்டினார். இதனால் அதிகமான இரத்த போர் ஏற்பட வாய்ப்பிருந்தது. வலது பிரிவினை சேர்ந்த உறுப்பினர்கள் அதிகமாக இருந்த படியாலும், சியாங் திறமையாக செயல்பட்டாலும் கட்சியில் முக்கிய இயந்திரமான கரு இவர்களிடம் தான் இருந்தது. 1927 ல் மீண்டும் இடது பிரிவினிரிடையே பிரிவினை காணப்பட்டது.

**சியாங்-கே-ஷேக்கும் பொது உடைமை வாதிகளும்**

சீன மக்களிடையே பொதுவுடைமை கட்சி பிரபலமடைந்தது. இதன் தலைவர்கள் மிகவும் நம்பிக்கையுடன் செயல்பட்டனர் என்றாலும் பொது உடைமையினரை அடக்கச் சியாங் முனைந்தார். நான்கு முறை தொடர்ந்து வன்முறையில் இறங்கி அவர் பொதுவுடைமையினரை நசுக்கினார். சியாங்கின் பொதுவுடைமை எதிர்ப்பு கொள்கையை எதிர்த்து அவரது தளபதிகளான லி-தூங்-சென்னும், பாய்-செங்-சியும் விலகினர். எனினும் தானே முயன்று சீனாவின் 22 மாகாணங்களை தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார்.

நான்சிங் ஐக்கிய சீனாவின் தலைநகராக்கப்பட்டது. நான்கிங் கைமையமாக கொண்டு ஆண்ட ஐக்கிய சீனாவை 12 மேலை நாடுகள் ஏற்றுக் கொண்டன. அவைகளில் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் போன்ற வல்லரசுகளும் அடங்கும். இந்த அரசாங்கம் டாக்டர் சன்-யாட்-சென்னின் மூன்று முத்தான கொள்கைகளை செயல்படுத்தி வெற்றிக் கண்டது.

**சியாங் வெற்றிக்கான காரணங்கள்**

சியாங் படை பிரபுக்களை கட்டுப்படுத்தி வெற்றிக் கண்டதற்கு பல காரணங்கள் உண்டு. அவர் பொவுடைமை கட்சியின் இடது பிரிவினரோடு பகை கொள்ளாது இருந்தார். இவர் இராணுவ பயிற்சி பெற்றதால் இவரது தொழில் மற்றும் திறமை தாக்குதல்களில் மேலோங்கி இருந்தது. வோம்போவா இராணுவ முகாமில் பல இராணுவ வீரர்களையும், படை தலைவர்களையும் உருவாக்கி அவர்களையும் தன்னோடு சேர்த்துக் கொண்டு தாக்குதல்களில் பயன்படுத்தியதும் இவரது வெற்றிக்குக் காரணமாகும். இவரது திருமணம் சீனாவில் உயர்ந்த செல்வாக்கு உள்ள குடும்பத்தில் ஏற்பட்டது, மேலும் இவரது சிந்தனையில் தோல்வி என்பது இருப்பதில்லை இவரது திட்டமிட்டு செயல்படும் திறமையும் இவரது வெற்றிக்கு காரணமாயிருந்தது.

**சமமற்ற உடன்படிக்கைகளை உடைதல்**

மேலைநாடுகள் சீனாவில் தங்களது செல்வாக்கினை உறுதி செய்து கொள்ளும் நோக்கில் தங்களது செல்வாக்கினையும் படை திறமைகளையும் பயன்படுத்தி சமமற்ற முறையில் நியாயமற்ற வகையில் ஒவ்வொரு நாடுகளும் சீனாவோடு உடன்படிக்கை செய்து கொண்டு சீனப் பகுதிகளை பங்குப் போட்டுக் கொண்டன. இந்நிலையை மாற்ற சியாங் இவ்வுடன்படிக்கைகளை உடைக்க சித்தமானார். மேலைநாட்டவர்கள் சீனாவில் எந்த இடங்களிலும் வியாபாரம் செய்யும் உரிமையும், துறைமுகங்களை பயன்படுத்தும் உரிமைகளையும் பெற்றிருந்தன. சீனா இவர்களது பொருட்களுக்கு வரிவிதிக்கும் உரிமை கூட இல்லாதிருந்தது. ஆகவே சியாங் 1928 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் நான்கிங்கில் இருந்து அரசு ஆணை ஒன்றை வெளியிட்டார். அதன்படி

இதுவரை மேலைநாட்டினர் சீனாவோடு செய்து கொண்ட உடன்படிக்கைகள் அனைத்தும் செயல் இழந்தன என்பதாகும். இதன்படி 1930ல் ஒன்பது நாடுகள் தங்கள் உரிமையை விட்டு கொடுத்தன.

**கோமின்டாங் கட்சிக்கும் பொதுவுடைமைக்கும் இடையே ஏற்பட்ட போராட்டம்**

ஐக்கிய சீனாவை உருவாக்கிய கோமின்டேங் கட்சிக்கும் பொதுவுடைமை கட்சிக்கும் இடையே வாழ்வா? சாவா? என்ற வினாவிற்கு போராட்டம் நடைபெற்றது. இவற்றில் கோமின்டேங் கட்சியினரே வெற்றிமேல் வெற்றி பெற்றனர். சீனாவின் உள்பகுதியில் பொதுவுடைமை கட்சிக்கு ஆதரவு அதிகம் இருந்ததால், ரஷ்ய குடியரசினை காயான்சி என்ற பிரதேச காட்டுப்பகுதியில் நிறுவினர். இதன் தலைவராக மாசேதுங் செயல்பட்டார். பொதுவுடைமை கட்சியினர் தொழிலாளர்களிடையே சங்கங்களை ஏற்படுத்தினர். அதிகமாக கூலி கொடுக்கவும் போராடினர். செல்வந்தர்களிடம் இருந்த செல்வங்களை கவர்ந்து பாமரமக்களுக்குப் பிரித்துக் கொடுத்தனர். இதனால் இவர்களது செல்வாக்கு மேலும் வளர்ந்தது. பொதுவான பண்ணைகளை அமைத்து ஒற்றுமையுடன் செயல்பட்டனர். அவர்கள் மக்கள் அரசினை சீனாவில் ஏற்படுத்த முயன்றனர். தங்களுக்கென்று சீன சிகப்பு படையினை உருவாக்கினர். புரட்சி படையினை மக்களுக்காக செயல்படச் செய்தனர்.

**நெடும் பயணம்**

கி.பி. 1934 கோமின்டேங் கட்சி கியான்சி பகுதியினை தாக்கியது. இது பொதுவுடைமையினரின் கோட்டையாக இருந்தது. இத்தாக்குதலில் பொதுவுடையினர் தோற்கடிக்கப்பட்டனர். மேலும் அவர்கள் தங்கள் இடங்களை விட்டுப் பின் வாங்கினர். இது தான் “நெடும் பயணத்திற்கு” துவக்கமாகியது. பொதுவுடைமை கட்சியனர் மிக மோசமான முறையில் தோல்வியை அடைந்து 6000 மைல் தூரம் உள்ள மேற்பகுதியில் வந்தடைந்தனர். இலட்சத்திற்கும் மேலான பொதுவுடைமையினர் இறந்து போயினர். ஏறத்தாழ 268 நாட்களாக இரவும் பகலும் நதிகளையும் மலைகளையும் கடந்து ஷான்சியை அடைந்தனர். இந்த பயணம் ஒரு உயர்வான பெயரினை பொதுவுடைமையினருக்கு பெற்றுக் கொடுத்தது. இதனை வழி நடத்திச் சென்ற ‘மாவோ’ புகழ் உலகமெங்கும் பரவியது. ஷியான்-கே-ஷேக் இப்பயணத்தினை இறுதி பயணம் என வர்ணிக்கின்றார். இந்நிகழ்ச்சி மக்களுக்கு பொதுவுடைமையினரின் கொள்கை பற்றினையும் உயர் நோக்கினையும் புரிந்துக் கொள்ளச் சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

**ஜப்பானின் ஆக்கிரமிப்பு**

ஜப்பான் சீனாவில் ஒரு வலிமையான அரசாங்கம் வளருவதை விரும்பாமல், அவற்றை அரசியலிலும் பொருளாதாரத்திலும் வளர்வதை தடை செய்வதென முடிவு செய்து சீனாவுக்கு தொல்லை கொடுக்க ஆரம்பித்தது. இதன் ஆரம்ப கட்டமாக ஜப்பான் மஞ்சுரியாவை 1931ல் ஆக்கிரமித்தது. மேலும் ஜப்பான் வடசீனாவின் பகுதிகளை கைப்பற்ற எண்ணி அதன் படைகளை அங்கு அனுப்பியது. திறமை வாய்ந்த ஷியான் வலிமைவாய்ந்த ஜப்பானிய படையை எதிர்க்க இயலாது என்பதை உணர்ந்து, 1933 ஆம் ஆண்டு மே மாதம் சீனா ஜப்பானிற்கும் இடையே ஒரு சமரசம் ஏற்பட காரணமானார். அதன்படி ஜப்பானிய படைகள் சீனப்பெரும் சுவர் வரையில் பின்வாங்க சம்மதித்தன. ஆனால் இந்நடவடிக்கை ஷியான் பெயருக்கு கலங்கத்தையும், மக்களிடம் வெறுப்பையும் கொடுத்தது.

பொதுவுடைமையினர் 1932 ல் ஜப்பானிற்கு எதிராக செயல்பட்டனர். ஷியான் பொதுவுடைமையினரை நசுக்க திட்டம் தீட்டினார். ஆனால் பொதுவுடைமையினர் சீனநாட்டின் நலம் கருதி ஷியான்னோடு பேச்சுவார்த்தை நடத்தி தங்களின் பகைமை உணர்வை நிறுத்தி இருவரும் ஜப்பானை எதிர்த்து போராடுவோம்

என கேட்டுக் கொண்டனர். மேலும் பொதுவுடைமையினர் தங்கள் படைகளை ஷியான் தலைமையில் செயல்படவும் ஒப்புக் கொண்டனர். ஆனால் ஷியான் முயற்சிகள் மக்களுக்கு திருப்தியாக இல்லை. எனவே 1936 ல் ஷியான் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர்களிடமிருந்து தப்பினார். பின்னர் ஷியான் மற்றும் பொதுவுடைமையினரும் சேர்ந்து ஜப்பானியரை எதிர்க்க திட்டமிட்டனர். இந்தக் கூட்டு இரண்டு வருடம் இருந்தது.

**கோமின்டாங் கட்சியின் சரிவு**

கோமின்டேங் கட்சி நாள்பட நாள்பட தனது செல்வாக்கினை இழந்து திறமையில்லாது லஞ்சம் ஊழல் மிகுந்து காணப்பட்டது. பொதுவுடைமையினர் ஷியான் ஜப்பானியரின் கைபொம்மை என வர்ணித்தார். கோமின்டெங் கட்சியின் சீரமைப்பு சிறப்பாக இல்லை. மாறாக அவர்களின் தனிப்பட்ட செல்வாக்கு வளர்ந்தது. அவர்களிடம் காணப்பட்ட அடக்கி ஆளும் முறை உள்நாட்டில் செல்வாக்கினை இழக்கச் செய்தது.

அதே வேளையில் பொதுவுடைமையினர் செல்வாக்கினைப் பெற்று பல சீர்திருத்தங்களை செய்தும் மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றனர். ஷியான் மீது மக்களுக்கிருந்த வெறுப்பும் பொதுவுடைமை வளர்ச்சிக்கு காரணமாயிருந்தது. ஷியான் பொதுவுடைமை கொள்கையை இதயத்தின் நோயாக வர்ணிக்கின்றார். என்றாலும் பொதுவுடைமை தலைவர்களின் தொண்டு அவர்களின் செயல்பாடு தியாக உணர்வு, சகோதர உணர்வு, தோழர் மனப்பான்மை பொதுவுடைமை வளர காரணமாயிருந்தது என்று நம்பினார். எனினும் பொதுவுடைமை வளர்ச்சி கோமின்டேங் தளர்ச்சிக்கு காரணமானது.

**ஷியாங்-இறுதி நாட்கள்**

1940ல் ஷியாங் பொதுவுடைமையினரைத் தங்களது படையோடு வட பகுதிக்குச் செல்ல கட்டளை யிட்டார். இதனை இவர்கள் மறுத்தனர். கோமின்டேங் கட்சியின் செயற்குழு 1943 ல் தீர்மானங்களை நிறைவேற்றிய து. 1947ல் தளபதி மார்ஷல் சீனாவில் நடைபெறும் உள்நாட்டு போரினை முடிவுக்குக் கொணடு வருவது நலம் என்று கேட்டுக் கொண்டார். ஆனால் இவரது முயற்சி தோல்வி கண்டு போர் ஏற்பட்டது. கடுமையான முறையில் சீனர்கள் ஒருவரை ஒருவர் தாக்கி சீனநாட்டை அழித்து சுடுகாடாக மாற்றினர். இறுதியில் பொதுவுடைமையினரே வெற்றிப் பெற்றனர், ஷியாங் தன் இருப்பிடத்தை விட்டு பார்மோசாவை அடைந்தார். அங்கு அமெரிக்கா ஆதரவில் ஒரு அரசை நிறுவினார். தனது அரசே உண்மையான சீனா என்று ஐ.நா.அவையிலும் பிரதிநிதித்துவம் பெற்றார். இவ்வாறு 1949ல் சீனாவில் முடிவுற்ற சியாங்கின் ஆட்சி ஃபார் மோசாவில் தொடங்கியது. இவர் 1975 ஆம் ஆண்டு இறந்தார். இவரோடு கோமின்டேங் கட்சி ஆட்சியும் முடிவுற்றது. சியாங் கே-ஷேக் சீனாவிற்கு ஆற்றிய தொண்டு பற்றி இருவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன. ஸ்டாலினுடனும், முசோலினியுடனும் ஒப்பிடுமளவிற்கு அவர் துணிவும், வீரமும் மிக்கவர். சீனாவை ஐக்கியப்படுத்துவதில் தன் வாழ்வை அர்ப்பணித்தார். சீனாவின் தேசியத் தலைவர்களுள் ஒருவராக கருதப்படும் அவர், சீன வரலாற்றில் சிறப்பான இடம் வகிக்கின்றார்.

**2. ஜப்பானின் ஆதிக்க வளர்ச்சியின் துவக்கக் கால பணிகள்: சக்காலின் தீவுகள்**

மேசிப் புரட்சிக்குப் பின்னரே, ஜப்பானின் அதிகார வளர்ச்சி வளர்ந்ததென்றாலும் அதன் அதிகார மனப்பான்மை எப்போதோ வளர்ந்து விட்டது. கி.பி. 20 ஆம் நூற்றாண்டில் தான் ஜப்பான் வெளிநாடுகளை கவரும் எண்ணம் ஏற்பட்டது. எசோ ஜப்பானியத் தீவுக் கூட்டங்களின் மிக முக்கியமான நான்கு பெருந்தீவுகளில் வடபகுதியில் அமைந்துள்ளது. இது பண்டைய காலந்தோட்டே ஜப்பானிய பழங்குடிகளான ஐகோக்களின்

இருப்பிடமாய் திகழ்ந்தது. தொகுவாக்களின் காலத்தில் இது ஒரு பெருநிலக்கிழாரின் கீழ் வந்ததென்றும், அதன்பின் ஜப்பானியர் குடியேறினரென்றும் அதனால் இதொரு வளமுள்ள நாடாக ஆக்கப்பட்ட தென்பதையும் வரலாறு கற்பிக்கிறது. பண்டைய ஜப்பானியப் பேரரசர்கள் ஜப்பானை ஆட்சிமுறைப் பகுதிகளாக பிரித்த போது, எசோத் தீவை மேசிப் புரட்சியின் காலத்தில் வலிமையான காவற்கோட்டைகளையும் காவல் துறைமுகங்களையும் அமைத்தார்கள். அதன் வடக்கேயுள்ள சாக்காலின் தீவு உருசியாவுக்கும் ஜப்பானுக்கும் பொதுமானத் தீவாக இருந்தது. ஜப்பான் இத்தீவைத் தனக்கும் உருசியாவுக்கும் இடையே பகிர்ந்துக் கொண்டு, திட்டவட்டமான எல்லைக் காடுகளை உருவாக்க விரும்பியது. ஆனால் ஜப்பான் இத்தகைய உடன்படிக்கைக்கு ஏற்பாடு செய்த போதெல்லாம் உருசியா நழுவிக் கொண்டே சென்றது, அதே சமயத்தில் கொஞ்சம் கொஞ்சமாகத் தனதாக்கி கொண்டு, தனக்குத்தானே அத்தீவு முழுவதும் உரிமையானதென்று அறிவித்தது. 1858ல் ஜப்பான் தனது கப்பல் தளபதி போறதியாதின் என்பவரை உருசியாவுக்கு அனுப்பு சீமோதா என்னுமிடத்தில் உடன்படிக்கை செய்துக்கொண்டது.

அந்த உடன்படிக்கையின்படி சக்காலின் ஜப்பான் உருசிய ஆகிய இருநாடுகளுக்கும் சொந்தம் என தீர்மானிக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கையில் எல்லை கோடுகள் உருவாக்கப்படவில்லை. இதனால் 1862 லும், 1867லும் ஜப்பான் உருசியாவின் தலைநகரான பீட்டர்ஸ்பர்க்குத் தன் தூதுக்குழுவை அனுப்பி சக்காலின் எல்லைகோட்டை உருவாக்க விரும்பியது. ஆனால் 1875 ல் தான் இவ்விரு நாடுகளுக்கும் இடையே ஒரு முடிவான ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி சக்காலின் தீவு முழுவதையும் உருசியா எடுத்துக்கொண்ட, குரிலின் தீவுகளை ஜப்பான் பெற்றுக் கொண்டது. இதிலொரு முகமை என்னவென்றால் சக்காலின் தீவிலிருந்தத் தன்னுடைய சுரங்கங்கள், மீன்பிடிக்கும் துறைகள், காடுகள் ஆகியவற்றை ஜப்பான் உருசியாவின் கட்டாயத்திற்கு அஞ்சி கொடுத்து விட்டது. ஆனால் ஒன்றுக்கும் உதவாத குரிலின் தீவுகளை தான் பெற்றுக் கொண்ட போதிலும் அத்தீவுகளிலிருந்த உருசியாவின் சொத்துரிமைகளை உருசியாவிற்கே விட்டுக்கொடுத்தது. ஜப்பானிடத்தில் அக்காலத்தில் உருசியாவைப் போல் சிறந்தப்படையும், நாவாய் படையும் இல்லாததே இதற்கு காரணமாகும். இத்தகைய பண்டைய இழிநிலையை ஜப்பான் தன்னுடைய முன்னிலை மீட்சிக்குப் பின் சிந்தித்து சிறந்த படைகளை அமைக்கலாயிற்று.

**ரையு கியூத் தீவுகள்**

தைவான் நாடு எனப்படும் பார்மோசாத்தீவு ஜப்பானுக்குத் தெற்கிலும், சீனாவுக்கு தென்கிழக்கிலும் பசிபிக் மகாக்கடலில் அமைந்துள்ள ஒரு தீவாகும். இதற்கு வடக்கிலும் ஜப்பானுக்குத் தெற்கிலும் ஒரு நீண்ட தொடர் சங்கிலி போல அமைந்துள்ளத் தீவுக் கூட்டங்களுக்கு ரையுகியூ என்று பெயர். இத்தீவுக் கூட்டங்களில் ஜப்பானிய மக்களுக்கு குருதி வழியில் உறவினர்கள் பலர் வாழ்ந்து வந்தன. இவர்கள் மொழி ஜப்பானிய மொழியாகும். ஜப்பானின் நிலமானிய கிழார்களும், படைகுலத்தவராயும் விளங்கிய சத்சுமா குலத்தவருக்கு ரையுகியூத் தீவிலுள்ள மக்கள் அடங்கியிருந்தனர். தோராயமாக 200 ஆண்டுகளுக்கு மேல் இம்மக்கள் அக்குலத்தவரின் நேரடியாட்சியிலிருந்து வந்தனர். ஆனால் அதே சமயத்தில் பண்டையக் காலந் தொட்டே சீனாவுக்குத் திறை செலுத்தியும் சத்சுமா குலத்தவருக்கு உட்பட்டும் இருந்த போதும் ரையூகியூத் தீவான்ட அரசர்கள் தனியாகவே ஆண்டனர். சத்சுமா இளவரசர் தன்னுரிமை பெற்று அரசனைப் போல் தன் விருப்பம் போல் ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துக் கொண்டிருந்தனர். 1870 ல் ஜப்பான் ரையுகியூத் தீவு யாருக்கு சொந்தமானது என்பதை தீர்மானிக்க வீரும்பியது.

அவ்வாண்டில் ரையுகீயூத் தீவைச் சேர்ந்த சிலர் தாங்கள் சென்ற கப்பல் தரைத்தட்டியதால் பார்மோசாத் தீவில் இறங்க வேண்டியதாயிற்று. அத்தீவிலிருந்த மக்கள தீடிரென அவர்கள் மீது பாய்ந்து கொன்று போட்டனர். பார்மோசா தீவு சீனாவுக்குச் சொந்தமாயிருந்தது. தங்களின் தவறான ரையுகியூத் தீவு வாழிகளைப் பார்மோசாவில் உள்ளவர்கள் கொன்றதற்கு ஜப்பான் சீனாவிடம் விளக்கம் கேட்டது அதற்கு இழப்பீடும் கோரியது. ஆனால் நடந்த கொலைகளுக்குத் தாம் பொறுப்பாளியன்றென்று சீனா கூறியது.

இச்சமயத்தில் சாமுராய்கள் ஜப்பானிய தேசியப் படையை குறைத்து எடை போட்டு ஜப்பானில் தங்களை விட்டால் வேறு படை கிடையாது என்று செருக்குற்று நின்றனர். ஏறத்தாழ நான்கு இலக்கம் சமுராய்கள் ஜப்பான் தேசிய படையில் சேர்ந்திருந்தும், தங்களைத் தனித்தன்மை பொருந்தியவர்களாக நினைத்தனர். போரற்ற காலத்தில் உள்நாட்டு புரட்சிகளுக்கும், குழப்பங்களுக்கும் வழிவகுக்கும் தோள்களுக்கும், பளப்பளக்கும் வாள்களுக்கும் வேலை கொடுக்கவும், வார்மோசாப் 1874 இல் சத்சுமா சமுதராய்கள் பார்மோசா தீவுக்கு அனுப்பப்பட்டனர். அத்தீவின் பாதி நிலப்பரப்பைச் சாமுராய்கள் கைப்பற்றிக் கொண்டனர். அத்தோடு ரையுகியூத் தீவுகளின் அரசரோடு ஓர் உடன்படிக்கை செய்துக் கொள்ளப்பட்டது. அவர் நோக்கியோ ஆட்சியை ஏற்றுக் கொண்டார். இதனை அறிந்த சீனா ஜப்பான் நாட்டின் மீது படையெடுக்க தன் படைகளைத் தயார் செய்தது. சீனாவுக்கும், ஜப்பானுக்கும் ஒரு கடும் போர் நிகழ்வது உறுதியாகிவிட்டது. இச்சமயத்தில் பீகிங்கிலிருந்த பிரிட்டன் நாட்டுத் தூதுவர் இச்சேதியில் தலையிட்டு இவ்விரு நாடுகளுக்குமிடையே அமைதி செய்து வைத்தார். இவ் வமைதிக்கு பிறகு சீனா ஜப்பானுக்கும், பார்மோசாவில் நேர்ந்த உயிரிழப்பிற்கும், படையெடுப்பிற்கும் பெரும் பொருளை இழப்பீடாக அளித்தது.

இவ்வாறு 1879ல் ரையு கியூத் தீவுகள் ஜப்பான் வசமாயின 1878ல் தன் நாட்டிற்குக் கிழக்கே பசிபிக் மகாகடலிலுள்ள போனின் தீவுகளையும் ஜப்பான் இணைத்துக் கொண்டது. இதைத் தவிர ஒனகடோ, கீயூரில் தீவுகள் முதலிய இடங்களின் மீது தனது உரிமையை ஜப்பான் நிலை நாட்டியது. 1872ல் பெரு நாட்டின் கப்பலை கைபற்றியது. அதிலிருந்து 200 கைதிகள் விடுவிக்கப்பட்டனர். மெய்ஜிப் புரட்சியின் காலத்தில் ஜப்பானியர்கள் குடியேறிய நாடுகளும், ஜப்பானியர் வாழும் இடங்கள் எல்லாம் தங்களின் ஆளுமைக் கொள்கையின் படி மேற்படி இடங்களைப் பெற்றது போலவே இத்தீவுக் கூட்டங்களின் மீதிருந்த தங்கள் உரிமைகளை நிலைநாட்டினர். இதனை 1875 ல் அமெரிக்க ஒன்றியமும் ஏற்றுக் கொண்டது. மேற்கத்தியக் கருத்துக்களின் மீது ஜப்பானியர் கொண்டிருந்த மோகம் தணிந்தது. 1880க்குப் பின்னர் ஜப்பானில் தேசிய உணர்ச்சி தோன்றியதால் ஒரு சில துறைகளை தவிர பிற துறைகளில் தேசிய கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். தங்களின் அயலகக் கொள்கைகளையும் மாற்றிக் அமைத்தனர். தங்கள் நாட்டிற்கு வந்துள்ள ஐரோப்பியர் தங்கள் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அடங்காமல் நடப்பதும், எல்லா வகையிலும் அவர்களுக்கு சாதகமான வாணிக ஒப்பந்தங்கள் அமைந்திருப்பதையும், பொறாத ஜப்பானியர் எல்லா ஒப்பந்தங்களையும் மாற்றி அமைத்தனர். கொள்கைகளை மாற்றிக் கொண்டால் போதாது ஜப்பானைக் கட்டிக் காக்க வேண்டுமானால் இது மேல்நாடுகளைப் போல ஒரு சிறந்த வல்லரசு நாடாக வேண்டுமென ஜப்பானியர் முனைந்தனர். அதன் விளைவாகத் தான் ஜப்பானின் படைவலிமை வளர்ந்தது. அவ்வதிகார மனப்பான்மையின் தொடக்கச் செயலாகத் தான் மேற்படி தனக்கு உரிமையான இடங்களின் மீது முதலில் தான் எடுத்த ஆய்வுகளில் வெற்றி கண்டதும் அண்மையில் உள்ள கொரியாவின் மீது ஆளுமை ஏற்படுத்த முயன்றது. ஜப்பான் பாதுகாப்புடன் வாழ வேண்டுமானால், கொரியா சீனாவின் இடையூறுன்றி தன்னுரிமையோடு வாழ வேண்டும் என்ற அடிப்படையில் தான் ஜப்பான் கொரியாச் சதியில் ஈடுபட்டது.

**ஜப்பானின் அதிகார வளர்ச்சி அல்லது படை வளர்ச்சி உச்சகட்டம்**

ஜப்பான் நாட்டில் மெய்தி முன்னிலை மீட்சி நடந்த பின் அதை வலிமை வாய்ந்த நாடாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் பேரரசருக்கு ஏற்பட்டது. இதனால் ஜப்பானிய படைகளை சீர்படுத்த வேலைகளைத் துவங்கினார், வலிமைவாய்ந்த படைகள் இருந்தால் மட்டுமே உள்நாட்டில் பேரரசருக்கு அடங்க மறுக்கும் நிலமானிய பிரபுக்களை கீழ்படுத்த முடியும், வெளிநாடுகளில் இருந்து வரும் படையெடுப்புக்களையும் தடுத்து நிறுத்த இயலும் என்ற நம்பிக்கை பேரரசின் தலைவருக்கு இருந்தது. ஆகவே தோகுகாவா என்ற குடும்பத்தின் வீர மரபின் கீழ் சிறந்த படையொன்றை உருவாக்க சித்தமானார். மேலும் புதியதாக உருவாக்கும் இப்படைகளை தேசிய வடிவில் இருக்கவும் விரும்பினார். இதற்காக ஜப்பானில் இருந்த பல பிரிவினர்களின் படையை ஒன்று திரட்டி ஒரே நிலையான படையாக்கினார். வெளிநாட்டில் படை பலத்தையும் முறைகளையும் கண்டறிய பேரரசர் குழு ஒன்றை மேலை நாடுகளுக்கு அனுப்பினார். யாமாகாட்டா என்ற ஜப்பானின் துணை மந்திரி ஜப்பானில் கட்டாய இராணுவ சேவை த் தேவை என கேட்டுக்கொண்டு, நிலமானிய படைகள் தேவையில்லை, உறுதியான தேசிய படையே தேவை எனவும் தீர்மானிக்க வைத்தார். படைகள் மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டது. அவை ( 1) வழக்கமானபடை (2) பாதுகாப்பு நிலைப்படை (3) சேயப் படை என்பனவாகும் எல்லா உடலியல் தகுதியினையும் பெற்றுள்ள இளைஞர்கள் அனைவரும் 21 வயதிற்கு மேல் ஜப்பானிய படையில் பணியாற்ற முன்வரவேண்டும் என்றும் அரசாங்கம் கேட்டுக்கொண்டது. இராணுவப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1878 ல் படை தளபதி அலுவலகம் உருவாக்கப்பட்டது. ஜெர்மானிய முறையில் படையின் வரிசைகள் அமைக்கப்பட்டது. பிரான்ஸ், இங்கிலாந்து. ஜெர்மன இராணுவ ஆலோசனையின்படி ஜப்பான் படைகள் விரிவாக்கப்பட்டன.

நாவாய்ப் படைகளும் சிறந்த வளர்ச்சி பெற வேண்டும் என்று அதற்கான முறைமைகள் தயாராயின. 1869 ல் நாவாய்ப் படை பயிற்சி பள்ளி உருவாக்கப்பட்டது. இப்பள்ளி டோக்கியோவில் இடம் பெற்றிருந்தது. அட்மிரல் டோஜோ இந்தப் பள்ளியின் மாணவராவார் முதல் நாவாய்ப் போர் கப்பல் 1875ல் உருவாக்கப்பட்டது. 1882ல் ஜப்பான் தனக்கு தேவையான நாவாய்ப் படைகளை தயாரித்துக் கொண்டது. ஜப்பானிய நாவாய்ப் படையில் 28 பெரிய கப்பல்களும் ஏராளமான சிறிய படகுகளும் இடம் பெற்றிருந்தன. இப்படைகள் நவீன இயந்திரங்களைக் கொண்டு ஜப்பான் மீது பிற ஆசிய நாடுகள் நடுங்கும் வண்ணம் நாவாய்ப் படை சிறந்து இருந்தது. மெய்சி அரசின் நவீன முறைகளால் ஜப்பான் பொருளாதார வளர்ச்சியை கண்டது. இதனால் இராணுவத்திற்காகவும், நாவாய் படைக்காகவும் அதிக பணத்தை செலவு செய்தது. தூரக்கிழக்கு நாட்டு அரசியலில் சூழ்நிலைகள் ஜப்பானின் வளர்ச்சியால் பாதிப்பும் அடைந்தது. இந்த படை பெருக்கம் ஜப்பானியருக்கு நம்பிக்கையை கொடுத்தது.

**ஜப்பானின் வல்லமை வளர்ச்சிக்கான காரணங்கள்**

**(1) பெருகிவரும் மக்கள் தொகை**

ஜப்பானின் பூகோள அமைப்பை பொருத்தமட்டில் 82% மலைகளும், காடுகளும் காணப்படுகின்றன. இப்பகுதியில் குடிமக்கள் செல்வது இயலாத காரியம் இங்கு வசிப்பது கனவிலும் நினைக்க முடியாதது என்பதால் மீதம் உள்ள 18% பகுதியில் தான் ஜப்பானியர்கள் தங்களின் குடியிருப்புகள் மற்றும் விவசாயம், தொழிற்சாலைகள் போன்றவற்றை அமைத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை. ஆகவே ஜப்பானியர்களுக்கு இடப் பற்றாக்குறை அதிகம் இருந்தது. 1872 ஆம் ஆண்டிற்குப் பின் ஜப்பான் பெருகி வரும் மக்கள் நலனை கருத்தில் கொண்ட மேலை நாட்டவரை போல் தங்களுக்கும் காலனிகள் தேவை என கருதினர். சிறிய

இங்கிலாந்து தன் குடிமக்களின் குடியிருப்பு வசதிக்காக அமெரிக்கா, ஹாலந்து, ஆஸ்திரேலியா, தென் அமெரிக்கா நாட்டினை பெற்றுக் கொண்டது போன்று ஜப்பானியர்களும் செயல்பட ஆரம்பித்தனர். மேலும் ஆரம்பத்தில் ஜப்பானில் இருந்து அமெரிக்கா சென்று குடியேறியவர்களின் பெருக்கம் ஏறத்தாழ 1,10,000 ஆகும். இவர்களை அமெரிக்க அரசு மீண்டும் ஜப்பானிற்கு அனுப்பியது இட நெருக்கடிக்கு மேலும் வழிவகுத்தது. அதன் வளைவாகவே ஜப்பான் பிற நாடுகளை தனது வலிமையால் வலுகட்டாயமாக கவரும் நிலை ஏற்பட்டது.

**வியாபாரச் சந்தை தேவை**

ஜப்பான் மெய்ஜி முன்னிலை மீட்சிக்கு பின் வியக்கத்தகு நிலையை அடைந்தது. இதற்கு காரணம் பொருளாதார துறை மற்றும் வாணிபத்திலும் அதிக வளர்ச்சி கண்டது. பொருட்கள் உற்பத்தி நாட்கள் செல்லச் செல்ல உயர்ந்திருந்தபடியால், இப்பொருளை ஜப்பானியர்கள் பயன்படுத்த முடியாவண்ணம் உற்பத்தி பெருகி வருகின்றது. இப்பொருட்களை அழிக்காதபடி அவற்றை பிறநாட்டுக்கு விற்பனை செய்ய வேண்டும் என்ற பொருளாதார சிந்தனை ஜப்பானிய அரசிடம் காணப்பட்டது. இதன் விளைவாக எல்லா நாடுகளுக்கும் ஜப்பானில் வணிக கப்பல்கள் சென்றன. ஆனால் அப்பொருட்களை வாங்க சந்தைகள் இல்லை காரணம், இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், போன்ற நாடுகள் உலக நாடுகளில் தங்களின் வலிமையால் காலனியாக்கி அங்கு தாங்கள் மட்டும் தான் வியாபாரம் செய்வோம் என்ற தனியாள் சந்தையினை நடத்தி வந்ததே ஆகும். ஆனால் ஜப்பானின் மிகுதியான பொருட்களை அழித்து தங்கள் பொருளாதார வளர்ச்சியை தடை செய்யாவண்ணம் எவ்விதத்திலாவது நாங்கள் பிறநாடுகளில் சந்தையை பெறுவோம் என்று உறுதியுடன் செயல்பட்டதும் ஜப்பானின் வல்லமை வளர்ச்சிக்கு ஒரு காரணம் ஆகும்.

**தேசிய உணர்ச்சி மற்றும் இராணுவமயம்**

ஜப்பான் நாட்டில் உள்ள மக்களிடம் தங்கள் நாட்டின் மீது அதிக பக்தி காணப்பட்டதோடு பிற நாடுகளை வெறுக்கும் எண்ணமும்,தரக்குறைவாக பேசும் எண்ணமும் மேலோங்கி காணப்பட்டது. ஜப்பானியர்கள் தேசிய கொள்கையில் வெறியுடன் செயல்பட்டனர். தங்கள் ஜப்பான் நாடு பெருமை வாய்ந்த நாடு என்றும், தங்கள் நாகரிகம் மிகவும் பழமை சிறப்பு வாய்ந்தது என பெருமையாக பேசிக்கொண்டும் பிற நாட்டு நாகரிக பாங்கினை குறை சொல்லும் பாங்கில் காணப்பட்டனர். மேலும் தங்கள் நாட்டின் இயற்கை அமைப்பினையும், சமயச்சிறப்பினையும் மூதாதையர்களின் முயற்சிகளையும், தங்கமணல் போன்ற கடற்கரை அமைப்பையும், இறைவன் வாழ்ந்த சொர்க்க பூமி என்றும் பேசி தங்களுக்குள் மேன்மை கொண்டு தூரக் கிழக்கு நாட்டின் ஜப்பான் முதன்மையாக செயல்படும் என்பதையும் நம்பியிருந்தனர்.

**அரசியல் நோக்கம்**

19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஜப்பான் காலனிகளைக் கைப்பற்றிவதிலே நோக்கம் கொண்டிருந்தது. அவ்வாறு அதிக காலனிகளை கொண்டுள்ள நாடுகள், செல்வ நாடுகளாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனால் ஜப்பான் தனது நிலையை மேம்படுத்திக்கொள்ள புதிய காலனிகளை பெறுவது அவசியம் எனவும் இதையே அரசியம் நோக்கமாகவும் கொண்டு செயல்பட்டனர். இதற்கான ஆரம்பகால கட்டப் பணிகள் மிக விரைவாக நடந்த வண்ணம் இருந்தன தூரக்கிழக்கு ஆசிய நாடுகளில் உள்ள சிறிய பலவீனமான நாடுகளை பெற்றுக் கொண்டு அதனை தன் வசப்படுத்தி அங்கு தங்கள் மேலாண்மையை நிறைவேற்றியப் பின், ஆசியா கண்டத்தில் தனிச் சிறப்பு பெறவும், உலக நாடுகளில் முதன்மை இடம் பெறவும் ஜப்பான் முனைந்தது.

**ஜப்பானிய விரிவாக்க அமைப்புகள்**

ஜப்பானின் விரிவாக்கம் அவசியமான சூழ்நிலை காணப்பட்டப் படியால் ஜப்பான் சமுதாயத்தினரும் பலவாறு தங்களது கோரிக்கைகளை தங்கள் அமைப்புகள் மூலமாகவும், சங்கங்கள் வாயிலாகவும் எடுத்துக் கூறினர். மேலும் இதற்காக மக்கள் மத்தியில் பிரச்சாரமும் செய்தனர். ஆகவே ஜப்பான் ஆட்சியாளர்கள் ஜப்பான் விரிவாக்கம் ஜப்பானியர்களின் ஒருமித்த கருத்து என அறிந்து ஆக்கிரமிப்பு செயல்களை முறைப்படுத்த அமைப்பு குழுக்களை உருவாக்கினர். அதன் பெயர் கருப்பு டிராகன் சங்கம் ஆகும். இவ்வமைப்பு ஜப்பானின் வல்லமை கொள்கையை வெளிநாட்டில் கடைபிடிக்க காரணமாயிருந்தது.

**வல்லமையுள்ளம் கொண்ட எழுத்தாளர்களின் செயல்களின் பாதிப்பு**

ஜப்பானில் வல்லமை ஆதிக்கத்தில் நம்பிக்கைக் கொண்ட எழுத்தாளர்கள் தங்கள் கருத்துக்களை இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் வளர்ச்சியை உதாரணம் காட்டி மக்களுக்கு எடுத்துரைத்தனர். ஜப்பான் நாடு எல்லாத் துறைகளிலும் வளர வேண்டும் என்றால் அதற்கான மூலகாரணம், பிற நாடுகளிடமிருந்து மூலவளங்களை கவர்ந்து செம்பொருளாக்கி பிறநாடுகளுக்கே விற்பனை செய்ய வேண்டும். இவ்வாறு செய்யின் பொருளாதார வளர்ச்சியினை மிக குறுகிய காலத்திலேயே அடைய முடியும். ஜப்பானியர்கள் ஆளும் அரசியல் தலைவருக்கு தங்களின் எண்ணங்களைத் தெரிவிக்கலாம் என மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர் காலனி ஆதிக்கம் இல்லை என்றால் பல உலக நாடுகளின் போட்டியில் ஜப்பான் நிமிர்ந்து நிற்க இயலாது. மாறாக பொருளாதார சீர்கேடும், தொழிற்கூடங்கள் இயங்காமலும், வேலைவாய்ப்பு இல்லாமலும் பரிதாபமான வருங்காலத்தைச் சந்திக்க வேண்டியது இருக்கும் என்ற கடுமையான எழுத்துக்கள் ஜப்பானின் சாதாரண மக்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் காலனி ஆதிக்கத்தின் மீதுள்ள காரணம் ஆகும்.

**கொரியாவை ஜப்பானோடு இணைத்தல்**

ஜப்பான் தனது ஆர்வத்தினை கொரியாவின் மீது காட்டியது. கொரியாவின் மீது ஜப்பானிற்குப் பதினாறாம் நூற்றாண்டில் இருந்தே ஒரே பார்வை உண்டு. இங்கு தங்களின் மூதாதையர்களின் செல்வாக்கு இருந்ததையும், தங்களின் ஆளுகைக்குள் வரக்கூடிய பகுதி என்ற எண்ணமும் ஜப்பானியரிடம் உண்டு இச்சூழ்நிலையில் ஜப்பானின் படை வல்லமை வளர்ந்தபடியால் ஜப்பான் கொரியாவுக்கு தூதுக் குழுவினை அனுப்பியது. அக்குழு ஜப்பானிற்கு ஆண்டு தோறும் கொரியா திறை செலுத்த வேண்டும். எனவும், ஜப்பானின் மேலாண்மையைக் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டது. ஆனால் இதே எண்ணம் சீனாவுக்கு இருந்தது. ஆனால் சீனா தனது மேலாண்மையைக் கொரியாவில் உறுதி செய்ய அதிகமான படைவீரர்களை கொரியாவிற்கு அனுப்பியது. ஆகவே கொரியா– ஜப்பானின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ள மறுத்தது. கொரிய மன்னரும், சீனாவும் ஜப்பானின் ஆதிக்கம் கொரியாவில் ஏற்படா வண்ணம் எதிர்ப்பினை தெரிவித்தன.

**கொரியாவின் எதிர்ப்பு**

1870 முதல் 1873 ஜப்பான் பல முறை தனது வியாபார தொடர்பினை ஏற்படுத்த முயன்றும் கொரியா மன்னர் மறுத்துவிட்டார். அவர்கள் தனித்து செயல்படுவதாகவும், யாருக்கும் கப்பம் கட்ட தேவையில்லை என்றும் மறுப்பு கூறினார். அதே வேளையில் கொரியா மேலை நாட்டில் இருந்து வரும் கிறிஸ்தவ குழுக்களையும், பிரதிநிதிகளையும் வரவேற்று அவர்களிடமே மோகத்தோடு நடந்துக்கொண்ட விதம் ஜப்பானுக்கு ஆத்திரம் அளித்தது. இதன் காரணமாக ஜப்பானுக்கு கொரியாவின் மீது இருந்த காலனி ஆதிக்க

எண்ணம் வளர்ந்தது. 1873ல் சீனாவும் – ஜப்பானும் ஒருவரை ஒருவர் ஆக்கிரமிப்பதில்லை என உடன்படிக்கை செய்துக் கொண்டன. அதன்பின்னர் சீனா தனது செல்வாக்கினை கொரியாவில் நிலைநாட்டப் பேச்சுவார்த்தைகளை துவங்கியது. இந்நிகழ்ச்சியினை கண்டும் காணாதது போல் ஜப்பான் எந்த வித எதிர்ப்பும் வெளிகாட்டாது அமைதியுடன் இருந்தது. இந்த அமைதி ஒருசில மாதம் மட்டுமே நீடித்தது.

**பசிபிக் மகாசமுத்திரத்தில் மேலை நாட்டவரின் ஆதிக்கம்**

பசிபிக் மகாசமுத்திரத்தில் உள்ள தீவுகளின் கூட்டம் தான் ஜப்பான் இங்கு ஏறத்தாழ 2000 தீவுகள் இருக்கின்றன. பசிபிக் மகா சமுத்திரத்தில் மேலைநாட்டவர்களின் ஆதிக்கம் கொடி கட்டி பறந்தது. அவர்களின் ஆதிக்க வளர்ச்சி ஜப்பானின் ஒருமைபாட்டிறகு பாதிப்பு ஏற்படுத்தலாம் எனஅஞ்சப்பட்டது. ஜப்பானிற்கு அருகில் உள்ள பலநாடுகள் மேலை நாட்டவரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டன. ஆகவே ஜப்பானின் மீதும் உரிய நேரத்தினை எதிர்நோக்கிக் கொண்டு தங்களின் வல்லமையை வளர்த்துக் கொண்டிருந்தனர். இந்த வேலையில் ஜப்பானின் இராணுவ பலத்தில் நம்பிக்கை கொண்ட சில ஆட்சியாளர்கள் பிற நாட்டு காலனிகளை கைப்பற்றுவதை காட்டிலும் புதிதாக காலனி ஆதிக்கம் அடையாத நாடுகளைக் கைப்பற்றுவதே நலம் என ஆலோசனை கூறினர். இதன் விளைவாக ஜப்பான் தனக்கு அருகில் பல வழிகளில் தமக்கு சொந்தம் கொண்டாடக் கூடிய பகுதிகள் எவை என ஆராய்ந்த போது கொரியா, மஞ்சூரியா, சீனா போன்ற நாடுகள் ஜப்பானின் சிந்தனையில் தென்பட்டன.

**1875 ஆம் ஆண்டு நிகழ்ச்சி**

1874ல் ஜப்பானிய தூதுவரை ஏற்றுக் கொள்வதாகக் கொரியா அறிவித்தது. ஆனால் அவ்வாறு அனுப்பப்பட்ட தூதருக்குப் பேட்டியளிக்க கொரிய அரசர் மறுத்து விட்டார். 1875 ஆம் ஆண்டு கடலளவைக் கணக்கெடுத்துக் கொண்டிருந்த ஜப்பானிய கப்பல் ஒன்று கொரியாவின் தலைநகரான செவுல் வழியே வரும் ஆற்று முகத்தை அளவெடுத்தது அதனை அறிந்தக் கொரியா, அக்கப்பல் மீது படையெடுக்கும்படி தன் படைகளுக்கு உத்தரவிட்டது.விளைவாக கொரியா ஜப்பானுக்கு அடிபணிந்தது. 1876 ல் ஜப்பானுக்கும் கொரியாவுக்கும் வணிக ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வகை ஒப்பேற்பு சீனாவிற்கு கொரியாவின் மீது எவ்வகையான உறவும் இல்லை என்பதை மறைமுகமாக வலியுறுத்தியது. ஜப்பானுக்குக் கொரியாவில் அதிக உரிமைகள் இவ்வுடன்படிக்கையின் மூலம் அளிக்கப்பட்டன.

**உடன்படிக்கையின் அம்சங்கள்**

1. ஜப்பானுக்குக் கொரியாவின் சில துறைமுகங்கள் திறந்து விடப்பட்டன.
2. ஜப்பானின் வணிகர்களும், தூதுவர்களும், முகவர்களும், கொரியாவில் தங்கி இருக்கும்போது அவர்களைக் கொரிய நாட்டின் சட்டதிட்டப்படி நடத்தாமல், தம் நாட்டின் சட்டதிட்டப்படியே நடத்த வேண்டுமென ஜப்பான் கொரியாவுக்கு பணித்தது இதையும் கொரியா ஏற்றுக் கொண்டது.

**1882 ஆம் ஆண்டு மேலை நாட்டவரின் ஒப்பந்தம்**

1882 ஆம் ஆண்டு அமெரிக்காப் போன்ற நாடுகளும், கொரியாவுடன் இத்தகைய வணிக ஒப்பந்தங்களைச் செய்துக் கொண்டன. அதே ஆண்டில் பிரிட்டன், கொரியாவுடன் வணிகத்தொடர்புக் கொண்டது. இவற்றைத் தொடர்ந்து ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளும் கொரியாவுடன் வணிக ஒப்பந்தங்களைச் செய்துக் கொண்டன. இவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாகப் பல ஐரோப்பிய நாடுகள்

கொரியாவிற்குள் புகுந்தன. தங்களின் வணிகச் செல்வாக்கினை வளர்த்துக் கொண்டு பலவகையான சலுகைகளைப் பெறுவதை கொரியர்கள் வெறுத்தனர். இவர்கள் அயலாரைத் தங்கள் நாட்டில் இருந்து விரட்ட சீனாவின் உதவியை நாடினர்.

1880 ல் ஜப்பானியத் தூதரகம் ஒன்று கொரியாவின் தலைநகரான செவுல் நகரில் ஏற்படுத்தப்பட்டது. 1882ல் பிற்போக்காளர்களுக்கும், முற்போக்களார்களுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் செவுல் நகரில் இருந்த ஜப்பானியஅரண்மனைகள், மற்றும் அலுவலகங்கள், ஆகியவற்றைத் தாக்கினார்கள். பல ஜப்பானிய தூதர்களும், ஜப்பானிய அதிகாரிகளும் கொல்லப்பட்டனர். பிற்போக்காளர்கள் சினாவின் உதவியையும், முற்போக்காளர்கள், ஜப்பானின் உதவியையும் நாடினர். சீனாப் படையை அனுப்பி கிளர்ச்சியை அட்க்கி அமைதியை ஏற்படுத்தியது. அதன்பின் கொரியா ஜப்பானோடு உடன்படிக்கை செய்துக் கொண்டது. அவற்றின் படி கொரியா ஜப்பானுக்கு நேர்ந்த இழப்பீடுகளுக்கு மன்னிப்பு கோரியது. மேலும் பல உரிமைகளை ஜப்பானுக்கு கொடுப்பதாக உறுதி அளித்தது. அதன்பின் ஜப்பான் செவுலில் மீண்டும் தனது தூதரகத்தை அமைக்கவும் அதனைச் சுற்றி ஒரு காவற்படையை சுற்றி வைத்துக் கொள்ளவும் இசைவளிக்கப்பட்டது. இதற்குப் பின் ஜப்பான் கொரியாவோடு நேரடி தொடர்பு கொள்ளளாமெனவும் சீனா மூலம் தொடர்பு கொள்ள வேண்டியதில்லை என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் சீனா ஜப்பானின் ஆதிக்கத்தை கொரியாவில் ஏற்படுவதை வெறுத்தது தனது அரசியலறிஞர்ரான இலீஃகாங்சாங்கு என்பவரை செலவில் நகருக்கு அனுப்பியது. அவர் கொரியாவின் துறைமுகங்கள் அனைத்தையும் ஒரு கண்காணிப்பு கழகத்தின் கீழ் அமைக்க வேண்டும் எனவும், அக்கழகம் சீனத் துறை முகத்தோடு தொடர்பு கொண்டு நடக்க வேண்டும் என்றும் கூறினார்.

1884ல் கொரியாவில் மீண்டும் பிற்போக்காளர்களுக்கும், முற்போக்காளர்களுக்கும் இடையே ஒரு பெரிய மோதல் ஏற்பட்டது. இதனையடக்க சீனா, ஜப்பான் ஆகிய இரு நாடுகளின் படைகளும் கொரியாவுக்குச் சென்றன. ஆனால் சீனா தீவிரமாக கொரியாவின் பகுதியில் ஈடுபட முடியவில்லை. இந்தோசீனாத் தகராறில் அது பிரான்ஸீடன் மோதிக் கொண்டிருந்தது. இதனால் கொரியாவில் முற்போக்காளர்களின் செல்வாக்கே அதிகமானது. கொரிய அரசரும் ஜப்பானின் உதவியை நாடினார். இக்கிளர்ச்சிகளை அடக்குவதில் சீன, ஜப்பானியப் படைகள் தங்களுக்குள் மோதிக் கொண்டனர். ஜப்பானியர் பலர் கொல்லப்பட்டனர். இந்த உயிரிழப்பிற்காகவும், போர் செலவுக்காகவும், கொரிய அரசரிடம் ஜப்பான் இழப்பீடு கோரியதோடு மட்டுமில்லாமல், சீனாவின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும் படியும் கேட்டுக் கொண்டது. இதன்படி சீனா ஜப்பானிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது.

அத்தோடு ஜப்பான் தன் நாட்டுத் தலைமை அமைச்சரைச் சீனாவிற்கு அனுப்பி கொரியாவின் இரு தரப்புப் படைகளுக்கும் நேர்ந்த மோதல்களை பற்றி பேச்சு நடத்தவும், இனி அப்படி மோதல் நடக்காது தடுக்கவும் கோரியது. இதனால் 1885 ல் சீன அமைச்சர் இஃகாங்சாங்கை சந்தித்து,தியென்சின் என்னும் இடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துக் கொண்டனர். இதன்படி சீனாவும், ஜப்பானும் முன்னறிவிப்பின்றி படைகளை கொரியாவில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று முடிவாயிற்று, இருநாடுகளக்கும் கொரியாவின் படைகளுக்கு பயிற்சியளிக்க பயிற்சியாளர்களை அனுப்புவதில்லை என்றும், இருதரப்புப் படைகளும் கொரியாவிலிருந்து வெளியேற வேண்டும் என்றும் முடிவாயிற்று. ஜப்பானியரின் தூதரகத்தை தாக்கி அழித்ததற்கும், ஜப்பானியரைக் கொன்றதற்குச் சீனா மன்னிப்பு கேட்டுக் கொண்டது.

தியென்யீசின் உடன்படிக்கை ஏற்பட்ட ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு கொரியாவில் ஒரு கிளர்ச்சி

ஏற்பட்டது. அயலாரை வெளியேற்றுவதே அக்கிளர்ச்சியின் நோக்கமாகும். இக்கிளர்ச்சியாளர்களை அடக்க கொரிய அரசு சீனாவின் உதவியை நாடியது. சீனா ஒரு படையை அனுப்பி வைத்தது. ஜப்பானும் தன் முற்போக்குக் கட்சியாளர்களின் வேண்டுகோளின் படி ஒரு படையை அனுப்பி வைத்தது. இக்கலகம் அடக்கப்பட்டது. ஆனால் சீன படைகளும் ஜப்பான் படைகளும் கொரியாவில் இருந்து திரும்ப பெறப்படவில்லை. சீனா கொரியாவின் செயல்பாடுகளில் தானும் ஜப்பானும் தலையிடக் கூடாது என வலியுறுத்தி இருநாட்டுப் படைகளும் கொரியாவை விட்டு வெளியேற வேண்டும் என்றுக் கருத்து கூறியது. படைகளைக் கொரியாவில் நிறுத்தி வைத்துக் கொண்டு சீனாவும், ஜப்பானும் சீர்திருத்தங்களை கொரியாவில் செய்ய வேண்டும் என்று கூறின. இதன் காரணமாக சீனாவுக்கும், ஜப்பானுக்கும் தகராறு முற்றி சீன - ஜப்பானிய போர் தொடங்கலாயிற்று.

**சீன - ஜப்பானிய போரின் சில சம்பவங்கள்**

சீனாவுக்கும், ஜப்பானுக்கும் கடுமையான போர் நடைபெற்றது. சீனப்படைகள் தோற்கடிக்கப்பட்டன. மீண்டும் செவுலுக்கு அருகில் சீனப்படைகள் ஓசிமாவாவில் தோற்கடிக்கப்பட்டன. இதற்குள் ஜப்பானிலிருந்து தளபதி சாதோ தன் படைகளுடன் சென்சன் துறைமுகத்தில் இறங்கினார். பிங்கியாங்கில் தங்கியுள்ள சீனப்படையுடன் பேசிட இத்தளபதி சென்றார். இவருக்குப்பின், செப்டம்பர் 12 ல் தளபதி கத்தசுரா செமுல்போ என்னும் இடத்தில் வந்திறங்கினார். இவருக்கு முன்பாகவே வந்திருந்த நோத்சூவும், ஓசிமாவும், கூட்டாக சேர்ந்து செப்டம்பர் 15, 16 நாட்களில் பிங்கியாங் கரையில் தங்கி இருந்த 17,000 சீன படை வீரர்களுடன் போரிட்டு அவர்களை தோற்கடித்தனர். இப்போர்க் களத்தில் 6000 சீனர்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் போயினர். ஆனால் ஜப்பானிய படையில் 189 பேர் கொல்லப்பட்டும் 516 பேர் காயமுற்றனர். பிங்கியாங் போர்களம் சீன ஜப்பானிய வரலாற்றில் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

இதனையடுத்து நடந்த நாவாய்ப் போரிலும், செப்டம்பர் 17 ஆம் நாள் சீன படைகளை ஜப்பானிய படைகள் வெற்றிக் கண்டன. நான்கு சீனப் போர் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இரு கப்பல்கள் தப்பி சென்றன. இப்போர் வெற்றியினால் ஜப்பான் கொரியாவைச் சுற்றிலும் கடலாளுமை பெற்றது. சீனபடைகள் மஞ்சூரியாவை நோக்கி பின்னடைந்தன. தொடர்ந்து பல வெற்றிகளைப் பெற்றிருந்த ஜப்பானியப் படைகள் சீனா எல்லைக்குள் சென்று தலைநகர் பீகிங்கை நோக்கி முன்னேறியது. சீனா வேறு வழியின்றி சரண் அடைந்தது.

**சிமோனேசிகி உடன்படிக்கை**

ஏப்ரல் 19, 1895 ஆம் ஆண்டு சீமோனோசாகி என்னும் இடத்தில் ஏற்பட்ட உடன்படிக்கையில் சீனாவின் மாபெரும் அரசியல் அறிஞர் இலீஃகாங்சாங்கும், ஜப்பானின் அரசியல் சட்ட தந்தை இதேதோஷும் கலந்து கொண்டனர். இவ்வுடன்படிக்கையின் கீழ் கொரியாவுக்கு தன்னுரிமை கொடுக்கப்பட்டது. தன் ஆளுமையை கொரியாவின் மீது செலுத்துவதில்லை என்றுச் சீனா ஒப்புக் கொண்டது. பார்மோசா, இலியோதுங் தீபகற்பம், பெசுக்டோர்சு ஆகிய இடங்களைச் சீனா ஜப்பானுக்குக் கொடுத்தது. போர் இழப்பீடு 2,51,60,256 பொற்காசுகளையும் ஜப்பானுக்கு செலுத்த ஒப்புக் கொண்டது. இப்போர் மற்றொரு போரை ரஷ்யாவிற்கும், ஜப்பானுக்கும் இடையே உருவாக்கியது. அப்போரிலும் ஜப்பான் வெற்றிப் பெற்று கொரியாவை தன் நாட்டோடு இணைத்துக் கொண்டது.

**ஜப்பானின் அரசியல் கட்சிகளும் அமைச்சரவைகளும்**

ஜப்பானிலே ஏற்பட்ட தொழிற்புரட்சியும், வேளாண்மை புரட்சியும் பல புதிய முதலாளி குடும்பங்களை உண்டாக்கியது. நாட்டின் செல்வத்தை ஒருசில குறிப்பிட்ட குடும்பங்களே துய்ப்பதை எதிர்த்துச் சிலர்

தங்களுக்கேற்ற பங்கு வேண்டுமெனப் போராட முற்பட்டனர். அரசு செவ்வனே செயல்பட வேண்டுமென்று, அதை நடத்திச் செல்ல ஒரு தனிக் குழுவை நாடாளுமன்றத்தின் கீழவை பெரிதும் ஆதரித்தது. அதற்கு எதிர்ப்பும் இருந்தது. இவ்வாறு ஏற்பட்ட கருத்து வேற்றுமையின் அடிப்படையாகப் பிறந்த பல்வேறு கட்சிகளுக்கும் தைபார்சு குடும்பத்தார் கையூட்டு கொடுத்து தங்கள் சொத்துக்களுக்குப் பாதகமாக அரசியல் சட்டம் ஏற்படாதவாறுக் காத்துக் கொண்டார்கள். இத்தகைய ஊழல்களால் ஆட்சியில் ஒரச் சார்பு பண்பு வலுப்பொற்றது. 1901 ம் ஆண்டு வளர்ச்சி பெற்ற சையூகமாய் என்ற அரசியல் கட்சி எப்பொழுதும் அரசையே சார்ந்து ஊழல்களை மறைக்க முயன்றது. இதைப் போலவே சென்சை கோந்தோ என்ற கட்சியும் இவ்வூழல்களைச் சார்ந்து அரசின் பக்கம் நின்றது. இவ்விரு கட்சிகளையும் எதிர்த்து 1910 ஆம் ஆண்டு தேசிய அரசியல் கட்சி என்னும் பெயரில் ஒரு கட்சி உருவாகியது. ஆனால் இக்கட்சியும் ஊழல்களை அடியோடு ஒழிக்க முற்படவில்லை.

1912 ஆம் ஆண்டு ஜுலை 30 ஆம் நாள் மேசி மா மன்னர் காலமானார். அவர் மறைவுக்கு பின்னும் அரசியல் கட்சிகளினிடையே ஒற்றுமை காணப்படவில்லை. அரசியல் கட்சிகளுக்கும், படைத்துறைக்கும் கருத்து வேற்றுமைகள் வளர்ந்துக் கொண்டே போயின. இதற்கிடையில் புதிய வளர்ச்சியை பெற்றுவரும் மூத்தோரவை அரசு செய்திகளிலும், கட்சி செய்திகளிலும் அடிக்கடி தலையிட்டு வந்தது. பேரரசுக்கிருந்தப் புனித தன்மையையும் மாண்பையும் அழிக்கும் வண்ணம் தோன்றிய ஊழல்களை எதிர்த்து நோக்கி என்பவரும் அவருடைய மனைவியும் தற்கொலை செய்துக் கொண்டனர். ஆயினும் நாளுக்கு நாள் அரசியல் குழப்பங்கள் அதிகரித்துக் கொண்டே போயின. முதலமைச்சர் சையோன்சியையும் அமைச்சரையும் பதவியிருக்க வேண்டியதாயிற்று. இதற்குப் பெரிதும் காரணமாய் நின்றவர் மூத்தோரவையின் உறுப்பினரான மெகாத் என்பவர் ஆவார். இவ்வமைச்சரவையின் வீழ்ச்சிக்குப் பிறகு கருவூலத் தலைவராக இருந்த கத்சுரா என்பவரின் தலைமையில் அமைச்சரவை மீண்டும் உருவாகியது. தன்னைச் சார்கின்ற பலரை ஒன்றாகச் சேர்த்து தொசிகாய் என்னும் கட்சி ஒன்றினை புதிய தலைமையமைச்சர் கத்சுரா அமைத்தார். ஆயினும் தன் அமைச்சரவையைச் சாரும் பெருவாரியான உறுப்பினர்களைப் பாராளுமன்றத்தில் இவரால் பெற முடியலில்லை. இதனால் நாடாளுமன்றத்திலிருந்து இவ்வமைச்சரவைக்கு வசைகணைகள் வந்த வண்ணம் இருந்தன. அரசரிடமுள்ள தன் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு நாடாளுமன்றத்தைக் கீழ்ப்படிய வைக்க கத்சுரா முயன்றார். ஆனால் எப்பொழுதுமே அரசைச் சார்ந்து வரும் சையூகாய் கட்சியும் மற்ற கட்சிகளும் கத்சுராவை எதிர்க்க முற்பட்டன. இதற்குக் காரணம் மக்களுக்கு அமைச்சரவையில் மீது இருந்த வெறுப்பில்லை. அவர் மீது தனிப்பட்ட முறையில் இருந்த வெறுப்பே ஆகும். வேறு வழியின்றி கத்சுரா பதவியில் இருந்து விலகினார். மீண்டும் சையூகாய் பேராதரவுடன் கப்பற்படைத் தளபதி யமாபிமாதோ அமைச்சரவை அமைத்தார். இவரை மூத்தோரையும் சார்ந்தது. இவர் காலத்தில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், அவர்களின் சார்பை பெற்றவர்களும் அதிகாரிகளாக அமர்த்தப்பட்டனர். பொதுத்துறையில் ஆள்குறைப்பு திட்டம் கையாளப்பட்டது. யமாமொதோ அமைச்சரவை நெடுநாள் நிலைத்து ஏப்ரல் திங்கள் 1914 ல் வீழ்ந்தது. நாவாய்த் துறை அமைச்சரகமும், அத்துறையிலிருந்த பேரதிகாரிகளும் போர்க்கப்பல்களை கட்ட ஒப்பந்தமிட்டதில் கையூட்டு வாங்கினர். இதனால் இவ்வமைச்சரவை வீழ்ச்சியுற்றது. யமாமொதா வீழ்ச்சிக்கு பின்னர் ஓடுமா என்பவர் ஜப்பானிய அமைச்சரவையில் முதல்வரானார். இவர் பெயர் பெற்ற பேச்சாளராகவும், மக்களிடையே புகழ் பெற்றவருமாகத் திகழ்ந்தார். இவர் தன்னலத்தின் அடிப்படையில் அமைந்த சையூகாய்க் கட்சியின் கோட்பாடுகளையும் அதன் தன்மையையும் சாடினார். 1915 இல் நடந்த பொதுத் தேர்தலில் ஒகுமா பெருவாரியான சார்பை பெற்றார். ஆனால் அமைச்சரவையில் உள்துறை அமைச்சராயிருந்த அவுரா என்பவர்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கையூட்டுக் கொடுத்துப் படையை இரண்டாகப் பிரிக்கும் வரவைக் கொண்டு வந்தார். ஒருமா தன் பகை கட்சியான சையூகாய்யின் சார்புடன் அவரை அமைச்சரவையிலிருந்து நீக்கினார். இவரைப் போலவே அயலக அமைச்சர் கதோ என்பவரும் வெளியேற்றப்பட்டார். இத்தகைய வெளியேற்றங்களையும், சீனாவின் மீது ஜப்பான் விதித்த 21 கட்டுப்பாடுகளையும் மூத்தோரவை எதிர்த்தது இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக நின்ற படையை இரண்டாக பிரிக்கும் வரைவைத் தூக்கி எறிந்துவிட்டு அக்டோபர் 1916 ல் ஒகுமா தன் பதவியை துறந்து வெளியேறினார்.

இவருக்குப் பின் அமைச்சரவையின் தலைவரான சோக சாமுராய் குடும்பத்தைச் சேர்ந்த தளபதி தெராவுச்சி தலைமைச்சரானால் இவர் ஜனவரி 1917 ல் நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டுப் பொதுத்தேர்தல் நடத்தினார். நெல் அறுவடைக் காலங்களில் நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களைக் காரணம் காட்டி இவருடைய அமைச்சரவையும் கலைக்கப்பட்டது. இதற்குப் பின் நடந்த தேர்தல் ஜப்பானிய வரலாற்றிலேயே முதல் முறையாக எத்தகைய பட்டமுமில்லாதவரும், உயர்ந்த குடும்பத்தில் பிறக்காதவருமான, எளியவரான ஆரா என்பவர் முதல் அமைச்சரானார். இவர் கையூகாய் கட்சியின் சார்பை பெற்றுக் கீழவையில் உறுப்பினராகி முதலமைச்சரானார். வழக்கம் போல் இவர் மூத்தோரவையின் அறிவுரைப்படி முதலமைச்சர் பதவியேற்றார். அச்சமயத்தில் மூத்தோரவையில் முதுபெரும் உறுப்பினர்களாயிருந்த மூவரைக் குறிப்பிடலாம். எண்பத்து நான்கு வயது நிரம்பிய மத்சுகதா, எண்பத்தியோரு வயது நிரம்பிய யமகதா,எழுபது வயதை நிரம்பிய 'சையோன்சி' ஆகிய மூவராவர். ஆரா ஜப்பானிய அரசியல் கட்சி வரலாற்றில் ''மாபெரும் எளியவர்'' என்று சிறப்பிக்கப்படுகிறார். இவரே முதன் முதலில் அமைச்சரவையை அரசியல் கட்சி அவையாக மாற்றியமைத்தார். ஆயினும் இன்னமும் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குப் பேரமைச்சர், நாவாய் அமைச்சர், அயல்நாட்டு அமைச்சர் ஆகிய பதவிகள் வழங்கப்படவில்லை. இப்பதவிகளில் அரசரே நியமணம் செய்தார்.

**ஆராவின் ஆட்சி முறை 1918-1921**

கையூகாய் கட்சியின் தலைவராக செப்டம்பர் 29,1918 ஆரா தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்றிலிருந்து 1921 நவம்பர் 12 ஆம் நாள் தான் இறக்கும் வரை ஜப்பான் நாட்டுத் தலைமை அமைச்சராயிருந்து அவர் ஆற்றிய பணிகளை நோக்கினால் அவரை ஒரு மாபெரும் ஆட்சியாளர் என்று அறியலாம். இவரைத் தாண்டி மூத்தோரவையின் தலைவர்களில ஒருவரான யமாகதா தலைமையமைச்சராக அமர்த்தப்பட்டபோது பலரும் எதிர்த்தார்கள். இதற்கு காரணம் இவர் பெருவாரியான மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதுதான், தொடக்கத்தில ஆரா மூத்தோரவை, கிழார் களவை, தன்னுடைய கட்சியினர் முதலியர்களின் எதிர்ப்புகளைச் சமாளித்து மக்களவைக்கும் மேலவைக்கும் மூத்தோரைக்குமிடையே சரியான உறவு முறைகளை ஏற்படுத்தினார். தன் நாட்டில் பெருகிவிட்ட மக்கள் தொகையின் காரணமாக பெருகிய இரண்டு மடங்கு தொழிலாளர் வகுப்பின் சிக்கல்களை ஒழித்தார். அதுஅன்றி உள்நாட்டில் அமைதி ஏற்படாதென்பதை அறிந்தார். மேலும் சமூக நலக் கழகம் ஒன்றை ஏற்படுத்தி அதனை உள்துறை அமைச்சரவையை கவனிக்கும் படி செய்தார். விலைவாசிகளை கட்டுப்படுத்தி நியாய விலைக்கடைகளையும், கூட்டுறவுப் பண்டகச் சாலைகளையும் ஏற்படுத்தினார். சிறுதொழில் வளர்ச்சிக்காகக் குறைந்த வட்டிக்குக் கடன் வழங்க திட்டம் தீட்டினார். உணவுச் சிக்கலை நீக்கினார். செல்வந்தர்கள் மீது அதிக வரிகளை விதித்து உயர்தரக் கல்வி, இருப்புப் பாதைகள் நெடுஞ்சாலைகள், தொலைபேசித் தந்தித் தொடர்புகள் ஆகியவற்றை வளர்த்தார்.

ஆயினும் இவருடைய அமைச்சரவைக்கு முன்னும், பின்னும் இல்லாத அளவிற்கு அரசியலில் அதிக செல்வாக்குடன் விளங்கினார்கள். இவர் குடும்பத்தார் அரசியல் கட்சிகளுக்குப் பணம் கொடுத்து விலைக்கு

வாங்கினார்கள. எனவேதான் முதலாளியத்திற்கு எதிராக எத்தகையச் சட்டங்களையும் அவரால் உருவாக்க முடியவில்லை. அரசியல் கட்சிகள் தன்னை ஆதரிக்காததால் பேரரசின் உதவியுடன் நன்கு வேண்டியவர்களைக் கீழவையில் நேரடியாக அமர்த்திக் கொண்டார். இதைப் போலவே இவரை ஆதரிக்கும் பலர் அரசியல் அதிகாரிகளாக அமர்த்தப்பட்டார்கள் ஆயினும் பகைமையுள்ள அதிகார வகுப்பை இவரால் ஆட்டிப்படைக்க முடியவில்லை. பொதுவாக ஜப்பானிய அரசியல் கட்சிகளால் அரசரால் அமர்த்தப்படும் துறை தலைவர்களையும் படைத்தலைவர்களையும் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் பொதுத்துறை தலைவர்களில் பெரும்பாலோர் கொரிய வழியாகப் பதவிக்கு வருவார்கள். ஆரா எப்படியும் இத்தகைய அதிகார வகுப்பை அமைச்சரவைக்கு பணிவைக்க வேண்டும் என்று விரும்பினார். இச்சமயத்தில் சைபீரியச் சிக்கலும் மஞ்சூரியச் சிக்கலும் ஜப்பானை எதிர்நோக்கி நின்றன. ஜப்பானின் தேசிய கடனும் பதினான்கு கோடியே ஐம்பது இலட்சம் எண்ணாக உயர்ந்தது. ஜப்பானின் அயலகக் கொள்கை அதன் படைகளின் முற்றுரிமையாயிருந்தது. எனவே இப்படைகள் அமைச்சரவையின் கட்டளைகளை மதிக்காது சைபீரியாவில் இருந்து பின்னடையாமலும், மஞ்சூரியச் செய்திகளில் தலையிட்டும் நின்றன. ஆனால் 1920 ல் அமெரிக்க ஒன்றிய நாடுகளின் படைகளை சைபீரியாவில் இருந்து வெறியேறியதும் ஆரா தனது 75,000 படைவீரர்களையும் யாதொரு சேதமின்றிச் சைபீரியாவிலிருந்து திரும்பப் பெற்றார். முதல் உலகப் போருக்குப் பின் ஏற்படுத்தப்பட்ட பன்னாட்டுக் கழகத்தில் தன்நாட்டிற்கு ஒரு முதன்மை இடத்தை பெற்று மிகப் பெரிய ஐந்து வல்லரசுகளின் ஒன்றாக தன் நாட்டை மதிக்கும்படிச் செய்தார். 1919 ல் வாஷிங்டனில் நடைபெற்ற மாநாட்டில் தனது தொழிலாளர்களை அனுப்பி வைத்தார். இவ்வாறு முதல் உலகப் போருக்குப் பின் ஜப்பான் பெற வேண்டிய அனைத்து நன்மைகளையும் பெற்று உலக முதன்மை நாடுகளில் நான்காவது இடத்தைப் பெற்றது. இவர் இறந்த நான்கு நாட்களுக்குப் பின் பன்னாட்டு கழகத்தின் ஒரு உறுப்பு நாடாக ஜப்பான் பதவி ஏற்றது. இது ஆராவின் சிறந்த அரசியல் அறிவையும் ஆட்சி வன்மையும் காட்டுகிறது.

எதிர் கட்சியின் தலைவராயிருந்த கதோ என்பவர் சைபீரியாப் படையெடுப்பையும் மற்ற ஆராவின் அரசியல் சீர்திருத்தங்களையும் கடுமையாக தாக்கி வந்தார். ஆரா தன் கட்சியாகிய சையூகாயின் கொள்கைக்கேற்ப யென் வரி கட்சிவோருக்கும் ஒப்போலையுரிமை வழங்கினார். இதற்கு முன் பதினைந்து யென்னுக்குக் கீழ் வரி கட்டுவோர்க்கு ஒப்போலை உரிமை வழங்கப்படவில்லை. இதனால் ஜப்பானை ஒப்போலை மாவட்டங்களாகப் பிரித்தார். இத்தகைய மக்களாட்சிச் சீர்திருத்தங்களிடையிலும் எதிர்கட்சிகள் அவருக்கு இன்னல்கள் விளைவித்து வந்தன. வயது அடைந்த அனைவருக்கும ஒப்போலையுரிமை வேண்டும் என்றும்,தீர்மானம் நிறைவேற்றினார்.எனினும் 1920 ல் ஆரா நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டார். இதற்கு பின் நடந்த தேர்தல்களில் ஆராவின் கட்சியே பெருவாரியான இடங்களைப் பெற்றது. நாடாளுமன்றத்தில் பெருவாரியாக தன் கட்சி உறுப்பினர்களைப் பெற்ற ஆரா மார்ச் 1920 லிருந்து ஜப்பான் தொழில் வளர்ச்சிக்கான முயற்சிகளையே மேற்கொண்டார்.

இச்சமயத்தில் ஜப்பானில் ஏற்பட்ட மாற்றங்களால் சைபத்சு குடும்பத்தினர் சிறு தொழில்கள் யாவற்றையும் கைப்பற்றிக் கொண்டார்கள். சையூகாய் கட்சியிலிருந்து பெரிய நிலக்கிழார்கள் அயீசரி விலைச் சரிவை எதிர்க்கலாயினர். தென்மஞ்சூரிய இருப்புப் பாதைக் கண்காணிப்புப் பணியில் அமர்த்தப்பட்ட ஜப்பானிய அதிகாரிகள் ஊழல் மன்னர்களாக மாறிவிட்டனர். இதை போலவே உள்நாட்டு அதிகாரிகளும் ஊழல்களில் ஈடுபட்டனர். இதனால் ஆராவின் அமைச்சரவையின் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. அமைச்சரவைக்கும் சையூகாய்க் கட்சியினருக்கும் மோதல்கள் ஏற்பட்டன. தொழிலாளர்களுக்கும் ஏழை உழவர்களும் புரட்சியில்

ஈடுபட்டனர். இவைகளை சமாளிப்பதற்காக, ஆரா டிசம்பர் 1920ல் நிகரமைப்பு கழகம் ஒன்றை ஏற்படுத்தினார். இக்கழகத்தை மக்கள் ஆதரிக்கவில்லை. காரணம் பொது உடைமை கட்சி ஜப்பானில் செல்வாக்கினை பெற துவங்கியதுதான். 1919 ல் ஜப்பான் நாட்டு தொழிலாளர் கூட்டிணைப்பில், 71 தொழிலாளர் கழகங்கள் ஒன்றிணைந்தனர். இதற்கு பின் பொதுவுடைமைக் கொள்கையினரும், நிகரமைப்பு கொள்கையினரும் ஒன்றிணைந்து ஜப்பானில் செயல்பட்டனர். எனவே தான் ஆராவின் நிகரமைப்புப் கழகத்தை இவர்கள் துச்சமாக எண்ணி அதனை ஒரு கண் துடைப்பு வேலை என்றனர். இத்தகைய கொந்தளிப்புகளில்தான் தொழிலாளர் வகுப்பினர் சைவத்சு குடும்பத்தைச் சேர்ந்த யசூதர் என்பவர் ஆராவையில் கொலைசெய்யப்பட்டார். 1921 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் டோக்கியோ தொடர்வண்டி நிலையத்தில் ஒரு இளைஞனால் ஆரா கொல்லப்பட்டார். ஜப்பானில் வளர்ந்து வந்த தாராள கொள்கையைத் தடை செய்ய 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் கொலைகளின் தொடக்கமே ஆராவின் கொலையாகும்.

**தகாஃகாசி அமைச்சரவை (நவம்பர் 1921 ஜுன் 1922)**

ஆராவின் கொலைக்குப்பின் ஆராவின் அமைச்சரவையிலிருந்த தகாஃசி என்பவர் தலைமை அமைச்சரனார். இவர் சைபத்சு குடும்பத்தை ச் சேர்ந்தவர். எனவே அவரை படையினரும் அரசியல் கட்சிகளும், தொழிலாளர் இயக்கங்களும், நலிவுறும் பொதுமக்களும் வெறுக்கலாயினர். இவருடைய கட்சியான சையூகாய் கட்சியும் இரண்டாக பிரிவுப்பட்டது. எனவே இவர் தன் கட்சியின் பெருவாரியான வலிமையைக் கொண்டோ, படைக் குழுவினர், பிறகட்சிகள், பொதுமக்கள், முதலியோரின் ஆதரவைக் கொண்டோ நாட்டை அமைதியான முறையில் ஆள முடியவில்லை. முதல் உலகப்போராலும் ஜப்பானிய உள்நாட்டு குழப்பங்களாலும், கட்சி பூசல்களாலும் தன் கட்சிக்குள்ளே உள்ளப் பிளவாலும், இவர் ஜுன் 1922 ல் பதவியை துறந்தார். கையூகாய் கட்சி மக்களவையில் பெரும்பான்மையை இழந்தது.

**மேம்பட்ட அமைச்சரவைகள்**

தகாஃகாசி தன் தலைமையமைச்சர் பதவியை துறந்தப்பின் அமைச்சரவை இராணுவம் இரண்டாண்டுகள் வரை அமைச்சரவையைக் கைப்பற்றி அமைச்சரவையை அமைத்தது. தளபதி கதோ இதன் தலைமை அமைச்சரானார். இவர் கப்பற்படை தளபதியுமாவார். இதை சையூகாய்க் கட்சி விரும்பாததால் எக்கட்சியையும் சாராத ஒருவர் தலைவராக வரவேண்டும் என்று எல்லோரும் விரும்பவே கவுண்டு யமாமொதோ என்பவர் அமைச்சராக எல்லா காரியங்களையும் செய்து வந்த வேளையில் ஜப்பானில் ஏற்பட்ட மாபெரும் நிலநடுக்கம் ஜப்பானின் அரசியலிலும் மாறுதல்களை கொண்டு வந்தது. இதன்பின் விசுகவுண்டு கியுரா என்பவர் அமைச்சராவதை எதிர்கட்சிகள் எதிர்த்தன மக்களவையில் பெரும்பான்மை உறுப்பினர்களை பெற்றுள்ள கட்சியே அமைச்சரவையை அமைக்கப்பது என்ற மரபு மீறப்படுவதாக குறை கூறி கியுராவை எதிர்த்தனர். இதனால் பிரிந்த சையூகாய் கட்சி மீண்டும் இணைந்து அமைச்சரவை அமைப்பதென்று தீர்மானித்தது. ஆனால் இவர்களின் பணி சிறப்பாக அமையவில்லை. இவ்வமைச்சரவையின் தலைவரான கதோவும், அவருடைய அயல்நாட்டு அமைச்சரான பரோசிகராகவும் சைபத்சு குடும்ப பெண்களை மணந்ததால், இவர்கள் இக்குடும்பத்தாருக்கு ஆதரவாக நடப்பதாக மக்கள் வெறுக்க ஆரம்பித்தனர்.

**கேதா அமைச்சரவை (1924 - 25)**

கதோ வயது அடைந்தவர்களுக்கு வாக்குரிமை வழங்கவும் அரசியல் சட்டத்தின்படி அரசியலை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிகராளிகளைக் கொண்டே நடத்தவும் விரும்பினார். எனவே அகவையடைந்தோர் ஒப்போலையுரிமை சட்டம் ஒன்றை மே 1925 ல் கொண்டு வந்தார். முப்பது இலட்சமாக

இருந்த வாக்காளர்கள் எண்ணிக்கை 1 கோடியே 30 இலட்சமாக உயர்ந்தது. மாணவர்கள் தேர்தலில் பங்கு பெற்று ஊழல்களை ஒழித்தனர். வரி செலுத்துவோருக்கு மட்டும் வாக்குரிமை என்ற வேளையில் பல குறைபாடுகள் காணப்பட்டது. அவைகள் இப்பொழுது நீக்கப்பட்டு நல்ல எண்ணம் கொண்ட சாதாரண மக்களும் மக்ளவையில் இடம் பெற்று உண்மையான மக்களாட்சிக்கு வித்திடவும், பொருளாதார நெருக்கடிநிலைமை ஏற்பட்டால் சமாளிக்கவும் அரசு நிறுவனங்கள் பலப்படுத்தப்பட்டன. வணிகத்துறையும், வேளாண்மை துறையும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. கைத்தொழில்கள்பல பிறந்தன. பெருகி வரும் மக்கள்தொகை அயல்நாட்டிற்கு வேலைக்காக செல்ல இருந்த தடைகள் அகற்றப்பட்டன. இவ்வாறு பல நல்ல சீர்திருத்தங்களை கொண்டு வந்தும் நீண்ட காலம் ஆட்சியில் இருக்க முடியவில்லை. சையுகாய் கட்சி தலைவர்கள் இவருக்கு ஆதரவு கொடுக்க மறுத்ததால் இவர் பதவி துறந்தார்.

ஜப்பானியர்களுக்காக உழைக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் கொண்ட இவர் பல நன்மைகளைச் செய்தார். அவற்றில் மிக முக்கியமானவைகள்:

1. நில உச்ச வரம்புச் சட்டம்- இதன்படி ஒவ்வொரு ஜப்பானியருக்கும் இரண்டரை ஏக்கர் நிலத்தை வழங்க வேண்டும். இந்த நிலத்தின் மதிப்பை முப்பதாண்டு தவனையில் அரசுக்கு செலுத்த வேண்டும் என்றும் சிறப்பான திட்டத்தினை வகுத்தார். 99% மக்கள் இதனால் பயன் பெற்றனர்.
2. தொழிலாளர்களுக்கான தொழிற்சங்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. தொழிலாளர் சட்டங்களும் இயற்றப்பட்டன. இச்சட்டங்கள் உழைக்கும் வர்க்கத்திற்குப் பல நன்மைகளை கொடுத்தது.
3. ஜப்பானுக்குள் பொதுவுடைமை கருத்துக்கள் வராவண்ணம் அரசியலில் மக்களின் தேவைகளை அறிந்து அதற்கேற்ப ஆட்சியைக் கொண்டு சென்றார்.
4. ஜப்பானில் இருக்கும் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்த பல கடுமையான சட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் மூலம் கடுமையான குற்றங்களைப் புரிவோர்க்குப் புத்தாண்டு காலம் வரை கடுங்காலம் தண்டனை வழுங்கவும் சட்டங்கள் உருவாக்கப்பட்டன.

**வாகாத்சுகி அமைச்சரவை (1926 - 27)**

ஜனவரி 1926 ல் கதோ இறந்ததும், அவருக்குப் பதிலாக கொன்சைக்கைக் கட்சியின் தலைவரான வாகாத்சுகி தலைமை அமைச்சரானார். இவர் காலத்தில் தான் சீனச் சச்சரவு அதிகரித்தது. இதனால் படைத்துறைக்கும், அமைச்சரவைக்கும் சச்சரவுகள் ஏற்பட்டன. கதோ கையாண்ட ஆள்குறைப்பு முறையில் வேலை இழந்தவர்கள் உள்நாட்டுக் கலகத்தில் ஈடுபட்டனர். நிலநடுக்க சேத நிர்ணய அமைப்பு சட்டங்களுக்கும் எதிர்ப்புகள் வந்தன. 20 கோடியே 70 இலட்சம் யென் தொகையினை செலவு செய்ய அரசு திட்டமிட்டது. வைப்பகங்கள் மித்கூடிசு, மிச்சு குடும்பத்தாரின் கையில் இருந்தபடியால் அவர்கள் கடன்கொடுக்க மறுத்துவிட்டனர். மேலும் அவை உறுப்பினர்கள் எதிர்த்தக் காரணமாக இவர் பதவி துறந்தார்.

**தனகா அமைச்சரவை 1927 - 29**

வாகாத்சுகி என்பவருக்குப் பின் தனகா அமைச்சரவையை அமைத்தார். இவருடைய அமைச்சரவையில் பேரமைச்சரும், நாவாய்ப்படை அமைச்சரையும் தவிர ஏனையவர்கள் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள், தனகா ஜப்பானில் ஏற்பட்ட பொருளாதார சீர்கேட்டை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டார். சீனர்கள் மஞ்சூரியாவில் இருந்து ஜப்பானியரை அகற்றும் முயற்சியில் செயல்பட்ட இவ்வேளையில் ஜப்பான் படைகளை வடசீனாவுக்கும் மஞ்சூரியாவுக்கும் யாருடனும் ஆலோசிக்காமல் அனுப்பியதை எல்லோரும் கண்டிக்கவே இவர் பதவித் துறந்தார்.

**ஆமாகுச்சி அமைச்சரவை**

தனகா அமைச்சரவைக்குப்பின் ஆமாகுச்சி அமைச்சரானார். ஆனால் மக்களவையில் சையூ காய் கட்சி பெரும்பான்மையில் இருந்தது. இதனால் பாராளுமன்றத்தை கலைத்துவிட்டுப் புதிய தேர்தலை நடத்தினார். இதில் இவருடைய கட்சி வெற்றி பெற்றது. அவர் தனது கட்சியின் கோட்பாடுகளை சட்டத்திற்குட்பட்டு செயல்படுத்த முனைந்தார்.

**கோட்பாடுகள்:-**

1. ஊழல்களை ஆட்சியில் இருந்து ஒழித்தல்.
2. சீனாவுடன் பகைமையை மறந்து நட்புறவை கொள்ளுதல்.
3. பொருளாதார மந்தத்தால் ஏற்பட்ட நெருக்கடியை நிவிர்த்தியாக்குதல்.
4. வீணாக அதிக செலவு செய்யக்கூடிய படைகளைக் குறைப்பது.

இதனை நிறைவேற்ற வாணிகத்தடைச் சட்டங்கள் ஏற்படுத்தி உள்நாட்டு பொருளியலை உயர்த்தினர். பட்டு உருவாக்கத்திற்கு ஊக்கமளித்தன. அதனை அமெரிக்காவில் விற்கவும் ஏற்பாடு செய்தார். ஜப்பானியத் தங்கம் அயல்நாடு செல்ல தடை விதிக்கப்பட்டது. இறக்குமதியைவிட ஏற்றுமதியை பெருக்கினார். இச்சிறப்பு திட்டங்கள் உடனடி பலனை கொடுக்கவில்லை. காரணம் பொருளாதார மந்தம், பருவகால வறட்சி போன்றவைகளாகும். அரசு ஊழியர் ஊதியம் குறைக்கப்பட்டது. படையில் மாற்றம் ஏற்பட்டது. கல்வி சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. படையமைப்பில் மாற்றம் ஏற்பட்டது. திறமையானவர் என்றாலும் கலகம் ஏற்பட்டதால் பதவி துறந்தார்.

**வாகாத்சுமி அமைச்சரவை இரண்டாது முறை**

ஆமாகுச்சியின் இறப்பிற்கு பின் மின்சைதோக் கட்சிக்கு தலைவரான வாகாத்சுகி மீண்டும் தலைமை அமைச்சரானார். படை அமைச்சரான சிதேகாராவை எதிர்த்து ஜப்பானியர்கள் கலகங்களில் ஈடுபட்டனர். மஞ்சூரி கொள்கையினை எதிர்த்து புரட்சியில் ஈடுபட்டனர். அமைச்சரவை முடிவுக்கும் படைகளின் செயல்பாட்டிற்கும் இடையே மனஸ்தாபங்கள் ஏற்பட்டது. அரசு அதிகாரிகள் அவரோடு ஒத்துழைக்காமல் ஊழல்களில் ஈடுபட்டனர். இதனால் அமைதியற்ற சூழ்நிலையில் 1931 டிசம்பரில் பதவி துறந்தார். பின்னர் இனுகாய் அமைச்சரவை ஆட்சி செய்தது. இவர்களது ஆட்சியில் படை வளர்ச்சியின் காரணமாக, ஜப்பான் தென்கிழக்கு ஆசியாவிலும், பசிபிக் மகாகடல் தீவுகளிலும் தனது வலிமையை காட்டியது. சைதோ அமைச்சரவை 1932 முதல் 1934 வரையிலும், ஒகாதா அமைச்சரவை 1936 முதல் 1937 வரையிலும், கோனோபி அமைச்சரவை 1937 முதல் 39 வரையிலும் பின் 1940 முதல் 1941 வரையிலும் ஜப்பானை ஆட்சி செய்தனர். தளபதி தோசோ அமைச்சரவை 1941 முதல் 1944 வரை நடைப்பெற்றது. இவருடைய ஆட்சியின் போது தான் ஜப்பான் இரண்டாம் உலகப்போரில் கலந்துக் கொண்டு பெற்றிருந்த பெருமையை இழந்து சிறுமையடைந்தது.

**ஜப்பானும் மஞ்சூரிய நெருக்கடியும்**

முதல் உலகப் போருக்குப்பின் ஏற்பட்ட வெர்சேய்ஸ் உடன்படிக்கையும், பாரிஸ் மாநாடும், வாஷிங்டன் மாநாடும் இனி உலகில் போர் ஏற்படக் கூடாது என்ற எண்ணத்தில் பல அமைதி உடன்படிக்கைகளை செய்துக் கொண்டன. ஆனால் ரஷ்யா, சீனா, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகள் 1919 முதல் 1949 வரை எத்தனையோ மாறுதல்களை பெற்று புது வலிமையோடும், பொலிவோடும் விளங்கின. 1895 ஆம் ஆண்டு முதல் ஜப்பானுக்கும், மஞ்சூரியாவுக்கும் இடையே உள்ள உறவு முறைகள் ஜப்பானின் நலனுக்காகவே

இருந்தது. வாஷிங்டன் மாநாட்டில எல்லா நாடுகளும் காசில்லா நுழைவுக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டனர். சீனாவின் ஒற்றுமைக்கும், உள் நாட்டு அரசியல் வளர்ச்சிக்கும், தன்னுரிமை பாதுகாப்பிற்கும், நிரந்தர எல்லை பாதுகாப்பிற்கும் பாடுபட தீர்மானித்தனர். ஆயினும் ஜப்பானுக்கும், மஞ்சூரியாவுக்கும் உள்ள தொடர்பு நீடித்து இரண்டாம் உலகப்போருக்கு வழிவகுத்தது.

**மஞ்சூரியாவில் ஜப்பானின் ஆர்வம்**

1932 க்குப் பிறகு சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே ஏற்பட்டிருந்த உறவுமுறைகளை உற்று நோக்கினால் ஜப்பான், சீன நெற்களஞ்சியமான மஞ்சூரியாவை விட்டு வெளியேற முடியாத சூழ்நிலையில் இருந்திருக்கிறது. 1915 ல் ஜப்பானுக்கும் சீனாவுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தால் 39 ஆண்டுகள் வரை குவாண்டுங் பகுதியில் இருப்புப்பாதை உரிமையையும், மஞ்சூரியாவில் வேளாண்மை உரிமையையும் ஜப்பான் பெற்றது. ஆனால் வாஷிங்டன் மாநாட்டிற்குப் பிறகு இந்த குத்தகை உரிமைகளை வாஷிங்டன் மாநாட்டிற்குப் பிறகும் விட்டுக் கொடுக்க மறுத்துவிட்டது. ஜப்பானுக்கு அமெரிக்காவும், சீனாவும் சிறந்த சந்தைகளாக விளங்கிய போதிலும் மஞ்சூரியாவை போல் மூலப் பொருட்களை தருவதும், உணவுப் பொருட்களைத் தருவதுமான வேறு ஒன்றும் இல்லை. எனவே எப்படியும் மஞ்சூரியாவை தன்கீழ் வைத்துக் கொள்ள வேண்டும் என ஜப்பான் விரும்பியது. இதனால் ஜப்பானுக்கும், சீனாவுக்கும் இடையே போர் மூளும் சூழ்நிலைகளை ஏற்படுவதும் ஜப்பான் அதிகாரமனப்பான்மை மஞ்சூரியாவில் பெருகிக்கொண்டே போவதும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு வெறுப்பை கொடுத்தன. ஆயினும் ஜப்பானை மஞ்சூரியாவை விட்டு வெளியேற்ற இயலவில்லை. ஜப்பானின் வாணிப குடும்பங்களான சைபத்சு தங்களுக்கு தேவையான நிலக்கரி, இரும்பு , எஃகு ஆகிய மூலப் பொருட்களை மஞ்சூரியாவில் பெறுவதால் ஜப்பானை இங்கிருந்து வெறியேற மறுப்புக் கூறின. மேலும் தேவைப்பட்டால் படை வலிமையினை பயன்படுத்தியும் தங்கள் உரிமைகளை மஞ்சூரியாவில் காக்க வேண்டும் எனவும் இக்குடும்பங்கள் வற்புறுத்தின.

**மஞ்சூரியாவில் சீனாவில் ஆர்வம்**

மஞ்சூரியாவில் ஜப்பானின் ஆதிக்கத்தை ஜப்பான் எவ்வாறு வலிமைப்படுத்திக் கொண்டு இருக்கிறதோ அதைப் போன்று சீனாவும் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்ட விரும்பியது. இதற்காக இரும்புப்பாதை ஒன்றினை சீனாவிற்கும், மஞ்சூரியாவிற்கும் இடையே நிறுவி மஞ்சூரியாவின் வளங்களைப் பயன்படுத்தி தங்களை வளர்த்துக் கொள்ள விரும்பியது. மேலும் சீனா ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்றால் தென் மஞ்சூரியாவில் உள்ள ஜப்பானியர்களை வெளியேற்றியே ஆக வேண்டும் என சீனர்கள் தீர்மானித்தனர். இதனால் இருதரப்பினர்களுக்கு மோதல்களும், மஞ்சூரியாவில் சிக்கல்களும் ஏற்பட்டன.

1931 ல் சீன ஜப்பானியப் போட்டியின் காரணமாக மஞ்சூரியச் சர்ச்சை முழுமை பெற்றது. சீனர் காண்டுங் பகுதியில் பெருகிவரும் மக்கள் தொகையை மஞ்சூரியாவில் குடியேற்றவும், வடக்கில் இருந்து வரும் ஆபத்தை தடுக்க மஞ்சூரியாவில் பாதுகாப்பு வேலி அமைக்கவும் விரும்பியது. ஆனால் ஜப்பானியரோ எல்லா வகையிலும் மஞ்சூரியா தங்களுக்கே வேண்டும் என உரிமைக் கோரினர். 1905 ஆம் ஆண்டு முதல் மஞ்சூரியாவை ரஷ்யாவின் பிடியில் இருந்துக் காப்பாற்றி அங்கு தங்கள் நாட்டுப் பொருட்களை முதலீடு செய்து வேளாண்மையிலும், கனிமவளத்திலும், தொழில் வளத்திலும், அதனை முன்னேற்றம் செய்தவர்கள் தாங்கள்தாம் என ஜப்பானியர்கள் கருதினர். மேல்நாட்டவர்கள் மஞ்சூரியாவில் பொதுவுடைமை கொள்கைகள் பரவிடக்கூடாது என போற்றி காத்து வந்தனர். மேலும் மஞ்சூரிய தேசிய உணர்ச்சிக்கு மாறாக செயல்படும் ஜப்பானின் ஆதிக்கத்தையும் மேலைநாடுகள் வெறுத்து சீனாவுக்கு ஆதரவு கொடுத்தன. அதே வேளையில்

ஜப்பான் நாட்டில், மஞ்சூரியாவை வெள்ளையர்கள் பெற வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக ஜப்பானை மஞ்சூரியாவில் இருந்து அகற்ற மேலைநாடுகள் விரும்புகின்றன என்ற செய்தி பரவி வந்தது. இதனால் ஜப்பானுக்கு மஞ்சூரியாவின் மீதிருந்தப் பற்று வெறியாகமாறி தனது படைவலிமையைப் பயன்படுத்தவும் எண்ணியது.

1929 ஆம் ஆண்டு உலகம் எங்கும் பொருளாதார மந்தம் ஏற்பட்டது. தொலைகிழக்கு நாடுகளிடமும், ஆசிய நாடுகளிடமும் ஜப்பானிய பொருட்கள் மீது மோகம் ஏற்பட்டது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் கூட ஜப்பான் பொருட்களின் விற்பனை அதிகமானதால் ஜப்பானின் வளர்ச்சியின் மீது பொறாமைக் கொண்ட அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஜப்பானிய பொருட்களுக்கு தடை செய்தது மட்டும் அல்ல பிற நாடுகளையும் ஜப்பானிடம் வாணிக தொடர்பு கூடாது எனவும் வற்புறுத்தினர். இதனால் அமெரிக்கா மற்றும் பிரிட்டனோடு ஜப்பானுக்கு கடுங்கோபம ஏற்பட்டது. மஞ்சூரியாவை கைப்பற்றி தனது வலிமையை உலக நாடுகளுக்குக் காட்ட வேண்டும் என்ற தீர்மானம் ஜப்பானிடம் வளர்ந்துவிட்டது.

**ஜப்பான் மஞ்சூரியாவை கைப்பற்றுதல்**

1931 ஆம் ஆண்டு ஜப்பான் மஞ்சூரியாவைத் தாக்கி அதன் மீது படையெடுத்தது. ஆனால் இதற்கு எதிராக மேலை நாடுகளோ, அமெரிக்காவோ வந்து நிற்கவில்லை அவைகள் தங்கள் நாட்டின் பொருளாதார சிக்கல்களை நீக்கும் முயற்சியில் ஈடுபட்டதே ஆகும். சீனாவும் தனது உள்நாட்டுப் போரை சமாளிப்பதிலேயே கவனம் கொண்டிருந்தது. மஞ்சூரியாவில் வளர்ந்த தேசிய உணர்ச்சியின் காரணமாக, மஞ்சூரியர்கள் ஜப்பானியரை வெறுத்தனர். செப்டம்பர் 18,29, 1931ல் ஜப்பானியர் தென் மஞ்சூரியாவின் இருப்பு பாதைகளைக் குண்டு போட்டுத் தாக்கினர். பின்னர் தாங்கள் அச்செயலை செய்யவில்லை எனவும் சீனர்களே இதைச் செய்தனர் எனவும் தற்காப்பிற்காக நாங்கள் சுட்டோம் என்றும் கூறினர். மஞ்சூரியாவின் முக்கிய பகுதிகள் அனைத்தையும் ஜப்பானியர்கள் கைப்பற்றிக் கொண்டனர். ஜப்பானின் மஞ்சூரிய தாக்குதலால் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்பட்டன.

மஞ்சூரியாவில் நாணயமற்ற முறையில் தாக்குதல் நடத்திப் பல இடங்களை ஜப்பான் பிடித்துக் கொண்டது என்றும், ஜப்பானை மஞ்சூரியாவில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்றும், சீனா பன்னாட்டு கழகத்தினை கேட்டுக் கொண்டது. ஜப்பான் தங்களுக்கு நாடு பிடிக்கும் எண்ணம் இல்லை என்றும் வேண்டுமானால் சீனாவோடு பேசலாம் என்றும் கூறியது. சீனா ஜப்பானிய படைகள் மஞ்சூரியாவை விட்டு வெளியேறியப் பின்தான் பேச்சு வார்த்தை எனவும் மறுவாக்கு கொடுத்தது. ஆனால் அமெரிக்கா போன்ற மேலை நாடுகள் ஜப்பானின் தாக்குதல், மஞ்சூரிய மக்களின் தேசிய உணர்ச்சிக்கு எதிராக நடந்த நிகழ்ச்சி என எண்ணி இதை விசாசித்து நிரந்தரமான அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்று ‘உசாவல் ஆணை குழுவை நியமித்தது’ ஆனால் ஜப்பான் தன் செயல் நாடு பிடிக்கும் எண்ணத்திற்காக அல்ல. ஜப்பானியரின் பாதுகாப்பிற்காக நடந்த காவல் நடவடிக்கை என பதில் கூறியது. இதை பன்னாட்டு கழகம் மறுக்கவே ஜப்பானை பன்னாட்டு கழகத்திலிருந்து வெளியேறியது.

**இரண்டாம் சீன ஜப்பானியப் போர்**

ஜப்பான் இரண்டாம் உலகப்போரில் இறங்க காரணம் இரண்டாம் சீன- ஜப்பானியப் போர் ஆகும். ஜப்பான் மஞ்சூரியாவை கைப்பற்றியதும், இப்பகுதியில் தங்களின் வலிமையை நிலைபடுத்திக் கொண்டு வட சீனாவின் பல பகுதிகளை கைப்பற்றிச் சீனா முழுவதையும் விழுங்க ஜப்பான் எத்தனித்தது. இதுதான் சீன-ஜப்பானியப் போருக்கு காரணமாய் இருந்தது.

**1937 ம் ஆண்டு சீனாவின் நிலை**

1937 ஆம் ஆண்டு சீனாவின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. அரசியல் மற்றும் பொருளாதாரம் நலிந்து உள்நாட்டுப் போரினால் இருக்கின்ற அரசாங்கம் பலம் இல்லாதிருந்தது. கோமின்டேங் கட்சி சீனாவை ஆண்டது. இவர்களது ஆட்சி நாங்கிங் நகரை மையமாகக் கொண்டு சியாங்-கே-ஷேக் ஆண்டு வந்தார். சீனாவின் பெரும் பகுதி இவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. இந்த அரசு சீன ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டினையும் வலியுறுத்தி ஆட்சி செய்தது. இவர்களுக்கு மக்களின் பெரும்பான்மையான ஆதரவும் இருந்தது. இதே போன்று கேண்டன் நகரம் கோமின்டேங் கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களால் ஆளப்பட்டு வந்தது. அவர்களின் கூற்றுப்படி சியாங்-கே-ஷேக் டாக்டர் சன்-யாட் சென்னின் கொள்கையின் படி ஆட்சி செய்யவில்லை என மக்களிடம் எடுத்துரைத்தனர். இவர்களை அடுத்து பொதுவுடைமைக் கட்சியின் செல்வாக்கும் சீனாவில் காணப்பட்டது. நாள் செல்லச் செல்ல இக்கட்சி ஜப்பான் விதிக்கின்ற நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் வண்ணமாயும் பொதுஉடைமைக் கட்சி ஜப்பானியரை எதிர்க்கின்ற கட்சியாகவும் இருந்து வந்தது. ஆகவே சீன மக்கள் எண்ணங்களின் அடிப்படையில் பிரிந்தே காணப்பட்டனர். இச்சூழ்நிலையில் ஜப்பான் மஞ்சூரியாவை கைப்பற்றியது சீனாவில் ஆளும் அரசுக்குப் பலத்த எதிர்ப்பை கொடுத்தது. ஜப்பானை அமெரிக்கப் பொம்மை அரசு என விமர்சித்தனர்.

சீனாவில் வளர்ச்சி அடைந்த தொழிற்சாலைகள் இல்லை. சுதேச தொழிற்கூடங்கள் நலிந்து காணப்பட்டது. உணவுத் தேவையை மஞ்சூரியாவின் மூலம் சீனா சமாளித்தது. ஆனால் இப்பொழுது ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றியதால் பஞ்சம் உண்டாகக்கூடிய சூழ்நிலைகள் காணப்பட்டன. ஜப்பான் சீனாவிடம் வாணிக உரிமைகளைப் பெற்று வட சீனப் பகுதியில் தங்களின் உற்பத்தி பொருட்கள் கிடைக்கும் வண்ணம் செய்தது. மேலும் 1929-30 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உலக பொருளாதார மந்தம் சீனாவையும் ஆட்டிப்படைத்தது. சிறுதொழில்கள் யாவையும் மூடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. நாட்டின் தேவைக்கு வேண்டிய நிதியும் தட்டுப்பட்டு காணப்பட்டது. இதனால் பணத்தினை மிதமிஞ்சி அச்சிட்டு வெளியிட்டது. இப்படிப்பட்ட தவறு மேலும் சீனாவை பொருளாதார சிக்கலில் மாட்டச் செய்தது. மேலைநாடுகள் வைத்திருந்த பணயிருப்பைக் குறைத்துக் கொண்டன. எனவே சீனா மிகவும் ஏழ்மையான நிலைக்கு தள்ளப்பட்டன.

**சீன - ஜப்பானிய போருக்கான காரணங்கள்**

**1. ஜப்பானின் ஆக்கிரமிப்பு போக்கு**

ஜப்பான் மஞ்சூரியாவை கைப்பற்றியதோடு நிற்காமல், சீனாவையும் கைப்பற்ற எண்ணியது. இதற்கான படைகளை வடசீனப் பகுதியில் குவித்தது. ஆனால் சீனர்கள் தேசிய உணர்வு பெற்று ஜப்பானுக்கு எதிராக போராட ஒன்றுபட்டனர். இதன் அடையாளமாக ஜப்பானியப் பொருட்களை புறக்கணித்தனர் என்றாலும் ஜப்பான் தனது ஆதிக்க எண்ணத்தை விடவில்லை எனவே போர் சூழல் மூண்டது.

**2. சீன அரசியல் கட்சிகளின் இணைப்பு**

சீனாவில் கோமின்டேங் மற்றும் பொதுவுடைமை ஆகிய கட்சிகள் செல்வாக்குப் பெற்றுத் தனித்தனியாக அரசு அமைத்துப் படைகளை உருவாக்கி ஆட்சி செய்தனர். அவர்களுக்குள் தீராத பகை உணர்வு காணப்பட்டது என்றாலும், தேசிய உணர்வினைப் பெற்றபோது எதிரியாக ஜப்பானை நினைத்து படைகளை இணைத்து எல்லா மக்களும் கட்சிகளையும் இணைத்து ஓர் அணியில் ஜப்பானுக்கு எதிராக நின்று ஜப்பானுக்கு பாடம் கற்றுக்கொடுக்க வேண்டும் என வைராக்கியம் கொண்டு ஜப்பானிய எதிர்ப்பினை படைகளைப் பயன்படுத்தி காட்ட எண்ணினர்.

### 3. சீனாவின் மோசமான பொருளாதார நிலைமை

1930 முதல் சீனாவின் பொருளாதாரம் சீர்குலைய ஆரம்பித்தது. அப்பொருளாதார சீர்குலைவுக்கு காரணம் ஜப்பானின் போக்குவரத்துத் தடையால்தான் என நம்பினர். ஜப்பான் சீனாவில் தொடர்ந்து தலையிட்டு கொண்டு இருந்ததால் சீனா முன்னேற்றப் பாதையில் செல்ல வாய்ப்பில்லை என்பதை பொருளாதார வல்லுநர்கள் கண்டிப்புடன் எடுத்துரைத்தனர். எனவே இச்சூழ்நிலையை மாற்றி சீனாவின் முன்னேற்றத்திற்கான ஒரே வழி ஜப்பானை முறியடிப்பதே என்று போருக்கான தருணத்தினை எதிர்நோக்கி இருந்தனர்.

### போர் ஏற்பட காரணமான சூழ்நிலைகள்

மஞ்சூரியின் நெருக்கடிக்குப் பின் வடசீனாவில் தன்னை நிலைப்படுத்திக் கொள்ள ஜப்பான் முயன்றது. 1933 ல் அது ஹெயோலைக் கைப்பற்றியது. டியென்சிங் இருப்பு பாதையை உருவாக்கி வடபுறம் இருந்து சீனாவைக் கட்டுப்படுத்த முயன்றது. அமவ்ஃடிஜி கோட்பாட்டின் மூலம் கிழக்கு ஆசியாவில் அமைதியை நிலைநாட்டும் முயற்சியில் சீனா ஜப்பானுடன் மாத்திரமே ஒத்துழைக்க வேண்டுமென ஜப்பான் அறிவித்தது. ஆனால் அமெரிக்காவிற்கு சந்தேகத்தை உருவாக்கும் வண்ணம் ஜப்பான் தனது ஆக்கிரமிப்புக் கொள்கையில் இருந்து பின்வாங்காமல் இருந்துக் கொண்டு உலக அமைதியை பற்றி பேசுவது கவனத்திற்குரியதாக இருந்தது. ஆனால் இந்த சூழ்நிலையில் ஜப்பானுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வந்த செய்தித் தொடர்பாளர்கள் 1935 ஆம் அண்டு கொலைச் செய்யபட்டார்கள். இச்சூழ்நிலையை சாதகமாக்கிக் கொண்டு சீனாவை ஒப்பந்தம் செய்து கொள்ள வற்புறுத்தியது. அதன் காரணமாக ஹோ-உமிசு உடன்பாடு ஏற்பட்டது.

### ஹோ-உமிசு உடன்பாடு

1935 ஆம் ஆண்டு ஜப்பானிய சார்பு செய்தித்தாள் நிரூபர்கள் இருவர் கொல்லப்பட்டனர். இதனால் ஜப்பான், சீனாவை ஹோ-உமிசு உடன்பாட்டில் கையெழுத்திடச் செய்தது. அதன் மூலம் ஜப்பானுக்கு எதிராக செயல்படும் அதிகாரிகளை வேலை நீக்கம் செய்ய சீனா ஒப்புக் கொண்டது. மேலும் கோமின்டேங் செயல்களை தடுக்கவும் முயற்சி மேற்கொள்ளப்படும் என சீனா அறிவித்தது.

### கிழக்கு ஹோப்பி சுயாட்சி சபை

வட சீனாவில் சுதந்திர ஆட்சியை நிறுவ முயன்ற ஜப்பான், வட சீனர்கள் சுதந்திரமாக வாழ விரும்பினர். என்ற வதந்தியைப் பரப்பியது. ஆனால் இது ஜப்பானின் ஆக்கிரமிப்பு கொள்கைக்கு ஒரு போர்வையே, சகார் மற்றும் ஹோப்பியை நிர்வகிக்க கிழக்கு ஹோப்பி சுயாட்சி சபையை ஜப்பான் உருவாக்கியது. ஜப்பான் சீனாவை பலவந்தப்படுத்தி அச்சபையை அங்கீகரிக்க வைத்தது. ஜப்பானிய படைகள் அதற்கடுத்து தளர்த்தப்பட்டு சீனப் பெருஞ்சுவர் வரைக்கும் ஜப்பானியப் படைகளை அகற்றிக் கொண்டது. சீன அரசாங்கம் இங்கு சட்டம் ஒழுங்கினை காவல் நடவடிக்கை மூலம் பார்த்துக் கொள்ள வேண்டும் என ஜப்பான் கூறியது. 1935 ல் ஜப்பான் சீனாவோடு மற்றும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டது. அதன்படி ஜப்பானுக்கு எதிரான அதிகாரிகளை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றும், ஜப்பானுக்கு எதிராக கருத்துக்கள் தோன்றக் கூடாது என்றும், சீனாவை கட்டுப்படுத்த முயன்றது. இது சீன மக்களுக்கும், அரசுக்கும் ஜப்பானின் மீது அதிக வெறுப்பை ஏற்படுத்தியது.

### சீனாவின் மனப்பான்மை

ஜப்பான் மஞ்சூரியாவில் தனியாக மஞ்சூகோ அரசை உருவாக்கியது. இது சீனாவுக்கு திருப்தித் தரவில்லை. சீனா தன்னுடைய செல்வாக்கினை ஹோப்பி பகுதியிலும், வட சீனப் பகுதியிலும் இழப்பதை

சீனா விரும்பவிலலை. இவ்வாறு விருப்பம் இல்லாத காரியங்களில் சீனாவை ஜப்பான் கட்டாயப்படுத்தியதால் சீனர்கள் ஜப்பானை எதிர்க்கும் எண்ணத்தில் இருந்தனர். இதற்காக ஜப்பானியப் பொருட்களையும், ஜப்பான் மக்களையும் புறக்கணிக்க ஆரம்பித்தனர். ஒன்றுபட்டு ஜப்பானை எதிர்க்க சீனாவின் இருதுருவங்களான பொதுவுடைமை கட்சியினரும், கோமின்டேங் கட்சியினரும் ஒன்றுபட்டனர்.

**ஜப்பானின் புதிய கட்டளை**

1936 ல் ஆதிக்க எண்ணம் கொண்ட ஜப்பான் சீனாவை கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய கட்டளைகளை தெரிவித்தது. இதன்படி ஜப்பான் எதிர்ப்பு இயக்கங்கள் சீனாவில் ஒழிக்க வேண்டும். புதியதாக உருவாக்கப்பட்ட மஞ்சூக்கோ அரசு வளர ஜப்பானும் சீனாவும் சேர்ந்து உதவி செய்ய வேண்டும். சீனா, மஞ்சூகோ, ஜப்பான் , ஆகியவையிடம் பொருளாதார ஒற்றுமை மனப்பான்மை வேண்டும். சீனாவில் உள்ள பொதுவுடைமை கொள்கையை சீனாவில் இருந்து துரத்த வேண்டும். இவ்வகையான புதிய கட்டளைகளைச் சீனா ஏற்க மறுத்தது. மேலும் பொதுவுடைமை கொள்கையை அழிப்பதற்கு மாறாக, அதனோடு இணைந்து ஜப்பானை எதிர்க்கவும் முடிவு செய்தது.

**சீன ஜப்பானின் பேச்சு வார்த்தை அறியு**

சீன ஜப்பானிய சிக்கலை தீர்க்க ஜப்பானியப் பிரதமர் ஹிரோட்டா ஒரு மூன்று அம்ச திட்டத்தை முன் வைத்தார். அதே நேரத்தில் ஜப்பான் சுய்யன் மீது படையெடுத்தது ஜப்பானின் இது போன்ற ஏகாதிபத்திய செயலால் பேச்சு வார்த்தைக்கு முட்டுக் கட்டை ஏற்பட்டது. சுயன் நிகழ்ச்சியால் சீனத்தலைவர் சியாங்கே ஷேக், பொதுவுடைமை வாரிசுகளுடன் இணைந்து ஜப்பானை எதிர்க்க தயாரானார்.

**சீன - ஜப்பானியப் போர்**

1937 ல் சீன ஜப்பானிய உறவு மேலும் மோசமடைந்தது. சீனாவில் ஜப்பானுக்கெதிரான இயக்கங்கள் தீவிரமடைந்தன. இதன் ஆரம்பமாக சீனாவில் உள்ள ஜப்பானியச் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இச்சூழ்நிலையில் தீவிர ஏகாதிபத்திய எண்ணங்கள் உடைய இளவரசர் கொனேபி ஜப்பானியப் பிரதமாராகவும், ஹீரோட்டா வெளியுறவு அமைச்சராகவும் பதவி ஏற்றனர். 1937 ஜூலை ஏழாம் நாளன்று நடந்த நிகழ்ச்சிகள் எரியும் தீயில் எண்ணையிட்டன. பீகிங்கிற்கு தென் மேற்கில் உள்ள லோளகவச்சியாவோ அல்லது மார்கோபோலோ பாலம் என்ற இடத்தில் ஜூலை மாதம் ஏழாம் நாள் இரவு சண்டை ஆரம்பித்தது. இச்சண்டைக்கு இருநாடுகளும் பெரும் படைகளை வரவழைத்து தாக்குதல்களை நடத்தின. சீனாவில் எல்லாப் பகுதிகளுக்கும் போர் பரவியது. பல போர் முனைகளில் முன்னேறிய ஜப்பான் ஹோப்பி ஹாங்கௌகாண்டன், ஆகிய நகரங்களை கைப்பற்றியது. வீரத்துடன் சீனர்கள் போரிட்டாலும் ஜப்பானியர்களுக்கே வெற்றிமேல் வெற்றி வந்துக் கொண்டு இருந்தது. என்றாலும் சீனர்கள் ஜப்பானை சீனாவிலிருந்து விரட்டும்வரை போராட்டத்தை நிறுத்துவதில்லை என உறுதி பூண்டு தோல்வியை வெற்றியாக்க முயன்றனர். இதனால் போரில் ஜப்பான் வெற்றி பெற்றாலும், கைப்பற்றிய நகரங்களையும் முகாம்களையும் காப்பது கடினமாய் இருந்தது. இறுதி வெற்றிக்காண முடியாத ஜப்பான் ஐக்கிய சீனாவின் பதவியை சியாங்- கே-ஷேக்கிற்குத் தரப்படும் என்று கூறி அவரை பணியக் கூறினர். இதை அவர் மறுத்துவிட்டார். அதிர்ஷ்டவசமாக 1938 ல் காண்டனையும், ஹன்கேகாவையும் சீனா மீண்டும் தன் வசமே பெற்றது. இச்சூழ்நிலையில் 1939 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் ஆரம்பமானது. அப்போரில் சீனா நேச நாடுகள் பக்கமும், ஜப்பான் அச்சு நாடுகள் பக்கமும் இணைந்து போரிட்டன. இதனால் சீன-ஜப்பானிய போர் இரண்டாம் உலகப்போருடன் கலந்து அதன் முக்கியத்துவத்தை இழந்தது.

### போரின் விளைவுகள்

இரண்டாம் சீன ஜப்பானியப் போர் முடிவடையாமலேயே இரண்டாம் உலகப் போரில் கலந்தது. எனவே இதன் விளைவுகளை குறிப்பிடும் படியாகயில்லை என்றாலும் போரின் மூலம் சியாங்கோஷேக்கிற்கு ஆதரவு குறைய ஆரம்பித்தது. பொதுவுடைமை கட்சிக்கு ஆதரவு பெருகியது. ஷேக்கின் திறமையில் மக்கள் நம்பிக்கை இழந்தனர். இதனால் இச்சீன- ஜப்பானியப் போர் சீன வரலாற்றினை மாற்றியது.

### இரண்டாம் உலகப்போரில் தூரகிழக்கு நாடுகளின் பங்கு

இரண்டாம் உலகப்போர் 1939 ஆம் ஆண்டும் ஐரோப்பா கண்டத்தில் உருவாகி உலகம் முழுவதையும் கலக்கிய பயங்கரமானப் போர் இப்போரினைப் பற்றிக் கூறும் போது மனித சமுதாயத்திற்கு இனி இப்படி போர் தேவையில்லை என கூறாதவர்கள் இல்லை, இரண்டாம் உலகப்போரினால் இவ்வுலகம் பட்ட இன்னல்களுக்கு அளவிடவில்லை. உலகில் ஒரு முனையில் உள்ள எந்த கிராமத்தானும் போரினால் அபாயம் தன்னை தாக்கி விடுமோ என்று பயந்து இரவில் தன் வீட்டில் ஒளியை உண்டாக்காதவாறு பார்த்து கொண்டதாக கதைகள் பல தெரிவிக்கின்றன. இரண்டாம் உலகப்போரினை இறைவனின் கோபாக்கினை காலம் என ஒரு குறிப்பிட்ட இன மக்கள் இறைவனிடம் பாவ அறிக்கைகள் செய்ததாக சமய நூல்கள் சில கூறுகின்றன. இரண்டாம் உலகப்போர் ஆதிக்கப் போட்டியின் விளைவாக எழுந்த போர் இரண்டாம் உலகப்போர் படைகலன் பெருக்கத்தால் எழுந்த போர். இரண்டாம் உலகப்போர் உருவாக்கிய ஆயுதங்களின் வலிமையை எடுத்துரைத்தப் போது போர் இரண்டாம், உலகப்போர் ஜனநாயகத்திற்கும் ஏதேச்ச அரசுகளுக்கும் இடையே எழுந்த போர், இரண்டாம் உலகப் போர் உலக வல்லரசு நாடுகளின் வல்லமைப் போர் என்று வரலாற்று அறிஞர்கள் அடுக்கிக் கொண்டு போகின்றனர். இரண்டாம் சீன ஜப்பானிய போர், ஜப்பானின் ஆதிக்கத்தின் விளைவாக எழுந்தது. இதன் மூலமாக இராணுவத்தில் ஜப்பானின் ஏதேச்சதிகார நிலைமையை உலகரியச் செய்தது. பாரிஸ் கொள்கையை ஜப்பானும் பின்பற்றியதால் தான் வலுக்கட்டாயமாக பிறநாடுகளைக் கைப்பற்றச் செய்தது. ஜப்பானின் இராணுவ நடவடிக்கையின் நோக்கம் ஆசியா ஆசியனுக்கே என்பதாகும். இதனை செயல்படுத்த ஜப்பான் "புதிய கட்டளை" என்ற கொள்கையினையும் கிழக்கு ஆசியா கூட்டு செழிப்பு இயக்கம் என்ற இயக்கத்தினையும் ஏற்படுத்தி, தூரகிழக்கு நாடுகளில் ஜப்பான் சிறந்த தலைமையை வகுப்பதாக காட்டிக் கொண்டு இவ்வித காரியங்களைச் செய்தும், அவற்றினை வலுகட்டாயமாக திணித்தும் வந்தது. மேலும் இப்பகுதியில் ஐரோப்பியர்களையும், மேலைநாட்டவர்களையும் அகற்றி தன்னுடைய ஆதிக்கத்தில் செயல்பட வேண்டும் என்பது ஜப்பானின் முதன்மையான நோக்கமாயிருந்தது. ஆனால் சீனா ஜப்பானுக்கு எதிராக செயல்பட்டது. ஜப்பானை ஒழிக்க பரம்பரை எதிரிகளான கோமின்டேங் கட்சியினரும், பொதுவுடைமை கட்சியினரும் ஒன்றிணைந்தனர். சீனர்கள் தங்களின் ஒருமைபாட்டிற்காக தங்கள் உயிரையும் கொடுக்க தயாரானார்கள். ஜப்பான், மஞ்சூரியா, சீனா ஆகிய மூன்று நாடுகளிலும். கலாச்சார பண்பாடு வரையரையில் இணைந்து செயல்பட வேண்டும் என்று ஜப்பான் தனது புதிய திட்டத்தில் கூறியது. என்றாலும் சீனா ஜப்பானை நம்புவதாக இல்லை மாறாக ஜப்பானை எதிர்க்க போரினை எதிர்நோக்கியிருந்தது. அதனால் தான் 1937 ல் சீனா – ஜப்பானிய போர் இரண்டாவதாக ஏற்பட்டு இதன் போக்கு இரண்டாம் உலகப் போருக்கு வழிவகுத்தது. ஆக்கிரமிப்பு அடிப்படையில் செயல்பட்ட ஜப்பானுக்கு மிகவும் பரிதாபப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டது.

### இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானின் கணிப்பு

இரண்டாம் உலகப்போர் ஆரம்பிக்கும் வேளையில் உள்நாடுகளைப் பற்றியக் கருத்து கணிப்பு

ஜப்பானுக்கு ஆதரவாக இருந்தது. அமெரிக்கா மட்டுமே ஜப்பானை காட்டிலும் வலிமையில் மேலோங்கி யிருந்தது. இதனால் ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, டென்மார்க் போன்ற நாடுகளின் கூட்டினை ஏற்படுத்தினால் ஜப்பானுக்கு விரோதமாக எந்த நாடுகளும் செயல்படாது. ஜப்பான் தூரக்கிழக்கு ஆசியாவில் தன்னுடைய மேலாண்மையை செயல்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது என்று நம்பியது. இதன் மூலமாக முழுவதுமான சீனாவை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த கொரியா, மஞ்சூரியா, சீனா ஆகிய நாடுகளை தங்கள் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டு, ஜப்பானின் புதிய பொருளாதார திட்டங்களைத் தீட்டி தன் நிலைமையை உயர்த்திக் கொள்ள முடியும் என்றும், மேலும் அமெரிக்கா இங்கிலாந்து போன்ற நாடுகளை நம்பி இருக்க வேண்டியதில்லை என்றும் உலக அளவில் எல்லா காரியங்களிலும் ஜப்பான் உயர்ந்து நிற்க முடியும் என்றும் கருத்து கணித்த ஜப்பான் போரினை சாதகமாக பயன்படுத்த எண்ணி இருந்தது.

**ஜப்பானை போருக்கு இட்டு சென்ற சூழ்நிலை**

இரண்டாம் உலகப்போருக்கு முன்பே, அமெரிக்கா, ருஸ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் இராஜ்ஜிய உறவை ஜப்பான் முறித்துக் கொண்டது. எனவே தனிமையாயிருப்பதாக உணர்ந்த ஜப்பான் 1936 நவம்பரில் ஜெர்மனியுடன் கம்யூனிச எதிர்ப்பு ஒப்பந்தம் செய்துக் கொண்டது. இத்தாலியுடன் அந்தக் கையோடு ஒப்பந்தத்தை ஜப்பான் செய்து கொண்டது. 1922ல் கையெழுத்தான வாஷிங்டன் கடற்படை ஒப்பந்தத்தை இனி தான் கடைபிடிக்க போவதில்லை என 1937ல் ஜப்பான் அறிவித்தது அதே ஆண்டு நவம்பரில் கூடிய பன்னாட்டுக் கழகம் ஜப்பானின் சீன படையெடுப்பு, உடன்படிக்கையை மீறிய செயல் என கண்டித்தது. தகராறு தனக்கும் சீனாவுக்குமே, இதில் பன்னாட்டுக் கழகத்திற்கு வேலையில்லை எனக் கூறிய ஜப்பான், பன்னாட்டுக் கழகத்தில் இருந்து வெளியேறியது. எனவே அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ருஷ்யா உட்பட பல நாடுகள் ஜப்பானை எதிர்க்க முனைந்தன. இவ்வாறு 1939 ஆம் ஆண்டுக்கு முன்பே போர் சூழல் உருவாகி விட்டது.

**ஜப்பான் - இந்தோசீனா**

ஜப்பான் இந்தோ சீனாவிடம் முக்கியமான சலுகையினை பெற்றிருந்தது. அதன்படி ஜப்பானுடைய இராணுவ படைகளைஅங்கே நிறுத்தி வைக்கலாம். இந்தோசீனா, பிரெஞ்சுக் காலனி என்றாலும் ஜப்பானின் செல்வாக்கினை பெற்றிருந்தது. சீனாவுக்கு எதிராக விமான தாக்குதல் நடத்தாததணித்தபோது இந்தோ – சீனா, ஜப்பானுக்கு எதிராக செயல்படவில்லை. பிரான்ஸ் ஜெர்மனியோடு போரிட்ட படியால் ஆசிய பகுதியில் கவனம் செலத்தவில்லை. ஆனால் நேச நாடுகள் ருஸ்யா வழியாக ஜப்பானிய இராணுவத்தளங்களை தாக்கிய வேளை இந்தோ – சீனா நேச நாடுகளுக்கு ஆதரவாக செயல்பட்டது.

**ஜப்பான் - இந்தோனேசியா**

இந்தோசீனா ஜப்பானிய ஆசிய செழுமை ஒருமைபாட்டில் பங்குகொண்டுள்ள நாடுகளில் ஒன்று டச்சு அரசாங்கம் இதனை ஆண்டு வந்தது. இந்த பகுதி ஜப்பானுக்கு முக்கியம் வாய்ந்த பகுதியாகும். பொருளாதார மற்றும் வாணிக ரீதியாக இங்கு ஜப்பான் செல்வாக்கு பெற்றிருந்தது. முக்கிய ஆதாரங்களான பெட்ரோலியம், ரப்பர், தகரம் மற்றும் பிற கனிமப் பொருட்கள் ஏராளமாக கிடைப்பதால், ஜப்பான் இங்கு தனிக்கவனம் செலுத்தி யிருந்தது. மஞ்சூரியா, உள்மங்கோலியா, சீனா இந்தோனேஷியா ஆகிய நாடுகள் தூரக்கிழக்கு ஆசிய நாடுகளில் தேவைகளை பொருளாதாரத்தில் பெற்றுள்ள பகுதிகளாக ஜப்பான் அறிவித்து. அங்கு தனது பொருளாதார மற்றும் வாணிக நடவடிக்கைகளை வரிசைப்படுத்தியது.

**போரில் ஜப்பான் நுழைவு**

அமெரிக்கா, சீனாவுக்கு பொருளாதார உதவி அளிப்பதை எதிர்த்த ஜப்பான், 1939 ஆம் ஆண்டு ஜப்பானிய–அமெரிக்க வாணிக உரிமையை ரத்து செய்தது. ஜனவரி 1941ல் சீனா மற்றும் இந்தோசீனாவில் இருந்து ஜப்பானிய துருப்புகள் வெளியேற வேண்டும் என அமெரிக்கா கேட்டுக்கொண்டது. ஆனால் அமெரிக்கா, இந்தோசீனாவில் இருந்து வெளியேறுவதுடன் ஜப்பானிய பிரதமரை அமெரிக்க அதிபர் சந்திக்கவேண்டும் என ஜப்பான் வலியுறுத்தியது. இவ்வாறு பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே போர் பிரகடனம் செய்யுமாறு ஜப்பானிய படைகள் ஜப்பானை வற்புறுத்தின. அதை ஏற்ற பேரரசர் 1941 டிசம்பர் முதல் நாள் அன்று போர் பிரகடனத்தை ஜப்பான் அறிவித்தார்.

**பேர்ல் துறைமுக நிகழ்ச்சி**

ஹவாய் தீவில் உள்ள பிரதான அமெரிக்கக் கடற்படை தளமான பேர்ல் துறைமுகத்தின் மீது 1941 டிசம்பர் ஏழாம் நாள், அதிகாலையில் 150 ஜப்பானிய போர் விமானங்கள் குண்டு மாரி பொழிந்தன. இந்த திடீர் தாக்குதலில் அமெரிக்கக் கடல் மற்றும் விமான தளவாடங்கள் 90% அழிந்து போயின. ஜப்பானின் அத் துணிகரச் செயல் அமெரிக்காவை உடனே போரில் ஈடுபடுத்தியது. 1941 டிசம்பர் எட்டாம் நாளன்று அமெரிக்காவும் பிரிட்டனும் ஜப்பான் மீது போர் தொடுத்தன.

**போரில் ஜப்பான்**

இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் இறங்கியது நேச நாடுகள் எதிர்பார்க்காத ஒன்று ஜப்பான் தனது எதிர்நாடுகளிடம் இருக்கும் முக்கிய ஆயுத தளங்களை அழித்தும், எதிர்பாராது இருக்கும் வேளையில் சிறிய நாடுகளை கைப்பற்றியதும் பெரிய நாடுகளை வியக்கச் செய்தது. ஆரம்ப காலப்போர் அனைத்தும் ஜப்பானுக்கு அதிக வெற்றியை பெற்றுக் கொடுத்தது. இதனால் ஹாங்காங், சிங்கப்பூர், பர்மா, தாய்லாந்து, மணிலா, ஆகிய இடங்களையும் பிலிப்பைன்ஸ் போன்ற தீவுகளையும் ஜப்பான் மிக எளிதாக கைப்பற்றியது. விரைவில் ஆஸ்திரேலியாவை அதிர்ச்சிக்குள்ளாக்கிய ஜப்பான், சீனாவுக்குள் புகுந்ததுடன் இந்தியாவிற்குள்ளும் நுழையப் பார்த்தது. ஆசியா, ஆசியனுக்கே என்று ஐரோப்பியர்களை விரட்டி அடித்து, காலனி நாடுகளுக்கு விடுதலை கொடுத்து, தங்களின் மேல் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு ஜப்பான் போரை எதிர் நோக்கிச் சென்றது.

**ஜப்பானின் வீழ்ச்சி**

1942 ஆம் ஆண்டு கோடை காலத்தில் ஜப்பானின் வெற்றி அலை திசை மாறியது. மே 1942ல் நடைபெற்ற பவழக் கடற்போரிலும் ஜூன் 1942ல் நடைபெற்ற மிட்வே போரிலும் அமெரிக்காவிடம் ஜப்பான் தோல்வி கண்டது. மார்ச் 1942ல் பிஸ்மார்க் போரிலும் தோல்வி கண்ட ஜப்பான் ஹெண்டர்ஸன் விமான தளத்தையும் அமெரிக்காவிடம் இழந்தது. பின்னர் நீர்ப்பரப்பில் நடந்த போரிலும் ஜப்பான் தோல்வியை சுவைத்தது. இவற்றிற்குப் பின்னர் சமாதான ஏற்பாடுகளைச் செய்யுமாறு பிரதமர் பகுதியை பேரரசர் ஹீரோஃகிதா வற்புறுத்தினர். அதே சமயத்தில் நிபந்தனையின்றி ஜப்பான் சரணடைய வேண்டும் என்ற பாட்ஸ்டாம் பிரகடனத்தை நேச நாடுகள் வெளியிட்டன.

**ஜப்பான் சரணடைதல்**

பாட்ஸ்டாம் பிரகடன் எச்சரிக்கை தனக்கு வரவில்லை எனவே அதைப் பரிசீலிக்கும் பிரச்சனையே இல்லை என்றது ஜப்பான். எனவே ஜப்பானை விரைவில் சரணடையச் செய்ய அதன்மீது அணு ஆயுதத்தைப்

பிரயோகிப்பது என அமெரிக்கா முடிவு செய்தது. அதன்படி முதல் அணுகுண்டு 1945 ஆகஸ்டு 6 ஆம் நாளன்று ஜப்பானிய நகரமான ஹீரோயீஷிமா மீதும், இரண்டாவது அணுகுண்டு ஆகஸ்ட் 9 ஆம் நாளன்று நாகசாகீ மீதும் போடப்பட்டன. அடுத்த நாளே போஸ்டாம் பிரகடனத்தை ஒப்புக் கொள்வதாக ஜப்பான் அறிவித்தது. காரணம் 2,80,000 மனிதர்கள் கண்மூடி விழிக்கும் முன்பே மரணத்தை ச்ந்தித்தார்கள். ஜப்பானிய சொர்க்க நகரங்கள் பொலிவிழந்து அழிந்து விட்டன. இதற்குமூன்பு உலக வரலாற்றிலே இந்த அளவிற்கு சேதம் வந்ததில்லை இதனால் ஏற்பட்ட விளைவினை கட்டுப்படுத்த முடியாவண்ணம் ஜப்பான் திணறியது தான். ஆகஸ்ட் 14 ஆம் நாளன்று நிபந்தனையின்றி சரணடைய அது ஒப்புக் கொண்டது. டோக்கியோ வளைகுடாவில் அமெரிக்கக் கப்பல் மிசௌரியில் 1945 செப்டம்பர் இரண்டாம் நாளன்று சரணாகதிப் பத்திரத்தில் ஜப்பான் கையெழுத்திட்டது.

**ஜப்பான் போரில் தோற்றதுக்கான காரணம்**

முதல் உலகப்போரில் வெற்றிப் பெற்ற ஜப்பான் இரண்டாம் உலகப்போரில் தோற்றது ஏன்?

**1. ஜப்பானிய அரசியலில் இராணுவத்தின் ஈடுபாடு**

ஜப்பானிய அரசியல் விவகாரங்களில் இராணுவம் அதிக அக்கறை காட்டியதுடன் அதில் ஈடுபடவும் செய்தது. பேராசையும் தன் நாட்டையும் மதிமயங்கச் செய்தது. இராணுவம் தன் எண்ணத்தை நிறைவேற்றியது.

**2. தந்திரமற்ற ஜப்பானிய போர் முறை**

பழைய போர் முறையையே இரண்டாம் உலகப்போரிலும் ஜப்பான் கடை பிடித்தது. புதிய தந்திர முறைகளைக் கற்கத் தவறியதுடன் எதிரிகள் அம்முறையைக் கற்றுள்ளனர் என்பதையும் அது அறியத் தவறியது.

**3. முன்னேற்பாடின்மை**

ஜப்பானியத் தலைவர்களுக்கு வருவதை முன் கூட்டி அறியும் விவேகம் இல்லை. போர் நெடுநாள் நீடிக்காது என்று நினைத்து முன்னேற்பாடுகளைச் செய்ய அவர்கள் தவறி விட்டனர்.

**4. மித மிஞ்சிய நம்பிக்கை**

தன் போரிடும் திறமையில் மூப்பான அளவுக்கதிகமான நம்பிக்கை வைத்திருந்தது. அதே சமயம் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் திறமையையும் அது குறைவாக மதிப்பிட்டது.

**5. மேலை நாடுகளின் விஞ்ஞான முன்னேற்றம்**

விஞ்ஞான முன்னேற்றத்தில் அச்சு நாடுகளை விட நேச நாடுகள் வளர்ந்திருந்தன. தொழில் வளர்ச்சியும், விஞ்ஞான மயமாக்கப்பட்ட இராணுவ தளவாடங்களும் நேச நாடுகளிற்கு வெற்றியைத் தேடித் தந்தன. இவை தீவிர ஜப்பான் போர் அங்கங்களிடையே சரியான ஒருங்கிணைப்பு இல்லை, தகவல் தொடர்பில் தோல்வி ஜப்பானுக்கு தோல்வியைத் தந்தது.

**இரண்டாம் உலகப்போரின் விளைவுகள்**

1. போர்த்தீயின் நாக்குகள் ஜப்பான் கனவுகளையும் உயர் நோக்கங்களையும் பொசுக்கி விட்டன.
2. நான்கு முக்கிய தீவுகளில் சில சிறு தீவுகளைத் தவிர மற்றவை ஜப்பானிடமிருந்து பறிக்கப்பட்டன.

கொரியா, மஞ்சூரியா, பார்மோசா, பெஸ்கடோத் தீவுகள் பசிபிக் தீவுகள் ஆகியவை ஜப்பானிடமிருந்து மீட்கப்பட்டன.

3. பசிபிக் தீவுகள் அமெரிக்காவிடமும், குரைல், தெற்கு சகாரின் ஆகியவை ருஷ்யாவிடமும் விடப்பட்டன.

4. இவற்றின் மூலம் ஜப்பானிய எல்லைகள் குறைக்கப்பட்டு 1894 க்கு முன்பிருந்த அளவுக்கு ஜப்பானிய பேரரசு சுருக்கப்பட்டது.

5. பல ஜப்பானிய நகரங்களும், தொழிற்கேந்திரங்களும் குண்டு வீச்சுக்கு இலக்காகி தரைமட்டமாயின. நாற்பது இலட்சம் மக்கள் உயிரிழந்தனர்.

6. ஜப்பானின் சரணாகதி அதற்கு இழிவு, பொருளியல் அழிவு, தனிமை, பேரரசுக் சுருக்கம் ஆகியவற்றை உருவாக்கியதுடன் அயல்நாட்டுப் படைகள் ஜப்பானில் தங்கவும் வழிச் செய்தது.

சுருக்கமாக சூரிய உதய நாடு சில காலம் கருமுகில்களால் திரையிட்டு மறைபட்டது எனலாம். அதிக எதிர் பார்ப்புகளால் இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் நுழைந்தது. ஆனால் போரில் அதன் அரசியல் மற்றும் பொருளியல் முதன்மையும். மேன்மையும் முடிவுற்றது. இவ்வாறு இரண்டாம் உலகப்போரில் முடமான ஜப்பான் நீண்ட காலத்திற்கும் பிறகே சீரடைந்தது.

## மாதிரி வினாக்கள்

1. டாக்டர் சன்-யாட்-சென்னின் வாழ்க்கை மற்றும் சேவைகளை பற்றி விவரி.
2. சீனாவிற்கு யுவாங்-ஷி-காய் ஆற்றிய பணியினை பற்றி கட்டுரை வரைக.
3. முதல் உலகப்போர் சீனாவில் ஏற்படுத்திய பாதிப்பினை விவரிக்க.
4. மே நான்கு இயக்கம் என்றால் என்ன? சீனாவில் தோன்றிய விதம் பற்றிய குறிப்பு வரைக.
5. வாஷிங்டன் மாநாடு சீனாவிலும் தூரக்கிழக்கு நாடுகளிலும் அமைதியை ஏற்படுத்தியது என்பதை பற்றி கட்டுரை வரைக.
6. சியாங்-கே-ஷேக் சீனா தேசிய மயமாக்கப்பட்டதற்கு ஆற்றிய சேவைகளை வரிசைப்படுத்துக.
7. ஜப்பானின் படைவலிமை மற்றும் ஆதிக்க வளர்ச்சியினையும் கொரியாவை இணைத்த விதத்தையும் விவரிக்க.
8. ஜப்பான் நாட்டின் அரசியல் கட்சிகளின் வளர்ச்சியும் அமைச்சரவைகளின் சேவைகளையும் விளக்குக.
9. மஞ்சூரிய குழப்பத்தில் ஜப்பான் முக்கிய பங்கு வகித்ததை நிரூபிக்க
10. இரண்டாம் சீன - ஜப்பான் போர் இரண்டாம் உலகப் போருக்கு காரணமாய் இருந்தது என்பதை விவரித்து எழுதுக.

* * * * * * * * * * * * * *